

# TNPSC தேர்வுப் பெட்டகம்
# நடப்பு நிகழ்வுகள் - மே 2019

www.tnpscthervupettagam.com














SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 11
தமிழ்நாடு செய்திகள் ........ 40
திருப்பூர் - முன்னிலை ........ 40
வாடகை நீதிமன்றங்கள் ........ 40
புற்றுநோய் எதிர்ப்பு காளான் ........ 41
பழுப்பு மலை அணில் ........ 41
கட்சித் தாவல் தடைச் சட்டம் ........ 42
தோப்பில் முகமது மீரான் ........ 43
IGST கட்டணங்கள் ........ 43
செயற்கை நுண்ணறிவு – ஆளில்லா குட்டி விமானங்கள் ........ 44
தென்பெண்ணை ஆறு ........ 44
பழக் கண்காட்சி ........ 45
100 கோடிகளில் மேம்படுத்துதல் ........ 45
தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் – தீர்ப்பாயம் ........ 45
காவிரி நீர் ........ 46
சென்னை குடிநீர்ப் பிரச்சனை ........ 47
தேசியச் செய்திகள் ........ 48
முக்கிய புவியியல் தளங்கள் ........ 48
சர்வதேசத் தீவிரவாதி ........ 48
ஸ்டார்ட் அப் இந்தியா தொலைநோக்குப் பார்வை - 2024 ........ 49
வாஹன் தரவுத்தளம் ........ 49
1 இலட்சம் உணவு ........ 50
மறக்கப்பட்ட நெசவு முறைகள் ........ 50
ஃபானி புயல் ........ 50
ஜஎன்எஸ் ரஞ்சித் ........ 51
மோடி எழுத்து வடிவம் – அழிவு நிலை ........ 52
10 வானூர்திகள் ........ 52
தர்பார் நகர்வு - காஷ்மீர் ........ 53
தேன் திட்டம் ........ 53

ஜென்எஸ் வேலா ... 54
அயோத்தியாப் பிரச்சனை ... 54
கறுப்புப் பட்டியல் கைவிடப் படுதல் ... 54
சுகாதாரத் துறையில் பற்றாக்குறை ... 55
இந்தியாவின் முதல் பனி தேநீர் விடுதி ... 55
விடுமுறைக் கால அமர்வு ... 56
கிராமப்புற ஸ்டார்ட் அப் (புதிதாக தொழில் தொடங்குவோர்) ... 56
அபயாஸ் – இலக்கைத் தாக்கும் ஆளில்லா குட்டி விமானம் ... 57
திரைப்பட நிறுவனம் ... 57
ஸ்பேரோ (SPARROW) திட்டம் ... 58
குழந்தை இறப்பு விகிதம் ... 58
NCERT பாடத் திட்டம் – மறு ஆய்வு ... 59
மருந்துகளின் விலைக் கட்டுப்பாடு ... 59
நிலப் பரப்பிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் நடுத்தர வரம்புடைய ஏவுகணை ... 60
வறட்சி குறித்த ஆலோசனை ... 60
புல் ஸ்ட்ரைக் பயிற்சி ... 61
நாடாளுமன்றத் தேர்தல் 2019 ... 61
சிம்பெக்ஸ் - 19 ... 61
முழுமை பெற்ற உச்ச நீதிமன்றம் ... 62
ரைசாட் - 2பி ... 62
பிரம்மோஸ் வான் ஏவுகணை ... 63
எதிர்க் கட்சித் தலைவர் அற்ற மக்களவை ... 63
ரைபில்ஸ் மற்றும் கடலோரக் காவற்படை ... 64
பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ... 65
உள்நாட்டு உயிரி எரிபொருள் ... 65
புதிய இந்திய விண்வெளி நிறுவனம் ... 66
கார்கில் போரில் மரணமடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துதல் ... 66
ஆகாஷ் எம்கே–1 எஸ் ... 66
முழு உடல் பாதுகாப்புக் கருவி ... 67
MI-17 வானூர்தியில் பறந்த அனைத்து பெண் விமானிகள் கொண்ட குழு ... 68

சர்வதேசச் செய்திகள் ....... 68
ஜப்பான் பேரரசர் ....... 68
ஹார்மூஸ் நீரிணைப் பகுதி ....... 69
உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை ....... 69
இந்தியா-பிரான்ஸ் கடற்படை கூட்டுப் பயிற்சி ....... 70
ADMM plus கடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சி - பன்னாட்டுப் பயிற்சி ....... 70
உலக இராணுவ செலவு அறிக்கை ....... 71
17வது உலகப் பொருளாதார மன்றம் ....... 71
லோயா ஜிர்கா ....... 71
வெனீஸ் கலை விழா ....... 72
நேட்டோ படைத் தலைவர் ....... 72
வன்முறையினால் ஏற்பட்ட மரணங்களின் சர்வதேச பதிவு ....... 72
புதிய விமானம் தாங்கிப் போர்க்கப்பல் ....... 73
ஈஸ்டர் குண்டு வெடிப்பு - இலங்கை ....... 74
தென் சீனக் கடல்பயிற்சி ....... 74
போலிச் செய்திகள் ....... 74
குடியரசுத் துணைத் தலைவர் – வியட்நாம் பயணம் ....... 74
ஐ.நா. பொதுச் சபையின் புதிய தலைவர் ....... 75
ஜப்பானின் அதிவிரைவு புல்லட் ரயில் ....... 75
மணல் சுரங்கங்கள் மீதான UNEP அறிக்கை ....... 76
நேபாளத்திற்கு இரயில் பெட்டிகள் ....... 77
எடை குறைவான குழந்தைகள் ....... 77
கிறிஸ்துவ தேவாலய அழைப்பு ....... 78
இந்திய நீதிபதி - பிஜி ....... 78
அமெரிக்காவில் புலம் பெயர்தல் ....... 79
முன்னுரிமை அளிக்கப்பட்ட இகாமா – சவுதி குடியுரிமை அட்டை ....... 79
கொசுக்கடி நோய்ப் பாதுகாப்புக் காப்பீடு ....... 80
புதிய வழிநடத்தப்படும் ஏவுகணை அழிப்பான்கள் ....... 80
அபாயகரமான ஹீவேய் கைபேசிகள் ....... 81
அனுமதியளிப்பு அட்டைகள் ....... 81

தேர்தல் முடிவு - வன்முறை ........ 81
பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் ........ 82
பின்தொடர்ந்து துரத்திப் பிடித்தல் ........ 82
ஆசிய இரயில் பாதை ........ 83
இந்தோ – மியான்மர் கார்பட் ........ 83
வணிகமயமாக்கல் - ஆர்க்டிக் ........ 84
சாகோஸ் தீவுப் பிரச்சினை ........ 85
நஞ்சு முறிப்பு யுக்தி ........ 85
ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு மாநாடு ........ 86
கொழும்பு துறைமுகம் ........ 86
பொருளாதாரச் செய்திகள் ........ 87
உருளைக் கிழங்குகள் ........ 87
வரி ஏய்ப்பு ........ 87
தொழில்நுட்ப துணிகள் ........ 88
ஆலோசகர் - நிதி ஆணையம் ........ 88
சச்சாரின் ........ 89
தகவல் மைய ஊழல் ........ 90
ஸ்விகி மற்றும் சோமாட்டோ ........ 90
மிளகாய்த் தூள் ........ 90
பிரிவு நடவடிக்கை வழக்கு ........ 91
WTO அமைச்சரவை நிலையிலான சந்திப்பு ........ 92
டிஜிட்டல் தாக்கம் ........ 92
பதிவு செய்யாமலிருக்கும் வாராக் கடன் ........ 93
உலக வர்த்தக அமைப்பு - குளறுபடிகள் ........ 94
இந்திய ரிசர்வ் வங்கி – புதிய பணி நிலைகள் ........ 94
மூன்றாவது நபர் பொறுப்பு ........ 95
முதன்மை இடர்பாட்டு அதிகாரி ........ 95
மசாலா பத்திரங்கள் ........ 95
புள்ளியியல் துறை ........ 96
பில்லியன் மின்னணு வணிக நடவடிக்கைகள் ........ 96
நிகழ்நேர பெருந்திரள் தீர்வு ........ 97

எஸ்சி / எஸ்டி தொழில்முனைவோர்கள் ......97
உலகப் பொருளாதார போட்டித் திறன் தரவரிசை 2019 - IMD......98
அந்நிய நேரடி முதலீடு - இந்தியா ......99
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ......99
ஷீபாக்ஸ் செயற்கைக் கோள் ......99
டியான்ஹூ II-01 செயற்கைக் கோள்கள் ......99
99942 அபோபிஸ் குறுங்கோள்......100
விமானத்திற்குள் இணையச் சேவை வழங்கப்படல்......101
ஆதித்யா L1......101
இஸ்ரோவின் ரைசாட் – 3BR1......102
ISSக்குப் பொருட்களை கொண்டு செல்லும் திட்டம்......102
மாறுபக்கக் கொழுப்புகள் ......103
ஆர்செனிக் சுவாசித்தல்......104
மீயொளிர் விண்மீன் வெடிப்புகள் (Supernovas)......104
ஜப்பானின் முதல் தனியார் ராக்கெட்......104
டெங்குவிற்கு முதல் தடுப்பூசி......105
மானவ் வரைபடம்......105
உலகின் மிகச்சிறியப் படப்புள்ளிகள் (Pixel)......106
விலை குறைவான நோயறிதல் சோதனை......106
புதிய தலைமுறை நெகிழிப் பொருட்கள்......107
பிரபஞ்சத்தின் குளிரில் இருந்து மின்சாரம்......108
உலகின் முதல் பெற்றோர் வாரியான மரபணு ......108
மிகப்பெரிய திட்டங்கள்......109
அல்டிமா துலே......109
நிலவில் பெண்......110
பழமையான பனி யுகம்......111
ஆந்த்ரோபோசீன் காலம்......111
சுற்றுச்சூழல் செய்திகள்......112
கொண்டைக் கடலை – மரபணு பன்முகத் தன்மை ......112
எவரெஸ்ட் மலையில் உள்ள கழிவுப் பொருட்கள்......112
ஊடகம் மற்றும் பருவ நிலை மாற்றம் ......113

வறண்டு கொண்டிருக்கும் வடகிழக்கு இந்தியா ....113
பாஜிராவ் ....114
பல்லுயிர்ப் பெருக்க அறிக்கை ....115
புதிய வகை குழிப் பாம்பு ....115
ஆசிய சிங்கம் ....116
பழுப்பு கரடி மீள்தோன்றல் ....116
உறுப்பினர் நாடுகளின் மாநாடு ....117
உயிரிவழிச் சீராக்கம் ....118
இறப்பிலிருந்து இரண்டு முறை மீளுதல் ....118
உள்நாட்டு யாக் எருதுகள் இறப்பு ....119
மழையை விரும்பும் பாம்பு ....119
சென்டாய் கட்டமைப்பு ....120
எல்நினோ மோடோக்கி ....120
சட்ட விரோதமான வனவிலங்குகள் வர்த்தகம் ....121
சுற்றுச்சூழல் கார்பன் டை ஆக்ஸைடு ....123
போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் மாசுபாடு ....123
30 ஆயிரம் அடி உயரத்தில் கூட்ட நெரிசல் ....124
பின்னி – இந்தியாவின் ஒராங்குட்டான் ....124
மாநிலச் செய்திகள் ....125
சாந்துச் சிற்பங்கள் ....125
சார்மினார் - சேதம் ....125
புதுச்சேரி - தில்லி ....126
அதிக எடையுள்ள பள்ளி புத்தகப் பைகள் ....126
ராணி அபாக்கா படை ....127
இறைப்பு நீர்ப் பாசனம் ....127
சுழிய நிலுவை நீதிமன்றங்கள் ....127
சார்தாம் பயணம் ....127
சமூக நீதி ....128
தனித்துவ மகளிர் குழுக்கள் ....128
சிலிக்கா ஏரி ....129
தாவர உண்ணிகள் - கணக்கெடுப்பு ....129

தேர்தல் - வன்முறை ........ 129
வெங்காயம், பூண்டு, முட்டை ஆகியவை இல்லாத உணவு ........ 130
அருணாச்சலப் பிரதேசம் - பக்கே ........ 130
அஸ்ஸாம் பிரச்சினை ........ 131
ஆந்திரக் காளைகள் ........ 132
ஜெலியங்ரோங் பழங்குடியினர் ........ 132
சந்திராணி முர்மு ........ 133
டபுக் டாகு ........ 133
ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் ........ 133
சிக்கிம் முதலமைச்சர் ........ 134
ஒடிசா முதலமைச்சர் ........ 134
அரோமா திட்டம் - மேகாலயா ........ 135
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........ 135
கோல்டுமேன் சுற்றுச்சூழல் பரிசு ........ 135
விசாரணைப் பத்திரிக்கையாளர் விருது ........ 136
செவாலியர் விருது ........ 136
PC சந்திர புரஸ்கார் 2019 ........ 136
ராபர்ட் கோவென்டர் ........ 136
சுதந்திரத்திற்கான விருது ........ 137
ராமானுஜர் ஜெயந்தி ........ 137
மெக்காயின் நிறுவன விருது 2019 ........ 138
சசகாவா விருது ........ 138
தி இந்து ........ 139
டேக் ஹமார்ஸ்க்ஜோல்டு விருது ........ 139
உதயமாகும் சூரியன் ........ 140
மேன்புக்கர் சர்வதேச விருது ........ 140
ஐக்கிய நாடுகளின் உயரிய விருது ........ 141
அபேல் பரிசு ........ 142
சைலேஷ் தினாய்கர் ........ 143
லீ ஜோங் – ஊக் விருது ........ 143
9 டாட்ஸ் விருது ........ 144

2018 – 19 ஆம் ஆண்டின் உலக ஆசிரியர் ....145
ஜெர்மன் வேதியியல் விருது – அன்குர் பட்டவர்தன் ....145
அனிதா பாட்டியா - ஐ.நா. துணை நிர்வாக இயக்குநர் ....145
விளையாட்டுச் செய்திகள் ....146
மெரிலிபோன் கிரிக்கெட் சங்கம் (MCC) ....146
ஆசிய சாலை பாரா - மிதிவண்டி ஓட்டுதல் சாம்பியன் 2019 ....146
வெர்ஜின் மணி லண்டன் மாரத்தான் - 2019 ....147
ஆசிய இளையோர் மகளிர் கைப்பந்து சாம்பியன்ஷிப் - 2019 ....147
ஆசியன் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் ....147
குத்துச் சண்டை ....148
பிரீமியர் லீக் ....148
வீரர்களைக் கண்காணித்தல் ....149
சூதாட்டம் மற்றும் ஊழல் ....149
பெண் நடுவர்கள் ....149
IAAF உலகத் தொடர் ஓட்டம் 2019 ....149
புதிய பாட்மிண்டன் வடிவம் ....150
அரவிந்த் சிதம்பரம் – சதுரங்கப் பட்டம் ....150
ரையோ பிரச்சாரம் ....151
முக்கிய தினங்கள் ....151
சர்வதேச ஜாஸ் (ஒரு வகை இசை) தினம் ....151
மே தினம் – மே 01 ....152
உலக கடவுச் சொல் தினம் – மே 02 ....152
சர்வதேசத் தீயணைப்பாளர்கள் தினம் – மே 04 ....152
உலக பத்திரிக்கை சுதந்திர தினம் – மே 05 ....153
உலக ஆஸ்துமா தினம் – மே 04 ....153
உலக சிரிப்பு (நகைப்பொலி) தினம் - மே 05 ....154
உலக தடகள விளையாட்டு தினம் – மே 07 ....154
உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் – மே 08 ....155
உலக தாலசீமியா நோய் தினம் - மே 08 ....155
இரண்டாம் உலகப் போரின்போது உயிரிழந்தவர்களின் நினைவு மற்றும் சமரசத்திற்கான நேரம் - மே 08 ....155

உலக சாலைப் பாதுகாப்பு வாரம் - மே 12 ..... 156
உலக இடப்பெயர்வு பறவை தினம் - மே 11 ..... 156
தேசியத் தொழில்நுட்ப தினம் - மே 11 ..... 157
சர்வதேச செவிலியர் தினம் – மே 12 ..... 157
உலகத் தாய்மார்கள் தினம் – மே 12 ..... 158
சர்வதேச குடும்பங்கள் தினம் - மே 15 ..... 158
தேசிய டெங்கு தினம் - மே 16 ..... 159
சர்வதேச ஒளி தினம் – மே 16 ..... 159
சமாதானத்துடன் இணைந்து வாழ்வதற்கான சர்வதேச தினம் – மே 16 ..... 160
வெசாக் - முழு நிலவு தினம் – மே 17 ..... 160
உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் - மே 17 ..... 161
உலக உயர் இரத்த அழுத்த தினம் – மே 17 ..... 162
உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் – மே 18 ..... 162
சர்வதேச அருங்காட்சியக தினம் - மே 18 ..... 163
உலக அளவியல் தினம் – மே 20 ..... 163
உலக தேனீ தினம் – மே 20 ..... 164
உரையாடல் மற்றும் வளர்ச்சிக்கான உலக கலாச்சாரப் பன்முகத் தன்மை தினம் – மே 21 ..... 165
சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் – மே 22 ..... 165
உலகக் கடல் ஆமை தினம் – மே 23 ..... 166
காணாமல் போய்க் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் – மே 25 ..... 166
உலக தைராய்டு (கேடய) தினம் – மே 25 ..... 166
மாதவிடாய் சுகாதார தினம் – மே 28 ..... 167
வீர் சவார்கர் ஜெயந்தி – மே 28 ..... 168
சர்வதேச ஐ.நா. அமைதிப் படை வீரர்கள் தினம் – மே 29 ..... 169
சர்வதேச எவரெஸ்ட் தினம் – மே 29 ..... 170
உலக புகையிலையற்ற தினம் – மே 31 ..... 170
இதரச் செய்திகள் ..... 171
#Oneday4Children ..... 171
தாய்லாந்து அரசரின் முடிசூட்டு விழா ..... 172
மகாராஷ்டிரா மற்றும் குஜராத் தினம் – மே 01 ..... 172

சட்டப்பூர்வக் கல்வி ........ 173
SDG - தூதுவர்கள் ........ 173
அதிக ஊதியம் பெறும் கலைஞர்கள் ........ 174
வோய்னிச் கையெழுத்துப் பிரதி ........ 175
விகல்ப் திட்டம் ........ 175
உலக சாதனை பெற்ற விற்பனை ........ 176
சிக்கிமின் 44வது மாநில தினம் – மே 16 ........ 176
மனக் கட்டுப்பாடு ........ 177
நீலகிரி மலை இரயில் ........ 178
முர்ரே கெல் மேன் ........ 178
ஸ்பைஸ்ஜெட் – 100 விமானங்கள் ........ 179

# TNPSC துளிகள்

- ❖ லெபனானின் தலைநகரான பெய்ரூட் நகரமானது 24 மணி நேரத்தில் நகரத்தில் அதிக எண்ணிக்கையிலான தேசியக் கொடிகளை உயர்த்தியதற்காக புதிய கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளது. இங்கு 26,852 தேசியக் கொடிகள் உயர்த்தப்பட்டன.
- ❖ இஸ்ரேலில் உள்ள வெடிபொருள் குன்றில் இந்தியாவின் முன்னாள் படைத் தளபதியான JFR ஜேக்கப் என்பவரின் பெயரை பெயர்ப் பலகையில் பொறித்து அந்நாடு கவுரவப்படுத்தியுள்ளது.
    - ○ 1971 ஆம் ஆண்டு வங்க தேசத்தின் விடுதலைப் போருக்குப் பின்னர் டாக்காவில் பாகிஸ்தான் படைகள் சரணடைய இவர் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டார்.
- ❖ கிர்கிஸ்தான் நாட்டின் பிஸ்கேக் நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO - Shanghai Cooperation Organisation) பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பில் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார்.
    - ○ இச்சந்திப்பின் ஒரு பகுதியாக இவர் சீனாவின் பாதுகாப்புத் துறை அமைச்சரான வெய் பென்ஜி என்பவரை சந்தித்துப் பேசினார்.
- ❖ வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கைச் சோதனை மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து போலியான புகார்களை அளிப்பவர்களுக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனையும் ரூ.1000 அபராதத் தொகையும் விதிக்க தேர்தல் நடத்தை விதிமுறைகளின் 49MA என்ற விதியானது வழிவகை செய்கின்றது.
    - ○ இந்த விதியானது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று அறிவிப்பதற்காக மனு ஒன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- ❖ மான்செஸ்டர் நகரம் மற்றும் இங்கிலாந்து அணியைச் சேர்ந்தவரான ரஹீம் ஸ்டெர்லிங் என்பவர் கால்பந்து எழுத்தாளர்கள் மன்றத்தினால் (FWA - Football Writers' Association) 2019 ஆம் ஆண்டின் கால்பந்து வீரராக பெயரிடப்பட்டுள்ளார்.
- ❖ இந்தியத் தேர்தல் ஆணையமானது பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டவர் என்று குற்றம் சுமத்தப்பட்ட பிஜேபி வேட்பாளரான சாத்வி பிராக்யா தாக்கூர் என்பவரைப் போபாலில் 72 மணி நேரங்களுக்குப் பிரச்சாரம் செய்யத் தடை விதித்துள்ளது (மே 01, 2019).
    - ○ உயிரிழந்த இந்தியக் காவல் துறை அதிகாரி ஹேமந்த் கார்கரே மற்றும் பாபர் மசூதி இடிப்பு குறித்த இவரது சமீபத்திய கருத்துகளுக்கு இவருக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.
- ❖ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் 2024 ஆம் ஆண்டின் பதிப்பை நடத்துவதற்கான ஏலத்தில் கலந்து கொள்ள இந்திய டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.
- ❖ தேசிய இணைய அமைப்பிலிருந்து தனது நாட்டின் இணையத்தைத் தனிமைப்படுத்துவதற்கு ரஷ்ய அதிகாரிகளுக்கு அனுமதியளிப்பதற்காகவும் ஒரு புதிய தேசிய இணைய அமைப்பை உருவாக்குவதற்காகவும் ஏற்படுத்தப் பட்டுள்ள ஒரு சட்டத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் 2019 ஆம் ஆண்டு மே 01 அன்று கையெழுத்திட்டார்.
    - ○ இந்தச் சட்டத்தின் நோக்கமானது நிகழ்நேர (ஆன்லைன்) தகவல் தொடர்புகளைத் தடை செய்வதாகும்.
- ❖ இலங்கை அதிபர் மைத்திரிபாலா சிறிசேனா முகத்தை மறைக்கக் கூடிய புர்கா, முகத்

திரை அல்லது மனிதர்களின் அடையாளத்தை கண்டுபிடிப்பதைத் தடுக்கும் எந்தவொரு பொருளின் மீதும் தடை விதிக்கப்படுவதாக அறிவித்துள்ளார்.

- தமது தீவின் கட்டமைப்புக் கட்டுப்பாடுகள் மற்றும் புவி வெப்பமயமாதல் காரணமாக இந்தோனேஷியாவின் தலைநகரை ஜகர்த்தாவிலிருந்து ஜாவா தீவின் நெரிசலான பகுதிகளுக்கு அப்பால் இடம் மாற்றி அமைக்க அந்நாட்டு அதிபர் ஜோகோ விடோடோ திட்டமிட்டுள்ளார்.
- இந்திய நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தைக் குறிக்கும் எல்லோராக் குகையின் உருவத்தை தன் பின்புறத்தில் கொண்ட புதிய 20 ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் விடப்பட விருக்கின்றன. இந்த நோட்டுகளின் அடிப்படையான வண்ணம் பசுமை கலந்த மஞ்சளாகும்.
    - இது இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநரான சக்தி காந்த தாஸ் என்பவரால் கையெழுத்திடப்பட விருக்கின்றது.
- வெளிநாட்டு நெகிழிக் கழிவுப் பொருட்களின் இறக்குமதி மீதான சீன அரசின் தடையானது சர்வதேச நெகிழிப் பொருட்கள் மறுசுழற்சி தொழிற்சாலைகள் மற்றும் நெகிழிக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் ஆகியவற்றைப் பாதித்துள்ளது.
    - வளர்ந்த நாடுகள் தங்களது நெகிழிக் கழிவுப் பொருட்களை தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் கொட்டுவதற்குத் தீர்மானித்துள்ளன.
- இந்திய மருத்துவ ஆணையமானது எம்பிபிஎஸ் படிப்பிற்குப் புதிய பாடத் திட்ட வரைவைத் தயாரித்துள்ளது. இந்தப் புதிய பாடத் திட்டமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து செயல்பாட்டுக்கு வரவிருக்கின்றது.
    - எம்பிபிஎஸ் படிப்பிற்கான பாடத் திட்டமானது 21 ஆண்டுகளுக்குப் பின்பு தற்பொழுது திருத்தியமைக்கப் படுகின்றது.
- வாக்காளர்களால் கையெழுத்திடப்பட்ட “திரும்பப் பெறும் மனுவின்” வெற்றியைத் தொடர்ந்து பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஐக்கிய இராஜ்ஜியத்தின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக பியோனா ஒனாசன்யா உருவெடுத்துள்ளார்.
    - தண்டனைக்குள்ளான பாராளுமன்ற உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு பதிவு செய்யப்பட்ட தகுதியான வாக்காளர்களில் 10 சதவீதம் பேர் திரும்பப் பெறும் மனுவில் கையெழுத்திட வேண்டும்.
- தன்னிச்சையாக இயங்கும் ஒரு கூட்டரசு ஆணையமான சர்வதேச மதச் சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையத்தின் அறிக்கையின்படி, “2018 ஆம் ஆண்டில் இந்தியாவின் மதச் சுதந்திர நிலையானது ஒட்டுமொத்த சரிவைக் கண்டுள்ளது” என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.
- பத்திரிக்கையாளரான சபா நக்வி 2019 ஆம் ஆண்டின் மக்களவைத் தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி அரசு அமைவதின் வாய்ப்புகளைத் திறனாய்வு செய்து “ஜூகாத் அரசியல் : அரசியல் கூட்டணி கையேடு” எனும் புத்தகத்தை எழுதியுள்ளார்.
- கிர்கிஸ்தானில் உள்ள பிஷ்கேக்கில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான மாநாடு நடைபெற்றது.
- உலக நிர்வாக அமைப்பினால் உலக ஹாக்கி கூட்டமைப்பின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முதல் இந்தியராக பிஹு கல்யாண் நாயக் ஆகியுள்ளார்.
- பிப்ரவரி 27 அன்று இந்திய விமானப் படை மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிரான

பாகிஸ்தான் விமானப் படையின் பதிலெதிர்ப்பு நடவடிக்கையானது 'Operation Swift Retort' என நினைவு கூறப்படும் என்று பாகிஸ்தானின் விமானப் படைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

- அனைத்து மின் வாகனங்களுக்கும், அவற்றை வாங்கப்பட்ட ஆண்டுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், பச்சை நிறத்தாலான எண் தகடுகளைப் பொருத்துவதைக் கட்டாயமாக்குமாறு மத்திய அரசாங்கமானது அனைத்து மாநில அரசுகளின் போக்குவரத்துத் துறைகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.
- முன்னாள் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் மற்றும் பொருளாதார வல்லுநரான டாக்டர் ரகுராம் ராஜன் "மூன்றாவது தூண் : சந்தைகள் மற்றும் நாடுகள் ஆகியவை சமூகங்களை எவ்வாறு பின்னுக்குத் தள்ளுகின்றன" என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- ஐக்கிய இராஜ்ஜியம் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நெருக்கடி நிலையினை அறிவித்துள்ளது. இத்தகைய நெருக்கடி நிலையினை அறிவிக்கும் முதலாவது தேசிய அரசாங்கம் இதுவாகும்.
    - இந்த நெருக்கடி நிலையானது அனைத்து அரசாங்கக் கொள்கைகளிலும் பருவ நிலை மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதைக் குறிக்கின்றது.
- மும்பை பங்குச் சந்தையானது (Bombay Stock Exchange) தனது முதலாவது சுதந்திரமாக செயல்படக்கூடிய இயக்குனராக ஜெயஸ்ரீ வியாஸ் என்பவரை நியமித்துள்ளது.
- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் ஒருநாள் அணியில் இங்கிலாந்து அணி முதலிடத்தையும் டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி முதலிடத்தையும் தக்க வைத்துள்ளது.
- பிஎஸ்என்எல் நிறுவனமானது புல்வாமா பகுதியில் முதன்முதலாக ஒளியியல் மின்னிழையினைப் பயன்படுத்தி அதிவேக அகலக் கற்றை சேவையினை தனது 'Bharath Fibre' எனும் திட்டத்தின் மூலமாக வழங்குகிறது.
    - காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது நேரடி மின்னிழை சேவை (FTTH - fibre-to-the-home) இதுவாகும்.
- 14-வது வருடாந்திர சீன-இந்திய எல்லை வர்த்தகமானது நாதுலா நுழைவு வாயிலின் திறப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. இத்தருணத்தில் எல்லைப் பகுதியில் உள்ள இந்திய மற்றும் சீன அதிகாரிகள் சால்வைகளைப் பரிமாறிக் கொண்டனர்.
    - சீன வர்த்தகர்கள் தங்களது பொருட்களை விற்பனை செய்வதற்காக நாதுலா கணவாய்க்கு அருகிலுள்ள இந்தியாவின் ஷெரதாங் பகுதிக்கு வருகின்றனர். இந்திய வர்த்தகர்கள் தங்களது பொருட்களை விற்பனை செய்வதற்காக திபெத் தன்னாட்சி உரிமையுடைய ரிசெங்காங் பகுதிக்கு வருகின்றனர்.
- ஸ்ரீவைஷ்ணவ பாரம்பரியத்தைச் சார்ந்த புகழ்பெற்ற தத்துவவியலாளரான "ஸ்ரீ வேதாந்த தேசிகன்" என்பவரின் 750-வது பிறந்த தினத்தின் நினைவாக மே மாதம் 02 ஆம் தேதியன்று இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் தபால் தலை ஒன்றினை வெளியிட்டார்.
    - இதே நிகழ்ச்சியை 2018 ஆம் ஆண்டு ஜூலை அன்று ஐக்கிய இராஜ்ஜியத்தின் இலண்டன் நகரில் உள்ள பொது அவை வளாகத்தில் பிரிட்டீஷ் பாராளுமன்றவாதிகள் ஒன்றிணைந்து கொண்டாடினர்.
- மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக, முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் மற்றும் டெல்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம்

ஆகியவை ஒன்றிணைந்து இந்தியாவில் கழிவு மேலாண்மையை செயல்படுத்துவதற்காக "கழிவுப் பொருளிலிருந்துப் பயனுள்ள பொருட்களை உற்பத்தி செய்யப்படும் தொழில்நுட்பத்திற்கான சிறப்புமிகு மையத்தை" ("Centre of Excellence for Waste to Wealth Technologies") அமைக்கவுள்ளது.

- 1979 ஆம் ஆண்டு மே 04 அன்று ஐக்கிய இராஜ்ஜியத்தின் முதல் பெண் பிரதமராக மார்கரெட் தாட்சர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை (Corporate Social Responsibility - CSR) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக எல்ஐசி வீட்டுவசதி நிதியியல் நிறுவனம், லோக் பாரதி என்ற கல்வி நிறுவனத்துடன் இணைந்து "உதயம்" என்று பெயரிடப்பட்ட ஒரு திறனளிக்கும் மையத்தை பெங்களூருவில் தொடங்கியுள்ளது.
- சர்வதேச கிரிக்கெட் குழுமமானது (International Cricket Council - ICC) ஒரு விரிவுபடுத்தப்பட்ட ஆண்களுக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் சர்வதேசத் தரவரிசையை வெளியிட்டிருக்கின்றது. இந்தத் தரவரிசையில் மொத்தம் 80 அணிகள் பங்கு பெற்றுள்ளன.
  - சமீபத்திய பட்டியலில் இந்தியா 260 புள்ளிகளுடன் மூன்று இடங்கள் பின்தங்கி 5-வது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டு மே 02 ஆம் தேதியின்படி இந்தியாவில் உள்ள முக்கியமான 91 நீர்த் தேக்கங்களின் நீர் சேமிப்பு அளவானது 40.592 BCM ஆக உள்ளது என்று மத்திய நீர் வளத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
  - இந்த அளவானது இந்த நீர்த் தேக்கங்களின் மொத்த சேமிப்புத் திறனில் 25 சதவிகிதம் மட்டுமே ஆகும்.
- சர்வதேசத் தரவுக் கழகத்தின் (International Data Corp) புள்ளியியல் அறிக்கையின்படி சீனாவைச் சேர்ந்த மின்னணு பெருநிறுவனமான ஹுவாய் ஆனது உலகளவில் திறன் பேசி விற்பனையில் ஆப்பிள் நிறுவனத்தைப் பின்னுக்குத் தள்ளி 2 ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.
- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, இந்தியாவிற்கு கச்சா எண்ணெயை அளிக்கும் முன்னணி நாடாக ஈராக் உருவெடுத்திருக்கின்றது.
  - 2018-19 ஆம் நிதியாண்டில் இந்தியக் கச்சா எண்ணெய்த் தேவையில் 5-ல் ஒரு பங்குக்கும் மேற்பட்ட எண்ணெயை ஈராக் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்கின்றது (46.61 மில்லியன் டன்கள்).
- இந்தியக் கப்பற்படைக்காக குறைந்த ஆழத்தில் பயணிக்கக் கூடிய 8 நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல்களை (ASWSWC - Anti-Submarine Warfare Shallow Water Crafts) கட்டமைப்பதற்காக ரூபாய் 6,000 கோடி மதிப்பிலான ஒரு ஒப்பந்தத்தை கொல்கத்தாவைச் சேர்ந்த "கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் மற்றும் இன்ஜீனியர்ஸ்" என்ற நிறுவனத்திற்கு மத்தியப் பாதுகாப்புத் துறை வழங்கியுள்ளது.
  - இந்தக் கப்பல்கள் கடலில் உள்ள நிலத்தடி இலக்குகளைத் தடுத்து அவற்றைத் தாக்கி அழிக்கும் திறன் பெற்றிருக்கும்.
- நோபல் இலக்கியப் பரிசை வழங்கும் ஸ்வீடன் நிறுவனமானது பேராசிரியர் மேட்ஸ் மால்ம் என்பவரைத் தனது புதிய நிரந்தர செயலாளராக நியமித்துள்ளது. இவர் 2018 மற்றும் 2019 ஆகிய இரு ஆண்டுகளுக்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசினை அறிவிக்கும் குழுவின் தலைவராக இருக்கின்றார்.
  - கடந்த 70 ஆண்டுகளில் முதல்முறையாக 2018 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான

நோபல் பரிசு வழங்கப்படவில்லை.

- நேபாளத்தைச் சேர்ந்த 18 வயதான பந்தானா நேபாள் என்ற ஒரு பெண் தொடர்ந்து 126 மணி நேரங்கள் நடனமாடி, "ஒரு தனிப்பட்ட நபரின் நீண்ட நேர நடன மராத்தான்" என்ற பிரிவில் உலக கின்னஸ் சாதனையைப் படைத்திருக்கின்றார்.
    - 2011 ஆம் ஆண்டில் இந்தியாவைச் சேர்ந்த கலாமண்டலம் ஹேம்லதா என்பவர் நிகழ்த்திய சாதனையை இவர் முறியடித்திருக்கின்றார். ஹேம்லதா 123 மணி நேரம் 15 நிமிடங்கள் தொடர்ந்து நடனமாடி சாதனை நிகழ்த்தியிருந்தார்.
- தேசியத் தூய்மை கங்கைத் திட்டத்தின் (National Mission for Clean Ganga - NMCG) இணையதளம் மீதான ஒரு அறிக்கையின்படி, 2015 ஆம் ஆண்டிற்குப் பிறகு நமாமி கங்கை திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட 100 கழிவுநீர் கட்டமைப்புத் திட்டங்களில் 10 திட்டங்களை மட்டுமே மோடி தலைமையிலான அரசு நிறைவு செய்துள்ளதாகக் கூறியுள்ளது.
- தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது (National Company Law Appellate Tribunal - NCLAT) ஐஎல்&எப்எஸ் மற்றும் அதன் குழும நிறுவனங்கள் தாங்கள் வாங்கிய கடன் தொகையை குறித்த காலத்திற்குள் செலுத்தாமல் இருப்பின் அவர்களது வங்கிக் கணக்குகளை வாராக் கடன்களாக (NPA - non-performing assets) அறிவிப்பதற்கு வங்கிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.
    - கடனாக அல்லது முன்தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் நிதியின் அசல் அல்லது வட்டித் தொகை தொடர்ந்து 90 நாட்களாக செலுத்தப்படாமல் இருப்பின் அவை வாராக் கடன் எனப்படும்.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சரக்கு மற்றும் சேவைகள் வரி வசூலானது எப்பொழுதும் இல்லாத அளவுக்கு ரூ. 1.13 இலட்சம் கோடியை எட்டியுள்ளது.
    - மார்ச் மாதத்தில் அரசாங்கமானது 1.06 இலட்சம் கோடியை வசூலித்துள்ளது.
- இந்திய பாரத வங்கியானது சேமிப்பு கணக்கு மற்றும் குறுகிய காலக் கடன்கள் மீதான தனது வட்டி விகிதத்தை இந்திய ரிசர்வ் வங்கியின் ரெப்போ விகிதத்துடன் இணைத்துள்ளது.
    - 1 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள சேமிப்புக் கணக்கிற்கான வட்டி விகிதம் 3.5 சதவிகிதமாகும். 1 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ள சேமிப்புக் கணக்கிற்கான வட்டி விகிதம் 3.25 சதவிகிதமாகும்.
- ஆசிய ஒத்துழைப்பு கலந்துரையாடல் கூடுகையின் 16-வது அமைச்சர்களின் மாநாடானது கத்தார் நாட்டில் நடைபெற்றது. இம்மாநாட்டின் கருத்துரு, "முன்னேற்றத்தில் பங்குதாரர்கள்" என்பதாகும்.
- தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள கடைகள், வணிக நிறுவனங்கள், வணிக மையங்கள், அனைத்து விடுதிகள், பெட்ரோல் நிலையங்கள், மருத்துவமனைகள், உணவகங்கள் ஆகியவை 24 மணி நேரமும் செயல்படுவதற்கு அனுமதிப்பதற்காக குஜராத் விற்பனைக் கூடங்கள் மற்றும் நிறுவனங்கள் திருத்தச் சட்டம், 1948 ஆனது திருத்தப்பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களை சரியாகக் கடைபிடிக்காமல் இருந்தமைக்காக வோடபோன் எம்.பேசா, வெஸ்டர்ன் யூனியன், மணி கிராம் உள்பட முன்பண பணவழங்கீட்டு சேவைகளை வழங்கும் 5 நிறுவனங்கள் மீது அபராதங்களை விதித்துள்ளது.
- தேசியத் திறந்தவெளிப் பள்ளி நிறுவனமானது (National Institute of Open Schooling - NIOS)

கற்பவர்களுக்கு துணை மருத்துவ பாடப் பிரிவுகளில் "திறன் கல்வியைப்" பயிற்றுவிப்பதற்காக இந்திய மருத்துவ கூட்டமைப்புடன் (Indian Medical Association) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

- NIOS ஆனது உயர்நிலை, மேல்நிலை மற்றும் தொழில் துறைப் பிரிவுகளில் 2.7 மில்லியன் மாணவ / மாணவிகளைக் கொண்டுள்ளது. இது உலகின் மிகப்பெரிய திறந்தவெளி கல்வி அமைப்பாக விளங்குகின்றது.

❖ ஒருங்கிணைந்த வாழ்வாதார மதிப்பீட்டிற்கான பசுமை மதிப்பீட்டு ஆணையமானது (Green Rating for Integrated Habitat Assessment - GRIHA) இந்தியா முழுவதும் தற்பொழுதுள்ள பள்ளிகளின் சுற்றுச்சூழல் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக "தற்பொழுதுள்ள பள்ளிகளுக்கான GRIHA" என்ற ஒரு தர நிர்ணயக் குறியீட்டைத் தொடங்கியுள்ளது.

- இது சுற்றுச்சூழல் மீதான தங்கள் பள்ளிகளின் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வியறிவை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ வட கொரியாவின் அதிபரான கிம் ஜாங் - உன் தலைமையின் கீழ் அந்நாடு பல்வேறு குறைந்த வரம்புள்ள ஏவுகணைகளை ஜப்பான் கடற்பகுதிக்குள் ஏவியுள்ளது.

❖ மும்பையில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அழுத்தத்தைப் போக்கும் செர்ரோடோனின் (வேதியியல் பெயர் : 5 – ஹைட்ராக்ஸிட்ரைட்டமைன்) ஒரு புதிய செயல்பாட்டைக் கண்டறிந்துள்ளனர்.

- இது நரம்பியல்சார் நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு உதவும்.

❖ முதன்முறையாக, ரவீந்திரநாத் தாகூரின் அரிதான எண்ணெய் ஓவியங்களில் ஒன்றான "மேக்பெத்திலிருந்து மூன்று மந்திரவாதிகள்" என்ற ஒரு ஓவியம் கல்கத்தாவில் உள்ள இரவீந்திர பாரதி பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் உள்ள அபநிந்திரநாத் தாகூர் அரங்கத்தில் காட்சிப்படுத்தப் படவிருக்கின்றது.

- இந்தப் பார்வையிடக்கூடிய ஓவியச் சேமிப்பு அரங்கமானது இரவீந்திரநாத் தாகூரின் 158-வது பிறந்த தினக் கொண்டாட்டத்தின் போது திறக்கப்பட இருக்கின்றது.

❖ ஏப்ரல் 17 அன்று, ஏறத்தாழ 192.8 மில்லியன் தகுதி வாய்ந்த வாக்காளர்களுடன் எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் இந்தோனேசியா தனது அதிபர் மற்றும் சட்ட சபைத் தேர்தல்களை நடத்தியது.

- இந்தோனேசியாவின் தேசியத் தேர்தல் ஆணையத்தின் அறிக்கையின்படி, தேர்தலை நடத்தியதற்கு உதவியதால் ஏற்பட்ட பணிச் சுமையின் காரணமாக 311 தேர்தல் அதிகாரிகள் இறந்துள்ளனர் என்றும் 2232 மக்கள் உடல்நலம் பாதிக்கப் பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

❖ சமீபத்தில் பனாமாவில் நடைபெற்ற தேர்தலில், அந்நாட்டு மக்கள் ஜனநாயகப் புரட்சிகர மாற்றம் என்ற கட்சியின் வேட்பாளரான "லாரன்டினோ கோர்டிசோ" என்பவரை தங்களது அதிபராகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

❖ ரோஹிங்யா பிரச்சனை குறித்து செய்தி வெளியிட்டதற்காக 500 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்த ராய்ட்டர்ஸ் பத்திரிக்கையைச் சேர்ந்த 2 மியான்மர் பத்திரிக்கையாளர்களான வா லோன் மற்றும் கியாவ் சோ ஓ ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

- முதன்முறையாக, அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றம் - செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தைச் (Centre for Cellular and Molecular Biology - CCMB) சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் லட்சத் தீவுக் கூட்டங்களில் வாழும் மக்களின் மரபணு குறித்த ஆய்வுகள் நடத்தப்பட்டன.
  - இது லட்சத் தீவில் இருக்கும் பெரும்பான்மையான மனித வம்ச இனங்கள் தெற்காசியாவிலிருந்தும் கிழக்கு மற்றும் மேற்கு யூரேசியாவிலிருந்தும் சிறிய தாக்கங்களுடன் பெறப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிந்துள்ளது.
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் குறித்து பணி நீக்கம் செய்யப்பட்ட ஒரு பெண் அளித்த புகாரின் மீது "ஒருதலைப் பட்சமாக" விசாரிக்க வேண்டாம் என்று எஸ்.ஏ போப்டே தலைமையிலான உச்ச நீதிமன்றத்தின் 3 உறுப்பினர்களைக் கொண்ட உள் விவகாரக் குழுவிற்கு நீதியரசர் DY சந்திரசூட் கடிதம் எழுதியுள்ளார்.
  - "ஒருதலைப் பட்சம்" (ex parte) என்பது எதிர்த் தரப்பினரின் பிரதிநிதித்துவம் அல்லது அவருக்கு அறிவிக்காமல் மற்றொரு தரப்பினரை வைத்து நடத்தப்படும் ஒரு சட்டப் பூர்வ நடவடிக்கையாகும்.
- 2019 ஆம் ஆண்டு மே 07 ஆம் தேதி அன்று பசவ ஜெயந்தி அனுசரிக்கப்பட்டது. பசவ ஜெயந்தி என்பது 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு இந்து சமயத்தைச் சேர்ந்த கன்னடக் கவிஞரான பசவண்ணாவின் பிறந்த தினமாகும்.
- பின்லாந்தின் ரோவாநெய்மியில் நடைபெற்ற ஆர்க்டிக் ஆணையத்தின் அமைச்சர்களுக்கிடையேயான 11வது சந்திப்பின் போது அரசாங்கங்களுக்கிடையேயான மன்றமான ஆர்க்டிக் ஆணையத்திற்கு இந்தியா "பார்வையாளராக" மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ஈரான் அதன் யுரேனியம் செறிவூட்டல் திட்டம் மற்றும் அணுக்கரு ஒப்பந்தம் ஆகியவற்றை நிறுத்துவதற்காக எடுக்கப்பட்டு வரும் தனது சில உறுதிமொழிகளை குறைக்கும் என்று தெரிவித்துள்ளது.
  - 2015 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட "ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கைத் திட்டம்" (JCPOA - Joint Comprehensive Plan of Action) என்று அறியப்படும் பலதரப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்ததற்குப் பதிலளிக்கும் விதமாக ஈரான் இவ்வாறு தெரிவித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது முன்னுரிமைத் துறைக்கு கடனளித்தல் திட்டத்தின் கீழ் தகுதியானவர்களுக்கு மண்டல ஊரக வங்கிகள் (RRB - Regional Rural Banks) மற்றும் சிறு நிதியியல் வங்கிகள் மூலம் வழங்கப்படும் வீட்டு வசதிக் கடன் வரம்புகளை மேம்படுத்த முடிவு செய்துள்ளது.
  - இது இதர பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுடன் ஒரு போட்டியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்திய வர்த்தக தொழில்துறைக் கூட்டமைப்பினால் (The Federation of Indian Chambers of Commerce and Industry - FICCI) வெளியிடப்பட்ட "இந்தியாவின் உள்நாட்டு சுற்றுலா: வாய்ப்புகளைத் திறத்தல்" என்ற தலைப்பு கொண்ட ஒரு அறிக்கையானது இந்தியாவின் MICE/மைஸ் (Meetings, Incentives, Conferneces, Exhibition/சந்திப்புகள், சலுகைகள், கருத்தரங்கங்கள், கண்காட்சி) சுற்றுலா ஒவ்வொரு ஆண்டும் 8 சதவிகிதம் வளர்ந்துக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளது.

- FICCI என்பது 1927 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் ஆலோசனையின் பேரில் G.D. பிர்லா மற்றும் புருஷோத்தம் தாஸ் தாகூர் தாஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் வணிக நிறுவனங்களின் ஒரு கூட்டமைப்பாகும்.

❖ ஜப்பானின் மிகப்பெரிய முட்டை உற்பத்தியாளரான ஐஎஸ்இ புட்ஸ் (ISE Foods) என்ற நிறுவனத்துடன் இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

- இந்தியா முழுவதும் உள்ள கோழிப் பண்ணைகளில் கழிவு மேலாண்மை, நோயினைக் கண்டறிதல் மற்றும் முட்டைகளின் தரத்தினை உயர்த்துதல் ஆகியவை இதன் நோக்கங்களாகும்.

❖ இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களைச் சார்ந்திருப்பதை குறைப்பதற்காக "AJIT" (அஜித்) என்ற ஒரு நுண்செயலியை மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சார்ந்த பொறியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- மேலும் இது குறித்த தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும். https://www.tnpscthervupettagam.com/indias-first-indigenous-microprocessor/ (தேதி : 10.11.2018).

❖ இந்திய வருவாய்ப் பணி அதிகாரி மற்றும் முன்னாள் போதைப் பொருள்கள் துறை ஆணையரான ஜகஜித் பவாடியா ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தினால் சர்வதேசப் போதைப் பொருட்கள் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு (INCB - International Narcotics Control Board) 5 ஆண்டு காலத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- INCB ஆனது ஐக்கிய நாடுகளின் மருந்து ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்காக 1961 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தனிச் சுதந்திர மற்றும் பகுதி நீதித்துறை சார் அமைப்பாகும்.

❖ "மொத்தச் சுற்றுச்சூழலுக்கான அறிவியல்" என்ற பத்திரிக்கையில் ஆஸ்திரேலிய மற்றும் வங்க தேச ஆராய்ச்சியாளர்களால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையானது கால நிலை மாற்றம் மற்றும் கடல்மட்ட உயர்வு ஆகிய இரண்டும் சுந்தரவனப் பகுதிகளை அழித்து விடும் என்று எச்சரித்துள்ளது.

- சுந்தரவன சதுப்பு நிலக் காடுகள் உலகின் மிகப்பெரிய ஈரநிலக் காடுகளாகும். இந்த வளமான சுற்றுச்சூழலானது அச்சுறுத்தல் நிலையில் உள்ள விலங்கான வங்கப் புலி உள்ளிட்ட பலநூறு விலங்கினங்களுக்கு அடைக்கலம் அளிக்கின்றது.

❖ நீண்ட கால இலக்கான ஒலிம்பிக் விளையாட்டுகளில் கலந்து கொள்ளும் நோக்கத்துடன் இந்திய கைப்பந்து போட்டியில் ஆண்களுக்கான தேசிய அணிப் பிரிவின் தலைமைப் பயிற்சியாளராக செர்பியாவைச் சேர்ந்த டிராகன் மிகைலோவிக் என்பவரை இந்தியக் கைப்பந்துக் கூட்டமைப்பு நியமித்துள்ளது.

❖ 2019 ஆம் ஆண்டு மே 03 ஆம் தேதி முதல் மே 05 ஆம் தேதி வரை இந்தியா, பிரேசில் மற்றும் தென் ஆப்பிரிக்கா (India, Brazil and South Africa - IBSA) ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஷெர்பாக்களின் (பிரதிநிதிகள்) சந்திப்பானது கேரளாவின் கொச்சியில் நடைபெற்றது.

- IBSA இன் ஷெர்பாக்களின் சந்திப்பிற்கு முன்பு, இதே இடத்தில் 9-வது IBSAவின் அமைச்சர்களுக்கிடையேயான முத்தரப்பு சந்திப்பு நடத்தப்பட்டது.

❖ 2019 ஆம் ஆண்டின் தொழிலாளர் தினத்தின் (மே 01) கருத்துருவானது, "சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக தொழிலாளர்களை ஒன்றிணைத்தல்" என்பதாகும்.

❖ ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தின் வளமான கடல் மற்றும் நீடித்த கடல்சார் (நீலப்)

பொருளாதாரத்திற்காக 5 பில்லியன் டாலர் மதிப்பிலான செயல் திட்டத்தை ஆசிய வளர்ச்சி வங்கி (ADB - Asian Development Bank) தொடங்கியுள்ளது.

- ❖ அமெரிக்க விமானப் படை ஆய்வகமானது நியூ மெக்சிகோவில் உள்ள அமெரிக்க இராணுவத்தின் வெள்ளை நிலப்பரப்பு ஏவுகணை சோதனைப் பகுதியில் "சுய பாதுகாப்பு கொண்ட அதிக ஆற்றலுடைய லேசர் செயல்முறை விளக்கம்" (Self-Protect High Energy Laser Demonstrator - SHiELD) என்ற ஒரு லேசர் அமைப்பை பரிசோதனை செய்தது.
    - ○ இது பறந்து கொண்டிருக்கும் போது பல்வேறு ஏவுகணைகளை வெற்றிகரமாக சுட்டு வீழ்த்தியது.
- ❖ ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனமானது ஏறத்தாழ ரூ.620 கோடி மதிப்பிலான 259 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரிட்டனைச் சேர்ந்த பொம்மை தயாரிக்கும் நிறுவனமான ஹேம்லேய்ஸை கையகப்படுத்த விருக்கின்றது.
    - ○ ஹேம்லேய்ஸ் நிறுவனம் 1760 ஆம் ஆண்டில் "நோகா ஆர்க்" என்ற ஒற்றைக் கடையைக் கொண்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது.
- ❖ பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மற்றும் நட்சத்திர ஆல்ரவுண்டரான சாகித் அப்ரிடி "விளையாட்டை மாற்றுபவர்" என்ற தனது சுயசரிதையை எழுதியுள்ளார். இந்தப் புத்தகமானது அப்ரிடி மற்றும் பத்திரிக்கையாளரான வஜாகத் S கான் ஆகியோரால் இணைந்து எழுதப்பட்டது.
- ❖ முதன்முறையாக பிட்ஸ்பெர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு நோய்த் தொற்றுடன் இருக்கும் ஒரு நோயாளிக்கு சிகிச்சையளிப்பதற்காக மரபணு மாற்றப்பட்ட வைரஸ்களைப் பயன்படுத்தினர்.
    - ○ இது 2019-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் தேதி இயற்கை மருத்துவம் என்ற பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டது.
- ❖ ஐஸ்லாந்து ஆராய்ச்சியாளர்களின் தலைமையிலான ஒரு பன்னாட்டுக் குழுவானது கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுவைப் பாறையாக மாற்றக் கூடிய ஒரு முறையைக் கண்டறிந்துள்ளது. இந்தப் பாறையானது புவி வெப்பமயமாதலுக்குக் காரணமாக விளங்கும் தீய உமிழ்வுகள் கலந்துள்ள காற்றைச் சுத்தமாக்கும்.
    - ○ இவர்களின் இந்த முறையானது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் எரிமலைப் பாறையினால் கார்பன் உறிஞ்சப்படுகின்ற இயற்கை முறையைப் பிரதிபலிக்கின்றது.
- ❖ ஆஸ்திரேலியாவின் காந்தாஸ் என்ற விமான நிறுவனம் QF739 என்ற பெயருடைய உலகின் முதலாவது சுழியக் கழிவு கொண்ட ஒரு வணிக விமானத்தை சிட்னியிலிருந்து அடிலெய்டு வரை இயக்கியது. இது தனது அனைத்துக் கழிவுகளையும் மட்கச் செய்தல், மீண்டும் அவற்றைப் பயன்படுத்துதல், மறுசுழற்சி ஆகிய முறைகளின் மூலம் அப்புறப்படுத்தியது.
- ❖ லட்சத் தீவுகள் ஒன்றியப் பிரதேசம், தனது தென்னை மரங்களின் விளைச்சலை அழித்துக் கொண்டிருக்கும் எலிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக கொறிக்கும் விலங்குகள் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கேரளாவிலிருந்து மூன்று ஜோடி கூகை ஆந்தைகளை வாங்கியுள்ளது.
- ❖ மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியமானது (Central Board of Indirect Taxes and Customs - CBIC) உலக சுங்க அமைப்பின் (WCO - World Customs Organization) ஆசிய – பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 33 உறுப்பினர்களுக்காக ஒரு சந்திப்பை கொச்சியில் ஏற்பாடு

செய்தது. WCO-ஆனது எல்லை தாண்டிய வர்த்தகம் மற்றும் சர்வதேச வர்த்தகப் போக்குவரத்தை மேம்படுத்துவதை வலியுறுத்துகின்றது.

- WCO ஆனது உலகின் 98 சதவிகித வர்த்தகத்தை நிர்வகிக்கின்றது. இது 183 உறுப்பினர்களுடன் புருசல்ஸைக் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்றது.

❖ AFRASIA வங்கியின் 2019-ஆம் ஆண்டின் உலக செல்வ இடப்பெயர்வு மறு ஆய்வின்படி 2018-ஆம் ஆண்டில் அதிகச் செல்வம் மிக்க 5000 தனிநபர்கள் (HNI - High Net Worth Individuals) அல்லது இந்தியாவின் மிகவும் செல்வம் மிக்கவர்களில் 2 சதவிகிதத்தினர் இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

- 2008 ஆம் ஆண்டிலிருந்து உலகின் செல்வம் மிக்க இடம்பெயர்வாளர்கள் இடம்பெயரும் நாடுகளில் ஆஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது (12,000). இதற்கு அடுத்து அமெரிக்கா (10,000) மற்றும் கனடா (4,000) ஆகிய நாடுகள் உள்ளன.

❖ இந்தியத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான உச்ச நீதிமன்றக் கொலீஜியமானது நீதியரசர் அனிருத்தா போஸ் மற்றும் நீதியரசர் A.S. போபண்ணா ஆகியோர்களை உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது. ஆனால் இந்திய அரசு இவர்கள் இருவரின் நியமனத்திற்கும் ஒப்புதல் அளிக்கவில்லை.

- அரசின் இந்த முடிவானது இந்தியத் தலைமை நீதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவர் உச்ச நீதிமன்றத்தின் மொத்தமுள்ள 31 நீதிபதிகளையும் நிரப்பும் பொருட்டு இவர்களது பெயரை மீண்டும் அரசிற்கு அனுப்பியுள்ளார்.

❖ இந்தியப் பணி நியமனக் கூட்டமைப்பின்படி (ISF - Indian Staffing Federation) இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் அடுத்த 5 ஆண்டுகளில் 3 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். ISF என்பது "நெகிழும் தன்மை" கொண்ட வேலைவாய்ப்புகளுக்கான ஒரு அமைப்பாகும்.

- செயற்கை நுண்ணறிவு, இயந்திரங்களைப் பற்றிக் கற்றல், பொருட்களின் இணையம், தரவு அறிவியல், பகுப்பாய்வு, பெருந் தரவு, தொடர் சங்கிலி மற்றும் புனை மெய்யாக்கம் ஆகிய துறைகளில் புதிய வேலைவாய்ப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

❖ அனைத்து இந்தியக் கால்பந்து கூட்டமைப்பானது குரோஷியாவைச் சேர்ந்த முன்னாள் சர்வதேச வீரரான இகோர் ஸ்டிமாக்கை இந்திய ஆண்கள் கால்பந்து அணியின் பயிற்சியாளராக நியமிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

- 51 வயதான ஸ்டிமாக் என்பவர் 1998-ஆம் ஆண்டில் FIFA உலகக் கோப்பையில் மூன்றாவது இடம் பிடித்த குரோஷியாவின் "தங்கத் தலைமுறையின்" ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக விளங்குகின்றார்.

❖ சத்தீஸ்கர் மாநில காவல் துறையானது தனது நக்சல் எதிர்ப்புப் படைப் பிரிவான மாவட்ட ரிசர்வ் பாதுகாப்புப் படைப் பிரிவில் பெண் கமாண்டோக்களை முதன்முறையாக இணைத்துள்ளது.

- இது துணை காவல்துறைக் கண்காணிப்பாளரான தினேஸ்வரி நந்த் என்பவரின் தலைமையில் 30 பெண் கமாண்டோக்களைக் கொண்டுள்ளது. இவர்கள் வனங்களில் போர் செய்வதற்கான விரிவான பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

❖ குரங்கு அம்மை வைரஸின் முதலாவது பாதிப்பானது சிங்கப்பூரில் சமீபத்தில் பதிவு

செய்யப்பட்டது. சிங்கப்பூர் வந்த நைஜீரியாவைச் சேர்ந்த ஒருவரால் இந்த வைரஸ் பரவியது.

- இது வன விலங்குகள் அல்லது குரங்குகள், வௌவால்கள், கொறிக்கும் விலங்குகள் ஆகிய விலங்குகளின் மாமிசத்தினால் பரவுகின்றது. வனவிலங்குகளின் மாமிசமானது சில ஆப்பிரிக்க நாடுகளில் புரதத்தின் முக்கிய மூலமாக செயல்படுகின்றது.

❖ கத்தோலிக்க தேவாலயத்தில் பாலியல் துன்புறுத்தல் அளிப்பதாக ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக தேவாலய அதிகாரிகளிடம் புகார் அளிக்கக் கூடிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணத்தை போப் பிரான்சிஸ் வெளியிட்டார்.

- போப்பின் இந்த முன்முயற்சியானது "மோடு ப்ரோபிரியோ" என்று அழைக்கப்படுகிறது. இது கத்தோலிக்க மொழியில் போப்பின் முன்முயற்சியினை எடுத்துக் காட்டும் விதமாக, அவரால் கையெழுத்திடப்பட்டு வழங்கப்பட்ட ஆவணம் என்பதைக் குறிக்கும்.

❖ அயோத்தியா நிலம் குறித்த வழக்கின் விசாரணையானது இந்திய உச்ச நீதிமன்றத்தினால் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இது குறித்த தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும்: https://www.tnpscthervupettagam.com/ayodhya-dispute/.

❖ 2019 ஆம் ஆண்டு மே 09 அன்று, பிரிட்டனுக்கு அடுத்து பருவ நிலை குறித்த நெருக்கடி நிலையை அறிவிக்கும் இரண்டாவது நாடாக அயர்லாந்து உருவெடுத்துள்ளது. இதற்கு முன் பிரிட்டன் பருவநிலை குறித்த நெருக்கடி நிலையை அறிவித்துள்ளது.

- இந்த நெருக்கடி நிலையானது 2030 ஆம் ஆண்டில் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வுகளை அதிக அளவில் குறைக்கவும் சட்டத்தினால் ஏற்படும் மாற்றங்களை விரைவாக கண்காணிக்கவும் அரசாங்கத்திற்கு அறிவுறுத்துகின்றது.

❖ அமெரிக்க மருத்துவக் கூட்டமைப்பின் பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையானது சூரிய ஒளிக் கதிர்களை உறிஞ்சக் கூடிய உடலில் இடப்படும் களிம்புகளில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் இரத்த ஓட்டத்தில் நுழைந்து அதிக அளவிலான தீங்குகளை ஏற்படுத்தும் என்று கண்டறிந்துள்ளது.

- அவோபென்சோன், ஆக்டோகிரைலீன், ஆக்சிபென்சோன் மற்றும் எகாம்சுலே ஆகியவை இந்த இரசாயனங்களாகும்.

❖ காஷ்மீர் பகுதியில் இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தியப் பாதுகாப்புப் படைகளுக்கும் இடையே நிகழ்ந்த மோதலையடுத்து இந்தியாவில் ஒரு பகுதியில் தங்கள் அமைப்பை நிறுவியுள்ளதாக அந்த தீவிரவாதக் குழு முதன்முறையாக அறிவித்துள்ளது.

- இந்தப் பகுதியினை "விலாயாக் ஆப் ஹிந்த்" என்று அவர்கள் பெயரிட்டுள்ளனர். இது ஒரு சந்தேகத்திற்கிடமான கூற்று என்றாலும் பாதுகாப்புத் துறை வல்லுநர்கள் இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

❖ அமேசான் மற்றும் விண்வெளி நிறுவனமான "ப்ளூ ஆரிஜின்" ஆகிய இரண்டு நிறுவனங்களின் தலைவரான "ஜெப் பெசோஸ்" என்பவர் "ப்ளூ மூன்" (நீல நிலவு) என்று பெயரிடப்பட்ட நிலவில் தரையிறங்கும் ஒரு சாதனத்தை வெளியிட்டுள்ளார்.

- இது 2024 ஆம் ஆண்டில் நிலவின் தென் துருவத்திற்கு மனிதர்களையும்

கருவிகளையும் எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட விருக்கின்றது.

- ❖ நிதியியல் சேவைகளை அளிக்கும் "ஸ்டான்டர்டு சார்ட்டர்டு" என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இந்தியா, வங்க தேசம், வியட்நாம், மியான்மர் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் 2020 ஆம் ஆண்டில் நிலையான பொருளாதார வளர்ச்சியானது 7 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
    - ○ 7 சதவிகிதப் பொருளாதார வளர்ச்சியானது ஒவ்வொரு 10 ஆண்டுகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தி இரு மடங்காவதையும் தலா வருமானம் உயருவதையும் குறிக்கின்றது.
- ❖ 2019 ஆம் ஆண்டு மே 11 அன்று, இந்தியாவினால் வாங்குவதற்கு கையெழுத்திடப்பட்ட 22 அப்பாச்சி வகை பாதுகாப்பு வானூர்திகளில் முதலாவது ஒன்றை இந்திய விமானப் படைக்கு போயிங் நிறுவனம் வழங்கியுள்ளது.
    - ○ இந்திய விமானப் படைத் தளபதியான ஏ.எஸ். பூட்டோவா, வானூர்தி வழங்கப்படும் விழாவில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தின் மெசாவில் உள்ள போயிங் வானூர்தித் தயாரிப்பு நிறுவனத்திற்கு பயணம் மேற்கொண்டார்.
- ❖ இந்திய இராணுவமானது 2019 ஆம் ஆண்டினை "அடுத்த உறவினர்களுக்கான" ஆண்டாக அனுசரிக்கின்றது.
- ❖ இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் துணைத் தலைவரான ஸ்மிரிதி மந்தனாவின் அட்டைப் படத்துடன் உலகின் முதலாவது பெண்கள் கிரிக்கெட்டிற்கான பிரத்தியேகமான பத்திரிக்கையான "கிரிக்ஸோன்" வெளியிடப்பட்டது.
- ❖ இந்தியாவின் பிரபல சர்வதேச மோட்டார் பந்தய நிகழ்வின் 17-வது பதிப்பான "டெசர்ட் ஸ்டார்ம் ராலி-2019" (Desert Storm Rally) ஆனது ராஜஸ்தானில் நடைபெற்றது.
- ❖ பிரிட்டனைச் சேர்ந்த சண்டே டைம்ஸ் என்ற பத்திரிக்கை வெளியிட்டுள்ள 2019 ஆம் ஆண்டின் செல்வம் மிக்கவர்களின் பட்டியலில், 22 பில்லியன் பவுண்டுகள் சொத்து மதிப்புடன் ஐக்கிய இராஜ்ஜியத்தின் மிகவும் செல்வம் மிக்கவர்களாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹிந்துஜா சகோதரர்கள் உருவெடுத்துள்ளனர். இவர்கள் தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.
    - ○ ஜிம்பாபேவில் பிறந்த வலேரி மோரன் என்பவர் டைம்ஸ் செல்வம் மிக்கவர்களின் பட்டியலில் தரவரிசைப்படுத்தப்பட்ட முதலாவது கறுப்பினப் பெண் தொழில் முனைவோராக உருவெடுத்துள்ளார்.
- ❖ தேசியத் தொழில்நுட்ப தினத்தின் கருத்துருவானது (மே 11, 2019), "மக்களுக்காக அறிவியல் மற்றும் அறிவியலுக்காக மக்கள்" என்பதாகும்.
- ❖ தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இலாப நோக்கில்லா முன்னெடுப்பு என்ற நிறுவனத்தினால் வைக்கப்பட்ட தொடர் கோரிக்கைகளையடுத்து இன்போசிஸ் கூட்டமைப்பின் வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்ட உரிமத்தை (FCRA - Foreign Contribution Regulation Act) மத்திய உள்துறை அமைச்சகம் இரத்து செய்துள்ளது.
    - ○ FCRA ஆனது வெளிநாட்டு நிதிகளைப் பெற கூட்டமைப்பு மற்றும் அரசு சாரா நிறுவனத்திற்கு அனுமதியளிக்கின்றது. மேலும் இந்த நிறுவனங்கள் வெளிநாட்டு நிதிகளைப் பெற FCRA-ன் கீழ் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.
- ❖ ராயல் ஆஸ்திரேலிய கடற்படையைச் சேர்ந்த ஒரு பீரங்கிக் கப்பலான எச்எம்ஏஎஸ்

டோவோம்பா ஆனது தீவிரவாத எதிர்ப்பு, கடற்கொள்ளை எதிர்ப்பு மற்றும் விரிவான கடல்சார் பாதுகாப்பு முன்னெடுப்புகள் ஆகியவற்றிற்காக சென்னை துறைமுகத்திற்கு வருகை புரிந்துள்ளது. மேலும் இது குறித்த செய்திகளுக்கு இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/ausindex-19/.

- கோடைக்கால சுற்றுலாவின் போது பொது மக்கள் மற்றும் காவல் துறை ஆகியோர்களுக்கு உதவுவதற்காக "நீலகிரி படைப் பிரிவு" என்ற 60 வீரர்கள் கொண்ட வலிமையான தன்னார்வலர்கள் படையை நீலகிரி மாவட்டக் காவல் துறை உருவாக்கியுள்ளது.
- அஸ்ஸாம் வன அதிகாரி ஒருவர் இந்தியாவின் மிகச்சிறிய மந்தாரைகளில் (Orchid) ஒன்றான "லெக்கனோர்ச்சிஸ் தைவானியானா" என்பதைக் கண்டறிந்துள்ளார். இது குறுகிய காலத்தில் பூக்கும் தன்மையுடைய தாவரமாகும். இது மிகச்சிறிய அளவுடையதாகும். இது முதன்முறையாக தற்பொழுது பதிவு செய்யப்பட்டுள்ளது.
  - இந்த மந்தாரையானது மைக்கோஹெட்ரோடிரோப் என்ற ஒரு ஒட்டுண்ணித் தாவரமாகும். இது உணவிற்காக ஒளிச்சேர்க்கையைச் சார்ந்து அல்லாமல் பூஞ்சையைச் சார்ந்து உள்ளது.
- பாகிஸ்தானின் வெளிநாட்டுக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அடுத்த மூன்று ஆண்டு காலத்திற்கு 6 பில்லியன் டாலர்களை அந்நாட்டிற்கு கடனாக வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியமானது (IMF - International Monetary Fund) அந்நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- ஐசிசி பெண்கள் சாம்பியன்ஷிப்பின் 3வது ஒரு நாள் போட்டித் தொடரில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியில் 147வது விக்கெட்டை வீழ்த்தியதையடுத்து பெண்களுக்கான ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் வெற்றிகரமான சுழற்பந்து வீச்சாளராக பாகிஸ்தானைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் சானா மிர் உருவெடுத்துள்ளார்.
- உலகின் முன்னிலை டென்னிஸ் வீரரான நோவாக் ஜோகோவிக் 2019 ஆம் ஆண்டின் மேட்ரிட் ஓபன் பட்டத்தை வென்றுள்ளார். இவர் கிரீஸைச் சேர்ந்த டென்னிஸ் வீரரான ஸ்டெபானோஸ் சிசீபாஸ் என்பவரை 6-3, 6-4 என்ற இரண்டு நேர் செட்களில் வீழ்த்தினார்.
- மாணவர்களின் மாற்றுச் சான்றிதழில் அவரின் சாதியைக் குறிப்பிட வேண்டாம் என்று அனைத்துப் பள்ளி முதல்வர்களுக்கும் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.
  - இந்தச் சான்றிதழானது மாணவரின் சாதி குறித்த தகவல் இடம்பெற வேண்டிய இடத்தில் "வருமான அதிகாரிகளால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழைப் பார்க்கவும்" என்பதைக் கொண்டிருக்கும்.
- 2017 ஆம் ஆண்டிலிருந்து கடைபிடிக்கப்பட்ட இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கான பணிநிலை ஒதுக்கீட்டினை இரத்து செய்யும் தில்லி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து இந்திய உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தொடுத்த மேல்முறையீட்டு வழக்கினை 2019 ஆம் ஆண்டு மே 13 அன்று விசாரிக்க உச்ச நீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது.
  - புதிய பணிநிலை ஒதுக்கீட்டு கொள்கையின்படி தரவரிசைப் பட்டியலில் முன்னணியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமைப் பணிநிலையானது மறுக்கப்படுகின்றது. ஆனால் தரவரிசைப் பட்டியலில் பின்நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமைப் பணிநிலை ஒதுக்கப்படுகின்றது.

- "தி லான்செட்" என்ற ஒரு மருத்துவப் பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட முதன்முறையாக இது போன்ற ஒரு ஆய்வின்படி, ஆண்டுதோறும் ஹீமோதெரபி சிகிச்சை தேவைப்படும் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையானது 2018 ஆம் ஆண்டில் 9.8 மில்லியனிலிருந்து 2040 ஆம் ஆண்டில் 15 மில்லியனாக உயரும் என்று கூறப்பட்டுள்ளது.
  - 2040 ஆம் ஆண்டில் உலகளவில் ஹீமோதெரபி சிகிச்சையானது நுரையீரல் புற்று நோய் (16.4%), மார்பகப் புற்று நோய் (12.7%) மற்றும் மலக்குடல் புற்று நோய் (11.1%) ஆகிய நோய்களுக்குத் தேவைப்படும் என்று கண்டறியப்பட்டுள்ளது.
- விரிவான அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்த அமைப்பின் (Comprehensive Test Ban Treaty Organization - CTBTO) நிர்வாகச் செயலாளர் இந்தியாவை CTBT-ல் பார்வையாளராக செயல்படுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.
  - இந்த அமைப்பில் பார்வையாளராக இருப்பதனால் சர்வதேசக் கண்காணிப்பு அமைப்பிலிருந்து (IMS - International Monitoring System) இந்தியா தகவல்களை அணுக முடியும். IMS ஆனது உலகம் முழுவதும் 337 உணர்விகளைக் கொண்டுள்ளது. இது CTBT விதிமுறைகளை மீறி எந்தவொரு நாட்டினாலும் மேற்கொள்ளப்படும் அணு ஆயுத சோதனையைக் கண்டறியும்.
- இந்தியாவைச் சேர்ந்த G.S. லட்சுமி என்பவர் ஐசிசி போட்டியின் நடுவர்களுக்கான சர்வதேசக் குழுவிற்கு நியமிக்கப்பட்ட முதலாவது பெண் நடுவராக உருவெடுத்துள்ளார். இவர் உடனடியாக சர்வதேசப் போட்டிகளில் நடுவராக செயல்பட தகுதி பெறவிருக்கின்றார்.
  - இவர் 2008-09 ஆம் ஆண்டுகளில் முதன்முறையாக உள்ளூர் பெண்கள் கிரிக்கெட் போட்டியில் போட்டியின் நடுவராக செயல்பட்டார். இவர் பெண்களுக்கான 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் பெண்களுக்கான 3 T20 ஓவர் போட்டிகளில் நடுவராகச் செயல்பட்டார். ஆண்களுக்கான ஒரு நாள் போட்டிகளில் இடம்பெற்ற முதலாவது பெண் நடுவராக கடந்த மாதம் ஆஸ்திரேலியாவின் கிளாரி போலேசாக் உருவெடுத்துள்ளார்.
- மத்திய அரசு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், 1967-ன் பிரிவு 3-ன் துணைப் பிரிவுகளான (1) மற்றும் (3)-ன் கீழ் தமிழ்ப் பிரிவினைவாத அமைப்பான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது. இது உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது.
- நாசாவின் சந்திரன் ஆய்வுப் பணி விண்கலத்தினால் (Lunar Reconnaissance Orbiter-LRO) எடுக்கப்பட்ட ஒரு படத்தின்படி, நிலா ஆனது சீராகச் சுருங்குகின்றது. எனவே அதனால் நிலவின் மேற்பரப்பு மீது சுருக்கம் மற்றும் நடுக்கங்கள் ஏற்படுகின்றன.
  - நிலவானது 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவான போதிலிருந்து தனது வெப்பத்தை மெதுவாக இழந்து வருகின்றது. இதனால் கண்டத்திட்டு நகர்வுகள் நிலவில் ஏற்படுகின்றன. இதனால் நிலவின் மேற்பரப்பானது 50 மீட்டர்களுக்கு மேல் சுருக்கம் அடைந்துள்ளது.
- ரஹிபாய் சோமா போப்ரே குறித்த மூன்று நிமிடம் ஓடக்கூடிய "சீடு மதர்" (Seed Mother) என்ற ஆவணப் படமானது 2019 ஆம் ஆண்டின் கேன்ஸ் திரைப்படத் திருவிழாவில் திரையிடப்பட விருக்கின்றது.
  - இவர் மகாராஷ்டிராவில் உள்ள தனது சொந்த கிராமமான கொம்பால்னியில் காய்கறிகள், பல்வேறு விதை வகைகள் மற்றும் உள்ளூர் இனங்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான தேவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

- அமெரிக்காவின் ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரியான விக்டர் வெஸ்கோவோ என்பவர் புவியின் ஆழமான பகுதியான பசிபிக் கடலின் மரியானா அகழியில் உள்ள சேலஞ்சர் ஆழப் பகுதியில் 6.8 மைல்களுக்கு (35,853 அடி / 10,928 மீட்டர்கள்) கீழே நீரில் மூழ்கி சாதனை படைத்துள்ளார்.
    - புதிய உயிர் இனங்கள் தவிர, இவர் கடலின் அடிப்பரப்பில் நெகிழிக் கழிவுப் பொருட்களைக் கண்டறிந்துள்ளார். கடலில் 100 மில்லியன் டன்களுக்கு மேலான நெகிழிப் பொருட்கள் கொட்டப்பட்டுள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு உற்பத்தி மற்றும் விநியோகக் கழகமானது சென்னை அண்ணா சாலையில் உள்ள துணை நிலையத்தை 33 கிலோ வோல்ட்/11 கிலோ வோல்ட் என்ற அளவில் மேம்படுத்துவதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இது சென்னை நகரத்தின் முதலாவது ஆளில்லா துணை மின் நிலையமாக உருவெடுத்துள்ளது.
    - திண்டுக்கல், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஏற்கெனவே ஆளில்லா துணை மின் நிலையங்களைக் கொண்டுள்ளன.
- இந்திய சமூக அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையத்தின் (Indian Council of Social Science Research - ICSSR) பொன்விழாக் கொண்டாட்டங்களை இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு தொடங்கி வைத்தார். மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
    - ICSSR நிறுவனம் இந்தியாவில் சமூக அறிவியலில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக திட்டங்கள், சமூகங்களின் உறுப்பினர்கள், சர்வதேசக் கூட்டுச் செயல்பாடு, திறன் கட்டமைப்பு, ஆய்வுகள், வெளியீடுகள் ஆகியவற்றிற்காக நிதி உதவிகளை அளிக்கின்றது.
- மே 15 முதல் 22 வரை ஆசிய நாடுகளுக்கிடையே கலாச்சாரப் பகிர்மானங்களை ஊக்குவிப்பதற்காக ஆசிய நாகரிகங்களின் பகிர்மானங்கள் மீதான கருத்தரங்கை சீனா பெய்ஜிங்கில் நடத்துகின்றது.
    - இந்தக் கருத்தரங்கின் கருத்துருவானது, “எதிர்காலப் பகிர்மானத்துடன் கூடிய ஒரு சமூகம் மற்றும் ஆசிய நாகரீகங்களுக்கிடையேயான பரஸ்பர கல்வி மற்றும் பரிமாற்றம்” என்பதாகும். இது ஆசியத் தீர்வுகளானது அதன் மக்களுக்குப் பயன்படுவதையும் ஆசிய அறிவானது அரசியல் வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் ஒப்புக் கொள்கின்றது.
- மாஹி என்ற குறைவான எடை கொண்ட (LSA - Light Sports Aircraft) விளையாட்டுப் போட்டிகளுக்கான விமானத்தில் தனி நபராக அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்த உலகின் முதலாவது பெண்மணியாக இந்தியாவைச் சேர்ந்த படைத் தலைவரான ஆரோகி பண்டிட் உருவெடுத்துள்ளார்.
    - இந்தச் சாதனையானது இவரின் தற்போதைய “பெண்களுக்கான அதிகாரமளிப்புப் பயணத்தின்” ஒரு பகுதியாகும். LSA ஆனது 400 கிலோ கிராம் எடை, ஒற்றை என்ஜின், மிகக் குறைந்த எடை கொண்ட இயந்திரம் ஆகிய அம்சங்களைக் கொண்டது. இந்த விமானம் ஸ்லோவேனியாவில் தயாரிக்கப்பட்டதாகும். மாஹி இந்திய விமானப் போக்குவரத்துப் பொது இயக்குனரகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலாவது LSA ஆகும்.
- இந்திய அரசு அனைத்து கடைகளிலும் ஒருங்கிணைந்த பண வழங்கீடுகள் இடைமுகத்தை (UPI - Unified Payments Interface) பயன்படுத்தி விரைவு பதிலெதிர்ப்பு குறியீடு அடிப்படையிலான பண வழங்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

- நேபாளத்தைச் சேர்ந்த 49 வயதாகிய முன்னாள் ஷெர்பாவான (பிரதிநிதி) “காமி ரீட்டா” என்பவர் இமயமலையை 23-வது முறையாக அடைந்து உலக சாதனை படைத்துள்ளார்.
    - 2018 ஆம் ஆண்டில் 22-வது முறையாக இமய மலையை அடைந்த சாதனையை இவரே முறியடித்துள்ளார்.
- இரகசியப் பாதுகாப்பு காரணங்களுக்காக, முக்கியத்துவம் அல்லாத குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் மற்றும் முக்கியக் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கு காவல் துறை மற்றும் இதர நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் “முக அங்கீகார மென்பொருள்” தடை செய்யப்பட்ட முதலாவது அமெரிக்க நகரமாக சான் பிரான்சிஸ்கோ உருவெடுத்துள்ளது.
- சீனா, தனது நாட்டில் நிகழ்நேர (ஆன்லைன்) கலைக் களஞ்சியமான விக்கிப்பீடியா வலைதளத்தின் அனைத்து மொழி வடிவங்களையும் அணுகுவதற்குத் தடை விதித்துள்ளதாக விக்கிமீடியா நிறுவனம் தெரிவித்துள்ளது.
    - 2015 ஆம் ஆண்டு முதல், சீனாவின் “கிரேட் பயர்வால்” (Great Firewall) ஆனது விக்கிப்பீடியாவின் சீன மொழி வடிவத்தை அணுகுவதற்குத் தடை விதித்திருந்தது. நீண்ட காலமாக சீனப் பயன்பாட்டாளர்கள் முகநூல், சுட்டுரை, இன்ஸ்டாகிராம் மற்றும் இதர சமூக ஊடகங்களைப் பயன்படுத்தாமல் இருகின்றனர்.
- இந்திய சமூக அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையத்தின் (Indian Council of Social Science Research - ICSSR) பொன்விழாக் கொண்டாட்டங்களை இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு தொடங்கி வைத்தார். மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
    - ICSSR நிறுவனம் இந்தியாவில் சமூக அறிவியலில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக திட்டங்கள், சமூகங்களின் உறுப்பினர்கள், சர்வதேசக் கூட்டுச் செயல்பாடு, திறன் கட்டமைப்பு, ஆய்வுகள், வெளியீடுகள் ஆகியவற்றிற்காக நிதி உதவிகளை அளிக்கின்றது.
- மே 15 முதல் 22 வரை ஆசிய நாடுகளுக்கிடையே கலாச்சாரப் பகிர்மானங்களை ஊக்குவிப்பதற்காக ஆசிய நாகரிகங்களின் பகிர்மானங்கள் மீதான கருத்தரங்கை சீனா பெய்ஜிங்கில் நடத்துகின்றது.
    - இந்தக் கருத்தரங்கின் கருத்துருவானது, “எதிர்காலப் பகிர்மானத்துடன் கூடிய ஒரு சமூகம் மற்றும் ஆசிய நாகரீகங்களுக்கிடையேயான பரஸ்பர கல்வி மற்றும் பரிமாற்றம்” என்பதாகும். இது ஆசியத் தீர்வுகளானது அதன் மக்களுக்குப் பயன்படுவதையும் ஆசிய அறிவானது அரசியல் வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் ஒப்புக் கொள்கின்றது.
- மாஹி என்ற குறைவான எடை கொண்ட (LSA - Light Sports Aircraft) விளையாட்டுப் போட்டிகளுக்கான விமானத்தில் தனி நபராக அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்த உலகின் முதலாவது பெண்மணியாக இந்தியாவைச் சேர்ந்த படைத் தலைவரான ஆரோகி பண்டிட் உருவெடுத்துள்ளார்.
    - இந்தச் சாதனையானது இவரின் தற்போதைய “பெண்களுக்கான அதிகாரமளிப்புப் பயணத்தின்” ஒரு பகுதியாகும். LSA ஆனது 400 கிலோ கிராம் எடை, ஒற்றை என்ஜின், மிகக் குறைந்த எடை கொண்ட இயந்திரம் ஆகிய அம்சங்களைக் கொண்டது. இந்த விமானம் ஸ்லோவேனியாவில் தயாரிக்கப்பட்டதாகும். மாஹி இந்திய விமானப் போக்குவரத்துப் பொது இயக்குனரகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலாவது LSA ஆகும்.

- இந்திய அரசு அனைத்து கடைகளிலும் ஒருங்கிணைந்த பண வழங்கீடுகள் இடைமுகத்தை (UPI - Unified Payments Interface) பயன்படுத்தி விரைவு பதிலெதிர்ப்பு குறியீடு அடிப்படையிலான பண வழங்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.
- நேபாளத்தைச் சேர்ந்த 49 வயதாகிய முன்னாள் ஷெர்பாவான (பிரதிநிதி) "காமி ரீட்டா" என்பவர் இமயமலையை 23-வது முறையாக அடைந்து உலக சாதனை படைத்துள்ளார்.
    - 2018 ஆம் ஆண்டில் 22-வது முறையாக இமய மலையை அடைந்த சாதனையை இவரே முறியடித்துள்ளார்.
- இரகசியப் பாதுகாப்பு காரணங்களுக்காக, முக்கியத்துவம் அல்லாத குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் மற்றும் முக்கியக் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கு காவல் துறை மற்றும் இதர நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் "முக அங்கீகார மென்பொருள்" தடை செய்யப்பட்ட முதலாவது அமெரிக்க நகரமாக சான் பிரான்சிஸ்கோ உருவெடுத்துள்ளது.
- சீனா, தனது நாட்டில் நிகழ்நேர (ஆன்லைன்) கலைக் களஞ்சியமான விக்கிப்பீடியா வலைதளத்தின் அனைத்து மொழி வடிவங்களையும் அணுகுவதற்குத் தடை விதித்துள்ளதாக விக்கிமீடியா நிறுவனம் தெரிவித்துள்ளது.
    - 2015 ஆம் ஆண்டு முதல், சீனாவின் "கிரேட் பயர்வால்" (Great Firewall) ஆனது விக்கிப்பீடியாவின் சீன மொழி வடிவத்தை அணுகுவதற்குத் தடை விதித்திருந்தது. நீண்ட காலமாக சீனப் பயன்பாட்டாளர்கள் முகநூல், சுட்டுரை, இன்ஸ்டாகிராம் மற்றும் இதர சமூக ஊடகங்களைப் பயன்படுத்தாமல் இருகின்றனர்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு ஆணையத்தின் 1267 தீர்மானம் மூலம் உருவாக்கப்பட்ட அல் கொய்தா தடைவிதிப்புக் குழுவானது ஐஎஸ்ஐஎஸ் கோராசன் மீது தடைகளை விதித்துள்ளது.
    - ஐஎஸ்ஐஎஸ் - கே என்பது பாகிஸ்தானைச் சேர்ந்தவரால் 2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஒரு தீவிரவாத அமைப்பாகும். இது ஐஎஸ்ஐஸ் அமைப்பின் தெற்கு ஆசியக் கிளை என்றும் அழைக்கப்படுகின்றது.
- நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தின் ஒருங்கிணைந்த பகுதியான கேரளாவில் உள்ள வயநாடு வனவிலங்கு சரணாலயமானது (Wayanad Wildlife Sanctuary - WWS) அதிகமான புலிகளைக் கொண்டுள்ளது. அம்மாநிலத்தில் மொத்தமுள்ள 176 புலிகளில், 75 புலிகள் WWS-ல் கண்டறியப்பட்டுள்ளன.
    - இந்த உயிர்க்கோள முக்கியப் பகுதியானது கர்நாடகாவில் உள்ள நாகர்கோல், வடகிழக்கில் பந்திப்பூர் மற்றும் தென்கிழக்கில் முதுமலை ஆகிய பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் வலைப் பின்னலினால் சூழப்பட்டுள்ளது.
- இந்திய சிறு தொழிற்சாலைகள் வளர்ச்சி வங்கியானது (Small Industries Development Bank of India - SIDBI) சிறு தொழில்களுக்கு நிதியளிக்கின்ற மற்றும் வருமானத்தைத் தருகின்ற இதர நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் புதுமைக் கால நிதியியல் தொழில்நுட்ப நிறுவனங்களான வங்கிப் பணி அல்லாத நிதியியல் நிறுவனங்களுக்கு (NBFC - non-banking finance companies) ரூ.10 கோடி வரை நிதியுதவித் தொகையை நீட்டிப்பதற்காக சோதனைத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.
    - நிதியியல் தொழில்நுட்பம்சார் NBFC-களானது டிஜிட்டல் முறையில் கடனளிக்கும் நிறுவனங்களாகும். இவை நிதித் தொகையினை எளிதான முறையிலும் விரைவாகவும் அணுகுவதற்குத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன.

- இந்தியத் தலைமைக் கடற்படைத் தளபதியான சுனில் லம்பா இந்தியக் கடற்படையின் முதலாவது முழுமையான தேர்வு வாரியத்தினை (SSB - Service Selection Board) கொல்கத்தாவிற்கு அருகிலுள்ள டைமண்ட் ஹார்பரில் தொடங்கி வைத்தார்.
    - இதன் தொடக்க விழாவில் இந்தியத் துணைக் கடற்படைத் தளபதி கரம்பீர் சிங், தலைமைக் கொடி அதிகாரி, கிழக்கு மண்டலத் தலைமைத் தளபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.
- புவியின் ஆழமான பகுதியான மரியானா அகழியில் வாழும் கடல்சார் உயிரினங்களில் கதிரியக்கக் கார்பன் இருப்பதற்கான தடயங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
    - இந்தக் கதிரியக்கக் கார்பன் 20 ஆம் நூற்றாண்டில் நிகழ்த்தப்பட்ட அணு ஆயுதச் சோதனையின் போது வளிமண்டலத்தில் வெளியிடப்பட்டதாகும்.
- தேசியத் தூய்மை கங்கைத் திட்டம், எச்சிஎல் நிறுவனம் (HCL) மற்றும் இந்தியாவில் தேசியக் கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரிய அறக்கட்டளை (Indian National Trust for Art and Culture Heritage - INTACH) ஆகியவை "நமாமி கங்கை" திட்டத்தின் கீழ் உத்தரகாண்டில் ருத்ராக்ச மரங்களை நடுவதற்காக முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- கேரள மாநில சட்ட சபையானது இ-விதான் என்ற தனது புகழ்மிக்கதொருத் திட்டத்தின் கீழ், தனது அனைத்துப் பதிவுகள் மற்றும் நடைமுறைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக ஒரு முன்னெடுப்பை சமீபத்தில் அறிவித்துள்ளது. E-விதான் என்ற திட்டம் மாநில சட்டசபை முழுவதையும் டிஜிட்டல் மயமாகவும் காகிதமற்றதாகவும் மாற்றுவதற்கு எண்ணுகின்றது.
    - இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால், உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்படும் அறிவிப்புகள், கேள்வி-பதில், சபையில் நடைபெறும் அலுவல்கள் மற்றும் சபை தொடர்பானவை போன்ற அனைத்து சட்டமன்ற நடைமுறைகளும் காகிதமற்ற முறையில் செயல்படவிருக்கின்றன.
- 1990 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆணடு வரை 29 ஆண்டுகளாக இந்தியாவில் கிழக்குக் கடற்கரையைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றிய "விக்ரகா" என்ற இந்தியக் கடலோரப் பாதுகாப்புக் கப்பலானது (ICGS - Indian Coast Guard ship) விசாகப்பட்டினத்தில் பணியிலிருந்து விலக்கப்பட்டது.
    - இது மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட ஏழாவது கடல் ரோந்துக் கப்பலாகும். 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இந்தியக் கப்பற்படை வீரர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் இல்லாமல் இந்தக் கப்பல் மட்டும் இலங்கை கப்பற்படைக்கு குத்தகைக்கு விடப்பட்டது.
- நாடுகளுக்கான சேவைகள் வர்த்தக கட்டுப்பாட்டுடைமைக் குறியீட்டிற்கு (STRI - Services Trade Restrictiveness Index) பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பினால் (Organisation for Economic Cooperation and Development - OECD) ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையானது முரண்பட்டதாகவும் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு சாதகமாக இருப்பதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.
    - இந்திய சேவைகள் துறையானது அந்நிய நேரடி முதலீடு போன்ற பகுதிகளில் மிகவும் கட்டுப்பாடு உள்ளவையாக உள்ளது என்று STRI தரவரிசையானது காட்டுகின்றது. ஆனால் 1991 ஆம் ஆண்டில் எல்பிஜி முறைக்குப்

(தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல்) பின்பு மிகவும் தாராளமயமாக்கப்பட்ட விதிமுறைகளில் ஒன்று அந்நிய நேரடி முதலீடாகும்.

- இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனமானது (GSI - Geological Survey of India) தனது அறிக்கையில் இந்தியாவில் மொத்த கிராபைட் வளங்களில் 35 சதவிகிதத்திற்கும் மேல் அருணாச்சலப் பிரதேசத்தில் காணப்படுகிறது என்று கூறியுள்ளது. இதுவே நாட்டில் கிராபைட் அதிக அளவில் கண்டெடுக்கப் பட்டுள்ள இடங்களில் ஒன்றாகும்.
  - GSI ஆனது இரயில்வேயிற்கு நிலக்கரி இருப்புகளைக் கண்டறிவதற்காக 1851 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது கொல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்டு மத்திய சுரங்க அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இந்தியா முதன்முறையாக “இராணுவ சாரணர் மாஸ்டர்ஸ் போட்டியை” (ASMC - Army Scouts Masters competition) நடத்தவிருக்கின்றது. இந்தப் போட்டியானது 2019 ஆம் ஆண்டில் ஜூலை இறுதியிலிருந்து ஆக்ஸ்ட் மாதத்தின் பாதி வரை ஜெய்சால்மர் இராணுவ நிலையத்தில் இந்திய இராணுவத்தின் “கோனார்க் படையினால்” நடத்தப்படவிருக்கின்றது.
  - ASMC ஆனது 2015 ஆம் ஆண்டு முதல் நோவோசிபிர்ஸ்க் பகுதியில் உள்ள கோல்ட்சோவோ பயிற்சி மைதானத்தில் ரஷ்யாவினால் நடத்தப்படும் சர்வதேச இராணுவ விளையாட்டுகளின் ஒரு பகுதியாகும். அது தொடங்கப்பட்டதிலிருந்து இந்தியா அதில் கலந்து கொண்டுள்ளது.
- காண்டாமிருக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகமானது இந்தியாவில் உள்ள அனைத்து காண்டாமிருகங்களின் டிஎன்ஏ வடிவங்களை உருவாக்குவதற்கான ஒரு திட்டத்தினை முன்னெடுத்துள்ளது.
  - 90 சதவிகிதத்திற்கும் மேலான காண்டாமிருகங்கள் அசாமின் காசிரங்கா தேசியப் பூங்காவில் உள்ளன. வேட்டையாடுவதிலிருந்து அவற்றைப் பாதுகாப்பதற்காகவும அவற்றின் வாழிடங்களைப் பாதுகாப்பதற்காகவும் அரசாங்கம் இவற்றில் சிலவற்றை மானஸ் தேசியப் பூங்கா மற்றும் போபிதரா வனவிலங்கு சரணாலயம் ஆகியவற்றிற்கு இடம் மாற்ற முயற்சி எடுத்து வருகின்றது.
- சர்வதேச மருந்துகள் ஆய்வு நிறுவனத்தின் (Global Drugs Survey – GDS) 8-வது வருடாந்திர ஆய்வு அறிக்கையானது இந்தியர்களை முதன்முறையாக ஆய்வு செய்து, அதில் மது பானங்களை எடுத்துக் கொள்வதைக் குறைப்பதற்கு மற்ற நாடுகளைவிட இந்தியர்கள் அதிக உதவியை எதிர்பார்க்கின்றனர் என்பதைக் கண்டறிந்துள்ளது.
  - GDS ஆனது பொழுதுபோக்கு போதைப் பொருள் பற்றிய மிகப்பெரிய சர்வதேசக் கணக்கெடுப்பை நடத்துகின்றது. இது வழக்கமான போதைப் பொருள் பயன்பாட்டாளர்கள் மற்றும் போதைப் பொருள்களை ஏற்றுக் கொள்வதில் புதிய முறைகளை முன்பே ஏற்றுக் கொண்டவர்கள் ஆகியோரிடையே ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் போதைப் பொருள் பயன்பாட்டின் போக்குகள் குறித்த ஒரு அநாமதேய மற்றும் நிகழ்நேர ஆய்வாகும்.
- இந்தியா இரண்டு எம்ஐ-24 என்ற தாக்குதல் ரக வானூர்திகளை ஆப்கானிஸ்தானிற்கு வழங்கியது. மேலும் 2 வானூர்திகளை கூடுதலாக இந்தியா அந்நாட்டிற்கு அனுப்பி வைக்கவிருக்கின்றது. இந்த வானூர்திகள் 2015 ஆம் ஆண்டில் இந்தியாவினால் ஆப்கானிஸ்தானிற்குப் பரிசாக வழங்கப்பட்டன.
  - ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தின் கீழ், இந்தியா பெலாரஸ் நாட்டிடமிருந்து வானூர்திகளை விலைக்கு வாங்கி, அதை ஆப்கானிஸ்தானிற்கு வழங்க ஒப்புக் கொண்டது.

- மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் எந்தவொரு துணி வகையிலும் பொருத்தப்படக் கூடிய "அணியத்தகு சிறப்புமிகு மின்தேக்கியை" உருவாக்கியுள்ளனர். இதே போன்ற மற்ற சாதனங்களைக் காட்டிலும் இது அதிக அளவிலான மின் ஆற்றலை சேமித்து அந்த ஆற்றலை விநியோகிக்கும்.
    - இந்த சிறப்புமிகு மின்தேக்கியைப் புவியிடங்காட்டி பொருத்தப்பட்ட சாதனங்களுக்கு மின்சாரம் அளித்தல், LED விளக்கு அல்லது சிறிய மின்னணு சாதனங்களுக்கு மின்சாரம் அளித்தல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்த முடியும்.
- புக்கபாட்னாவில் (தும்கூரு மாவட்டம்) இரண்டாவது சிங்காரா மான் (கெசல்லே பென்னீடி/ சிறுமான் – Chinkara Deer) வனவிலங்கு சரணாலயத்தை உருவாக்கவிருப்பதாக கர்நாடக மாநில அரசு அறிவித்துள்ளது. கர்நாடகா 2016 ஆம் ஆண்டில் பாகல்கோட் மாவட்டத்தில் இவ்வகையிலான முதலாவது வனவிலங்கு சரணாலயத்தை உருவாக்கியது.
    - சர்வதேச அளவில் சிங்காரா மானின் எண்ணிக்கையில் 60 சதவிகிதத்திற்கும் மேலான அளவில் அந்த இனம் தற்போது மேற்கு இராஜஸ்தானில் காணப்படுகின்றது.
- ஆசியாவிலேயே முதல்முறையாக தன்பாலினத் திருமணத்தை சட்டப் பூர்வமாக்கும் ஒரு மசோதாவை தைவான் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
    - இந்த மசோதா "பிரத்தியேகமான நிரந்தர தம்பதிகளை" உருவாக்குவதற்கு ஒரே பாலினத் தம்பதிகளை அனுமதிக்கின்றது. மேலும் இம்மசோதா இத்தம்பதிகள் "திருமணப் பதிவுகளுக்கு" விண்ணப்பிப்பதற்கும் அனுமதிக்கின்றது.
- அண்ணா பல்கலைக் கழகம் தமது பல்கலைக் கழகப் பிரிவுகள், சுயநிதி நிறுவனங்கள் மற்றும் சுயநிதியற்ற பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் பதிவுகளை தேசியப் பாதுகாப்புக் களஞ்சியத்தின் இணைய தளத்தில் பதிவேற்றுவதற்காக தேசியப் பாதுகாப்புக் களஞ்சிய (National Academic Depository - NAD) நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
    - பல்கலைக்கழகம் தற்பொழுது வரை 2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட பட்டப்படிப்புச் சான்றிதழ்களை NAD இணைய தளத்தில் பதிவேற்றியுள்ளது. NAD ஆனது மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் 2017 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது.
- பிரான்சில் உள்ள சிஎன்ஆர்எஸ் ஆராய்ச்சி மையத்தின்படி, 1 எம்பி மின்னஞ்சலை அனுப்புவதற்கு 25 வாட் மின்சாரம் (ஒரு மணி நேரத்திற்கு 25 வாட்) தேவைப்படுகிறது என்றும் 20 கிராம் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வுகளை உருவாக்குகிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.
    - தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களிலிருந்து வெளியிடப்படும் பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வுகளானது 2020 ஆம் ஆண்டில் 4 சதவிகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தானியங்கி தொழிற்துறை (2018 ஆம் ஆண்டில் 8%) மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை (2018 ஆம் ஆண்டில் 2%) ஆகியவற்றைக் காட்டிலும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையானது அதிக அளவிலான கார்பன் உமிழ்வுகளை ஏற்படுத்த இது வழிவகுக்கும்.
- நாட்டிலேயே இது போன்ற நடவடிக்கையில் முதல்முறையாக தேசிய மாணவர் படையைப் போன்றே சட்ட மாணவர் படை ஜார்க்கண்ட் மாநிலத்தில் உருவாக்கப் பட்டுள்ளது.
    - இந்த நடவடிக்கையானது சட்டப் பூர்வக் கல்வியை நிரந்தரப் பள்ளிக் கல்வியின் ஒரு பகுதியாக ஏற்படுத்துவதன் மூலம், பள்ளி மாணவர்களிடையே, குறிப்பாக 9 ஆம்

வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே, சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த எண்ணுகின்றது.

- "சிப்பா" எனும் படத்தில் நடித்ததற்காக சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருதினை 11 வயதான கன்னி பவார் 19வது நியூயார்க் இந்தியத் திரைப்பட விழாவில் வென்றுள்ளார்.
- முப்படைகளின் கமாண்டோக்களையும் உள்ளடக்கிய நாட்டின் முதல் முப்படை சிறப்பு நடவடிக்கைப் பிரிவின் முதல் தலைவராக மேஜர் ஜெனரல் A.K. திங்கரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டிற்கான சியட் (CEAT) கிரிக்கெட் தரவரிசையில் ஆண்டிற்கான சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரருக்கான விருதினை இந்திய அணியின் தலைவரான விராட் கோலியும் ஆண்டிற்கான சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீராங்கனைக்கான விருதினை ஸ்மிரிதி மந்தனாவும் வென்றுள்ளனர்.
- கொரியக் கால்பந்துக் கூட்டமைப்பானது 2023 ஆம் ஆண்டின் ஆசியக் கோப்பைப் போட்டியை நடத்தும் தனது முயற்சியிலிருந்து விலகியதால் மற்றொரு ஒரே ஏலதாரரான சீனாவுக்கு எவ்வித தடையுமின்றி அந்தப் போட்டியை நடத்தும் வாய்ப்பு கிட்டியுள்ளது.
  - கொரியக் கால்பந்துக் கூட்டமைப்பானது 2023 ஆம் ஆண்டின் பெண்கள் உலகக் கோப்பைப் போட்டியை வடகொரியாவுடன் இணைந்து நடத்தும் முயற்சியில் கவனம் செலுத்தவிருப்பதால் தாம் அதிலிருந்து விலகியிருப்பதாகக் கூறியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது "டிஜிட்டல் முறையில் பணவழங்கீடுகளை ஊக்குவிப்பதற்குப் பரிசீலனைகளை அளிப்பதற்காக" குழு ஒன்றை நியமித்துள்ளது.
  - இக்குழு நந்தன் நீலேகேனி தலைமையில் அமைக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் பண வழங்கீடுகள் மற்றும் தீர்வு அமைப்புகளை ஊக்குவிப்பது மீதான தனது பரிந்துரைகளை இக்குழு சமர்ப்பித்துள்ளது.
- மத்திய அரசு மத்திய பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் எம்சிஏ 21 தளத்தில் செயற்கை நுண்ணறிவு அமைப்பை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.
  - இது தகவிணக்கத்திற்கான செயல்முறையை எளிதாக்குதல் மற்றும் தன்னியக்க முறையில் வழக்கமான நடைமுறை செயல்கள் 24 மணி நேரமும் நடைபெறுவதை உறுதி செய்தல் ஆகியவற்றிற்காக அறிமுகப்படுத்தப் படவிருக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தாலிய ஓபன் இறுதிப் போட்டியில் ரபேல் நடால், நோவாக் ஜோகோவிக்கை வீழ்த்தி 34-வது ATP மாஸ்டர்சின் 1000வது பட்டத்தை வென்று சாதனைப் படைத்துள்ளார். இது அவருடைய ஒன்பதாவது ரோம் பட்டமாகும்.
- அமெரிக்காவின் பிரதிநிதிகள் அவையின் சபாநாயகரான நான்சி பெலோசி என்பவர் 2019 ஆம் ஆண்டின் துணிவிற்கான ஜான் எப் கென்னடி சுயவிவர விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- சமீபத்தில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை எதிர்த்துத் தாக்கி அழிக்கும் வகையிலான ஏவுகணைகளை தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது. விற்பனை செய்யப்படவிருக்கும் இந்த ஏவுகணைகளின் மொத்த மதிப்பானது 600 மில்லியன் டாலர்களுக்கும் மேலானதாகும். வடகொரியாவுடன் அதிகரித்து வரும் பதற்றத்தின் பின்னணியில் இந்த ஏவுகணைகள் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.
  - வான்வெளிப் பரப்பில் ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக அமெரிக்கக் கப்பல்களினால் பயன்படுத்தப்பட்ட "நிரந்தர ஏவுகணை – 2" (SM-2) என்ற

வகையைச் சேர்ந்த 92 ஏவுகணைகளும் "மேம்படுத்தப்பட்ட நடுத்தர வரம்புடைய வானிலிருந்து வானை நோக்கிப் பாயும் ஏவுகணை" என்ற வகையைச் சேர்ந்த 160 வான் எதிர்ப்பு ஏவுகணைகளும் அமெரிக்காவினால் விற்பனை செய்யப்பட்டன.

- 1951 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுதந்திர இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில் முதலாவது வாக்கைப் பதிவு செய்த இமாச்சல பிரதேசத்தைச் சேர்ந்த 102 வயது நிரம்பிய ஷியாம் சரண் நேஹி என்பவர் 2019 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலில் மண்டி மக்களவைத் தொகுதியில் மீண்டும் தனது வாக்கைப் பதிவு செய்தார்.
- கபில் சர்மா என்பவர் இலண்டனின் உலக புத்தகப் பதிவுகள் என்ற அமைப்பினால் வெளிநாட்டிலும் இந்தியாவிலும் மிகவும் பார்வையிடப்பட்ட மேடைச் சிரிப்புரையாளர் என்று பெயரிடப்பட்டுள்ளார். இவர் பல்வேறு நகைச்சுவைத் தொடர்களின் மூலம் மேடைச் சிரிப்புரையாளராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். இவர் "கபிலுடன் நகைச்சுவை இரவுகள்" என்ற தொடரிலிருந்து புகழ் பெற்றார்.
- இந்தியத் தர நிர்ணயங்கள் அமைப்பினால் (Bureau of Indian Standards - BIS) சான்று அளிக்கப்பட்டால் மட்டுமே புதுப்பிக்கப்பட்ட கைபேசிகளை இறக்குமதி செய்ய அனுமதி அளிப்பதற்கு இந்தியா முடிவு செய்துள்ளது.
- இந்தியாவிற்கான தனது புதிய உயர் ஆணையராக மொய்ன் உல் ஹக் என்ற இராஜாங்க அதிகாரியை பாகிஸ்தான் நியமித்துள்ளது.
- இலங்கையில் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த உள்நாட்டுப் போரில் ஏறத்தாழ 1,00,000 மக்கள் இறந்தனர். இந்த உள்நாட்டுப் போர் முடிவடைந்து 10 ஆண்டுகள் ஆனதை இலங்கை தற்பொழுது அனுசரித்தது. இருதரப்பினாலும் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் இலங்கையை வலியுறுத்துகின்றது.
- பல்கலைக்கழக மானியக் குழு (University Grants Commission - UGC) இளைஞர்களை தீவிரவாதத்திலிருந்து விலக்கி வைக்கும் ஒரு நடவடிக்கையாக மே 21 ஆம் தேதியை தீவிரவாத எதிர்ப்புத் தினமாக அனுசரிக்குமாறு பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.
    - விவாதங்கள், கலந்தாய்வுகள், கருத்தரங்குகள், உறுதிமொழி ஏற்கும் நிகழ்வுகள், திரைப்படங்களைக் காட்சிப்படுத்துதல் ஆகியவை இந்த நாளில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளன. இந்த நாள் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் இறந்த தினத்தைக் குறிக்கின்றது.
- முகநூல் நிறுவனம் இந்தியத் தேர்தல்களின் போது தவறான தகவல்கள் பரவுதலைக் குறைப்பதற்காக செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் முறையிலான அங்கீகாரக் கருவிகள் (Artificial Intelligence and Machine Learning - AIML) ஆகியவற்றைப் பயன்படுத்தியதாகக் கூறியுள்ளது.
    - தற்பொழுது AIML கருவிகளானது தவறானவை, அவமதித்தல், தளத்தின் விதிமுறையை மீறுதல் ஆகிய காரணங்களுக்காக ஒரு நாளைக்கு மில்லியனுக்கும் அதிகமான முகநூல் கணக்குகளை நீக்க அல்லது தடை செய்ய அந்த நிறுவனத்திற்கு உதவுகின்றது.
- 46 நாட்கள் நடைபெறும் ஐசிசி ஆண்கள் கிரிக்கெட் போட்டித் தொடரின் 2019 ஆம் ஆண்டிற்கான உலகக் கோப்பைத் தொடரானது மே மாதம் 30 ஆம் தேதியிலிருந்து ஐக்கிய இராஜ்ஜியத்தின் 11 இடங்களில் நடைபெறவிருக்கின்றது.
    - உலகக் கோப்பையில் வெற்றி பெறும் அணி பணமாக சுமார் 4 மில்லியன்

அமெரிக்க டாலர்களைப் பரிசுத் தொகையாக (சுமார் 28 கோடி ரூபாய்கள்) பெறும். போட்டித் தொடரின் வரலாற்றில் அதிகமான பரிசுத் தொகை அளிக்கப்படுவது இதுவேயாகும்.

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள முசாபர்நகர் மாவட்டம் இதே வகையில் முதலாவதான குர் மகா உற்சவத்தை (வெல்லத் திருவிழா/ Jaggery Festival) நடத்திக் கொண்டிருக்கின்றது.
  - ஆசியாவில் வெல்லத்திற்கான மிகப்பெரிய சந்தையாக முசாபர்நகர் விளங்குகின்றது. இங்கு விவசாயிகள் ஏறத்தாழ 60 வகையான வெல்லங்களை உற்பத்தி செய்கின்றனர்.
- “உலக பொருளாதார நிலைமைகள் மற்றும் வாய்ப்புகள்” (WESP - World Economic Situation and Prospects) என்ற அறிக்கையின்படி 2019 ஆம் ஆண்டின் அரையாண்டின்படி வலிமையான உள்நாட்டு நுகர்வுகள் மற்றும் முதலீடுகள் காரணமாக 2020 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 7.1 சதவிகிதமாக வளர்ச்சி அடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
  - WESP என்பது ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை, வர்த்தகம் & வளர்ச்சி மீதான ஐ.நா. கருத்தரங்கு (UN Conference on Trade and Development - UNCTAD) மற்றும் ஐ.நாவின் 5 பிராந்திய ஆணையங்கள் ஆகியவை இணைந்து வெளியிடும் ஒரு அறிக்கையாகும்.
- இந்தியப் போட்டி ஆணையம் (CCI - Competition Commission of India), தனது வருடாந்திர தினத்தை 2019 ஆம் ஆண்டு மே 20 அன்று அனுசரித்தது. CCI மத்திய அரசினால் நியமிக்கப்பட்டுள்ள 6 உறுப்பினர்கள் மற்றும் 1 தலைவரைக் கொண்டு செயல்படுகின்றது.
  - CCI ஆனது போட்டிச் சட்டம், 2002-ன் விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்ட ஒரு சட்டப் பூர்வ அமைப்பாகும். இது 2003 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் (UNHRC - United Nations Human Rights Council) அறிக்கை குறித்து HRC-ன் சிறப்புக் குழுவினருடன் எந்தவிதத் தகவல் தொடர்பும் இந்தியா வைத்துக் கொள்ளாது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்திடம் இந்தியா தெரிவித்துள்ளது.
  - மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகத்தின் (Office of the High Commissioner of Human Rights - OHCHR) 2018 ஆம் ஆண்டின் ஜுன் மாத அறிக்கையானது ஜம்மு காஷ்மீரில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றங்களைக் களைவதற்காக இந்தியாவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விசாரித்துள்ளது.
- மூன்று முறை பார்முலா 1 உலக சாம்பியன் பட்டத்தை வென்றவரும் புகழ்பெற்ற கார் பந்தய வீரருமான நிக்கி லௌடா என்பவர் ஆஸ்திரியாவின் வியன்னாவில் காலமானார். அவருடைய வயது 70.
  - இவர் 1976 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜெர்மன் கிரான்ட் பிரிக்ஸின் மத்தியில் நிகழ்ந்த தீக்காயங்களால் பாதிக்கப்பட்டார். இருப்பினும் விபத்தின்போது ஏற்பட்ட தீக்காயங்களில் இருந்து மீண்டு வந்து திரும்பவும் போட்டியில் கலந்து கொண்ட இவருடைய எதிர்த்துப் போராடும் குணத்திற்காக இவர் நினைவு கூறப்படுகின்றார்.
- உலகெங்கிலும் உள்ள செல்வாக்குள்ள தனி நபர்கள் மற்றும் தனித்துவம் வாய்ந்த திறமையாளர்களை ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாக “தங்க அட்டை” என்ற நிரந்தர வசிப்பிடத் திட்டத்தை ஐக்கிய அரபு அமீரகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

- தங்க அட்டைத் திட்டம் ஐக்கிய அரபு அமீரகத்தின் பிரதமர் ஷேக் முகமது பின் ரஷீது அல்-மக்கோட்டும் என்பவரால் தொடங்கப்பட்டது.

❖ ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்தியாவைச் சேர்ந்த ஜொஹிந்தர் சிங் சலாரியா என்பவரால் நிர்வகிக்கப்படும் ஒரு அறக்கட்டளையான "பிசிடி மனிதநேயம்" என்ற அமைப்பு "பசி நிவாரணத் தொகுப்பின் ஒரு நீண்ட வரிசை" என்பதை ஏற்படுத்தியதற்காக ஒரு புதிய கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளது.

- முஸ்லீம்களின் புனிதமான ரம்சான் மாதத்தின் போது பசி நிவாரண முயற்சிகளுக்காக இந்த கருணை உதவி நடத்தப்பட்டது.

❖ உயிரித் தொழில்நுட்பத் துறை (Department of Biotechnology - DBT) மற்றும் அணு ஆற்றல் துறை (Department of Atomic Energy - DAE) ஆகியவை புற்றுநோய்த் துறையில் இணைப்புக் கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களை ஆதரிப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

- DAE ஆனது, அதன் டாட்டா நினைவு மையத்தினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது. இது இந்தியாவில் தேசியப் புற்றுநோய்க் கட்டுப்பாட்டு மையத்தின் சார்பில் ஓர் ஒருங்கிணைப்பு மையமாகவும் செயல்படுகின்றது.

❖ ஜெப் பெசோஸ் தலைமையிலான அமேசான் நிறுவனம் "ஒதுக்கப்பட்ட பெயர்கள் மற்றும் எண்களுக்கான இணையக் கழகத்தில்" (ICANN - Internet Corporation for Assigned Names and Numbers) ஏழு ஆண்டுகளாக நடைபெற்ற " .amazon " என்ற வலைதள பெயரைப் பெறும் பிரச்சனையில் வெற்றி பெற்றுள்ளது.

❖ உணவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறை நிறுவனமான இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையம் (FSSAI - Food Safety and Standards Authority of India) வருடாந்திர விற்பனையாக ரூ.12 இலட்சத்திற்கும் மேல் தங்கள் பொருட்களை விற்பனை செய்யும் சிறு கரிம உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களை 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை சான்றிதழ் ஏதும் இல்லாமல் நுகர்வோர்களுக்குப் பொருட்களை விற்பனை செய்ய அனுமதியளித்துள்ளது.

❖ "குழந்தைகள் உரிமைக் குறியீடு" என்று அழைக்கப்படும் வருடாந்திர சர்வதேசக் குறியீடு குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்துவதில் நாடுகள் எவ்வாறு ஈடுபாடு கொண்டுள்ளன என்பதின் அடிப்படையில் நாடுகளை தரவரிசைப்படுத்தியுள்ளது.

- 181 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் இந்தியா 117-வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

❖ போர்ப் படைத் திட்டங்களுக்குத் தகுதி பெற்ற இந்திய விமானப் படையின் முதல் பெண் போர் விமானியாக விமானப் படை அதிகாரியான பாவனா காந்த் உருவெடுத்துள்ளார். இவர் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் போர்ப் படைப் பிரிவில் இணைந்தார். இவர் 2018 ஆம் ஆண்டு மார்ச் அன்று மிக்-2 பைசன் என்ற விமானத்தில் முதன்முறையாகத் தனியாகப் பறந்து சாதனை படைத்தார்.

- மோகனா சிங் மற்றும் அவனி சதுர்வேதி ஆகியோருடன் சேர்ந்து, 2016 ஆம் ஆண்டில் விமானப் படையின் போர்ப் பிரிவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண்களில் இவரும் ஒருவராவார்.

❖ நிலத்திலிருந்து ஏவப்படக்கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் "சாஹீன் - II" என்ற ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. பாகிஸ்தான் மலைப்பகுதிகளில் வாழும் "சாஹீன்" வகைக் கழுகுகளின் நினைவாக இப்பெயர் தரப்பட்டுள்ளது.

- ○ இது மீயொலி வேகத்துடன் நிலத்திலிருந்து ஏவப்படக்கூடிய நடுத்தர வரம்பு கொண்ட ஏவுகணையாகும்.
- ○ இது நிலத்திலிருந்து ஏவப்பட்டு நிலப் பகுதிகளைத் தாக்கும்
- ○ இது கண்டம் விட்டு கண்டம் பாயும் வல்லமைக் கொண்டது.
- ○ இது 1500 முதல் 2000 கிலோ மீட்டர்கள் வரை உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.
- ○ இந்த ஏவுகணைகள் இந்தியாவில் உள்ள முக்கியமான நகரங்களை அடைந்து தாக்கும் திறன் கொண்டது ஆகும்.

❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO - Shanghai Cooperation Organisation) வெளியுறவுத் துறை அமைச்சர்களின் சந்திப்பு கிர்கிஸ்தானின் தலைநகரான பிஷ்கெக்கில் நடைபெற்றது.

- ○ இம்மாநாட்டில் இந்தியா சார்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கலந்துக்கொண்டார்.
- ○ இது SCO அமைப்பில் இந்தியா முழு நேர உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு நடைபெறும் இரண்டாவது சந்திப்பு ஆகும்.

❖ சீனாவிற்குச் சொந்தமான விமான தொழிற்துறைக் கழகத்தின் (Aviation Industry Corporation of China - AVIC) கீழ் இயங்கும் சங்ஷா 5712 விமானத் தொழிற்சாலை நிறுவனம் தனது முதலாவது புதுப்பிக்கப்பட்ட பல்திறன் கொண்ட கொண்ட ஜெஎப்-17 என்ற அதிக திறன் கொண்ட போர் விமானத்தை பாகிஸ்தான் விமானப் படைக்கு வழங்கியது.

- ○ 2007 ஆம் ஆண்டில் பெய்ஜிங் JF-17 வகை போர் விமானங்களின் முதல் தொகுதியை பாகிஸ்தானிற்கு வழங்கியது.
- ○ 1990 ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தான் மீது அமெரிக்கா ஆயுதத் தடைகளை விதித்துள்ளது.
- ○ அதன் பிறகு பாகிஸ்தானிற்கு ஆயுதங்களை வழங்கும் முக்கிய நாடு சீனா ஆகும்.

❖ சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக "மர அவசர ஊர்தி" சேவையினை இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் சென்னையில் தொடங்கி வைத்தார்.

- ○ 'மர அவசர ஊர்தி' என்பது மரங்களைக் காப்பதற்கான ஒரு முயற்சியாகும்.
- ○ இதன் நிறுவனர் K. அப்துல் கானியின் கருத்துப்படி, இது மரங்களுக்கு முதலுதவி அளிப்பதற்காக, அதற்கேற்றவாறு கருத்தாக்கம் பெற்று, வடிவமைக்கப்பட்டு, பொருத்தப்பட்டுள்ளது.
- ○ மேலும் இது மரம் நடுதலுக்கு உதவுதல், மரங்களை மற்ற இடங்களுக்கு மாற்றுவதற்கு உதவுதல், விதைப் பந்துகளை விநியோகித்தல் ஆகியவற்றிற்கு உதவும்.

❖ 2019 ஆம் ஆண்டு மே 22 ஆம் தேதி தென் ஆப்பிரிக்காவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிரில் ரமபோசாவை இரண்டாவது முறையாக அதிபர் பதவிக்குத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

- ○ ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸின் தலைவராக (ANC - African National Congress) ரமபோசா பொறுப்பில் உள்ளார்.

❖ சமீபத்தில் விண்வெளிக்குச் செலுத்தப்பட்ட ரைசாட்-2பி செயற்கைக் கோளில், மிகவும்

சிக்கலான ரேடியல் ரிப் (வட்டவடிவிலான விலா எலும்பு) அலைவாங்கியானது செயற்கைக் கோளிடமிருந்து வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டு சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது.

- செயற்கைக் கோள் ஏவுதலின் போது 3.6 மீட்டர் கொண்ட இந்த அலைவாங்கி மடித்து வைக்கப்பட்டுப் பின்னர் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டு சுற்று வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. இது உள்நாட்டுத் தொழில்நுட்பத்துடன் இஸ்ரோவினால் 13 மாத காலத்தில் தயாரிக்கப்பட்டதாகும். ஆனால் பொதுவாக இதைக் கட்டமைக்க 3 முதல் 4 ஆண்டுகள் ஆகும்.

❖ மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951-ன் பிரிவு 73-ன் கீழ் தங்களால் வழங்கப்பட்ட அறிவிக்கையின் நகலை இந்தியத் தேர்தல் ஆணையம் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தது.

- பிரிவு 73 ஆனது மக்களவைக்கான பொதுத் தேர்தலின் முடிவுகள் மற்றும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் ஆகியவற்றை வெளியிடுதலைப் பற்றிக் கூறுகின்றது. இந்த அறிவிக்கைக்குப் பின்பு சபை அல்லது அவை அதிகாரப் பூர்வமாக அமைக்கப்படும்.

❖ இந்திய அரசியலமைப்பின் சரத்து 75(1)-ன் கீழ், தன்னிடம் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் இந்தியாவின் பிரதமராக மோடியை நியமித்தார்.

- மத்திய அமைச்ரவையில் உறுப்பினர்களாக நியமிக்கப் படுபவர்களின் பெயர்கள் குறித்து ஆலோசனை வழங்குமாறு பிரதமர் நரேந்திர மோடியிடம் இராம்நாத் கோவிந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.

❖ அஸ்ஸாம் ரைபில்ஸின் ஒரு படைப் பிரிவு தேசியப் பேரிடர் பதிலெதிர்ப்புப் படையாக National Disaster Response Force (NDRF) மாற்றப்பட்டு செயல்படுவதற்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து, இந்தப் படைப் பிரிவு ஜம்மு காஷ்மீரில் விரைவில் செயல்படவிருக்கின்றது.

- அஸ்ஸாம் ரைபில்ஸ் படை இராணுவத்திலிருந்து வரும் அதிகாரிகளைக் கொண்டுள்ளது. இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

❖ மின்னணு மற்றும் மின்சார தானியங்குச் சாதனங்களைத் தயாரிக்கும் பிளாஷ் எலக்ட்ரானிக்ஸ் இந்தியா என்ற நிறுவனம் இரு சக்கர வாகனத் தயாரிப்பாளரான ராயல் என்பீல்டு என்ற நிறுனத்தின் மீது காப்புரிமை மீறல் வழக்கு ஒன்றை அமெரிக்காவில் தொடுத்துள்ளது.

- "ஒழுங்குபடுத்தும் - திருத்தும்" பொருள் (regulator-rectifier) என்ற ஒரு முக்கியமான பொருளின் உற்பத்தியில் காப்புரிமை மீறப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது. இது உந்துவண்டி இயந்திரங்களில் உற்பத்தி செய்யப்படும் ஏசி மின்னழுத்தத்தை உந்து வண்டியில் முழுவதுமுள்ள மின் அமைப்புகளை இயக்குவதற்காக டிசி (DC Voltage) மின்னழுத்தமாக மாற்றுகின்றது.

❖ H.R. கான் தலைமையின் கீழ் அமைந்த "வெளிநாட்டுத் தொகுப்பு முதலீட்டாளர்களுக்கான கட்டுப்பாடுகள்" என்பதன் மீதான பணிக்குழு தனது அறிக்கையை இந்தியப் பங்குப் பரிவர்த்தனை வாரியத்திடம் சமர்ப்பித்து இருக்கின்றது.

- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய ரிசர்வ் வங்கியின் ஓய்வு பெற்ற துணை ஆளுநரான H.R. கான் என்பவர் தலைமையில் செபி அமைப்பு இந்த பணிக் குழுவை நியமித்து இருக்கின்றது.

- "ஐக்கிய நாடுகள் நீடித்த வளர்ச்சி இலக்குகள் சுகாதாரத் துறையில் 10 மிகவும் செல்வாக்கான நபர்" என்ற விருது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் இந்தியாவின் பதஞ்சலி குழும நிறுவனங்கள் சார்பாக பதஞ்சலி ஆயுர்வேத நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான ஆச்சார்யா பாலகிருஷ்ணாவிற்கு வழங்கப்பட்டது.
- டெல்லியின் துணைநிலை ஆளுநரான அனில் பைஜால் புது தில்லியில் வீர் நாரிகளுக்காக சஹாரா கடற்படை விடுதி ஒன்றைத் துவக்கி வைத்தார். இது வீர் நாரிகள் எனப்படும் கடற்படை வீரர்களின் விதவைகளுக்கான ஒரு புதுமையான விடுதியாகும்.
    - இது இந்தியக் கடற்படையில் பணியாற்றும் அவர்களின் கணவர்களது எதிர்பாராத விதமான மறைவினையடுத்து வரும் காலகட்டத்தில் கடற்படை வீரர்களின் விதவைகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கான மறுவாழ்விற்கு உதவிட எண்ணுகின்றது.
- சீக்கியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதமாக ஐக்கியப் பேரரசின் அரசாங்கம் சமய மற்றும் கலாச்சார விழாக்களின் போது அச்சமூகத்தைச் சார்ந்த மக்கள் கிர்பன்களை வைத்திருக்கவும் அதை உபயோகப்படுத்தவும் இயலச் செய்யும் வகையில் ஒரு சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி இருக்கின்றது.
    - ஐக்கியப் பேரரசில் அதிகரித்து வரும் கத்தி சம்பந்தமான குற்றங்களைச் சமாளிப்பதற்கு உதவிடும் "ஆபத்தான (தாக்குதல்) ஆயுதங்கள்" என்ற மசோதாவில் உள்ள ஆபத்தான ஆயுதங்கள் பட்டியலில் இருந்து கிர்பனுக்கு (சிறு கத்தி) விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது.
- இந்தியத் தேர்தல் வரலாற்றில் முதல்முறையாக 2019 பாராளுமன்றத் தேர்தலில் ஆண்கள் மற்றும் பெண்களின் வாக்கு சதவிகிதம் ஏறக்குறைய சமமாக இருந்தது.
    - 66.79 சதவிகித ஆண்கள் மற்றும் 66.68 சதவிகித ஆண்கள் இந்த தேர்தலில் வாக்களித்தனர்.
- முதல்முறையாக மாதத்திற்கு 45000 ரூபாய் உதவித் தொகையுடனும், 10000 ரூபாய் தங்கும் வசதிக்கான உதவியுடனும் இரண்டு வருட முனைவர் பட்டத்திற்குப் பிந்தைய காலத்திற்கான ஒரு உதவித் தொகைத் திட்டத்தை அண்ணாப் பல்கலைக் கழகம் ஆரம்பித்து இருக்கின்றது. மேலும் கூடுதலாக பயணச் சலுகைத் தொகையாக ஒரு லட்சம் ரூபாயும் ஒரு வருடத்திற்கு அளிக்கப்படுகின்றது.
    - இந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு அறிவியல் மற்றும் பொறியியல் படிப்பு ஏதேனும் ஒன்றில் முனைவர் பட்டத்துடன் கூடிய ஆராய்ச்சியாளர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் நரோவாலில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடமான "குருநானக் மாளிகையின்" ஒரு பகுதி உள்ளூர் மக்களால் அழிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்த மாளிகையின் புகழ்பெற்ற சாளரங்கள், கதவுகள் மற்றும் காற்றோட்ட அமைப்புகள் ஆகியவற்றை கழற்றி விற்றுள்ளனர்.
    - 16 அறைகள் கொண்ட இந்த மாளிகையின் சுவர்கள் சீக்கிய மதத்தை நிறுவியவரான குரு நானக் சிங்கின் படங்களைக் கொண்டுள்ளது.
- ஜனநாயக சீர்திருத்த மன்றம் மற்றும் "புதிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு" ஆகிய அமைப்புகளின் ஆய்வறிக்கையின்படி, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 539 மக்களவை உறுப்பினர்களில், 43 சதவிகித உறுப்பினர்கள் தங்களுக்கு எதிராக குற்றவியல் வழக்குகள் இருப்பதாகத் தெரிவித்து இருக்கின்றனர்.

- 17-வது மக்களவையின் ஒரே சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் கர்நாடகாவின் மாண்டியாவிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுமலதா அம்பரீஷ் ஆவார்.
- உலக சுகாதார அமைப்பு (World Health Organization - WHO) ஜெனீவாவில் சமீபத்தில் நிறைவு பெற்ற 72-வது உலக சுகாதார மாநாட்டின் போது "உடல் சோர்வு" நிலையை ஒரு மருத்துவ நிலைமையாக முதன்முறையாக வகைப்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு இதைத் தனது "சர்வதேச நோய்கள் வகைப்பாட்டுப்" பட்டியலில் இணைத்துள்ளது.
    - WHO ஆனது உடல் சோர்வு என்பதை வெற்றிகரமாக நிர்வகிக்கப்படாத, பணியிடத்தில் உருவாகும் நீண்ட நேர பணிச் சுமை அழுத்தத்தினால் உருவாகும் ஒரு நோய் என்று வகைப்படுத்தியுள்ளது.
- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளுக்கு இநதியா அழைப்பு விடுத்துள்ளது.
    - இது இந்தியாவின் "முதலில் அண்டை நாடுகள்" என்னும் கொள்கையில் கவனம் செலுத்துகின்றது.
- மே 29 அன்று அருணாச்சலப் பிரதேசத்தின் முதலமைச்சராக பேமா காந்து என்பவர் இரண்டாவது முறையாகப் பதவி ஏற்றார்.
- சீனாவின் நானிங்கில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் உலகக் கலப்பு அணி பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியான சுதிர்மேன் கோப்பையை சீனா வென்றுள்ளது.
    - சீனா ஆண்கள் இரட்டையர் பிரிவு, பெண்கள் ஒற்றையர் பிரிவு மற்றும் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆகியவற்றில் ஜப்பானை வீழ்த்தி 11-வது முறையாக இந்தப் பட்டத்தை வென்றுள்ளது. ஜப்பான் இதுவரை சுதிர்மேன் கோப்பையை வென்றதில்லை.
- அமெரிக்காவில் உள்ள சிக்காகோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மைனஸ் 23 டிகிரி செல்ஷியஸ் வெப்ப நிலையில் கடத்தும் திறன் கொண்ட "லாந்தனம் சூப்பர்ஹைட்ரைட்ஸ்" என்ற ஒரு மீக்கடத்தியை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர்.
    - இதற்கு முன்பு மைனஸ் 73 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் கடத்தும் திறன் மீக்கடத்தியை உருவாக்கியதே சாதனையாக இருந்தது.
- இந்திய தேசிய திரைப்படக் காப்பகத்தினால் உருவாக்கப்பட்ட மின்னணு வடிவிலான "டிஜிட்டல் டைலமா" (இரண்டக நிலை) என்பதின் இந்திப் பதிப்பை ஆஸ்கர் நிறுவனத்தின் தலைவரான ஜான் பெய்லி தொடங்கி வைத்தார்.
    - பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இந்த டிஜிட்டல் இரண்டக நிலையானது மில்ட் ஷெல்ட்டோன் மற்றும் ஆண்டி மால்ட்ஸ் ஆகியோரால் எழுதப்பட்டதாகும். இது தற்பொழுது திரைப்படத் தொழிலில் முக்கியமான டிஜிட்டல் தரவுகளை சேமித்து அதை அணுகும் முறை குறித்து விவாதிக்கின்றது.
- பின்லாந்தின் ஹெல்சிங்கியில் நடைபெற்ற சுற்றுச்சூழல் நச்சுவியலாளர்களின் கருத்தரங்கின் போது வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, உலகிலுள்ள நதிகள் நுண்ணுயிர் எதிர்ப்பிகளால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதிப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பு உச்ச வரம்பை விட 300 மடங்கு அதிகரித்துள்ளது. உதாரணம் : இலண்டனின் தேம்ஸ் நதியில் உள்ள அதிக அளவிலான தோல் மற்றும் சிறுநீரகத் தொற்று நுண்ணுயிர் எதிர்ப்பியான சிப்ரோப்ளோக்ஸாசின்.
    - வங்க தேசம், கென்யா, கானா, பாகிஸ்தான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் நுண்ணுயிரி எதிர்ப்பிகளால் நதிகள் மாசுபடுதல் அதிக அளவில் உள்ளது.

- மே 25 அன்று நடைபெற்ற 72-வது கேன்ஸ் திரைப்படத் திருவிழாவின் போது தென் கொரியாவைச் சேர்ந்த திரைப்பட இயக்குனரான போங் ஜோன் ஹோ என்பவரின் “பாரசைட்” என்ற திரைப்படத்திற்காக அவர் “பால்ம் டி ஓர்” என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கேன்ஸில் வழங்கப்படும் மிகவும் புகழ்பெற்ற விருது இதுவாகும்.
    - 1946 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கேன்ஸ் திரைப்படத் திருவிழாவானது பிரான்சின் கேன்ஸில் நடைபெறும் ஒரு வருடாந்திரத் திரைப்படத் திருவிழாவாகும். மிகப்பெரிய மூன்று திரைப்படத் திருவிழாக்களான “வெனீஸ் திரைப்படத் திருவிழா மற்றும் பெர்லின் சர்வதேசத் திரைப்படத் திருவிழா” ஆகியவற்றுடன் இதுவும் ஒன்றாகும்.
- மத்தியப் பிரதேசத்தின் பன்டேல்கண்ட் பகுதியில் உள்ள ஓர்ச்சா நகரம் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களுக்கான உத்தேசப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
    - யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் ஏற்கெனவே 37 இந்தியப் பாரம்பரியத் தளங்கள் உள்ளன. சாஞ்சியில் உள்ள புத்த நினைவுச் சின்னங்கள், பிம்பேத்காவின் பாறைக் குகைகள் மற்றும் கஜுராஹோ நினைவுச் சின்னக் குழுக்கள் ஆகியவை மத்தியப் பிரதேசத்தில் உள்ள சர்வதேச அளவில் புகழ்பெற்ற பாரம்பரியத் தளங்களாகும்.
- 2019 ஆம் ஆண்டின் ஐசிசி கிரிக்கெட் உலகக் கோப்பையின் ஒரு பகுதியாக சச்சின் ரசிகர் சுதிர் கௌதம், கோலி ரசிகர் சுகுமார், பாகிஸ்தானின் சச்சா அப்துல் ஜலீல், வங்க தேசத்தின் சோயப் அலி, இலங்கையின் கயன் சேனன்நாயகே ஆகியோர்களுக்கு முதல் உலக விளையாட்டு ரசிகர் விருது வழங்கப்பட விருக்கின்றது.
    - 2019 ஆம் ஆண்டு மே 30 அன்று ஐசிசி உலகக் கோப்பைப் போட்டி தொடங்கவிருக்கின்றது.
- சுவிட்சர்லாந்தின் கிரியென்ஸில் நடைபெற்ற சேகிசூய் ஓபனில் மகேஷ் மங்கோன்கர் இரண்டாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார். இவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இப்போட்டியில் முதன்முறையாக வெற்றி பெற்றிருந்தார்.
    - சேகிசூய் ஓபன் என்பது இவ்விளையாட்டை நிர்வகிக்கும் உலக அமைப்பான தொழில்சார் ஸ்குவாஷ் மன்றத்தின் (Professional Squash Association - PSA) ஒரு சேலஞ்சர் தொடர் போட்டியாகும். மகேஸ் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பெர்னாட் ஜவ்மீ என்பவரைத் தோற்கடித்தார்.
- மலாவி நாட்டைச் சேர்ந்த இளைஞர் மற்றும் உரிமைகளுக்கான ஆர்வலரான சார்லஸ் கஜோலோவேகா என்பவர் நீடித்த வளர்ச்சி இலக்கு – 16 என்பதிற்கான (SDG - Sustainable Development Goal) ஐ.நாவின் இளையோர் தூதராக நியமிக்கப்பட்டுள்ளதை அவர் உறுதி செய்தார்.
    - SDG-16 ஆனது அமைதி, நீதி மற்றும் வலிமையான நிறுவனங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது.

# தமிழ்நாடு செய்திகள்


## திருப்பூர் - முன்னிலை

- சமீபத்தில் வெளியிடப்பட்ட பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் திருப்பூர் மாவட்டம் அதிக தேர்ச்சி சதவிகிதத்தைப் பெற்றுள்ளது.
- தேர்ச்சி விகிதத்தில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாவட்டங்கள் பின்வருமாறு
- 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள்
    - திருப்பூர் - 95.37 %
    - ஈரோடு - 95.23 %
    - பெரம்பலூர் - 95.15 %
- 10 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள்
    - திருப்பூர் - 98.53 %
    - இராமநாதபுரம் - 98.48 %
    - நாமக்கல் - 98.45 %

## வாடகை நீதிமன்றங்கள்

- தமிழக அரசு மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வாடகை நீதிமன்றங்களை அமைப்பதற்கான அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.
- சென்னை மாவட்டத்திற்கு 7 வாடகை நீதிமன்றங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- இவை தமிழ்நாடு உரிமைகள் ஒழுங்குமுறைகள் மற்றும் குத்தகையாளர் & நில உரிமையாளர்களின் பொறுப்புகள் சட்டம், 2017-ன் பிரிவு 32-ன் படி அமைக்கப்பட்டுள்ளது.
- இச்சட்டத்தின்படி, எழுத்து வடிவிலான குத்தகை உடன்படிக்கைகள் பெறுவது கட்டாயமாகும்.
- இந்த ஒப்பந்தமானது அதற்காக அமைக்கப்பட்ட நீதிப் பரிபாலன வாடகை ஆணையத்திடம் பதிவு செய்யப்பட வேண்டும்.
- நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் ஆகியோர்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பான விவகாரங்களை வாடகை நீதிமன்றங்கள் மட்டுமே விசாரித்து முடிவு எடுக்கும் உரிமையைப் பெற்றிருக்கும்.
- இத்தகைய சர்ச்சைகளைத் தீர்ப்பதில் உரிமையியல் நீதிமன்றங்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை.

*பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் செயல்முறை.*



## புற்றுநோய் எதிர்ப்பு காளான்

- தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் ஒரு காளான் வகையிலிருந்து புற்றுநோய்ப் பொருட்களைப் பிரித்தெடுப்பதற்காக காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.
- இது மதராஸ் பல்கலைக் கழகப் பேராசிரியர் வெங்கடேசன் கவியரசன் மற்றும் அவரது மாணவரான முனைவர் பட்டத்திற்கு முயலும் ஜெ. மஞ்சுநாதன் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- லென்டினஸ் டியூபர்ரெஜியம் என்பது அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட காளான் வகையாகும்.
- இந்தக் காளானில் உள்ள 2 உயிர்ப்புள்ள பொருள்கள் (LT1 மற்றும் LT2) புற்றுநோய் எதிர்ப்புப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன.
- 1970 ஆம் ஆண்டுகளில் "லென்டினஸ் எடோபீஸ்" என்ற ஒரு ஜப்பானிய காளான் வகையானது புற்றுநோய் எதிர்ப்புப் பண்புகளை வெளிப்படுத்துகிறது என்று உறுதி செய்யப்பட்டது.
- பின்னர் அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தினரால் (Food and Drug Administrator - FDA) இதைப் பயன்படுத்துவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

### *தமிழ்நாட்டில் உள்ள பொதுவான காளான் வகைகள்*

- திருவனந்தபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள உள்ளூர் காய்கறி சந்தைகளில் "அரிசிக் காளான்" (டெர்மிடோமைசெஸ் மைக்ரோகார்பஸ்) மற்றும் "புற்றுக் காளான்" (டெர்மிடோமைசெஸ் ஹெய்மி) ஆகியவை விற்கப்படுகின்றன.
- கன்னியாகுமரி வனங்களில் வாழும் காணிப் பழங்குடி இன மக்கள், தங்களின் அன்றாட உணவில் காளான்களைப் பயன்படுத்துகின்றனர் என்று அறியப்படுகின்றது.

## பழுப்பு மலை அணில்

- முதன்முறையாக பழுப்பு மலை அணிலின் 300க்கும் மேற்பட்ட கூடுகள் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன.
- இதன் அறிவியல் பெயர் ரத்துபா மக்ரோரா என்பதாகும்.
- தமிழ்நாட்டின் செஞ்சிக்கு அருகில் உள்ள (கிழக்குத் தொடர்ச்சி மலை) பக்கமலை காப்பு காடுகளில் இவை காணப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு அரசானது 1988 ஆம் ஆண்டில் பழுப்பு மலை அணில் வனவிலங்கு சரணாலயத்தை ஏற்படுத்தியது.
- இதன் பெரும்பகுதி விருதுநகர் மாவட்டத்திலும் (குறிப்பாக ஸ்ரீ வில்லிபுத்தூர்) இதன் ஒரு பகுதி மதுரை மாவட்டத்திலும் அமைந்துள்ளது.
- இது ஸ்ரீ வில்லிபுத்தூர் வனவிலங்கு சரணாலயம் என்றும் அழைக்கப்படுகின்றது.

Fact Box: Grizzled Giant Squirrel

Threats: habitat loss, poaching, pet trade

IUCN Red List: Near Threatened

Listed under:
Schedule II of CITES
( Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora)

Schedule I of the Wildlife Protection Act (WPA),1972.

## கட்சித் தாவல் தடைச் சட்டம்

- இந்திய உச்ச நீதிமன்றமானது "கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில்" ஈடுபட்டமைக்காக அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்வதற்கான தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகரின் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்துள்ளது.
- 1985 ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தினால் கட்சித் தாவல் தடைச் சட்டம் (ADL - anti-defection law) நிறைவேற்றப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பின் 52-வது திருத்தமானது பத்தாவது அட்டவணையை இணைத்துள்ளது.
- ADL ஆனது கட்சித் தாவலின் போது சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்வதற்கான நடைமுறைகளை அறிவித்துள்ளது.






## தோப்பில் முகமது மீரான்

- நாகர்கோவிலைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளரான தோப்பில் முகமது மீரான் சமீபத்தில் காலமானார்.
- இவர் எழுதிய “சாய்வு நாற்காலி” என்ற நாவலுக்காக 1997 ஆம் ஆண்டில் சாகித்ய அகாடமி விருது இவருக்கு வழங்கப்பட்டது.
- இவருடைய புகழ்பெற்ற பணிகள் பின்வருமாறு:

| NOVELS | SHORT STORY COLLECTIONS | TRANSLATIONS |
|---|---|---|
| Oru Kadalora Kiramathin Kathai (1988) | Anbuku Muthumai Illai | Deivathin Kanne |
| Turaimugam | Thankaraasu | Husainul Jamal |
| Koonan Thoppu | Anandhasayanam Colony | Vaikom Mohammed Bashir Vazkhai Varalaru |
| Saivu Narkali | Thoppil Mohammed Meeran Kadhaigal | Thirukottiyur Kurunaaval |
| Anju Vannath Theru | Oru Mamaramum Konjam Paravaigalum | Meesan Karkalin Kaaval |
| | Oru Kutty Theevin Varaipadam | |

### *சாகித்ய அகாடமி*

- 1954 ஆம் ஆண்டில் சாகித்ய அகாடமி உருவாக்கப்பட்டது.
- சாகித்ய அகாடமி விருதானது இலக்கியத்தில் மிகவும் தலைசிறந்த புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றது.
- இந்தப் புத்தகங்கள் இந்தியாவில் உள்ள முக்கியமான 24 இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றில் பிரசுரிக்கப் பட்டிருக்கலாம்.

## IGST கட்டணங்கள்

- தமிழ்நாடு அரசு, ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரியில் (IGST - Integrated Goods and Service Tax) தனது பங்கை விரைந்து கொடுக்குமாறு மத்திய நிதித்துறை அமைச்சகத்தை கேட்டுக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு 2017-18 ஆம் நிதியாண்டிற்கான நிலுவையில் உள்ள ரூ.5453.82 கோடியை பெறவிருக்கின்றது.
- IGST என்பது சரக்கு மற்றும் சேவைகளை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குக் கொண்டு செல்லும் போது விதிக்கப்படும் ஒரு வரியாகும்.
- சரத்து 269A-ன் கீழ் இதுபோன்ற வரிகள் மத்திய அரசால் வசூலிக்கப்படுகின்றன.

- வசூலிக்கப்பட்ட IGST-ல் 50 சதவிகிதத்தை மத்திய அரசு வைத்துக் கொள்ளும். மீதமுள்ள 50 சதவிகிதம் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப் படுகின்றது.

## செயற்கை நுண்ணறிவு – ஆளில்லா குட்டி விமானங்கள்

- பேரிடர்களின்போது மீட்புப் பணிகளுக்காக முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஹெக்சாகாப்டர் என்ற ஒரு ஆளில்லா குட்டி விமானத்தை சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்துள்ளனர்.
- இந்தக் குட்டி விமானத்தினால் பறக்க முடியும். இது முக அங்கீகாரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மனிதர்களைத் தானாகவே கண்டறியும்.
- இது செயற்பாட்டு அங்கீகாரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடியாக மருத்துவ உதவி தேவைப்படும் தனி நபர்களைக் கண்டறியும்.
- இது விரைவான மீட்புப் பணி நடவடிக்கைகளுக்காக நிகழ்நேரத்தில் மக்களின் இருப்பிடம் குறித்த தகவல்களைத் தலைமை நிலையத்திற்கு அனுப்பும்.

## தென்பெண்ணை ஆறு

- 300 டன்கள் எடை கொண்ட பகுதியளவு செதுக்கப்பட்ட பாறை கர்நாடகாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த நடவடிக்கை கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பேரண்டப்பள்ளி என்ற கிராமத்தில் உள்ள தென்பெண்ணை ஆற்றின் பாதையை மாற்றியமைத்துள்ளது.
- தென் பெண்ணை ஆறு தமிழில் தென்பெண்ணையாறு என்றும் கன்னடத்தில் தக்சின பினகினி என்றும் அழைக்கப்படுகின்றது. மேலும் இது "பொன்னையாறு" என்றும் அறியப்படுகின்றது.



- இந்த ஆறு கர்நாடக மாநிலத்தில் சென்னகேசவா குன்றுகளின் தென்கிழக்கு திசையிலிருந்தும் சிக்பல்பூர் மாவட்டத்தில் உள்ள நந்தி குன்றுகளின் வடமேற்கு திசையிலிருந்தும் உற்பத்தியாகின்றது.
- இது கர்நாடகா மாநிலத்திற்குள்ளே பெங்களூருவிற்கு வடக்கே 85 கிலோ மீட்டர் தூரம் பாய்கின்றது.
- இது உருவான இடத்திலிருந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் இடமான தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டம் வரை மொத்தம் 400 கிலோ மீட்டர்கள் தூரம் பயணிக்கின்றது.

## பழக் கண்காட்சி

- மே 25 மற்றும் 26 ஆம் தேதியன்று குன்னூரில் உள்ள சிம்ஸ் பூங்காவில் 61-வது வருடாந்திர பழக் கண்காட்சி நடைபெறவிருக்கின்றது.
- சிம்ஸ் பூங்கா 1874 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது.
- இது குன்னூரில் உள்ள பழ மர வளர்ப்பு அறிவியல் நிலையத்தில் (Pomological Station) நீலகிரி மலைப்பகுதியினை சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உள்ளூர் பொருட்களைக் காட்சிப்படுத்துகின்றது.

## 100 கோடிகளில் மேம்படுத்துதல்

- இந்த கல்வியாண்டில் இந்தியா முழுவதும் உயர் திறன் கொண்ட 10 அரசுப் பல்கலைக் கழகங்கள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட இருக்கின்றன.
- இந்த பல்கலைக் கழகங்கள் மத்திய அரசின் ராஷ்ட்ரிய உச்சதார் சிக்சா அபியான் என்ற திட்டத்தின் கீழ் சிறப்புத் தகுதிகளை மேம்படுத்திட தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன.
- பெருமைமிகு கார்னெல், யுபென் மற்றும் யுசி பெர்கீகிலே உள்பட 7 அமெரிக்கப் பல்கலைக் கழகங்களினால் பல்வேறுபட்ட துறைகளில் அவை வழிகாட்டப்பட இருக்கின்றன.
- இந்தப் பல்கலைக் கழகங்கள் நிறுவனச் சட்டத்தின் கீழ் மத்திய அரசிடம் இருந்து நேரடியாக நிதிகளைப் பெற்றிட சிறப்பு வளாக நிறுவனங்களை ஏற்படுத்த இருக்கின்றன.
- தற்போது முன்மொழியப்பட்டுள்ள நிலையானது மார்ச் மாதம் 2020 ஆம் ஆண்டிற்குள்ளாக 100 கோடிகள் கட்டாயம் செலவு செய்யப்பட்டு இருக்க வேண்டும்.
- காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம், ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகம், சாவித்திரிபாய் புலே பல்கலைக் கழகம் ஆகியன ஏற்கெனவே தங்களது நிறுவனங்களைக் கொண்டிருக்கின்றன.

## தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் – தீர்ப்பாயம்

- இந்திய அரசு தற்பொழுது பணியாற்றிக் கொண்டிருக்கும் தில்லி உயர் நீதிமன்ற நீதிபதியான சங்கீதா திங்ரா செஹல் என்பவரின் தலைமையின் கீழ் சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) தீர்ப்பாயத்தை அமைத்துள்ளது.
- இது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை (LTTE - Liberation Tigers of Tamil Eelam) சட்ட விரோத அமைப்பாக அறிவிப்பதற்கு போதிய காரணம் உள்ளதா அல்லது இல்லையா என்பது குறித்து விசாரிக்கவிருக்கின்றது.
- சமீபத்தில் மத்திய உள்துறை அமைச்சகம் LTTE மீதான தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டித்து அதற்கான அறிவிக்கையை வெளியிட்டது.
- 1991-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் LTTE அமைப்பானது சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1967ன் கீழ் சட்ட விரோத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## காவிரி நீர்

- காவிரி நீர் மேலாண்மை வாரியம் (CWMA - Cauvery Water Management Authority) ஜுன் மாதத்தில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய 9.19 டிஎம்சி காவிரி நீரைத் திறந்துவிட வேண்டும் என்று கர்நாடக மாநிலத்திற்கு உத்தரவிட்டுள்ளது.
- இந்த காவிரி நீரானது தற்பொழுது அடையாளம் கண்டறியப்பட்டுள்ள பில்லிகுண்டுலு பகுதி மற்றும் நீர் விடுவிப்புப் பகுதி என்ற இரு மாநிலங்களுக்கிடையேயான இணைப்புப் பகுதியிலிருந்து திறந்து விடப்பட இருக்கின்றது.
- மேலும் இது குறித்த செய்திகளுக்கு இங்கே சொடுக்கவும் - https://www.tnpscthervupettagam.com/cauvery-water-dispute-verdict/.
- எஸ். மசூத் ஹுசைன் என்பவர் CWMA-ன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதன் உறுப்பினர்கள் பின்வருமாறு

### CWMA

**Chairman -** To be appointed by the Central Government, who shall have tenure of five years or till sixty-five years of age, whichever is earlier, amongst the serving officers, namely: -

(i) who is a senior and eminent engineer with wide experience in water resource management; handling of inter-State water sharing issues; construction, operation and maintenance of irrigation projects; or

(ii) an All India Service Officer, in the rank of Secretary or Additional Secretary to the Government of India with experience in water resources and inter-State water sharing issues;

**Two whole-time Members -** To be appointed by the Central Government for a term of three years which may be extendable upto five years, as mentioned below:

(i) One Member (Water Resources) – an engineer not below the rank of Chief Engineer from the Central Water Engineering Services (CWES) cadre;

(ii) One Member (Agriculture) – not below the rank of a Commissioner from the Ministry of Agriculture and Farmers' Welfare;

**Two Part-Time Members –** Representatives of the Central Government of the rank of Joint Secretary to be nominated by the Ministry of Water Resources, River Development and Ganga Rejuvenation and Ministry of Agriculture and Farmers' Welfare respectively;

**Four Part-Time Members from party States –** Administrative Secretaries in charge of Water Resource Departments of each State Government of Kerala, Karnataka, Tamil Nadu and Union territory of Puducherry who shall be nominated by the State Governments and Union territory administration respectively.

- நவீன் குமார் என்பவர் காவிரி நதிநீர் ஒழுங்காற்றுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதன் உறுப்பினர்கள் பின்வருமாறு :


**II. Cauvery Water Regulation Committee**

**17. Composition of the Cauvery Water Regulation Committee.**—(1) There shall be a Cauvery Water Regulation Committee consisting of the following members, namely:-

| | | | |
|---|---|---|---|
| 1) | Whole-Time Member (Water Resources) of the Authority | - | Chairman; |
| 2) | One representative each of the States of Kerala, Karnataka, Tamil Nadu and Union territory of Puducherry not below the rank of Chief Engineer. | - | Member; |
| 3) | One representative of India Meteorological Department, of the rank of Joint Secretary | - | Member; |
| 4) | One representative of Central Water Commission dealing with river gauging not below the rank of Chief Engineer | - | Member; |
| 5) | One representative of the Ministry of Agriculture & Farmers' Welfare, Government of India not below the rank of Commissioner | - | Member; |
| 6) | Secretary to the Authority | - | Member Secretary. |

## சென்னை குடிநீர்ப் பிரச்சனை

- தமிழக அரசு 5 சிறிய உப்பு நீக்க ஆலைகளை சென்னையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த ஆலைகள் ஒவ்வொன்றும் 1 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்டது.




- ஒவ்வொரு ஆலையும் 120 கோடி செலவில் காசிமேடு, திருவொற்றியூர், திருவல்லிக்கேணி, எம்ஆர்சி நகர் மற்றும் திருவான்மியூர் ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## முக்கிய புவியியல் தளங்கள்

- இந்தியப் புவியியல் கள ஆய்வு நிறுவனமானது (Geological Survey of India) மேகாலயாவில் உள்ள 2 முக்கியப் புவியியல் தளங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக முயற்சிகளை எடுத்துள்ளது.
- கிழக்கு காசி குன்று மாவட்டத்தின் சோப்ஹாரில் உள்ள தெரியாகாட் மற்றும் மாமலுக் குகை ஆகியவை அந்த இரண்டு புவியியல் தளங்களாகும்.
- இந்தியத் துணைக் கண்டத்தின் புவியியல் காலகட்டம் குறித்த ஆதாரங்களாக விளங்குவதால் இவை முக்கியத்துவம் வாய்ந்த தளங்களாக விளங்குகின்றன.

*மாமலுக் குகை*

- இந்தத் தளமானது 4200 ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த ஒரு முக்கியமான காலநிலை நிகழ்வின் ஆதாரமாக விளங்குகின்றது.
- மாமலுக் குகையில் உள்ள பொங்கூசிப் பாறையானது (stalagmite) சர்வதேச பாறையடுக்குப் பிரிவு மற்றும் தளமாக (GSSP - Global Stratotype Section and Point) அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் புவியியல் காலகட்டத்தின் அடையாளமாக அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முதல் குகையாகும்.

*தெரியாகாட்*

- இந்தத் தளமானது கிரட்டசியோஸ் (K) – பேலியோஜீனின் (Pg) என்ற பெரும் அழிவு நிகழ்வைக் குறிக்கின்றது.
- தெரியாகாட் தளமானது இந்தியாவில் கிரட்டசியோஸ் – பேலியோஜீன் (K- Pg) எல்லை மாற்றத்தின் முழுமையான பதிவுகளைக் கொண்டிருக்கின்றது.

## சர்வதேசத் தீவிரவாதி

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றமானது (UNSC - United Nations Security Council) பாகிஸ்தானைச் சேர்ந்த ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் தலைவரான மசூத் அசாரை சர்வதேசத் தீவிரவாதியாக அறிவித்துள்ளது.
- இந்த முடிவானது UNSC-ன் 1267 அல் கொய்தா மீதான தடைக் குழுவினால் எடுக்கப்பட்டது.
- அசார் மற்றும் அவரது அமைப்புகள் சொத்துகள் முடக்கம், பயணம் மேற்கொள்ளுவதற்குத் தடை மற்றும் ஆயுதங்கள் வைத்திருப்பதற்குத் தடை ஆகியவற்றை எதிர்கொள்ள விருக்கின்றன.
- மசூத் அசாரைக் கறுப்புப் பட்டியலில் வைப்பதற்கான முந்தைய 4 முயற்சிகளுக்கு சீனா தடை விதித்திருந்தது.
- இந்தத் தடைச் செய்யப்பட்டவர்களின் பட்டியலானது தற்பொழுது 262 தனிப்பட்ட நபர்களின் பெயர்கள் மற்றும் 83 அமைப்புகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது.
- 1267 அல் கொய்தா மீதான தடைக் குழுவின் நோக்கமானது அல் கொய்தா மற்றும் இஸ்லாமிய அமைப்புடன் தொடர்புடைய அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக

மிகவும் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

***சமீபத்திய தாக்குதல்கள்***

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 அன்று மசூத் அசாரின் அமைப்பானது இந்தியாவில் புல்வாமா தீவிரவாதத் தாக்குதலை நடத்தியது.
- அசாரால் நிகழ்த்தப்பட்ட மிகக் கொடுமையான தாக்குதல்கள் பின்வருமாறு
    - 2008 ஆம் ஆண்டின் மும்பை தீவிரவாதத் தாக்குதல்.
    - 2016 ஆம் ஆண்டின் பதான்கோட் விமான தளத் தாக்குதல் மற்றும் பிற.

## ஸ்டார்ட் அப் இந்தியா தொலைநோக்குப் பார்வை - 2024

- வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகமானது ஸ்டார்ட் அப் இந்தியா தொலைநோக்குப் பார்வையின் ஒரு பகுதியாக தொழில் தொடங்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் வரிச் சலுகைகள் போன்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டளவில் நாட்டில் 50,000 புதிய தொழில் தொடக்கங்களை உருவாக்க வழிவகை செய்வதும் 20 இலட்சம் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளையும் உருவாக்குவதுமே இந்த தொலைநோக்குப் பார்வையின் நோக்கமாக உள்ளது.
- இந்த ஆவணமானது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தொழில்துறை ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையினால் தயாரிக்கப்பட்டது.

***ஸ்டார்-அப் இந்தியா***

- 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கப்பட்ட இந்தத் திட்டமானது இந்திய அரசின் முதன்மை முன்னெடுப்பாகும்.
- இது தொழில் தொடக்கங்களின் வளர்ச்சிக்கு வலுவான சூழலை உருவாக்குவதையும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியை அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஸ்டார்-அப் இந்தியா திட்டமானது வரிச் சலுகை உட்பட இதர பல சலுகைகளையும் வழங்குகிறது.

## வாஹன் தரவுத்தளம்

- வாஹன் என்பது டிஜிட்டல் முறையில் வாகனங்கள் பதிவு செய்யப்படும் தேசிய அளவிலான தளமாகும்.
- இது நிறம், ஆற்றல், வணிகர், அடிச்சட்டக எண் மற்றும் எரிவாயு வகை உள்ளிட்ட 28 வகையான வாகனங்களின் தரவுகளை கொண்டிருக்கின்றது.
- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது இந்தத் தரவுகளை தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக புதிய விதிமுறைகளை உருவாக்கியுள்ளது.
- இது இந்தத் தகவல்களைப் பின்வரும் நிறுவனங்களால் மட்டுமே பயன்படுத்த முடியும்.
    - இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்

- 50 சதவிகித நிறுவன பங்கினை இந்தியர்கள் கொண்டிருந்தால் மட்டுமே பயன்படுத்த முடியும்.

❖ நிறுவனங்களால் அணுகக்கூடிய இதுபோன்ற அனைத்துத் தகவல்களும் இந்தியாவில் உள்ள தகவல் வழங்கும் அமைப்பில் (Server) சேமிக்கப்பட வேண்டும்.

❖ வணிகப் பயன்பாட்டிற்காக இதுபோன்ற தகவல்களைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் ஆண்டுக் கட்டணமாக ரூ.3 கோடியை செலுத்த வேண்டும்.

## 1 இலட்சம் உணவு

❖ மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனமானது (CFTRI - Central Food Technological Research Institute) 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட சாப்பிடுவதற்குத் தகுந்த உணவுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றது.

❖ இந்த உணவு பானிப் புயலால் பாதிக்கப்பட்டுள்ள ஒடிசா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் வழங்கப்பட விருக்கின்றது.

❖ CFTRI என்பது அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி ஆணையத்தின் கீழ் இயங்கும் ஆய்வகங்களில் ஒன்றாகும்.

❖ இது 1950 ஆம் ஆண்டு அக்டோபர் 21 அன்று கர்நாடகாவின் மைசூரில் திறக்கப்பட்டது.

## மறக்கப்பட்ட நெசவு முறைகள்

❖ தில்லியைச் சேர்ந்த எழுத்தாளரான ராதிகா சிங் என்பவர் "சுராயா ஹாசன் போஸ் : ஒரு பாரம்பரியத்தை நெய்தல்" என்ற தலைப்பு கொண்ட ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.

❖ இது மறக்கடிக்கப்பட்ட 2 நெசவு முறைகளுக்குப் புத்துயிர் அளித்ததற்காக கௌரவிக்கப்பட்ட சுராயா ஹாசன் போஸைப் பற்றியது.

- ஹிம்ரோ – பாரசீக பட்டு நெசவு முறை
- மஸ்ரூ – பட்டு மற்றும் பருத்தி நெசவு

## ஃபானி புயல்

❖ அரிதினும் அரிதான வகையைச் சார்ந்ததும் கடுமையான மழைப் பொழிவுக்கு காரணமானதுமான கடுமையான புயலான ஃபானி புயலானது மணிக்கு 240 கிமீக்கும் அதிகமான வேகத்தில் ஒடிசாவின் கடற்கரையோரப் பகுதிகளை கடந்த மே 03 ஆம் தேதி தாக்கியது.


❖ இது வலுவிழந்து மேற்கு வங்காளத்திற்குள் நுழைவதற்கு முன்னதாக ஒடிசாவில் மிகப்பெரிய அளவில் கட்டமைப்புகளின் சேதத்திற்கு காரணமானது.

❖ இந்திய வானிலை ஆராய்ச்சி மையமானது, ஃபானி புயலை மிகவும் கடுமையான புயல் காற்று என வகைப்படுத்தியுள்ளது.

❖ இந்தப் புயலுக்கு ஃபானி எனும் பெயர் வங்காள தேசத்தினால் பரிந்துரைக்கப்பட்டது. ஃபானி என்றால் பாம்பு என்று பொருள்.

❖ இந்திய வானிலை ஆய்வு மையத்தின் "கிட்டத்தட்ட மிக துல்லியமான" எச்சரிக்கைகளே

நிர்வாக அதிகாரிகளின் நன்கு திட்டமிடப்பட்ட மக்களை வெளியேற்றும் திட்டங்களுக்கு உதவி புரிந்து உயிரிழப்பை குறைக்க உதவியது என பேரிடர் குறைப்பிற்கான ஐ.நாவின் நிறுவனமானது கருத்து தெரிவித்துள்ளது.





## ஐஎன்எஸ் ரஞ்சித்

- இந்திய கடற்படையின் முன்னணி ஏவுகணை அழிப்பு கப்பலான INS ரஞ்சித் தனது 36 ஆண்டுகால சேவைக்குப் பின்னர் ஓய்வு பெற்று விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை கப்பற்தளத்தில் நிறுத்தப்பட்டது.
- 1983 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட இது முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் கட்டப்பட்ட ஐந்து காஷின் வகுப்பு அழிப்பு கப்பல்களில் மூன்றாவது கப்பலாகும்.
- 2019 ஆம் ஆண்டில் ஒரே ஒரு காஷின் வகுப்பு அழிப்பு கப்பல் மட்டுமே ரஷ்யாவின் கடற்படையில் சேவையில் உள்ளது. மற்ற 5 கப்பல்களும் இந்திய கடற்படையிடம் ராஜ்புத் வகுப்பு அழிப்புக் கப்பல்களாக உள்ளன.
- மொத்தமுள்ள 5 ராஜ்புத் வகுப்பு அழிப்புக் கப்பல்களில் சேவையிலிருந்து நிறுத்தப்படும் முதல் கப்பல் இதுவேயாகும்.
- இக்கப்பலானது 1979 ஆம் ஆண்டு ஜுன் 16 ஆம் நாள் அதிகாரப்பூர்வமாக "சுறுசுறுப்பு" எனும் பொருள்படும் "லவ்க்லி" எனும் ரஷ்ய பெயருடன் தொடங்கப்பட்டது.
- மேலும் இது இந்திய அமைதிப்படை பிரிவு நடவடிக்கைகள் மற்றும் 1999 ஆம் ஆண்டில் கார்கில் போரின் போதான தல்வார் நடவடிக்கை உட்பட பல முக்கிய நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டது.

### *ராஜ்புத் வகுப்பு அழிப்பு கப்பல்கள்*

- காஷின் II வகுப்பு அல்லது திட்டம் 61E என அறியப்படும் ராஜ்புத் வகுப்பு அழிப்பு கப்பல்கள் ஆனது சோவியத்தின் காஷின் வகுப்பு அழிப்பு கப்பல்களின் மாற்றியமைக்கப்பட்ட வகைக் கப்பல்களாகும்.
- இது INS ராஜ்புத், INS ராணா, INS ரஞ்சித், INS ரன்வீர், INS ரன்விஜய் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

❖ பிரம்மோஸ் மீயொலி ஏவுகணைகள் முதன்முதலில் ராஜ்புத் வகுப்பு அழிப்புக் கப்பல்களிலேயே பொருத்தப்பட்டன.




## மோடி எழுத்து வடிவம் – அழிவு நிலை

❖ தற்பொழுது மோடி எழுத்து வடிவமானது அழிவு நிலையில் உள்ளது.

❖ இது மராத்திய மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு எழுத்து வடிவங்களில் ஒன்றாகும்.

❖ இது மராத்திய மொழியை எழுதும் கூட்டெழுத்து முறையைச் சார்ந்ததாகும்.

❖ இது 1400 ஆம் ஆண்டுகளில் மேம்படுத்தப்பட்டது.

❖ இது "மராத்திய மொழியை" எழுதும் சுருக்கெழுத்து வடிவம் என்றும் அழைக்கப்படுகின்றது.

❖ மராத்திய மொழியை எழுதுவதற்கு உகந்த பொதுவான எழுத்து வடிவம் தேவநகரி ஆகும்.

❖ "மராத்தி" மொழியிலிருந்துப் பெறப்பட்ட மோடி என்ற வார்த்தையானது "உடைந்த" என்ற பொருளைக் குறிக்கும்

❖ மோடி எழுத்து வடிவம் குறித்த தமிழ்நாடு தொடர்பான செய்திகளுக்கு இங்கே சொடுக்கவும். https://www.tnpscthervupettagam.com/modi-script/ (தேதி: 21.04.19)

## 10 வானூர்திகள்

❖ இந்தியக் கடற்படைக்காக கமோவ் கா – 31 என்ற வகையைச் சேர்ந்த 10 ரஷ்ய வானூர்திகளை வாங்குவதற்குப் பாதுகாப்பு கொள்முதல் ஆணையம் (DAC - Defence Acquisition Council) ஒப்புதல் வழங்கியுள்ளது.

- DAC ஆனது பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையின் கீழ் செயல்படுகின்றது.
- இந்த வானூர்திகள் (ஹெலிகாப்டர்கள்) வான்வழி முன்னறிவிப்பு மற்றும் கட்டுப்பாட்டு வானூர்திகளாகும்.
- எனவே, கடற்படையின் விமானம் தாங்கிக் கப்பல் மற்றும் போர்க் கப்பல்களில் இவை பொருத்தப்படவிருக்கின்றன.
- விமானம் தாங்கிக் கப்பல்கள் பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்போது வான் பகுதியை ஆக்கிரமித்துப் பாதுகாப்பதற்கு இது பயன்படுத்தப்படவிருக்கின்றது.
    - திறந்தவெளி கடற்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள்
    - நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் சார்ந்த நடவடிக்கைகள்

## தர்பார் நகர்வு - காஷ்மீர்

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் தலைமைச் செயலகம் மற்றும் இதர அரசு அலுவலகங்கள் ஆகியவை ஸ்ரீநகரில் மீண்டும் திறக்கப்படவிருக்கின்றன.
- ஜம்மு காஷ்மீரின் கோடைக் காலத் தலைநகர் ஸ்ரீநகர் ஆகும். இது மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை கோடைக் காலத் தலைநகராக விளங்கும்.
- நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை ஜம்மு காஷ்மீரின் குளிர்காலத் தலைநகர் ஜம்மு ஆகும்.
- ஒவ்வொரு ஆண்டும் ஜம்மு காஷ்மீரில் இரண்டு முறை நடைபெறும் ஸ்ரீநகர் மற்றும் ஜம்மு ஆகியவற்றிற்கிடையேயான தலைநகர் மாற்றமானது “தர்பார் நகர்வு” என்றழைக்கப்படுகின்றது.
- இது 1872 ஆம் ஆண்டில் தோஹ்ரா அரசர் மஹாராஜா ரன்பீர் சிங் என்பவரால் தொடங்கப்பட்டது.

## தேன் திட்டம்

- காதி மற்றும் கிராமப்புற தொழிற்சாலைகள் ஆணையமானது (Khadi and Village Industries Commission - KVIC) இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகள் மற்றும் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தேனீப் பெட்டிகளை வழங்கியுள்ளது.
- இது “தேன் திட்டம்” என்ற முன்னெடுப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது பிரதமர் நரேந்திர மோடியினால் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இவர் இதை “இந்தியாவில் இனிப்புப் புரட்சியின்” தொடக்கம் என்று அறிவித்தார்.

### *KVIC*

- KVIC என்பது காதி மற்றும் கிராமப்புற தொழிற்சாலைகள் ஆணையத்தின் சட்டம், 1956-ன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது தேசிய அளவில் பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்தும் தலைமை நிறுவனமாகும்.

## ஐஎன்எஸ் வேலா

- இந்தியக் கடற்படையானது "ஐஎன்எஸ் வேலா" என்ற 4-வது புலப்படாத ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பலை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மும்பையில் உள்ள மசகான் டாக் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- எம்எஸ் கடற்படைக் குழுமமானது பிரான்சைச் சேர்ந்த இதன் கூட்டாளி நிறுவனமாகும்.
- 1973 ஆம் ஆண்டில் இந்தியக் கடற்படைப் பணியில் இணைக்கப்பட்ட சோவியத்தைச் சேர்ந்த "ஐஎன்எஸ் வேலா" என்ற நீர்மூழ்கிக் கப்பலின் பெயரையடுத்து இந்தக் கப்பலுக்கு இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது.
- ஐஎன்எஸ் வேலா என்ற நீர்மூழ்கிக் கப்பலானது "திட்டம்-75" என்பதின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- ஸ்கார்பீன் வகை என்பது கடந்த இரண்டு தசாப்தங்களில் இந்தியக் கடற்படையின் முதலாவது நவீன மரபு சார்ந்த டீசல்-மின் நீர்மூழ்கிக் கப்பலின் வரிசையாகும்.

## அயோத்தியாப் பிரச்சனை

- அயோத்தியாப் பிரச்சனை குறித்து ஆராய இந்திய உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட 3 உறுப்பினர்களைக் கொண்ட நடுவர் குழுவானது மே 06 அன்று தனது இடைக்கால அறிக்கையை ஒரு மூடப்பட்ட உறையில் வைத்து இந்திய உச்ச நீதிமன்றத்திடம் சமர்ப்பித்தது.
- இந்தக் குழுவின் அறிக்கை அதன் முயற்சியில் தோல்வி அடைந்தது எனில் இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அரசியலமைப்பு அமர்வு இது குறித்து மேலும் விசாரிக்கும்.
- 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 அன்று அலகாபாத் உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக்கு எதிரான மனுக்களின் மீது உச்ச நீதிமன்றம் விசாரிக்கும். அலகாபாத் உயர்நீதிமன்றம் 2.77 ஏக்கர் கொண்ட இந்த பிரச்சினைக்குரிய நிலத்தைப் பின்வரும் 3 பிரிவினர் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளித்தது.
    - நிர்மோகி அக்ஹாரா பிரிவு
    - சன்னி மத்திய வக்ஃபு வாரியம், உத்தரப் பிரதேசம்
    - ராம்லாலா விரஜ்மான் கடவுள்

## கறுப்புப் பட்டியல் கைவிடப் படுதல்

- மத்திய உள்துறை அமைச்சகமானது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மக்களின் மீதான தனது "உள்ளூர் பாதகப் பட்டியல்களைக்" கைவிட்டுள்ளது.
- இது பெரும்பாலும் இந்திய வம்சாவளி மக்களின் "கறுப்புப் பட்டியல்" என்று அழைக்கப்படுகின்றது.
- இந்தப் பட்டியலானது வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகத்தினால் நிர்வகிக்கப் படுகின்றது.

- இந்தப் பட்டியலானது இந்தியாவில் குற்றம் சாட்டப்பட்டு, வெளிநாடு சென்று தஞ்சம் அடைந்தவர்களின் பெயர்களைக் கொண்டிருக்கும்.
- இந்தப் பட்டியலில் உள்ள மக்களுக்கு வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகத்தினால் நுழைவு இசைவு சேவைகள் மறுக்கப்படுகின்றன.
- இந்த மாற்றத்திற்குப் பின்னர், சாதாரண இந்திய நுழைவு இசைவைப் பயன்படுத்தி 2 ஆண்டுகள் வாழ்ந்த பிறகு அவர்கள் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான குடியுரிமையைப் பெற அனுமதிக்கப்படுகிறார்கள்.

## சுகாதாரத் துறையில் பற்றாக்குறை

- உலக சுகாதார நிறுவனத் (World Health Organisation - WHO) தரவுகளின்படி, இந்தியா சுகாதார சேவைகளை அளிப்பவர்களின் பற்றாக்குறையை எதிர் கொண்டிருக்கின்றது.
- 5 மில்லியன் பணியாளர்கள் இருந்த போதிலும் திறன்மிக்க சுகாதாரப் பணியாளர்களின் சமமற்ற பணியமர்த்துதலின் காரணமாக பற்றாக்குறை ஏற்படுகின்றது.
- பீகார், ஜார்க்கண்ட், உத்தரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் மிக அதிக அளவிலான சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறையை எதிர்கொண்டிருக்கின்றன.
- தில்லி, கேரளா, பஞ்சாப் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கை சிறந்த நிலையில் உள்ளது.
- WHO ஆனது மருத்துவம் சாரா சேவைகளை அளிக்கும் பல்வேறு வகையினர்களுக்கான படிப்புகளை இந்தியா உருவாக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

## இந்தியாவின் முதல் பனி தேநீர் விடுதி

- ஜம்மு காஷ்மீரின் லடாக் பகுதியில் உள்ள மலைக் கிராமமான கயாவில் எல்லைப்புற சாலை அமைப்பானது இந்தியாவின் முதலாவது பனிக்கட்டியாலான தேநீர் விடுதியை உருவாக்கியுள்ளது.
- இது புகழ்பெற்ற மணாலி-லே நெடுஞ்சாலையில் கடல் மட்டத்திலிருந்து 14,000 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- புத்த சமய தியான மண்டபங்களின் அமைப்பை ஒத்த இந்த பனிச் சிற்பமானது இயற்கையான முறையில் உருவாக்கப்பட்டது.



## விடுமுறைக் கால அமர்வு

- 2019 ஆம் ஆண்டு மே 13 ஆம் தேதியிலிருந்து ஜூன் 30 ஆம் தேதி வரை வருடாந்திர கோடைக்கால விடுமுறைக்காக இந்திய உச்சநீதிமன்றம் விடுமுறை அளிக்கப்பட விருக்கின்றது.
- இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி உச்சநீதிமன்ற விதிகள், 2013-ன் கீழ் ஆணை II-ன் படி விதி 6-ன் கீழ் சிறப்பு விடுமுறைக் கால அமர்வுகளை அமைத்துள்ளார்.
- இந்திய உச்சநீதிமன்றமானது விடுமுறைக் காலத்தின் போதும் "முக்கியமான வழக்கு" என்று ஒன்றைக் கருதினால் அது குறித்து விசாரணையை மேற்கொள்ளும்.
- இது பொதுவாக அடிப்படை உரிமைகளை செயல்படுத்தக்கூடிய ஆட்கொணர்வு நீதிப் பேராணை, ஆவணக் கேட்பு ஆணை, தடை ஆணை, தகுதிப் பேராணை தொடர்புடைய வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்.
- முதன்முறையாக, மே 25 ஆம் தேதி முதல் மே 30 ஆம் தேதி வரை விடுமுறைக் கால அமர்விற்கு இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியே தலைமை வகிக்கவிருக்கின்றார்.

## கிராமப்புற ஸ்டார்ட் அப் (புதிதாக தொழில் தொடங்குவோர்)

- தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியானது (National Bank for Agriculture and Rural Development - NABARD) பின்வருவனவற்றிற்காக ரூ.700 கோடி மதிப்பிலான துணிகர முதலீட்டு நிதியை அறிவித்துள்ளது.
  - வேளாண் துறையில் பங்கு மூலதனங்கள்
  - கிராமப் புறத்தில் உள்ள ஸ்டார்ட் அப்-களின் மீது கவனம் செலுத்துதல்.
- இந்த நிதியானது நபார்டின் ஒரு துணை நிறுவனமான நாப் துணிகர மூலதர நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்டது.
- விவசாயம், உணவு மற்றும் கிராமப்புற வளர்ச்சி போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் முன்னுரிமை பெறவிருக்கின்றன.

***NABARD***

- நபார்டு என்பது கிராமப்புற பகுதிகளில் வளர்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக முதலீடுகள் மற்றும் உற்பத்திக்கான கடன்களை வழங்கும் நிறுவனங்களுக்கான ஒரு தலைமை நிதியியல் அமைப்பாகும்.
- இது 1982 ஆம் ஆண்டில் B. சிவராமன் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- இது குடிசைத் தொழில், சிறு தொழில் மற்றும் கிராமப்புறத் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியினை மேற்பார்வையிடுகின்றது.
- நபார்டு பின்வருவனவற்றை மேற்பார்வையிடுகின்றது.
  - மாநில கூட்டுறவு வங்கிகள்
  - மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள்
  - மண்டல கிராமப்புற வங்கிகள்

## அபயாஸ் – இலக்கைத் தாக்கும் ஆளில்லா குட்டி விமானம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (Defence Research and Development Organisation - DRDO) "அபயாஸ்" என்ற அதிவேக இழக்கத்தக்க வானில் உள்ள இலக்கைத் (HEAT - High-speed Expendable Aerial Target) தாக்கும் ஆளில்லா குட்டி விமானத்தை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- இந்தச் சோதனையானது ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள இடைக்கால சோதனை நிலையத்தில் நடத்தப்பட்டது.
- அபயாஸ், தனது கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றிற்காக உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட எம்இஎம்எஸ் (MEMS) என்ற கண்காணிப்பு அமைப்பைப் பயன்படுத்துகின்றது.
- இது இலக்கைத் தாக்கும் ஒரு ஆளில்லா குட்டி விமானமாகும்.
- இலக்கைத் தாக்கும் இந்தக் குட்டி விமானங்களானது இடைமறிப்பு ஏவுகணையின் வரம்பு மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் ஆகியவற்றின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகின்றது.
- அபயாஸ் ஆனது உட்புற வளிமண்டலத்தில் நடைபெறும் வான் பயிற்சிகள் மற்றும் நிலப் பரப்பிலிருந்து வான்நோக்கி சென்று இலக்கை இடைமறிக்கும் பயிற்சிகள் ஆகியவற்றிற்காக விமானத்தைப் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.
- உட்புற வளிமண்டல ஏவுகணை என்பது புவியின் வளிமண்டலத்திற்குள் (100 கிலோ மீட்டருக்கும் குறைவான உயரத்தில்) செயல்படும் ஒரு ஏவுகணையாகும்.



## திரைப்பட நிறுவனம்

- அனைத்து இந்திய தொழில்நுட்பக் கல்வி ஆணையம் (AICTE - All India Council for Technical Education) புனேவில் உள்ள இந்தியத் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் (Film and Television Institute of India - FTII) 5 படிப்புகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தப் படிப்புகளானது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள "செயல்முறைக் கலைகள் மற்றும் கைத்தொழில்" என்ற பிரிவின் கீழ் AICTE-யினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இயக்கம், மின்னணு திரைப்படவியல், காணொளித் தொகுப்பு மற்றும் ஒலிப்பதிவு & தொலைக்காட்சிப் பொறியியல் ஆகியவை தொலைக்காட்சிப் பிரிவில் உள்ள 4 படிப்புகளாகும்.

- திரைப்படத் திரைக்கதை வசனம் எழுதுதல் என்ற ஒரு படிப்பானது திரைப்படம் என்ற பிரிவில் உள்ளது.
- FTII ஆனது AICTE-யினால் அங்கீகரிக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த ஒரே திரைப்பட நிறுவனமாகும்.
- புனே நகரில் உள்ள FTII ஆனது 1960 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது இந்திய அரசின் மத்தியத் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தனிச் சுதந்திர நிறுவனமாகும்.

## ஸ்பேரோ (SPARROW) திட்டம்

- இந்திய அரசு தற்பொழுது "ஸ்பேரோ திட்டம்" என்ற ஒரு புதிய முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- ஸ்பேரோ (SPARROW) என்ற வார்த்தை ஆனது "சிறப்பான செயல்பாடு குறித்த நிகழ்நேர பதிவுச் சாளர மதிப்பீட்டு அறிக்கை" என்பதைக் குறிக்கும்.
- இது பின்வருவனவற்றை அடைய எண்ணுகின்றது.
    - மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியத்தின் (Central Board of Indirect Tax and Customs) 46,000த்திற்கும் மேற்பட்ட குரூப் B மற்றும் குரூப் C அதிகாரிகளுக்கான வருடாந்திர செயல்பாட்டு மதிப்பீட்டு அறிக்கைகளை (APARs - Annual Performance Appraisal Reports) நிகழ்நேரத்தில் பதிவு செய்தல்
    - மத்திய ஜிஎஸ்டி மற்றும் CBIC-ன் சுங்கப் பணிகளில் பணியாற்றும் பெரும் பணியாளர்களின் மொத்த திறமையையும் மன உறுதியையும் மேம்படுத்துதல்.
- இந்திய வருவாய்ப் பணி அதிகாரிகளுக்கான SPARROW-ன் APARsகளை நிகழ் நேரத்தில் பதிவு செய்தலானது 2016-17 ஆம் ஆண்டில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டது.


## குழந்தை இறப்பு விகிதம்

- ஜான்ஸ் ஹாப்கின்ஸ் புளூம்பெர்க் பொதுச் சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவில் 5 வயதிற்கும் கீழுள்ள குழந்தைகளிடையே நிகழும் இறப்புகள் குறித்து "லான்செட் சர்வதேச சுகாதாரம்" என்ற பத்திரிக்கையில் ஒரு புதிய ஆய்வை வெளியிட்டுள்ளனர்.
- 2015 ஆம் ஆண்டில் 5 வயதிற்கு கீழ் மொத்தம் 1.2 மில்லியன் குழந்தைகள் (1000 குழந்தைகளுக்கு 47.8 குழந்தைகள்) இறந்துள்ளனர்.
- உலகில் மிக அதிகமான குழந்தைகள் இந்தியாவில் இறந்துள்ளனர்.
- குழந்தை இறப்பு விகிதமானது அஸ்ஸாமில் அதிகமாக உள்ளது. இங்கு 1000 குழந்தைகளுக்கு 73.1 குழந்தைகள் இறந்துள்ளனர். கோவாவில் இந்த விகிதம் 9.7 ஆக உள்ளது.
- குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே குழந்தை பிறத்தலில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் தடுக்கக் கூடிய தொற்று நோய்கள் ஆகியவை குழந்தைகளின் இறப்புக்கு முக்கியக் காரணங்களாகும்.
- நோய்த் தடுப்பூசி அளித்தல், குழந்தைப் பிறப்பை மேம்படுத்துதல் மற்றும் புதிதாகப்

பிறந்த குழந்தைகளின் நலன் மேம்பாடு ஆகிய நடவடிக்கைகள் மூலம் இந்த இறப்புகளைத் தடுக்க முடியும்.

## NCERT பாடத் திட்டம் – மறு ஆய்வு

- ❖ தேசியக் கல்வி கட்டமைப்பு – 2005ஐ (NCF - National Curriculum Framework) மறு ஆய்வு செய்யத் திட்டமிட்டிருப்பதாக தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆணையத்தின் (NCERT - National Council of Educational Research and Training) இயக்குநர் அறிவித்துள்ளார்.




- ❖ NCF ஆனது பள்ளிப் பாடத் திட்டத்தை உருவாக்குவதற்கும் பாடப் புத்தகங்களை எழுதுவதற்குமான ஒரு கட்டமைப்பை அளிக்கின்றது.
- ❖ மேலும் இது இந்தியாவில் கற்பித்தல் நடைமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.
- ❖ 1975, 1988, 2000 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளில் நான்கு தேசியக் கல்விக் கட்டமைப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ❖ பள்ளிப் பாடத் திட்டத்தை மறு ஆய்வு செய்வதற்கான பணிக் குழு விரைவில் ஏற்படுத்தப்பட விருக்கின்றது.

## மருந்துகளின் விலைக் கட்டுப்பாடு

- ❖ தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையம் (NPPA - National Pharmaceutical Pricing Authority) பட்டியலிடப்படாத 9 புற்றுநோய் மருந்துகளின் விலையை 87 சதவிகிதம் அளவிற்கு குறைத்துள்ளது.
- ❖ இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்திய அரசாங்கம் 42 புற்றுநோய் மருந்துகளின் விலையை 30 சதவிகித அளவிற்கு குறைத்தது.
- ❖ NPPA ஆனது 1997 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

- இது மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துகள் துறையின் கீழ் செயல்படுகின்றது.
- NPPA ஆனது மருந்து விலைக் கட்டுப்பாட்டு விதிகளின்படி (DPCO - Drug Price Control Orders) மருந்துகளின் பட்டியல் மற்றும் அவற்றின் அதிகபட்ச விற்பனை விலை குறித்தப் பட்டியலை வெளியிடுகின்றது.

## நிலப் பரப்பிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் நடுத்தர வரம்புடைய ஏவுகணை

- இந்தியக் கடற்படையானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு மற்றும் இஸ்ரேல் விண்வெளி தொழிற்துறை நிறுவனத்துடன் இணைந்து நிலப் பரப்பிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் நடுத்தர வரம்புடைய ஏவுகணையை (MRSAM - Medium Range Surface to Air Missile) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.



- இந்த MRSAM ஏவுகணைகளானது பின்வருவனவற்றை மேம்படுத்துகின்றது.
    - இந்தியக் கடற்படையின் வான் எதிர்ப்பு போர்த் திறன்.
    - ஒட்டுமொத்த போர்த் திறன் நடவடிக்கைகள்.
- இந்த நிலப் பரப்பிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளானது கொல்கத்தா பிரிவு அழிப்புக் கப்பல்களில் பொருத்தப்படவிருக்கின்றது. மேலும் இது எதிர்காலத்தில் இந்தியக் கடற்படையில் இணையவிருக்கும் அனைத்து முக்கியமான கப்பல்களிலும் பொருத்தப்படவிருக்கின்றது.

## வறட்சி குறித்த ஆலோசனை

- மத்திய அரசு மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு ஆகிய 6 மாநிலங்களுக்கு வறட்சி குறித்த ஆலோசனையை வழங்கியுள்ளது.

- கடந்த 10 ஆண்டுகளில் நீர் சேமிப்புப் புள்ளி விவரங்களின் சராசரியை விட 20 சதவிகிதத்திற்கும் குறைவான நீர் தற்சமயம் நீர்த்தேக்கங்களில் இருப்பின் மத்திய அரசு வறட்சி குறித்த ஆலோசனையை அந்த மாநிலங்களுக்கு வழங்கும்.
- அணைகள் மீண்டும் நிரம்பும் வரை தற்சமயம் அதில் உள்ள நீரை குடிநீர்த் தேவைக்காக மட்டும் பயன்படுத்துமாறு மாநிலங்களுக்கு இந்த ஆலோசனை பரிந்துரைத்துள்ளது.

## புல் ஸ்ட்ரைக் பயிற்சி

- தரைப்படை கடற்படை மற்றும் விமானப்படை அனைத்தும் இணைந்த இந்தியாவின் ராணுவப் படைகளானது அந்தமான் நிக்கோபார் பகுதியின் தெரசா தீவில் புல் ஸ்ட்ரைக் (Exercise Bull Strike) எனும் கூட்டுப் பயிற்சியை நடத்தியது.
- இப்பயிற்சியானது தற்போது நாடு எதிர்கொள்ளும் முக்கியப் பாதுகாப்பு சவால்களை கையாள்வதில் அவர்களின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதையும் முப்படைகளின் கூட்டு நடவடிக்கைத் திறன்களை வெளிப்படுத்துவதையும் மற்றும் அதன் செயல்பாட்டு ஒருங்கிணைப்பை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

## நாடாளுமன்றத் தேர்தல் 2019

- 17வது மக்களவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் இந்தியப் பொது தேர்தல் ஏப்ரல் 11 தேதி முதல் மே 19 ஆம் தேதி வரை ஏழு கட்டங்களாக நடைபெற்றது.
- 900 மில்லியன் இந்தியக் குடிமக்கள் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.
- 2019 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் 67.11 சதவிகித வாக்குகள் பதிவாகியிருந்தன. இந்தியப் பொதுத் தேர்தல்கள் வரலாற்றில் இதுவே அதிகமானதாகும்.
- 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 66.4 சதவிகித வாக்குகள் பதிவாகியிருந்தன. இது இந்தியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் இரண்டாவது அதிகபட்ச வாக்கு சதவிகிதமாக தற்பொழுது விளங்குகின்றது.

## சிம்பெக்ஸ் - 19

- 2019 ஆம் ஆண்டில் மே 16 ஆம் தேதி முதல் மே 22 ஆம் தேதி வரை சிங்கப்பூரில் நடைபெற்ற "சிம்பெக்ஸ்-2019" என்ற பயிற்சியில் இந்தியக் கடற்படைக் கப்பல்களான கொல்கத்தா மற்றும் சக்தி ஆகியவை கலந்து கொண்டன.
- சிங்கப்பூர் இந்தியா கடல் சார்ந்த இருநாட்டுப் பயிற்சி (SIMPEX - Singapore India Maritime Bilateral Exercise) என்பது இந்தியக் கடற்படை மற்றும் சிங்கப்பூர் குடியரசின் கடற்படை ஆகியவற்றினால் நடத்தப்படும் இரு நாடுகளுக்கிடையேயான ஒரு வருடாந்திர கடற்பயிற்சியாகும்.
- இது 1993 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்தக் கடற்படைப் பயிற்சியில் ஐஎன்எஸ் கொல்கத்தா மற்றும் ஐஎன்எஸ் சக்தி ஆகியவற்றைத் தவிர்த்து, நீண்ட வரம்பு கொண்ட கடல்சார் ரோந்து விமானமான போசிடோன் – 8I என்ற விமானமும் கலந்து கொண்டது.

## முழுமை பெற்ற உச்ச நீதிமன்றம்

- இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு 4 நீதிபதிகள் நியமிக்கப்பட்ட பின்பு, அனுமதியளிக்கப்பட்ட மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கையை அந்த அமைப்பு அடைந்துள்ளது.
- உச்ச நீதிமன்றத்தில் அனுமதியளிக்கப்பட்ட மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 31 (30 + 1) ஆகும்.
- இது 30 உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் 1 உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியையும் கொண்டிருக்கும்.
- அவர்கள் இந்திய உச்ச நீதிமன்றத்தில் பணியில் சேர்ந்ததிலிருந்து 65 வயது வரை இப்பதவியில் நீடிப்பர்.
- நான்கு புதிய நீதிபதிகள்
    - நீதிபதி அனிருத்தா போஸ்
    - நீதிபதி சூர்ய காந்த்
    - நீதிபதி A.S. போபண்ணா
    - நீதிபதி B.R. கவாய்

## ரைசாட் - 2பி

- மே 22 ஆம் தேதியன்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ரைசாட் – 2பி (RISAT- 2b) என்ற செயற்கைக் கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
- ரைசாட் – 2 பி ஆனது ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் – 2பி என்பதைக் குறிக்கும்.
- இது பின்வரும் துறைகள் மற்றும் பயன்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படவிருக்கின்றது.
    - வேளாண்மை, பேரிடர் மேலாண்மை மற்றும் வனங்கள்
    - அனைத்து விதமான வானிலைக் கண்காணிப்பு
    - பகல் மற்றும் இரவு நேரங்களில் இடங்களைப் படமெடுத்தல்
    - சிறு பொருட்களை ஆய்வு செய்து, அவற்றைக் கண்காணிப்பது.
- இதர ரைசாட் செயற்கைக் கோள்கள்

| | |
|---|---|
| ரைசாட் – 2 | கண்காணிப்புப் பயன்பாடுகளுக்காக ரைசாட் வரிசையில் செலுத்தப்பட்ட முதலாவது செயற்கைக்கோள். |
| ரைசாட் – 1 | இந்தியாவின் முதலாவது அனைத்து விதமான வானிலை கண்காணிப்பு கொண்ட ராடார் இமேஜிங் செயற்கைக் கோளாகும். |

- ரைசாட் - 2Bக்குப் பின்பு ரைசாட் – 2BR1, 2BR2, ரைசாட் 1A, 1B, 2A மற்றும் பல செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்படவிருக்கின்றன.
- விண்வெளியில் உள்ள ராடார் போன்ற இத்தகைய குழுக்களானது நாட்டின் மீது ஒரு

முழுமையான கண்காணிப்பை மேற்கொள்கிறது.

- ரைசாட் குறித்து அறிந்து கொள்ள இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/isros-risat-2br1/.

## பிரம்மோஸ் வான் ஏவுகணை

- இந்திய விமானப் படை தனது Su-30 MKI என்ற முன்னணி போர் விமானத்திலிருந்து பிரம்மோஸ் வான்வழி ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இது ஏறத்தாழ 300 கிலோ மீட்டர் வரம்பு கொண்ட மீயொலி வேகத்துடன் வானிலிருந்து நிலப் பரப்பில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையாகும். 2.5 டன்கள் எடை கொண்ட இந்த ஏவுகணையானது பிரம்மோஸ் விண்வெளி நிறுவனத்தினால் (BAPL - BrahMos Aerospace Limited) மேம்படுத்தப்பட்டதாகும்.
- இந்த வகை ஏவுகணையின் இரண்டாவது நிகழ்நேர சோதனை இதுவாகும்.
- இந்த வகையைச் சேர்ந்த ஒரு தாக்குதல் நடத்தும் ஏவுகணையை 2.8 மாக் என்ற காற்றின் ஒளிவேகத்தில் செலுத்தி வெற்றிகரமாக சோதனை செய்த உலகின் முதலாவது விமானப் படையாக இந்திய விமானப் படை உருவெடுத்துள்ளது. இது 2017 ஆம் ஆண்டு நவம்பர் 22 அன்று கடற்பரப்பில் உள்ள இலக்கை வெற்றிகரமாக தாக்கி அழித்தது.

***BAPL***

- BAPL ஆனது பின்வருவனவற்றிற்கிடையேயான ஒரு கூட்டு நிறுவனமாகும்.
  - இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு
  - ரஷ்யாவின் “பெடரல் ஸ்டேட் ஒற்றை நிறுவனமான என்பிஓ மாசினோஸ்ட்ரோயேனியா”.

**BrahMos Aerospace Limited**

| | |
|---|---|
| **Type** | Government-owned corporation |
| **Industry** | Defense |
| **Founded** | New Delhi, India (February 12, 1998) |
| **Headquarters** | New Delhi, India |
| **Key people** | Dr. Sudhir Kumar Mishra<br>Chief Executive Officer and Managing Director |
| **Products** | Cruise missile |
| **Total assets** | US$5 billion (*2013*) |


## எதிர்க் கட்சித் தலைவர் அற்ற மக்களவை

- 2014 ஆம் ஆண்டின் 16 ஆவது மக்களவையில் நிகழ்ந்ததைப் போன்றே, 2019-24 வரையிலான கால கட்டத்தில் நாடாளுமன்றத்தின் மக்களவையானது எதிர்க் கட்சித் தலைவர் (LOP - leader of opposition) இல்லாமல் செயல்படவிருக்கின்றது.

- 1977 ஆம் ஆண்டின் எதிர்க் கட்சித் தலைவரின் ஊதியம் மற்றும் படிநிலைகள் என்ற பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் "எதிர்க் கட்சித் தலைவர்" என்ற பதவியானது சட்டப்பூர்வ அங்கீகாரத்தைப் (Statutory recognition) பெற்றுள்ளது.
- இச்சட்டமானது எதிர்க்கட்சியாக செயல்படும் கட்சியானது அவையின் மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 10 சதவிகித (மக்களவையில் 55 இடங்கள்) உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகின்றது.
- இல்லையென்றால் அந்த அவை எதிர்க்கட்சித் தலைவரை அங்கீகரிக்காது.
- எதிர்க் கட்சித் தலைவர் பதவியானது மிகப்பெரிய ஒற்றை எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவருக்கு மட்டுமே வழங்கப்படும்.
- தேர்தலுக்கு முன்னதாக உருவாக்கப்பட்ட கூட்டணியாக இருந்தாலும் கூட, கூட்டணியைச் சேர்ந்த தலைவருக்கு LOP என்ற அங்கீகாரம் வழங்கப்படாது.
- மக்களவையின் முதல் அதிகாரப்பூர்வ எதிர்க் கட்சித் தலைவர் ராம் சுபங் சிங் ஆவார்.
- காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இவர் 1969 ஆம் ஆண்டில் எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## ரைபில்ஸ் மற்றும் கடலோரக் காவற்படை

- அஸ்ஸாம் ரைபில்ஸ் மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படையைச் சேர்ந்த பொது இயக்குநர்கள் மேகாலயா மாநிலத்தின் ஷில்லாங் நகரில் நடைபெற்ற ஒரு விழாவில் "இணைப்புப் பட்டயம்" ஒன்றில் கையெழுத்திட்டனர்.
- இது இரு படைகளுக்கிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் பயிற்சி மற்றும் விளையாட்டுகளுக்காக, ஒரு படை மற்ற படையின் பொருட்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதியளிக்கிறது.




- அஸ்ஸாம் ரைபில்ஸின் 3-வது படைப்பிரிவு (நாகா குன்றுகள்) மற்றும் இந்தியக் கடலோரக் காவற்படைக் கப்பலான "சவுரியா" ஆகியவற்றிற்கிடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- இந்த "இணைப்புப் பட்டயமானது" சமூக தளங்கள் மற்றும் தொழில்சார் நிலையில் "வட கிழக்கில் உள்ள செண்டினல் இன மக்களை "கடலின் செண்டினல் இன மக்களுடன்" கலந்துரையாட வழிவகை செய்கின்றது.

### அஸ்ஸாம் ரைபில்ஸின் 3-வது (நாகா குன்றுகள்) படைப் பிரிவு

- இது அஸ்ஸாம் ரைபில்ஸின் மிகப் பழமையான படைப் பிரிவாகும். இது 1835 ஆம் ஆண்டில் "தி கச்சார் லெவி" (The Cachar Levy) என்ற படையாக உருவாக்கப்பட்டது.
- இது பகுதிசார் இராணுவ அமைப்பாகும்.
- இது முதன்முதலில் அஸ்ஸாமின் நல்கோங் மாவட்டத்தில் பொறுப்பு அதிகாரியாக இருந்த ஆங்கில குடிமைப்பணிகள் அதிகாரியான, ஜார்ஜ் என்பவரின் தலைமையின் கீழ் 750 படை வீரர்களுடன் தொடங்கப்பட்டது.
- இது அஸ்ஸாமின் கிழக்கு மாகாணத்தினை பிரம்மபுத்திரா நதியிலிருந்து கச்சார் குன்றுகள் வரை பாதுகாக்கும் பொறுப்பைப் பெற்றுள்ளது.
- தற்பொழுது இந்தப் படைப் பிரிவு நாகாலாந்தின் கோஹிமாவில் செயல்படுகின்றது.
- கோஹிமாவில் இப்படை இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியர்களுடன் வீரத்துடன் போரிட்டு, அவர்கள் இந்தியாவிற்குள் முன்னேறுவதைத் தடுத்து நிறுத்தியது.

## பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

- தற்பொழுது நடந்து முடிந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 78 பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் 17-வது மக்களவையானது நாடாளுமன்ற வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான பெண் உறுப்பினர்களைக் கொண்டு விளங்குகின்றது.
- இவர்கள் கீழ் சபையின் மொத்த உறுப்பினர்களில் 14.39 சதவிகிதத்தைக் கொண்டுள்ளனர்.
- பெண்கள், இதற்கு முந்தைய மக்களவையில் 65 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் 12.5 சதவிகிதத்தைக் கொண்டிருந்தனர்.
- மேலும் பெண் வேட்பாளர்கள் அதிகமாக வெற்றி பெறும் தன்மை அல்லது வெற்றி விகிதத்தை வெளிப்படுத்திக் காண்பித்தனர்.
- இவர்கள் அதிகமாக வெற்றி பெறும் விகிதமான 10.89 சதவிகிதத்தை (போட்டியிட்ட 716 வேட்பாளர்களில் 78 வெற்றியாளர்கள்) கொண்டுள்ளனர். ஆனால் ஆண் வேட்பாளர்கள் வெற்றி பெறும் விகிதமாக 6.41 சதவிகிதத்தை மட்டுமேக் கொண்டுள்ளனர்.

## உள்நாட்டு உயிரி எரிபொருள்

- 10 சதவிகித அளவிலான உள்நாடு உயிரி விமான எரிபொருளை உள்ளடக்கிய கலப்பின விமான எரிபொருளைப் பயன்படுத்திப் பறந்திடுவதற்கு இந்திய விமானப் படையின் AN-32 விமானத்திற்கு முறையாக பறப்பதற்கானச் சான்று அளிக்கப்பட்டுள்ளது.
- உள்நாட்டு உயிரி விமான எரிபொருளானது முதலில் 2013 ஆம் ஆண்டில் CSIR-IIP (Council of Scientific & Industrial Research - Indian Institute of Petroleum) ஆய்வகத்தால் டேராடூனில் தயாரிக்கப்பட்டதாகும்.
- இது சத்தீஸ்கரின் உயிரி டீசல் மேம்பாட்டு ஆணையத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட ஜத்ரோபா எண்ணெயைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டதாகும்.
- இந்த உயிரி எரிபொருளானது விவசாயிகள் மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் இருந்து

கொள்முதல் செய்யப்பட்ட மரத்திலிருந்துப் பெறப்பட்ட எண்ணெயிலிருந்துத் தயாரிக்கப்படும்.

- இதன்மூலம் இது அவர்களது வருமானத்தை கணிசமான அளவு உயர்த்தும்.

## புதிய இந்திய விண்வெளி நிறுவனம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு புதிய வர்த்தகப் பிரிவாக புதிய இந்திய விண்வெளி நிறுவனம் என்று அழைக்கப்படும் நிறுவனம் அதிகாரப்பூர்வமாக பெங்களூருவில் துவங்கி வைக்கப்பட்டது.
- இந்த நிறுவனம் 100 கோடி ரூபாய் மதிப்பிலான அங்கீகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனத்தையும் 10 கோடி ரூபாய் மதிப்பிலான முதல் கட்ட மூலதன வழங்கலையும் கொண்டிருக்கின்றது.
- விண்வெளித் துறையின் முதல் வர்த்தக நிறுவனம் ஆண்ட்ரிக்ஸ் நிறுவனமாகும்.
- இது 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தயாரிப்புகளையும் சேவைகளையும் சந்தைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

## கார்கில் போரில் மரணமடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துதல்

- பஞ்சாபின் பதின்டாவில் உள்ள பிசியானா விமானப் படைத் தளத்திலிருந்து இந்திய விமானப் படையின் தலைமைத் தளபதியான பி.எஸ். தனோவா தலைமையில் 4 மிக்-21 விமானத்தில் பறந்து சென்று கார்கில் போரில் மரணமடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.
- கார்கில் போரின் போது மரணமடைந்தவர்களைக் குறிக்கும் விதமாக இரு விமானங்களிடையே ஒரு இடைவெளியுடன் கூடிய ஒரு தோற்றம் ஏற்படுத்தப்பட்டது. இது ஒரு வில் போன்ற ஒரு அமைப்பாகும்.
- இது கார்கிலில் சபெத் சாகர் நடவடிக்கையின் போது உயிர்த் தியாகம் செய்த வீரர்களைக் கௌரவிப்பதற்காக நடத்தப்பட்டது.
- சபெத் சாகர் நடவடிக்கை என்பது கார்கில் போரின் போது தரைப் படையுடன் இணைந்துப் போரிட்ட இந்திய விமானப் படையின் பணிக்கு வழங்கப்பட்ட ஒரு குறியீட்டுப் பெயராகும்.

## ஆகாஷ் எம்கே–1 எஸ்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது (Defence Research and Development Organisation - DRDO) ஒடிசாவின் சந்திப்பூரிலிருந்து ஆகாஷ் எம்கே–1 எஸ் என்ற ஒரு ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- ஆகாஷ் எம்கே–1 எஸ் என்பது மேம்படுத்தப்பட்ட வான்பரப்பு இலக்குகளைச் சீராக்கி அழிக்கும் திறன் கொண்ட ஒரு ஏவுகணையாகும். இது நிலப்பரப்பிலிருந்து வான் பரப்பிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிப்பதற்காக ஏவப்படுகின்றது.
- இந்த மீயொலி வேகம் கொண்ட ஏவுகணையானது 25 கிலோ மீட்டர் வரை சென்று

இலக்கைத் தாக்கும் திறன் கொண்டது. இது 18,000 மீட்டர் உயரம் வரை சென்று இலக்கைத் தாக்கி அழிக்கும்.

- மேம்படுத்தப்பட்ட துல்லியத் தன்மை மற்றும் அதிக வரம்பு கொண்ட இந்த வகையைச் சேர்ந்த பிற ஏவுகணைகளான ஆகாஷ் எம்கே–1, ஆகாஷ் எம்கே–2 ஆகியவை DRDOவினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## முழு உடல் பாதுகாப்புக் கருவி

- முதன்முறையாக இந்தியாவிலுள்ள பெண் காவலர்கள் மற்றும் துணை இராணுவப் படை வீரர்கள் “பெண்களை மையமாகக் கொண்ட” உடல் பாதுகாப்புக் கவசம் அல்லது முழு உடல் பாதுகாப்புக் கருவியைப் (FBP - full body protector) பெறவிருக்கின்றனர்.
- இது பல்வேறு அச்சுறுத்தல்களைத் தாங்கிக் கொள்ளும் திறன் கொண்டது. இது கத்தியால் தாக்குவதிலிருந்து தப்பித்தல், கிழிசல் எதிர்ப்பு, தாக்கத்திலிருந்து தப்பித்தல், தீ மற்றும் அமிலத்தை எதிர்த்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்றது.
- இது புது தில்லியில் உள்ள உடலியல் மற்றும் அது சார்ந்த அறிவியலுக்கான பாதுகாப்பு மையத்தினால் (DIPAS - Defence Institute of Physiology & Allied Science) மேம்படுத்தப்பட்டது.
- DRDOவின் கீழ் இயங்கும் DIPAS அமைப்பு 1962-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது பல்வேறு தொழில்சார் சூழலில் உடலியல், உயிர் வேதியியல், ஊட்டச் சத்து மற்றும் பணிச்சூழலியல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மனித செயல்திறனை மேம்படுத்துவதற்காக பணியாற்றுகின்றது.
- DRDO ஆனது இப்பொருள்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கான 5 உரிமங்களை வழங்கவிருக்கின்றது.



### MI-17 வானூர்தியில் பறந்த அனைத்து பெண் விமானிகள் கொண்ட குழு

- இந்தியாவில் முதன்முறையாக மே 27 அன்று இந்திய விமானப் படையைச் சேர்ந்த அனைத்து பெண் விமானிகளைக் கொண்ட ஒரு குழுவினர் மித கனம் கொண்ட ஒரு ஹெலிகாப்ட்டரினை இயக்கிப் பறந்தனர் .
- இந்த குழுவிற்கு விமானப் படை அதிகாரியான பரூல் பரத்வாஜ் என்ற பெண் தலைமை தாங்கினார். விமானப் படை அதிகாரிகளான அமன் நிதி மற்றும் ஹீனா ஜெய்ஸ்வால் ஆகியோரை இக்குழு உள்ளடக்கியது ஆகும்.
- Mi – 17 V5 வானூர்தியில் பறந்த முதலாவது பெண் விமானி பரூல் பரத்வாஜ் ஆவார்.
- இந்திய விமானப் படையின் முதலாவது பெண் விமானப் பொறியாளர் ஹீனா ஜெய்ஸ்வால் ஆவார்.
- ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருந்து வரும் இந்திய விமானப் படையின் முதலாவது பெண் விமானி அமன் நிதி ஆவார்.
- இந்த வானூர்தி பாதுகாப்பாக பறப்பதற்கான தகுதிச் சான்றிதழினை அளித்தவர் இந்திய விமான படைப் பிரிவில் பொறியாளராக இருக்கும் ரிச்சா அதிகாரி என்பவர் ஆவார்.




## சர்வதேசச் செய்திகள்

### ஜப்பான் பேரரசர்

- ஜப்பானின் புதிய பேரரசர் நருஹிடோ அந்நாட்டின் கிரிசாந்திமம் (Chrysanthemum) எனும் சிம்மாசனத்தில் அரியணை ஏறினார்.
- 2019 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியில் இருந்து ரெய்வா சகாப்தம் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.
- பொதுவாக ஜப்பானின் சகாப்தங்கள் சீனாவின் பாரம்பரியத்திற்குப் பின்னர் பெயரிடப்படுகின்றன.
- கடந்த 1300 ஆண்டுகளில் ‘ரெய்வா’ (Reiwa) என்பது ஜப்பானின் பாரம்பரிய இலக்கியத்திற்குப் பின்பு பெயரிடப்பட்ட முதலாவது சகாப்தமாகும்.
- பேரரசர் நருஹிடோ ஜப்பானின் 126-வது பேரரசர் ஆவார்.
- இது 5 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து வரும் உலகின் பழமையான பரம்பரை முடியாட்சி ஆகும்.
- நருஹிடோவிற்கு முன்னர் அஹிகிட்டோ என்பவர் பேரரசராக இருந்தார். ரெய்வாவிற்கு முன்பு ஹெய்சி (Heisi) சகாப்தம் இருந்தது.

## ஹார்மூஸ் நீரிணைப் பகுதி

- அமெரிக்காவுடன் அதிகரித்து வரும் பதற்றம் காரணமாக, மிக முக்கியத்துவம் வாய்ந்த ஹார்மூஸ் நீரிணைப் பகுதியை மூடப் போவதாக ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.
- ஹார்மூஸ் நீரிணைப் பகுதியானது எண்ணெய் உற்பத்தி செய்யும் மத்தியக் கிழக்கு நாடுகளையும் ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் அதற்கு அப்பால் உள்ள சந்தைகளையும் இணைக்கும் ஒரு முக்கியமான நீர்வழிப் பாதையாகும்.
- இந்த நீரிணைப் பகுதியானது தனது குறுகிய பாதையில் 33 கிலோ மீட்டர்கள் வரை பரவியுள்ளது.
- இந்த நீரிணைப் பகுதியின் பயணப் பாதையானது இரு திசைகளிலும் 3 கிலோ மீட்டர் அகலத்தை மட்டுமேக் கொண்டுள்ளது.
- ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு உலக எண்ணெய் வர்த்தகமானது ஹார்மூஸ் நீரிணைப் பகுதியின் வழியே நடைபெறுகின்றது.
- கத்தாரினால் தயாரிக்கப்படும் அனைத்து திரவ இயற்கை வாயுக்களும் (LNG - Liquefied Natural Gas) இந்தப் பாதையின் வழியே அனுப்பப்படுகின்றன.
- உலகில் அதிக அளவில் LNG-ஐ உற்பத்தி செய்யும் நாடு கத்தார் ஆகும்.

## உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை

- சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனமானது (International Food Policy Research Institute-IFPRI) சமீபத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- IFPRI-இன் இந்த முதன்மை அறிக்கையானது 2018 ஆம் ஆண்டிற்கான உணவுக் கொள்கையில் உள்ள முக்கிய சிக்கல்கள், மேம்பாடுகள் மற்றும் முடிவுகள் ஆகியவற்றை மறு ஆய்வு செய்கிறது. மேலும் 2019 ஆம் ஆண்டிற்கான சவால்களையும் வாய்ப்புகளையும் கவனத்தில் கொள்கிறது.

### *முக்கிய கண்டுபிடிப்புகள்*

- உலகின் மொத்த மக்கள் தொகையில் 45.3% மக்கள் கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்கள்.
- உலக மக்கள் தொகையில் குறைந்த பட்சமாக 70% பேர் மிகவும் வறுமையில் உள்ளனர்.
- உலகம் முழுவதும் உள்ள கிராமப்புற இளைஞர்களில் சுமார் 50% பேர் எந்தவொரு அமைப்புசார் துறையிலும் வேலையின்றி உள்ளனர். மேலும் அவர்கள் வேலையின்றியோ அல்லது தகுதிக்கு குறைந்த வேலையிலோ உள்ளனர்.
- 2030 ஆம் ஆண்டின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான பாதைக்கு உலகம் இன்னும் தயாராகவில்லை.
- 2018 ஆம் ஆண்டில் உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் பிராந்தியமாக தெற்காசியா உள்ளது.
- இந்தப் பிராந்தியத்தின் 70 சதவீத கிராமப்புற மக்கள் தொகைக்கு இந்தியா தாயகமாக உள்ளது.

## இந்தியா-பிரான்ஸ் கடற்படை கூட்டுப் பயிற்சி

- இந்தியா மற்றும் பிரான்சு நாட்டுக் கடற்படைகள் இணைந்து வருணா 19.1 எனும் கூட்டுப் பயிற்சியை நடத்துகின்றன.
- இது மே மாதம் 1 முதல் 10 வரையில் கோவாவின் கடற்கரைப் பகுதியில் நடைபெறுகிறது.
- இது இருதரப்பு கடற்படைப் பயிற்சியின் 17வது பதிப்பாகும்.
- இந்தப் பயிற்சியானது இரண்டு கட்டமாக நடைபெறுகிறது.
- இருதரப்பு சந்திப்பு, தொழில் முறை நிபுணர்களின் கலந்துரையாடல்கள், மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் ஆகியவை உள்ளிட்ட துறைமுகப் பயிற்சிக்கான பகுதியானது கோவாவில் நடைபெறும்.
- கடற்பயிற்சிப் பகுதியானது கடற்படை நடவடிக்கைகளின் பல்வேறு தரப்புப் பயிற்சிகளை உள்ளடக்கியது.
- 2-வது கட்ட கடற்படைப் பயிற்சியான வருணா 19.2 ஆனது மே மாத இறுதியில் டிஜிபோட்டியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இருதரப்பு கடற்படைப் பயிற்சியானது 2001 ஆம் ஆண்டில் வருணா என்று பெயரிடப்பட்டது.

## ADMM plus கடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சி - பன்னாட்டுப் பயிற்சி

- இந்தியக் கடற்படையின் INS கொல்கத்தா மற்றும் INS சக்தி ஆகியவை ADMM plus (ஆசியான் மற்றும் இதர நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூடுகை - ASEAN Defence Ministers' Meeting Plus) நாடுகளின் பன்னாட்டுப் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக புருனேயைச் சென்றடைந்துள்ளது.
- மே மாதம் 1 முதல் 9 வரை நடைபெறும் இது கடல் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சியாகும்.
- இந்த ADMM plus கடல்சார் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு மீதான பயிற்சியானது (ADMM plus Ex MS & CT) ADMM Plus நாடுகள் குழுவின் பன்னாட்டுப் பயிற்சியாகும்.
- இந்தப் பதிப்பானது புருனேவில் தொடங்கி சிங்கப்பூரில் முடிவடையும்.
- இந்தப் பயிற்சியின் போது இந்தியக் கடற்படையானது பயிற்சியில் கலந்து கொள்ளும் பல்வேறு ஆசியான் மற்றும் அதன் பிற உறுப்பு நாடுகளின் கடற்படைகளுடன் துறைமுக மற்றும் கடற்பரப்புகளில் ஏற்படும் பல சிக்கலான நடவடிக்கைகள் பற்றிய நிபுணத்துவ கலந்துரையாடல்களில் ஈடுபடும்.


### *ADMM Plus*

- ADMM Plus ஆனது 10 நாடுகளைக் கொண்ட தளமாகும்.
- இது ஆசியான் மற்றும் அதன் இதர கலந்துரையாடல் நாடுகளைக் கொண்டதாகும்.
- குழு உறுப்பினர்களின் மத்தியில் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை

வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## உலக இராணுவ செலவு அறிக்கை

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது (Stockholm International Peace Research Institute-SIPRI) 2018 ஆம் ஆண்டிற்கான உலக இராணுவ செலவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த புதிய அறிக்கையின்படி உலகளாவிய அளவில் ஒட்டு மொத்த இராணுவ செலவினங்களானது கடந்த ஆண்டை விட 2.6 சதவீதம் உயர்ந்துள்ளது.
- அமெரிக்கா, சீனா, சவுதி அரேபியா இந்தியா மற்றும் பிரான்சு ஆகியவை 2018 ஆம் ஆண்டில் அதிக செலவு செய்த 5 நாடுகள் ஆகும்.
- அமெரிக்காவானது 2010 ஆம் ஆண்டிற்கு பிறகு முதன் முறையாக செலவை அதிகரித்துள்ளது. கடந்த 24 ஆண்டுகளாக தொடர்ந்து சீனாவின் செலவுகள் அதிகரித்து வருகின்றன.




## 17வது உலகப் பொருளாதார மன்றம்

- உலகப் பொருளாதார மன்றத்தின் 17வது பதிப்பானது மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவில் ஜோர்டானின் சாக்கடல் பகுதியில் நடைபெற்றது.
- இந்த கூடுகையானது கீழ்க்காணும் 3 முக்கிய தொலைநோக்குப் பார்வைக்கான கருத்துருவின் கீழ் நடத்தப் பட்டது.
  - வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்,
  - அரேபிய பெண்களுக்கு அதிகாரமளித்தல்,
  - மிகவும் தனித்துவமான தொழில் தொடக்கங்களை ஊக்குவித்தல்.

## லோயா ஜிர்கா

- ஆப்கானிஸ்தான் தனது அரிதான மற்றும் மிகப்பெரிய லோயா ஜிர்காவை சமீபத்தில் நடத்தியது.
- பாஸ்தோ மொழியில் லோயா ஜிர்கா என்பது “மிகப்பெரிய கூட்டம்” என்று பொருள்படும்.
- இந்தக் கூட்டமானது ஆப்கானிஸ்தானிலிருந்து வெளிநாட்டுப் படைகளை திரும்பப்

பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து முடிவு எடுப்பதற்காக நடத்தப்பட்டது.

- இந்தப் படைகள் திரும்ப அழைக்கப்படுதலானது நிரந்தரப் போர் நிறுத்தம் மற்றும் பல்வேறு தாலிபான் படைகளின் உறுதிமொழிகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

## வெனீஸ் கலை விழா

- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் வெனீஸ் கலை விழாவின் 58-வது பதிப்பானது இத்தாலியின் வெனீஸ் நகரில் நடைபெறவிருக்கின்றது.
- உலகின் மிகப் பெரிய கலை விழாக்களில் இதுவும் ஒன்றாகும்.
- ஹரிபுரா மாநாட்டைச் சேர்ந்த 400 சுவரொட்டிகளில் 16 சுவரொட்டிகள் இந்தியாவினால் அங்கு காட்சிப்படுத்தப் படவிருக்கின்றன.
- 1938 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஹரிபுரா காங்கிரஸ் மாநாட்டில் ஹரிபுரா சுவரொட்டிகள் முதன்முறையாக ஒட்டப்பட்டன.
- இந்தச் சுவரொட்டிகளை உருவாக்குமாறு புகழ்பெற்ற ஓவியரான நந்தலால் போஸ் என்பவரை காந்தி கேட்டுக் கொண்டார்.
- ஹரிபுரா காங்கிரஸ் மாநாடானது சுபாஷ் சந்திர போஸ் என்பவரால் தலைமை தாங்கப்பட்டது.

## நேட்டோ படைத் தலைவர்

- அமெரிக்காவைச் சேர்ந்த வான் படை ஜெனரல் தோட் D. வோல்ட்டர்ஸ் என்பவர் நேட்டோவின் 19-வது ஐரோப்பிய உயரிய நேச நாடுகளின் படைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.
- வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO - North Atlantic Treaty Organisation) என்பது வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 29 நாடுகளின் ஒரு இராணுவ கூட்டிணைவாகும்.
- நேட்டோ அமைப்பானது கூட்டுப் பாதுகாப்பின் ஒரு அமைப்பாக விளங்குகின்றது.
- இது எந்தவொரு எதிரி நாடுகளும் தாக்குதல் நடத்தினால் அதற்குப் பதிலடி தரும் வகையிலான பொதுப் பாதுகாப்பிற்கு அனைத்து உறுப்பு நாடுகளும் ஒத்துக் கொண்டுள்ளன என்பதைக் குறிக்கிறது.
- இது 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 அன்று அமைக்கப்பட்டது.
- இதன் தலைமையகம் பெல்ஜியத்தின் புரூசல்ஸ் நகரில் அமைந்துள்ளது.
- ஜென்ஸ் ஸ்டோல்டென்பெர்க் என்பவர் நேட்டோவின் பொதுச் செயலாளராக இருக்கின்றார்.

## வன்முறையினால் ஏற்பட்ட மரணங்களின் சர்வதேச பதிவு

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆய்வு நிறுவனமானது (SIPRI - Stockholm International peace

research institute) வன்முறையினால் ஏற்பட்ட மரணங்களின் சர்வதேச பதிவு எனும் புதிய முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

- இது உலகளாவிய அளவில் வன்முறைகளால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையை கணக்கெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அனைத்து வகையான வன்முறைகளாலும் ஏற்படும் இறப்புகளைக் கணக்கிட்டு திறந்த நிலை தரவு தளத்தில் வெளியிடும்.
- இது 2030 ஆம் ஆண்டுக்குள் "அனைத்து வகையான வன்முறைகளையும் அது சம்பந்தப்பட்ட இறப்பு விகிதங்களையும் குறைப்பது" என்ற உலக நாடுகளின் இலக்கில் (SDG – இலக்கு 16) ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணிக்க உதவுகிறது.
- இந்த தரவு தளமானது நேரம், இடம், குற்றவாளி, பாதிக்கப்பட்டவர் மற்றும் வன்முறையின் வகை உட்பட அனைத்து வகையான வன்முறையினால் ஏற்பட்ட இறப்புகளையும் உள்ளடக்கியது ஆகும்.
- இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ஸ்வீடனின் போஸ்ட்கோடு அறக்கட்டளையினாலும் ஐக்கிய ராச்சியத்தின் சர்வதேச மேம்பாட்டுத் துறையினாலும் நிதியளிக்கப்படுகிறது.

***SIPRI***

- ஸ்வீடனை அடிப்படையாகக் கொண்ட இந்த சர்வதேச அமைப்பானது 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- இது மோதல்கள், ஆயுதங்கள், ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் ஆயுதக் குறைப்பு ஆகியவற்றின் மீது ஆய்வு மேற்கொள்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டது.
- இது திறந்த நிலை ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பாளர்கள், ஆய்வாளர்கள், ஊடகங்கள் மற்றும் ஆர்வமுள்ள பொதுமக்களுக்கு தரவுகள், பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகளை வழங்குகிறது.

## புதிய விமானம் தாங்கிப் போர்க்கப்பல்

- ஒரு புதிய சிறப்பு வாய்ந்த விமானம் தாங்கிப் போர்க் கப்பலை கட்டமைப்பதற்காக ஐக்கிய இராஜ்ஜியம் இந்தியாவுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது.
- இது ஐஎன்எஸ் விஷால் என்று பெயரிடப்பட்டு 2022இல் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட விருக்கின்றது.
- இத்திட்டம் "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- 65,000 டன்கள் எடை கொண்ட எலிசபெத் ராணி (HMS Queen Elizabeth) என்ற போர்க் கப்பலைப் போன்றே இக்கப்பலைக் கட்டமைக்க திட்டமிடப் பட்டிருக்கின்றது.
- HMS Queen Elizabeth என்பது 60 போர் விமானங்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்ட பிரிட்டனின் மிகப்பெரிய விமானம் தாங்கிப் போர்க் கப்பலாகும்.
- இதற்கு முன்பு, 1987 ஆம் ஆண்டில் பிரிட்டன் HMC ஹெர்மீஸ் என்ற கப்பலை இந்தியாவிற்கு விற்பனை செய்தது.
- இது INS விராத் என்று பெயரிடப்பட்டு 2017 ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப்பட்டது.

## ஈஸ்டர் குண்டு வெடிப்பு - இலங்கை

- இலங்கையைச் சேர்ந்த தீவிரவாத அமைப்பான "தேசிய தவ்ஹீத் ஜமாத்" ஆனது இலங்கையில் புனித ஞாயிறு (ஏப்ரல் 21) அன்று தொடர் தாக்குதல்களை நிகழ்த்தியது.
- இந்தத் தாக்குதலில் 350க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.
- இந்தத் தீவிரவாதத் தாக்குதலுக்கு தனது அமாக் செய்தி நிறுவனத்தின் மூலம் இஸ்லாமிய அமைப்பு பொறுப்பேற்றது.
- இலங்கையில் நடந்த இந்தத் தற்கொலைப் படை தீவிரவாதத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று, அந்நாட்டின் பாதுகாப்புத் துறை செயலாளர் ஹேமாசிரி பெர்னாண்டோ தனது பதவியிலிருந்து விலகினார்.

## தென் சீனக் கடல்பயிற்சி

- இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த போர்க் கப்பல்கள் பிரச்சினைக்குரிய தென்சீனக் கடலில் 6 நாட்கள் (மே 03 - 09) நடைபெறும் கடற்படைப் பயிற்சியை நடத்துகின்றன.
- இந்த பயிற்சிக் குழுவில் உள்ள நாடுகளின் கப்பல்கள் பின்வருமாறு:

| நாடு | கப்பல் |
|---|---|
| இந்தியா | ஐஎன்எஸ் கொல்கத்தா - தாக்கி அழிக்கும் கப்பல், எண்ணெய்க் கப்பலான ஐஎன்எஸ் சக்தி |
| அமெரிக்கா | USS வில்லியம்ஸ் P லாரன்ஸ் - தாக்கி அழிக்கும் கப்பல் |
| ஜப்பான் | ஜெஎம்எஸ்டிஎப் இசோமோ விமானம் தாங்கிக் கப்பல் |
| பிலிப்பைன்ஸ் | BRP ஆண்டிரிஸ் போனிபாசி பீரங்கிக் கப்பல் |

- மேலும் இது குறித்த தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/indonesia-renamed-part-of-south-china-sea/ தேதி: 18.07.17.

## போலிச் செய்திகள்

- நாட்டில் போலிச் செய்திகளைப் பிரசுரிப்பதைக் குற்றமாக்கக் கூடிய ஒரு சட்டத்தை (நிகழ்நேர போலித் தகவல்கள் மற்றும் கையாளுதலிலிருந்துப் பாதுகாப்பதற்கான மசோதா) சிங்கப்பூர் நிறைவேற்றியுள்ளது.
- இது போன்ற போலிச் செய்திகளை முடக்கி அவற்றை நீக்க அரசாங்கத்திற்கு இது அனுமதியளிக்கின்றது.
- இது சிங்கப்பூருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய போலிச் செய்திகள் அல்லது தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய போலிச் செய்திகளைத் தடை செய்கின்றது.

## குடியரசுத் துணைத் தலைவர் – வியட்நாம் பயணம்

- 2019-ஆம் ஆண்டு மே 9 அன்று இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் 4 நாட்கள் சுற்றுப்

பயணமாக வியட்நாம் சென்றார்.

- இவர் தாம் சக் பகோடாவில் ஐ.நா.வின் 16-வது "வெசாக் தினக்" கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள இருக்கின்றார்.
- வெசாக் (புத்த ஜெயந்தி அல்லது புத்த பூர்ணிமா என்றும் அழைக்கப்படுகின்றது) என்பது புத்தரின் பிறப்பு, அவர் ஞானம் அடைதல் மற்றும் அவரது இறப்பு ஆகியவற்றை அனுசரிப்பதற்காகக் கொண்டாடப்படுகின்றது.
- இந்தத் தினமானது ஒவ்வொரு ஆண்டும் சந்திர நாட்காட்டியின் அடிப்படையில் நிகழ்கின்றது.


## ஐ.நா. பொதுச் சபையின் புதிய தலைவர்

- ஐ.நா. பொதுச் சபையின் புதிய தலைவராக பேராசிரியரான டிஜானி முகமது பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவரின் நியமனமானது தற்போது பதவியிலிருக்கும் தலைவரான மரியா பெர்னான்டா எஸ்பினோசா கார்சஸ் என்பவரால் அறிவிக்கப்பட்டது.
- 1989 – 1990 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. பொதுச் சபையின் தலைவராக பதவி வகித்த ஜோசப் நவீன் கர்பாவிற்கு அடுத்ததாகப் பதவியேற்கும் இரண்டாவது நைஜீரியராக பாண்டே உருவெடுத்துள்ளார்.



## ஜப்பானின் அதிவிரைவு புல்லட் ரயில்


- ஜப்பானானது அதன் மணிக்கு 400 கி.மீ. தூரத்தை அடையக்கூடிய அதிவேகமான ஷின்கன்சென் புல்லட் ரயிலின் ஆல்ஃபா-X பதிப்பின் சோதனை ஓட்டத்தை தொடங்கியது.





- ஆல்ஃபா-X புல்லட் ரயிலானது (ரயில் பரிசோதனைகளின் முன்னணி நடவடிக்கைகளுக்கான மேம்பட்ட ஆய்வகங்கள்) 2030 ஆம் ஆண்டில் தனது சேவையைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.
- வழக்கமான தடுப்பான்களைத் தவிர ஆல்ஃபா-X ஆனது கூரைமீது அமைந்த காற்று தடுப்பான்களையும் மெதுவாக செல்லும்போது ரயிலின் வேகத்தைக் குறைப்பதற்காக இரயிலின் அருகில் காந்த தட்டுகளையும் பயன்படுத்துகின்றது.

## மணல் சுரங்கங்கள் மீதான UNEP அறிக்கை

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது (United Nations Environment Programme -UNEP) சமீபத்தில் மணல் சுரங்கம் மற்றும் அதன் நுகர்வு குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது “மணல் மற்றும் நிலைத்தன்மை : உலகளாவிய மணல் வளங்களின் சுற்றுச்சூழல் ஆளுமைக்கான புதிய தீர்வைக் கண்டறிதல்” எனும் தலைப்பில் வெளியானது.




- இது வளர்ந்து வரும் மக்கள் தொகையில் மணல் நுகர்வு, தேவைகள் மற்றும் பங்கு ஆகியவற்றின் மாறிவரும் போக்கின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்த அறிக்கையின்படி, ஆறுகள், ஏரிகள் மற்றும் கடற்கரையோரங்களில் மணல் அள்ளுவதன் மூலம் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான பகுதிகளின் பட்டியலில்

சீனா மற்றும் இந்தியா ஆகியவை முன்னணியில் உள்ளன.

- ஐக்கிய நாடுகளின் புவியியல் ஆய்வின்படி உலகளாவிய சிமெண்ட் உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு சீனாவிலும் (58.5%) இந்தியாவிலும் (6.6) நடைபெறுகிறது.

## நேபாளத்திற்கு இரயில் பெட்டிகள்

- நேபாள நாடானது 2 டீசல் - எலக்ட்ரிக் பன்னலகு இரயில் அமைப்புகளை வாங்குவதற்காக கொங்கன் இரயில்வேயுடன் ஒரு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த இரயில்களானது பீகாரில் உள்ள ஜெய்நகர் மற்றும் நேபாளத்தில் உள்ள குர்தா ஆகிய நகரங்களை இணைக்கக்கூடிய 34 கிலோ மீட்டர் நீள இரயில்வே பாதையில் இயக்குவதற்குப் பயன்படுத்தப்பட விருக்கின்றது.
- இந்த இரயில்களானது தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையினால் தயாரிக்கப்பட விருக்கின்றது.

## எடை குறைவான குழந்தைகள்

- "லான்செட் சர்வதேச சுகாதாரம்" என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஒரு புதிய ஆராய்ச்சி ஆய்வின்படி, 20 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் குறைந்த எடையுடன் (2500 கிராம் அல்லது 5.5 பவுண்டுகள்) பிறக்கின்றன.
- உலகில் எடை குறைவாகப் பிறக்கும் குழந்தைகளில் பாதிக்கும் மேல் தெற்கு ஆசியாவில் பிறக்கின்றன. இங்கு 2015 ஆம் ஆண்டில் 9.8 மில்லியன் குழந்தைகள் குறைந்த எடையுடன் பிறந்துள்ளன.
- உலகில் புதிதாகப் பிறக்கும் 2.5 மில்லியன் குழந்தைகளில் 80 சதவிகிதத்திற்கும் அதிகமான குழந்தைகள் குறைந்த எடையினால் ஒவ்வொரு ஆண்டும் இறக்கின்றன.
- கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா 834 புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் நல மையங்களைக் கட்டமைத்ததன் மூலம் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் நலனை மேம்படுத்த சிறப்பாக செயலாற்றுகின்றது.

### *காரணமும் விளைவும்*


- குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே குழந்தை பிறப்பது (கர்ப்ப காலமான 37 வாரங்களுக்கு முன்பு) அல்லது மிகச் சிறியதாகப் பிறப்பது (கருப்பையிலேயே வளர்ச்சி கட்டுப்படுத்தப் படுகின்றது) அல்லது இவை இரண்டுடன் பிறப்பது ஆகியவை குழந்தைகளின் குறைவான எடைக்குக் காரணமாகும்.
- குழந்தைகள் குறைவான எடையுடன் பிறப்பதற்கான காரணங்கள் பின்வருமாறு
  - தாய்மார்களின் வயது (பருவப் பெண்கள் மற்றும் வயதான பெண்கள்)
  - நோய்த் தொற்றுகள், உடற் பருமன் மற்றும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை
  - புகைப்பிடித்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்கு உள்ளாகுதல்
  - பலமுறை கருத்தரித்தல் மற்றும் மருத்துவம் சாராத அறுவைச் சிகிச்சை முறை.
- குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகள் குறைந்த வளர்ச்சி மற்றும் மோசமான வளர்ச்சி பாதிப்புகளுக்கு அதிகம் உட்படுகின்றன.

## கிறிஸ்துவ தேவாலய அழைப்பு

- பிரெஞ்சு அதிபர் இமானுவேல் மெக்ரான் மற்றும் நியூசிலாந்தின் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் ஆகியோர் "கிறிஸ்துவ தேவாலய அழைப்பு" என்ற ஒரு புதிய முன்னெடுப்பைத் தொடங்கவிருக்கின்றனர்.
- இது யாரையும் கட்டுப்படுத்தாத வகையிலான ஒப்பந்தங்களின் தொகுப்பாகும். இந்த ஒப்பந்தத்தில் அரசாங்கக் குழுக்கள் மற்றும் முக்கியமான தொழில்நுட்ப நிறுவனங்கள் கையெழுத்திடவிருக்கின்றன.
- தனியார் நிறுவனங்கள் மற்றும் முக்கியமான அரசாங்கங்கள் ஆகிய இரண்டும் கையெழுத்திடும் இது போன்ற வகையைச் சேர்ந்த முதலாவது ஆவணம் இதுவாகும்.
- இது கையொப்பமிடப்பட்ட நாடுகளை தீவிரவாத ஒழிப்பு, சமூக ஊடகம் மற்றும் இதர ஊடகங்களினால் ஏற்படும் தீவிரவாத பாதிப்பை ஒழிப்பது ஆகியவை குறித்து உறுதிமொழி ஏற்குமாறு கேட்டுக் கொள்ளவிருக்கின்றது.
- இந்தியா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் மசூதித் தாக்குதல்கள் என்பது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் தேதி வெள்ளிக் கிழமைத் தொழுகையின் போது, நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச்சில் உள்ள மசூதிகளில் நிகழ்த்தப்பட்ட 2 தொடர் தீவிரவாதத் தாக்குதல்கள் ஆகும்.

## இந்திய நீதிபதி - பிஜி

- இந்திய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியான மதன் லோகுர் என்பவர் இந்திய உச்ச நீதிமன்றத்திலிருந்து பிஜி நாட்டின் உச்ச நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட முதலாவது நீதிபதியாக உருவெடுத்துள்ளார்.



- இவர் வெளிநாட்டுக் குடிமக்கள் குழுவின் ஒரு பகுதியாக 3 ஆண்டு காலத்திற்கு செயல்படவிருக்கின்றார்.
- இவர் 2005 ஆம் ஆண்டிலிருந்து இந்திய உச்சநீதிமன்றத்தின் சமரசக் குழுவின் ஒரு பகுதியாக செயல்பட்டார்.
- இந்த முயற்சியானது ஏறத்தாழ 2 லட்சம் வழக்குகளை முடித்து வைக்க இருக்கின்றது.


- மேலும் இது குறித்த செய்திகளுக்கு இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/jamaicas-aadhar/.

## அமெரிக்காவில் புலம் பெயர்தல்

- அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தகுதியின் அடிப்படையில் புலம்பெயர்வு அமைப்பை உருவாக்குவதற்கான ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இது மக்களின் வயது, அறிவு, பணி வாய்ப்புகள் மற்றும் உள்ளூர் நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களுக்கு இருப்பிடத்தை அளிக்கின்றது.
- புலம்பெயர்வாளர்கள் அமெரிக்காவில் வாழ அனுமதி அளிக்கப்படுவதற்கு முன் அவர்கள் ஆங்கிலத்தைக் கற்றும் அங்குள்ள பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றும் இருக்க வேண்டும்.
- தற்பொழுதுள்ள புலம்பெயர்வு அமைப்பானது அமெரிக்காவுடன் குடும்ப ரீதியிலான தொடர்பு கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு சாதகமாக விளங்குகின்றது.
- இந்தியத் தொழில்சார் பணியாளர்கள் மற்றும் திறன்மிகு பணியாளர்கள் பொதுவாகப் பயனளிக்கக் கூடிய பச்சை அட்டைகள் அல்லது நிரந்தர சட்டப்பூர்வ இருப்பிடச் சான்றிதழ்களைப் பெறுவதற்காகக் காத்திருக்கின்றனர்.

## முன்னுரிமை அளிக்கப்பட்ட இகாமா – சவுதி குடியுரிமை அட்டை

- முதன்முறையாக சவுதி அரேபியாவின் அமைச்சரவையானது சில குறிப்பிட்ட வெளிநாட்டவர்களுக்கு நிலபுலன் போன்ற சொத்துக்களை வைத்துக் கொள்ள அனுமதியளிக்கும் பொருட்டு நிரந்தர வசிப்பிட உரிமையை வழங்க அனுமதியளித்துள்ளது.
- அவர்கள் சவுதியின் ஆதரவாளர்கள் (காஃபீல்) உதவியின்றி தங்கள் குடும்பத்துடன் வசிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- இந்தப் புதிய முறைமைக்கு “முன்னுரிமை அளிக்கப்பட்ட இகாமா” எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த முன்னுரிமையளிக்கப்பட்ட இகாமா முறைமையின் கீழ் சொந்தமாக உள்ள வசிப்பிடத்தை வருடந்தோறும் புதுப்பிக்க முடியும்.
- இந்தத் திட்டமானது பொதுவாக சவுதி குடியுரிமை அட்டை என அழைக்கப்படுகின்றது.
- 3 வருடங்களுக்கு முன்னதாக இளவரசர் முகமது பின் சல்மானால் 2030-க்கான தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக இது முதன்முறையாக அறிவிக்கப்பட்டது.




## கொசுக்கடி நோய்ப் பாதுகாப்புக் காப்பீடு

- HDFC ERGO என்ற பொதுக் காப்பீட்டு நிறுவனமானது, "கொசுக்கடியால் ஏற்படும் நோய்ப் பாதுகாப்பிற்கான ஒரு காப்பீட்டுத் திட்டத்தினைத்" தொடங்கியுள்ளது.
- இது கொசுவால் மனிதர்களுக்குப் பரவும் பொதுவான நோய்களான டெங்கு காய்ச்சல், மலேரியா, சிக்குன்குனியா, ஜப்பானிய மூளைக் காய்ச்சல், கருங் காய்ச்சல், நிணநீர் யானைக்கால் வியாதி மற்றும் ஜிகா வைரஸ் போன்ற நோய்களை உள்ளடக்கும்.
- தேசிய சுகாதார தரவுதள விவரம் வெளியிட்டுள்ள 2018 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் படி 2009-2017 ஆகிய காலகட்டங்களில் இந்தியாவில் 300 சதவிகித அளவிற்கு டெங்கு காய்ச்சலின் பாதிப்பு கடுமையாக அதிகரித்துள்ளது.

## புதிய வழிநடத்தப்படும் ஏவுகணை அழிப்பான்கள்

- சீனாவின் கடற்படையானது தாலியானில் "சீனாவின் கேடயம்" என்றழைக்கப்படும் இரண்டு புதிய 052D வகை லூயாங் III வகுப்பு வழிநடத்தப்படும் ஏவுகணை அழிப்பான்களை செயல்நிலைப் படுத்தியுள்ளது.
- தாங்ஷான் மற்றும் சுஷோய் எனும் பெயரிடப்பட்ட இவ்விரு கப்பல்களும் இந்த வகுப்பின் முறையே 19வது மற்றும் 20வது கப்பல்களாகும்.
- சீனா தற்போது செயல்பாட்டிலோ அல்லது விரைவில் சேவைக்கு வரும் நிலையிலோ 20 வகையான 052D கப்பல்களைக் கொண்டு இருக்கின்றது.
- இந்த அழிப்பான்களானது வேகமானதாகும். போர்க் கப்பல்களானது நீண்ட தூரத்திற்கு இயக்கக் கூடியதாகும். மேலும் இவற்றை விமானந் தாங்கியுடன் சேர்த்தும் பயன்படுத்தலாம்.
- சீனாவின் வரலாற்றிலேயே முதன்முறையாக சீனாவின் கடற்படையானது தனது கடற்படைத் தளவாட மையத்தை இந்தியப் பெருங்கடலில் உள்ள டிஜிபோட்டி எனும் தீவில் கொண்டுள்ளது.

## அபாயகரமான ஹீவேய் கைபேசிகள்

- பாதுகாப்புக் காரணங்கள் மற்றும் அமெரிக்காவின் ஆணை ஆகியவற்றின் காரணமாக கூகுள் நிறுவனமானது தொலைத் தொடர்பு நிறுவனமான ஹீவேய் நிறுவனத்திற்கு வழங்கி வந்த பொது மக்களுக்கு அல்லாத வன்பொருள் மற்றும் மென் பொருள் சேவைகளை நிறுத்தியுள்ளது.
- இந்நடவடிக்கை புதிய திறன் பேசிகளை உருவாக்குகின்ற மற்றும் பழமையான திறன் பேசிகளை மேம்படுத்துகின்ற சீனாவின் கைபேசி வடிவமைப்பாளர்களை கடுமையாகப் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- சாம்சங் நிறுவனத்திற்கு அடுத்து ஆண்டராய்டு சாதனங்களை வழங்கும் இரண்டாவது முன்னணி நிறுவனம் ஹீவேய் நிறுவனம் ஆகும்.
- இது சீன மக்கள் விடுதலை இராணுவத்தில் பணியாற்றிய ஒரு பொறியாளரான ரென் செங்பெய் என்பவரால் சென்ஹெனில் 1987 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- சீனாவிற்கு வெளியே ஹீவேயின் முதலாவது ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் 1999 ஆம் ஆண்டில் பெங்களூருவில் ஏற்படுத்தப்பட்டது.

## அனுமதியளிப்பு அட்டைகள்

- ஐக்கிய இராஜ்ஜிய அரசாங்கமானது ஐரோப்பிய பொருளாதாரப் பகுதிக்கு (EEA - European Economic Area) வெளியே உள்ள நாடுகளிலிருந்து ஐக்கிய இராஜ்ஜியத்திற்கு வரும் சர்வதேசப் பயணிகளால் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட அனுமதி அட்டைகளை வைத்திருக்க வேண்டும் என்ற நடைமுறையை நீக்கியுள்ளது.
- இது பிரிட்டனிற்குள் எளிமையான முறையில் நுழைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகும்.
- நுழைவின் போது நிரப்பப்பட்ட அனுமதி அட்டைகளை வைத்திருப்பதற்கு இந்தியர்களுக்கும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

***EEA***

- ஐரோப்பிய பொருளாதாரப் பகுதி மீதான ஒப்பந்தமானது 1994 ஆம் ஆண்டு ஜனவரி 01 அன்று நடைமுறைக்கு வந்தது.
- EEA மீதான ஒப்பந்தமானது பின்வருவனவற்றை ஒன்றிணைக்கின்றது.
  - ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள்
  - 3 EEA நாடுகள் : ஐஸ்லாந்து, லிச்செடென்ஸ்டைன், நார்வே
- இந்த நாடுகள் “உள்நாட்டுச் சந்தை” என்றறியப்படும் ஒரு பொதுச் சந்தையை உருவாக்குகின்றன.
- சுவிட்சர்லாந்து EEA ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை.

## தேர்தல் முடிவு - வன்முறை

- 2019 ஆம் ஆண்டு மே 21 அன்று ஜோகோ விடோடோ என்பவர் இந்தோனேஷியாவின் அதிபராக இரண்டாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் தனது

போட்டியாளரான பிரபோலோ சுபியன்டோ என்பவரைத் தோற்கடித்தார்.

- எதிர்க்கட்சியைத் சேர்ந்த ஆதரவாளர்கள் மற்றும் பிரபோலோ சுபியன்டோ ஆகியோர் இந்தத் தோல்வியை ஏற்றுக் கொள்ளாமல் மிகப்பெரிய போராட்டங்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டனர்.
- இந்தோனேஷியாவின் புகழ்பெற்ற பிரிமோப் காவல் துறைப் பிரிவின் தலைமையகத்திற்கு வெளியே மிக மோசமான கலவரம் ஒன்று நிகழ்ந்துள்ளது. இதில் இதுவரை 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 250 நபர்கள் காயமடைந்துள்ளனர்.

## பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்

- பார்சி சமூகமானது, தனது மிகப் பழமையான பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்காக தனது பிரார்த்தனைகளை டிஜிட்டல் மயமாக்கியுள்ளது.
- உலகின் நினைவு போன்ற முன்முயற்சிகளினால் ஈர்க்கப்பட்டு இது ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- உலகின் நினைவு என்ற திட்டமானது 1992 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவினால் தொடங்கப்பட்ட ஒரு சர்வதேச முன்னெடுப்பாகும்.
- இந்தத் திட்டத்தின் நோக்கம் மானிடர்களின் பாரம்பரியத்தை ஆவணப்படுத்திப் பாதுகாப்பதாகும்.
- இது எதிர்காலத் தலைமுறையினர்களுக்காக மதிப்புமிக்க காப்பகங்கள், நூலகத் தொகுப்புகள் ஆகியவற்றைப் பாதுகாக்க குரல் கொடுக்கின்றது.



## பின்தொடர்ந்து துரத்திப் பிடித்தல்

- இந்தியக் கடலோரக் காவல் படையானது குஜராத் கடற்கரையோரத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த மீன்பிடிக் கப்பலைப் "பின்தொடர்ந்து துரத்திப் பிடித்து" அதனைப் பறிமுதல் செய்துள்ளது.
- இது ரூ.600 கோடி ரூபாய் மதிப்பிலான போதை மருந்துகளைப் பறிமுதல் செய்துள்ளது.
- கடல்சார் கோட்பாடான "பின்தொடர்ந்து விரட்டிப் பிடித்தல்" என்ற விதியானது 1982 ஆம் ஆண்டில் கடல் சட்டம் மீதான ஐ.நா. ஒப்பந்தத்தின் (United Nations Convention on the Law of the Sea - UNCLOS) சரத்து 111-ல் விவரிக்கப்பட்டுள்ளது.
- இது தங்கள் நாட்டின் எல்லைப் பகுதியில் மற்றும் நிலப் பகுதிகளில் செயல்பாட்டில் உள்ள

சட்டங்களை மீறுகின்ற வெளிநாட்டைச் சேர்ந்த கப்பல்களைப் பறிமுதல் செய்யும் உரிமையை அங்கீகரிக்கின்றது.

- இது தங்கள் நாட்டின் எல்லைக்கு அப்பால் இருக்கும் எதிரி நாட்டுக் கப்பல்களைப் பறிமுதல் செய்து, அதன் பின்பு அதன் மீதான விசாரணையை மேற்கொள்ள அனுமதிக்கின்றது.

## ஆசிய இரயில் பாதை

- இந்தியாவில் இரயில் பாதைகளை மின்மயமாக்கும் ஒப்பந்தம் ஒன்றில் ஆசிய வளர்ச்சி வங்கியானது (ADB - Asian Development Bank) கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின்படி ABD வங்கியானது 750 மில்லியன் டாலர்களை நீண்ட கால நிதியாக இந்திய இரயில்வே நிதியியல் கழகத்திற்கு (IRFC - Indian Railway Finance Corporation) வழங்கவுள்ளது.
- ADB வங்கியானது தனது உறுப்பு நாடுகளுள் ஒரு நாட்டு அரசாங்கத்தின் உத்தரவாதம் இல்லாமல் அந்நாட்டில் வழங்கும் மிகப்பெரும் கடன் இதுவாகும்.

### *இந்திய இரயில்வே நிதியியல் கழகம்*

- இந்திய இரயில்வே நிதியியல் கழகமானது (IRFC) 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இது இரயில்வே சேவைகளை விரிவுபடுத்துவதற்காக நிதி மூலங்களை உருவாக்குகின்றது.
- இது 1997 ஆம் ஆண்டில் சந்தையிலிருந்து கடன் வாங்கத் தொடங்கியது.
- இது நிதிப் பத்திரங்களின் மூலம், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து நிதியைப் பெறுகின்றது.

## இந்தோ – மியான்மர் கார்பட்


- இந்தியா – மியான்மர் நாடுகளின் ஒருங்கிணைந்த கடல் ரோந்துப் பயிற்சியின் (CORPAT) 80-வது பதிப்பானது மே 20 அன்று அந்தமான் நிக்கோபர் தீவுகளில் துவங்கியது.
- மியான்மர் கடற்படைக் கப்பல்களான UMS கிங் தபின்ஷீவ்ஹிட்டி (773) மற்றும் UMS இன்லே ஆகியவை INS சாராயு என்ற இந்திய கப்பற்படையின் கப்பலுடன் இணைந்து பயிற்சி மேற்கொள்ளவுள்ளன.
- இந்தக் கப்பல்கள் இரு நாடுகளுக்கிடையேயான சர்வதேச கடல்சார் எல்லைப் பகுதியில் ரோந்துப் பயிற்சியில் ஈடுபடவிருக்கின்றன.
- இவை 4 நாட்களுக்கு ஏறத்தாழ 725 கிலோ மீட்டர் தொலைவிற்கு ரோந்துப் பயிற்சியில் ஈடுபடவிருக்கின்றன.
- கார்பெட்டின் (CORPAT) நோக்கங்கள் இரு நாடுகளையும் பாதிக்கும் தீவிரவாதப் பிரச்சனைகளை எதிர்கொள்வது, சட்டவிரோதமாக மீன் பிடித்தல், போதைப் பொருள் கடத்தல், ஆள் கடத்தல், வேட்டையாடுதல் மற்றும் இதர சட்ட விரோத நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தடுப்பது குறித்துப் பயிற்சி மேற்கொள்வதாகும்.

## வணிகமயமாக்கல் - ஆர்க்டிக்

- இரஷ்யா அணு ஆயுதத் திறன் கொண்ட “உரால்” என்ற ஒரு பனிக்கட்டி உடைப்பானை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஆர்க்டிக்கில் உள்ள வணிகம் சார்ந்த வளங்களைக் கைப்பற்றுவதற்காக இரஷ்யாவின் திறனை மேம்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- அர்க்திகா (ஆர்க்டிக்) மற்றும் சிபிர் (சைபீரியா) ஆகிய இரண்டு பனிக்கட்டி உடைப்பான்களும் இரஷ்யாவினால் கட்டமைக்கப்பட்டு வருகின்றன.
- வெப்பமான காலநிலைகளின் சூழலில், இரஷ்யா புதிய உள்கட்டமைப்புகளை உருவாக்கி, தனது துறைமுகங்களை மேம்படுத்தி வருகின்றது.
- வடக்கு கடல் பாதை என்று அழைக்கப்படும் இப்பாதையை ஆண்டு முழுவதுமான கப்பல் போக்குவரத்திற்கு தயாராக இருக்கும் வகையில் இது இப்பாதையின் வழியாக அதிக கப்பற் போக்குவரத்திற்கு வித்திட்டு வருகின்றது.

### வடக்கு கடல் பாதை

- வடக்கு கடல் பாதை என்பது இரஷ்யாவினால் வரையறுக்கப்பட்ட ஒரு கடல் பாதையாகும். இது நோவாயா செம்லியாவிற்கு கிழக்கில் அமைந்துள்ளது. இது குறிப்பாக சைபீரியாவை ஒட்டி, காரா கடலிலிருந்து ரஷ்யாவின் ஆர்க்டிக் கடற்கரையோரமாகப் பயணித்துப் பேரிங் ஜலசந்தியை அடைகின்றது.
- இந்தப் பாதை முழுவதும் ஆர்க்டிக் கடலில் அமைந்துள்ளது. மேலும் இது இரஷ்யாவின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்திற்குள் (EEZ - exclusive economic zone) அமைந்துள்ளது.
- இந்தப் பகுதிகள் ஒரு ஆண்டில் இரண்டு மாதங்கள் மட்டுமே பனிக் கட்டிகள் இல்லாமல் இருக்கும்.
- ஆர்க்டிக் பனிக் கட்டிகள் உருகுதலானது வடக்கு கடல் பாதையின் வணிகப் பயன்பாட்டையும் போக்குவரத்தையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்தக் கடல் பாதை ஆர்க்டிக் கடலில் கனரக கப்பல் போக்குவரத்தை அதிகரிக்கும். மேலும் இது சூயஸ் கால்வாயில் கப்பற் போக்குவரத்தினால் ஏற்படும் நெரிசலைக் குறைக்கும்.
- வணிகத்தில் நிகழும் இந்தத் திட்டமிடப்பட்ட மாற்றங்கள் ஏற்கெனவே அச்சுறுத்தல் நிலையில் உள்ள ஆர்க்டிக்கின் சுற்றுச் சூழலுக்கு மேலும் அழுத்தத்தைக் கொடுக்கும்.



## சாகோஸ் தீவுப் பிரச்சினை

- சாகோஸ் தீவுக் கூட்டங்களிலிருந்து தனது "காலனியாதிக்க ஆட்சியை" ஆறு மாதத்திற்குள் திரும்பப் பெற வேண்டும் என்று ஐக்கிய இராஜ்ஜியத்தை வலியுறுத்தும் ஒரு தீர்மானத்தை ஐ.நா. பொதுச் சபை நிறைவேற்றியுள்ளது.
- சாகோஸ் என்பது ஆங்கில இந்தியப் பெருங்கடல் நிலப் பரப்பில் (British Indian Ocean Territory - BIOT) உள்ள ஒரு அதிகாரப்பூர்வப் பகுதியாகும்.
- மொரீஷியஸ் நாடானது இத்தீவின் மீது தனது இறையாண்மையை மீண்டும் ஏற்படுத்த விரும்புகின்றது.

*பிரச்சினை – வரலாறு*

| காலம் | சாகோஸ் தீவுக் கூட்டங்களை யார் நிர்வகிப்பது |
|---|---|
| 18வது நூற்றாண்டு | சாகோஸ் பிரான்சின் ஒரு பகுதியாகும். இது பிரான்சால் ஆட்சி செய்யப்பட்டது. |
| 1810 | ஐக்கிய இராஜ்ஜியம் மொரீஷியஸைக் கைப்பற்றியது. |
| 1965 | மொரீஷியசின் விடுதலை. ஆனால் ஆங்கில அரசு சட்ட விரோதமாக இதை (BIOT) உருவாக்கியது. |
| 1966 | டீ'கோ கார்சியாவில் அமெரிக்கக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது. (சாகோஸின் மிகப் பெரியத் தீவு) |
| 2017 | ஐக்கிய நாடுகள் தலையீடு. BIOT-ல் பிரிட்டீஷ் ஆதிக்கம் குறித்து சட்டப் பூர்வமாக முடிவு எடுக்குமாறு ICJவைக் கேட்டுக் கொண்டது. |
| 2019 | சாகோஸிலிருந்துப் பிரிட்டிஷ் விலக வேண்டும் என்ற "அறிவுரையை" சர்வதேச நீதிமன்றம் வழங்கியுள்ளது. |

## நஞ்சு முறிப்பு யுக்தி

- உலக சுகாதார நிறுவனம் பாம்புக் கடியினால் ஏற்படும் காயங்கள் மற்றும் உயிரிழப்புகளைக் குறைத்திட ஒரு புதிய யுக்தியை வெளியிட்டு இருக்கின்றது.
- விஷமுறிவு மருந்துகளின் பற்றாக்குறையானது ஒரு உலகளாவிய பொது சுகாதார அவசர நிலையை விரைவில் உருவாக்கும் என்று இது எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.
- 2017 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் பாம்புக் கடியின் நஞ்சுப் பாதிப்பை ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாக வரையறுத்து இருக்கின்றது.
- அந்நிறுவனம் 2030 ஆம் ஆண்டிற்குள்ளாக தகுதியான மருந்து உற்பத்தியாளர்களில் 25 சதவிகித அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்தி இருக்கின்றது.

*இந்தியாவில் சிகிச்சை*

- பல எதிர்ப்புத் தன்மை கொண்ட பாம்பு விஷமெதிர்ப்பு ஊசியானது இந்தியாவில் பாம்புக் கடிகளுக்கான முக்கிய சிசிச்சையாகும்.

- இது நான்கு பொதுவான உயிரினங்களான கண்ணாடி விரியன், சாதாரண நாகம், சாதாரண கட்டு விரியன் மற்றும் சுருட்டை விரியன் ஆகிய அனைத்திற்கும் எதிராக செயல்திறன் உடையதாகும்.
- இந்தியாவில் இருக்கும் ஆறு மிக நஞ்சுடைய பாம்புகளாவன :
    - இந்திய நாகம்
    - ராஜ நாகம்
    - இந்திய குழிவிரியன்
    - கோரிவாலா எனப்படும் கண்ணாடி விரியன்
    - சுருட்டை விரியன்
    - இந்திய விரியன்

## ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு மாநாடு

- 2019 ஆம் ஆண்டு மே 27 அன்று கென்யாவின் நைரோபியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு மாநாட்டுத் திட்டத்தின் (UN-Habitat Assembly) முதலாவதான ஒரு முழு அமர்வுச் சந்திப்பின் போது, அந்த அமைப்பின் நிர்வாக வாரியத்திற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு மாநாட்டுத் திட்டத்தின் ஒரு சிறப்புக் கருத்துருவானது "நகரங்கள் மற்றும் சமுதாயங்களில் சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கான புத்தாக்கம்" என்பதாகும்.
- இந்த அமைப்பானது நைரோபியைத் தலைமையிடமாகக் கொண்டு 1978 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது அனைவருக்கும் இருப்பிடத்தை அளிக்கும் இலக்குடன் சமூகம் மற்றும் சுற்றுச்சூழல்கள் ரீதியில் நீடித்த சிறுநகரங்கள் மற்றும் பெருநகரங்களை ஏற்படுத்துவதை ஊக்குவிக்கக் கூடிய ஐ.நா.வின் ஒரு அமைப்பாகும்.

## கொழும்பு துறைமுகம்

- இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் உள்ள கிழக்கு சரக்கு கொள்கலன் முனையத்தை (ECT - East Container Terminal) கூட்டாக மேம்படுத்த இலங்கை, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகியவை ஒரு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- ECT ஆனது கொழும்புவில் உள்ள சீனாவினால் நிதியளிக்கப்படும் சர்வதேச நிதியியல் நகரத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது. இது துறைமுக நகரம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- முக்கியமான இடத்தில் அமைந்துள்ள ECTயில் நடைபெறும் பரிமாற்றத் தொழிலில் (வணிகப் பரிமாற்றம்) 70 சதவிகிதத்திற்கும் மேல் இந்தியாவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## உருளைக் கிழங்குகள்

- பெப்சிகோ நிறுவனமானது FC5 உருளைக் கிழங்கு வகையைப் பயிரிட்டதற்காக குஜராத்தைச் சேர்ந்த 4 விவசாயிகள் மீது வழக்கு தொடர்ந்துள்ளது.
- பெப்சிகோ நிறுவனமானது காப்புரிமை மீறுதலுக்காக அந்த விவசாயிகள் மீது குற்றம் சுமத்தியுள்ளது.
- பெப்சி நிறுவனமானது தனது லேஸ் (Lay's) என்ற உருளைக் கிழங்கு சார்ந்த நொறுக்குத் தீனிக்காக FC5 வகை உருளைக் கிழங்குகளை பிரத்தியேகமாகப் பயன்படுத்துகின்றது.
- FC5 வகை உருளைக் கிழங்கானது குறைந்த ஈரப்பதத் தன்மையைக் கொண்டிருக்கின்றது.
- குறைந்த ஈரப்பதத் தன்மையானது இந்த வகை உருளைக் கிழங்குகளை நொறுக்குத் தீனிகளாக மாற்றுவதை எளிதாக்குகின்றது.
- PPV & FR (Protection of Plant Variety and Farmers Right) சட்டத்தின் கீழ் இந்தியாவில் பதிவு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட 151 பயிர் வகைகளில் உருளைக் கிழங்கும் ஒன்றாகும்.

### *தாவர வகை மற்றும் விவசாயிகளின் உரிமைகள் பாதுகாப்பிற்கான சட்டம்*

- இந்தச் சட்டமானது 2001 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:
  - தாவர வகைகளின் பாதுகாப்பு
  - விவசாயிகள் மற்றும் வேளாண் பயிர்களை வளர்ப்பவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்
  - புதிய வேளாண் பயிர்களைப் பயிரிடுதல் மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

## வரி ஏய்ப்பு

- வருமான வரித்துறை மற்றும் சரக்கு மற்றும் சேவைகள் வரி அமைப்பு (Goods and Services Tax Network - GSTN) ஆகியவை வரி ஏய்ப்பைக் கண்டறிவதற்காக ஒன்றிணைந்து பணியாற்றத் திட்டமிருக்கின்றன.
- இரண்டு அமைப்புகளின் தகவல்களையும் பொருத்திப் பார்ப்பதற்காக இரு அமைப்புகளையும் அனுமதிப்பதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.
- வருமான வரி மற்றும் GST ஆகியவற்றின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட வருமானத் தொகையானது சோதனை செய்யப்பட்டு சரிபார்க்கப்பட விருக்கின்றது.
- வருமான வரித் துறையின் உத்தரவானது இது போன்ற தகவல்களை GSTN அமைப்புடன் தானியங்குப் பரிமாற்றத்திற்கு அனுமதிக்கின்றது.

### *GSTN*

- GSTN ஆனது இலாப நோக்கில்லா நிறுவனமாக மத்திய மற்றும் மாநில அரசுகளால் கூட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

- இது நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 8-ன் கீழ் ஒரு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- GSTN அமைப்பின் பணி சரக்கு மற்றும் சேவை வரியினை (GST) செயல்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதாகும்.

## தொழில்நுட்ப துணிகள்

- "தொழில்நுட்ப துணிகள்" மீதான தேசிய கருத்தரங்கானது கோயம்புத்தூரில் நடைபெற்றது.
- இந்தக் கருத்தரங்கில், மத்திய ஜவுளித் துறை அமைச்சகமானது தொழில்நுட்ப துணிகள் மீதான இரண்டு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.
- இது தொழில்நுட்பத் துணிகளின் திறனை வெளிக் கொண்டு வருவதையும் அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பனவற்றையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- தொழில்நுட்பத் துணி என்பது அழகியல் சாராத பயன்பாடுகளுக்காகவும் ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டுக்காகவும் உருவாக்கப்பட்ட ஆடை வகையாகும்.
- பின்வருபவை தொழில்நுட்பத் துணிகளில் அடங்கும்

| வகை | பயன்பாடு |
|---|---|
| மருத்துவ ஆடைகள் | உட்பொருத்திகள் |
| வேளாண் ஆடைகள் | பயிர்ப் பாதுகாப்பிற்கான ஆடைகள் |
| புவியியல் ஆடைகள் | நீரினைத் தேக்கி வைக்கும் கரையினை வலுவூட்டுதல் |
| பாதுகாப்பு ஆடைகள் | தீயிலிருந்துப் பாதுகாக்கும் ஆடைகள், தோட்டாக்களிலிருந்துப் பாதுகாக்கும் ஆடைகள், விண்வெளியில் பயன்படுத்தும் ஆடைகள் |
| வாகனத் துறைக்கான ஆடைகள் | விரிப்பான்கள், உட்பூச்சுப் பொருட்கள் |

## ஆலோசகர் - நிதி ஆணையம்

- இந்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகரான டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன் 15-வது நிதிக் குழுவின் (FC - Finance Commission) ஆலோசக ஆணையத்தின் 12வது உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் நிதி ஆணையத்தின் "ஆய்வு வரையறைகள்" தொடர்பான எந்தவொரு குறிப்புகள் அல்லது தகவல்கள் மீது FCக்கு ஆலோசனை வழங்குவார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

### *நிதி ஆணையம்*

- 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் 06 அன்று KC நியோகி தலைமையின் கீழ் முதலாவது நிதி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- இது இந்தியக் குடியரசுத் தலைவரினால் சரத்து 280-ன் கீழ் ஏற்படுத்தப்படுகின்றது.
- FC ஆனது மத்திய, மாநில மற்றும் மாநிலங்களுக்கிடையேயான வரி வருமானப்

பங்கீடுகள் குறித்து முடிவு எடுக்கின்றது.

- இது 5 ஆண்டு காலத்திற்கு அமைக்கப் படுகின்றது.
- இது ஒரு தலைவர் மற்றும் இதர 4 உறுப்பினர்களை உள்ளடக்கிய 5 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.
- 15-வது நிதி ஆணையம் குறித்த தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/15th-finance-commission-constituted/ (தேதி: 08.11.17)

## சச்சாரின்

- இந்தோனேஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சச்சாரின் என்ற பொருளின் மீது எதிர்க் குவிப்புத் தடுப்பு வரியை இந்தியா விதித்துள்ளது.
- இந்த வரியானது அரசினால் இரத்து செய்யப்படவில்லை எனில் 5 ஆண்டு காலத்திற்கு இதே நிலை நீடிக்கும்.
- சச்சாரின் என்பது ஊட்டச் சத்து அற்ற ஒரு இனிப்பு சுவையூட்டியாகும்.
- இது கரும்புச் சர்க்கரைக்கு மாற்றாக கலோரி குறைந்த இனிப்பு சுவையூட்டியாகக் கருதப்படுகின்றது.
- இது பின்வரும் பல்வேறு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றது.
    - உணவு மற்றும் பானம்
    - சுய நலன் சார்ந்த பொருட்கள்
    - இனிப்பு சுவையூட்டிகள்
    - மின்முலாம் பூசுதலை மிளிரச் செய்பவை
    - மருத்துவப் பொருட்கள்

### *எதிர்க் குவிப்புத் தடுப்பு வரி*

- ஒரு பொருளின் எப்பொழுதும் விற்கப்படும் விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அந்தப் பொருளானது ஏற்றுமதி செய்யப்பட்டால் அது குவிப்பு என்று அழைக்கப்படும்.
- இது ஒரு நியாயமற்ற வர்த்தக நடைமுறையாகும்.
- இது சர்வதேச வர்த்தகத்தில் ஒரு பரவலான விளைவை ஏற்படுத்துகின்றது. இது உள்நாட்டு வர்த்தகத்தையும் பாதிக்கின்றது.
- எதிர்க் குவிப்பு என்பது இந்தச் சூழ்நிலையை சரி செய்து நியாயமான வர்த்தகத்தை ஏற்படுத்தும் ஒரு முறையாகும்.
- எதிர்க் குவிப்பு முறையினை நியாயமான போட்டியின் கருவியாகப் பயன்படுத்தப்படுதலானது உலக வர்த்தக நிறுவனத்தினால் அனுமதிக்கப்படுகின்றது.

## தகவல் மைய ஊழல்

- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது மேற்பார்வையிடுதலில் குறைபாட்டுடன் செயல்பட்டமைக்காக ரூ.1000 கோடியை அபராதத் தொகையாக 45 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று தேசியப் பங்கு பரிவர்த்தனை அமைப்பிற்கு (NSE - National Stock Exchange of India) உத்தரவிட்டுள்ளது.
- NSE தகவல் மைய வசதியின் கீழ், இடைத் தரகர்கள் தங்களது தகவல் சேவையகத்தை (Server) பரிவர்த்தனை தகவல் மையத்தில் வைத்துக் கொள்ளலாம்.
- ஆனால் பரிவர்த்தனை தகவல் சேவையகத்தை அணுகுவதற்கு சில இடைத் தரகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.
- இந்த நியாயமற்ற நடைமுறையின் காரணமாக ஆயிரம் கோடிக்கு மேல் அவர்கள் இலாபம் அடைந்துள்ளனர்.

## ஸ்விகி மற்றும் சோமாட்டோ

- இடப்பெயர்வு தொழிலாளர்களுக்கான ஒரு முன்னணி நகரமாக தில்லி உருவெடுத்துள்ளது. இவர்கள் இந்தியாவின் தற்காலிக (நிலையற்ற - gig economy) பொருளாதாரத்துடன் இணைந்துள்ளனர். இதில் பெங்களூரு நகரம் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2018 – 19 ஆம் நிதியாண்டின் கடைசி 6 மாதத்தில் தில்லி மற்றும் பெங்களூரு ஆகிய நகரங்கள் முறையே 5,60,600 மற்றும் 2,52,300 மக்களை தனது நிலையற்றப் பொருளாதாரத்தில் இணைத்துள்ளது.
- நிலையற்றப் பொருளாதாரமானது உணவு விநியோக நிறுவனங்களான ஸ்விகி, சோமாடோ மற்றும் வாடகை மகிழுந்து நிறுவனங்களான உபேர், ஒலா ஆகியவற்றினால் நடைபெறுகின்றது.

### *பணிகள்*

- நிலையற்றப் பொருளாதாரத்தில் தற்காலிக மற்றும் நெகிழ்வுத் தன்மை கொண்ட பணிகள் ஆகியவை பொதுவான பணிகளாகும்.
- நிறுவனங்கள் முழு நேரப் பணியாளர்களுக்கு மாற்றாகத் தனித்து செயல்படக் கூடிய ஒப்பந்ததாரர்கள் மற்றும் பகுதி நேரப் பணியாளர்களை அதிக அளவில் பணியமர்த்துகின்றன.
- பணியாளர்கள் சிறிய அளவிலான பணிப் பாதுகாப்பு மற்றும் குறைந்த அளவிலான பயன்கள் ஆகியவற்றுடன் பணியாற்றுகின்றனர்.
- இது மிக அரிதாகப் பணியிடம் மாறுகின்ற மற்றும் எதிர்கால வாழ்க்கை குறித்து கவனம் செலுத்தாமல் இருக்கின்ற முழு நேரப் பணியாளர்களின் பாரம்பரியப் பொருளாதாரத்தை வலுகுன்றச் செய்கின்றது.

## மிளகாய்த் தூள்

- இந்தியாவைச் சேர்ந்த மிளகாய்களை சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒரு நடைமுறை ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

- மிளகாய்த் தூள் என்பது மிளகாயிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்ட பின்பு மீதமிருக்கும் பொருளாகும்.
- இது மிளகாய்க் குழம்பு மற்றும் இதரவற்றை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படும் ஒரு மூலப் பொருளாகும்.
- மிளகாயை உற்பத்தி செய்தல், நுகர்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றில் உலகின் மிகப்பெரிய நாடாக இந்தியா விளங்குகின்றது.
- மிளகாயானது இந்தியாவிலிருந்து அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படும் ஒரு நறுமணப் பொருளாகும்.
- சீனா ஏற்கனவே பின்வரும் இந்திய உணவுத் தயாரிப்புகளை தங்களது சந்தையில் விற்பனை செய்ய அனுமதியளித்துள்ளது.

| பொருள் | ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு |
|---|---|
| மாம்பழம் | 2003 |
| பாகற்காய் | 2005 |
| திராட்சைப் பழம் | 2005 |
| கடுகு எண்ணெய் உணவு | 2015 |
| பாசுமதி அரிசி | 2006 |
| பாசுமதி மற்றும் பாசுமதியற்ற அரிசி | 2018 |
| மீன் உணவு / எண்ணெய் | 2018 |
| புகையிலை இலைகள் | 2019 |
| மிளகாய்த் தூள் உணவு | 2019 |

## பிரிவு நடவடிக்கை வழக்கு

- தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாய (2-வது திருத்தம்) விதிகள், 2019-ஆனது மத்திய பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டிருக்கின்றன.
- இது பிரிவு நடவடிக்கை வழக்குகளை (CAL - Class Action Lawsuits) பதிவு செய்வதற்குத் தேவையான வரம்புகளைக் குறிப்பிட்டு இருக்கின்றது.
    - நிறுவனத்தில் உள்ள உறுப்பினர்களில் குறைந்தது 5 சதவிகிதம் அல்லது 100 உறுப்பினர்கள் இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ அவற்றை எடுத்துக் கொள்ளலாம்.
    - இதே விதிகள் நிதி வைப்பாளர்கள் மற்றும் வைப்புத் தொகையை எடுக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் பொருந்தும்.

***CAL என்பது என்ன?***

- CAL என்பது அதே போன்று அதே எதிர்வாதியினால் பாதிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் தொடர்புடையதாக இருக்கும் போது தாக்கல் செய்யப்படும் வழக்காகும்.
- ஒரு நிறுவன விவகாரங்களின் நடத்தை மற்றும் மேலாண்மை ஆகியவை ஒருதலைப் பட்சமாக இருப்பதாக உணர்ந்தால், முதலீட்டாளர்கள் CAL-ஐப் பதிவு செய்ய முடியும்.
- உதாரணம் : 2006-ஆம் ஆண்டில் அமெரிக்க ஆற்றல் நிறுவனமான என்ரோனைச் சேர்ந்த நிர்வாகிகளால் மேற்கொள்ளப்பட்ட ஊழலானது அதன் திவால் தன்மை மற்றும் பங்குதாரர்களின் செல்வ இழப்புக்கு காரணமாக அமைந்தது.
    - எனவே, முதலீட்டாளர்கள் அந்த நிறுவனத்திற்கு எதிராக CAL-ஐப் பதிவு செய்து $7.2 பில்லியன் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றனர்.

## WTO அமைச்சரவை நிலையிலான சந்திப்பு

- 16 வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் 6 மிகக் குறைந்த வளர்ச்சி பெற்ற நாடுகளை (Least Developed Countries - LDCs) சேர்ந்தவர்களின் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO - World Trade Organisation) அமைச்சரவை நிலையிலான சந்திப்பானது இந்தியாவினால் 2019 ஆம் ஆண்டு மே 13-14 ஆம் தேதிகளில் புது தில்லியில் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இந்தச் சந்திப்பின் போது முக்கியமான பிரச்சனைகள் விவாதிக்கப்பட விருக்கின்றன.
    - WTO-ன் மேல்முறையீட்டு அமைப்பிற்கான உறுப்பினர்களின் நியமனத்தில் உள்ள சிக்கல்கள்
    - WTO சீர்திருத்தங்கள்
- ஒரு நாடானது மொத்த தேசியத் தனிநபர் வருமானம், மனித சக்திக் குறியீடு மற்றும் பொருளாதார மந்தநிலைக் குறியீடு ஆகியவற்றின் அடிப்படையில் LDC ஆக அறிவிக்கப்படுகின்றது.


## டிஜிட்டல் தாக்கம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான செயல்முறைகளை எடுத்துக் காட்டும் வகையில் "இந்தியாவின் பண வழங்கீடுகள் மற்றும் தீர்வு அமைப்புகளுக்கான" தனது தொலைநோக்கு ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- இந்தத் தொலைநோக்கு ஆவணத்தின் முக்கியக் கருத்துருவானது, "விதிவிலக்கான மின்னணு பணவழங்கீடுகள் அனுபவத்தை மேம்படுத்துதல்" என்பதாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது பணத்தை அதிகம் பயன்படுத்தாமல் டிஜிட்டல் முறையை அதிகம் பயன்படுத்தும் ஒரு சமூக நிலையை அடைவதற்குத் திட்டமிட்டுள்ளது.
- இது தொலைநோக்குப் பார்வைக் காலத்தில் யுபிஐ/ஐஎம்பிஎஸ் போன்ற பணவழங்கீடுகள் அமைப்புகளில் சராசரி வருடாந்திர வளர்ச்சி 100 சதவிகிதம் அடைவதையும் NEFT மூலம் 40 சதவிகிதம் பணப் பரிமாற்றம் நிகழ்வதையும் எதிர்பார்க்கின்றது.

- இது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் 2,069 கோடி டிஜிட்டல் பணப் பரிமாற்றங்களானது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 8,707 கோடியாக அதிகரிக்கும் என்று கணித்துள்ளது.
- பணவழங்கீட்டு அமைப்புகள் தொலைநோக்குப் பார்வை – 2021 ஆனது ஒரு குறிப்பிட்ட செயல் திட்டங்களையும் 12 குறிப்பிட்ட தீர்வுகளையும் கொண்டுள்ளது.

## பதிவு செய்யாமலிருக்கும் வாராக் கடன்

- யூனியன் பேங்க் ஆப் இந்தியா, இந்தியன் வங்கி மற்றும் சென்ட்ரல் வங்கி ஆகிய மூன்றும் “வாராக் கடன்” குறித்த மதீப்பீட்டில் “டைவர்ஜன்ஸ்” (விலகல்) நிலையில் உள்ளதாக அறிவித்து இருக்கின்றன.
- இந்திய ரிசர்வ் வங்கி எப்பொழுது பின்வருவனவற்றை வங்கிகளிடம் கண்டகின்றதோ அப்போது “டைவர்ஜன்ஸ்” நிகழும்.
  - துல்லியமான மதிப்புடன் இல்லாமல் அதைவிடக் குறைவான மதிப்புடன் பதிவு செய்யப்பட்ட வாராக் கடன்கள்
  - பதிவு செய்யப்படாத வாராக் கடன்கள்
- இந்த வங்கிகள் இழப்பைச் சந்தித்துள்ளதாக அறிக்கை அளித்ததன் காரணமாக RBI ஆனது அவ்வங்கிகளின் 2018-19 ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டு அறிக்கையின் போது “டைவர்ஜன்ஸ்” நிலையைக் கண்டறிந்துள்ளது.
- 2017-18 ஆம் நிதியாண்டில் இந்த வங்கிகள் பழமையான வாராக் கடன்களுக்காக “அதிக அளவு நிதிகளை ஒதுக்கியதன்” காரணமாக இந்த இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.





### *ஒதுக்கீடுகள் என்றால் என்ன?*

- கொடுத்த கடன் திருப்பி செலுத்தப்படா விட்டால், வங்கியானது இந்த நிதியை இலாபம் போன்ற பிற ஆதாரங்களில் இருந்து மீட்டெடுக்க வேண்டும்.

- வங்கிகள் மேற்கூறியவாறான இழப்பை ஈடுகட்டுவதற்காக வருகின்ற இலாபத்தின் ஒரு பகுதி நிதியை ஒதுக்கி வைத்தல் என்பது ஒதுக்கீடுகள் (Provisions) எனப்படும்.
- வங்கிகள் இழப்பிலிருந்துத் தப்பிப்பதற்காக ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்றன.

## உலக வர்த்தக அமைப்பு - குளறுபடிகள்

- உலக வர்த்தக அமைப்பின் (WTO - World Trade Organizations) "பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் அமைப்பில்" நிகழும் குளறுபடிகளைத் தடுப்பதற்கான வழிகள் குறித்து விவாதிப்பதற்காக 20ற்கும் மேற்பட்ட வளர்ந்து வரும் நாடுகள் புது தில்லியில் சமீபத்தில் சந்தித்தன.




- WTO மேல்முறையீட்டு அமைப்பு என்பது 7 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிலைக் குழுவாகும்.
- WTO உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட வர்த்தகம் தொடர்பான பிரச்சனைகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் மேல்முறையீடுகளை இந்த அமைப்பு விசாரிக்கின்றது.
- WTOவின் பிரச்சனைக்குத் தீர்வு காணும் நடைமுறையானது சர்வதேச வர்த்தகம் சீராக நடைபெறுவதற்கு முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.
- கடந்த 2 ஆண்டுகளாக தேவைப்படும் 7 உறுப்பினர்களுக்குப் பதிலாக இந்த அமைப்பின் உறுப்பினர் அமைப்பில் உறுப்பினர்கள் எண்ணிக்கை மூன்றாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- இதற்குக் காரணம் WTO ஆனது தனக்கு எதிராகச் செயல்படுகின்றது என்று அமெரிக்கா நம்புகின்றது. எனவே அமெரிக்கா இந்த அமைப்பின் நியமனங்களைத் தடை செய்துள்ளது.
- இந்தியா இதுவரை 54 பிரச்சினைகளில் நேரடியாகக் கலந்து கொண்டுள்ளது. 158 பிரச்சினைகளில் இந்தியா மூன்றாவது நபராகப் பங்கு பெற்றுள்ளது.

## இந்திய ரிசர்வ் வங்கி – புதிய பணி நிலைகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI - Reserve Bank of India) "மேற்பார்வையாளர்கள் கல்லூரி" என்றறியப்படும் ஒரு புதிய நிறுவனத்தை மும்பையில் அமைக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.

- இது நிதியியல் அமைப்பில் மேற்பார்வையாளர் நிலையில் உள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்கி, அவர்களைக் கட்டமைக்கும்.
- இந்த நிறுவனம் RBI பணியாளர்களுக்காக 1 வருட சிறப்புப் பயிற்சித் திட்டத்தை அளிக்கவிருக்கின்றது.
- இந்த நிறுவனத்தில் பயிற்சி பெறும் அதிகாரிகள் தொழில்நுட்பத்தில் நிகழும் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் மறு சான்றிதழைப் பெற வேண்டும்.

## மூன்றாவது நபர் பொறுப்பு

- காப்பீட்டு ஒழுங்குமுறை அமைப்பான ஐஆர்டிஏஐ (IRDAI - Insurance Regulatory and Development Authority of India) ஆனது மகிழுந்துகள், இரு சக்கர வாகனங்கள், பள்ளிப் பேருந்துகள் மற்றும் சரக்குந்துகள் ஆகியவற்றிற்கான மூன்றாம் நபருக்கான வாகன காப்புறுதித் தொகையை அதிகரிப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது.
- வாகனக் காப்பீட்டுக் கொள்கையானது முக்கியமான இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன
    - மூன்றாம் நபர் பொறுப்பு
    - சொந்தச் சேதங்கள்
- சேதங்களிலிருந்து ஏற்படும் கடன்கள் மூன்றாம் நபருக்குப் பாதிப்பை ஏற்படுத்தினால், அவை மூன்றாம் நபர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ளடங்கும்.
- இது வாகனங்களின் சேதம் மற்றும் அவற்றின் உரிமையாளர் ஆகியோரை உள்ளடக்காது.

## முதன்மை இடர்பாட்டு அதிகாரி

- ரூ.5000 கோடிக்கும் மேல் சொத்துகளை வைத்துள்ள வங்கி சாரா நிதியியல் நிறுவனங்கள் ஒரு முதன்மை இடர்பாட்டு அதிகாரியை (CRO - chief risk officer) நியமிக்க வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.
- சில பெரிய வங்கி சாரா நிதியியல் நிறுவனங்கள் (NBFC - non-banking financial companies) பெறப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பது நிதி நெருக்கடிக்கு இட்டுச் செல்லும். (உதாரணம்) ஐஎல் மற்றும் ப்எஸ் (IL&FS) நிறுவனத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடி.
- முதன்மை இடர்பாட்டு அதிகாரியின் தலையாய பணி இடர்பாடுகளை அடையாளம் காணுதல், ஆய்வு செய்தல் மற்றும் அவற்றைத் தடுத்தல் ஆகும்.
- இவர் NBFC-ன் படிநிலையில் மூத்த அதிகாரியாக இருக்க வேண்டும். இவர் இடர்பாட்டு மேலாண்மைத் துறையில் போதுமான தொழில்சார் தகுதி அல்லது அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

## மசாலா பத்திரங்கள்

- கேரள கட்டமைப்பு முதலீட்டு நிதி வாரியம் (Kerala Infrastructure Investment Fund Board - KIIFB) அயல்நாட்டுச் சந்தையில் இருந்து நிதியினைப் பெறுவதற்காக மசாலாப் பத்திரங்களை வெளியிட்டுள்ளது.

- மசாலாப் பத்திரங்களுக்காக சந்தைச் செயல்பாடுகளில் பங்கெடுத்துள்ள ஒரு முதலாவது இந்திய மாநிலமாக கேரளா உருவெடுத்துள்ளது.
- மசாலாப் பத்திரம் என்பது ஒரு
  - ரூபாய் அடிப்படையிலான பத்திரம்
  - அமெரிக்க டாலரில் திருப்பிச் செலுத்தக் கூடியது
  - ஆங்கிலச் சட்டத்திற்கு உட்பட்டது.
- ரூபாய் அடிப்படையிலான பத்திரங்கள் என்பது வெளிநாட்டுச் சந்தையில் இருந்து நிதியினை இந்திய ரூபாயில் பெறுவதினைக் குறிக்கின்றது.
- கடந்த ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உள்கட்டமைப்புகளை மறுசீரமைப்பதற்காக இந்தப் பத்திரங்களிலிருந்து வரும் நிதியினைப் பயன்படுத்த கேரளா முடிவு செய்துள்ளது.
- KIIFB ஆனது 312 மில்லியன் டாலர் (ரூ.2150 கோடி) மதிப்பிலான நிதியினைப் பெறுவதற்காக 17-05-2019 ஆம் தேதியன்று இலண்டன் பங்குச் சந்தையில் மசாலாப் பத்திரங்களைப் பட்டியலிட்டுள்ளது.
- இலண்டன் பங்குச் சந்தை உலகளவில் மசாலாப் பத்திரங்களின் ஒரு மிகப்பெரிய மையமாக விளங்குகின்றது. இது தனது சந்தையில் இதே போன்ற ரூபாய் அடிப்படையிலான 49 மசாலாப் பத்திரங்களைப் பட்டியலிட்டுள்ளது.

## புள்ளியியல் துறை

- தேசிய ஜனநாயக் கூட்டணி அரசாங்கம் மே 23-ம் தேதியிட்ட ஒரு ஆணையில் மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சத்தின் கீழ் மத்திய புள்ளியியல் நிறுவனத்துடன் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தை இணைப்பதாக அறிவித்து இருக்கின்றது.
- ஒரு புதிய தேசிய புள்ளியியல் நிறுவனம் அமைக்கப்படுவதற்காக தேசிய மாதிரி ஆய்வு நிறுவனமும் மத்திய புள்ளியியல் நிறுவனமும் இணைக்கப்படும்.
- முன்மொழியப்பட்டுள்ள இந்தப் புதிய நிறுவனம், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறையின் செயலாளரால் தலைமை தாங்கப்படும்.
- மத்திய புள்ளியியல் நிறுவனம் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி, தொழிலக உற்பத்திக் குறியீடு போன்ற பொருளாதாரக் குறியீடுகள் மீதான தரவுகளை அளிக்கின்றது.
- தேசிய மாதிரி ஆய்வு நிறுவனம் நுகர்வோர் செலவு மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற விவகாரங்கள் மீது ஆய்வு நடத்துகின்றது.
- தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தால் அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பின்மை மீதான சமீபத்திய தரவுகளானது மோடி அரசால் பொது வெளியில் இன்னும் வைக்கப்படவில்லை.

## பில்லியன் மின்னணு வணிக நடவடிக்கைகள்

- இந்த நிதியாண்டு நிறைவு பெறும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 40 பில்லியன் டிஜிட்டல் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.




- 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கடந்த நிதியாண்டின் முடிவில், 30 பில்லியன் டிஜிட்டல் வணிக நடவடிக்கைகள் என்ற இலக்கு இருந்தது. இந்த இலக்கில் 90 முதல் 95 சதவீகிதம் வரை பூர்த்தி செய்யப்பட்டு விட்டன.
- டிஜிட்டல் பண வழங்கீடுகளின் வெற்றிக்கான முக்கியக் கூறாக கைபேசி பணப்பைகள் மற்றும் ஒருங்கிணைந்த பணவழங்கீட்டு இடைமுகம் ஆகியவை கருதப்படுகின்றன.

## நிகழ்நேர பெருந்திரள் தீர்வு

- இந்திய ரிசர்வ் வங்கி அதிக அளவிலான நிதிப் பரிமாற்றங்களை ஏற்படுத்துவதற்காக நிகழ்நேர பெருந்திரள் தீர்வின் (Real Time Gross Settlement - RTGS) மூலம் வாடிக்கையாளர்களின் நிதிப் பரிமாற்றங்களுக்கான கால அளவை நீட்டித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜுன் 01 ஆம் தேதியிலிருந்து நிதிப் பரிமாற்றத்திற்கான நேரம் ஒன்றரை மணி நேரம் நீட்டிக்கப்படும். அதாவது மாலை 4.30 மணியிலிருந்து 6.00 மணி வரை அது நீட்டிக்கப்படும்.
- இங்கு நிகழ் நேரம் என்பது வங்கிப் பணியாளர்கள் தாங்கள் பெற்ற அறிவுறுத்தல்களை செயல்படுத்துவதைக் குறிக்கின்றது.
- இங்கு "பெருந்திரள் தீர்வு" என்பது நிதிப் பரிமாற்ற செயல்முறைகள், அறிவுறுத்தல்கள் ஆகியவை தேசிய மின்னணு பணப் பரிவர்த்தனை (National Electronic Fund Transfer – NEFT) போன்று தொகுப்புகளாக அல்லாமல் தனித்தனியாக நிகழ்வதைக் குறிக்கின்றது.
- RTGS திட்டத்தின் வழியாக பரிமாற்றப்படும் நிதிக்கு எதுவும் "உச்ச வரம்பு" நிர்ணயிக்கப்படவில்லை.

## எஸ்சி / எஸ்டி தொழில்முனைவோர்கள்

- 2019 – 20 ஆம் ஆண்டிற்காக தேசிய சிறு தொழிற்சாலைகள் கழகம் (NSIC - National Small Industries Corporation) மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவன அமைச்சகத்துடன் (MSME – Ministry of Micro, Small and Medium Enterprise) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம் பொதுத் துறைக் கொள்முதலில் எஸ்சி/எஸ்டி பிரிவினரின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் அவர்களின் தொழில்முனைவுக்கான வசதிகளை அளிப்பதாகும்.

- NSIC என்பது மினி ரத்னா என்ற பிரிவின் கீழ் உள்ள ஒரு இந்திய அரசு நிறுவனமாகும்.
- இது 1955 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது MSME அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

## உலகப் பொருளாதார போட்டித் திறன் தரவரிசை 2019 - IMD

- இந்த ஆண்டிற்கான பொருளாதார போட்டித்திறன் தரவரிசையில் மிகவும் போட்டிமிக்க பொருளாதாரமாக இந்தியா ஒரு இடம் முன்னேறி 43-வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தத் தரவரிசை சர்வதேச மேலாண்மை வளர்ச்சி நிறுவனத்தினால் (International Institute for Management Development) ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது.

| India's Rank | Year |
|---|---|
| 2019 | 43 |
| 2018 | 44 |
| 2017 | 45 |
| 2016 | 41 |

IMD REAL LEARNING. REAL IMPACT | 30 YEARS IMD WORLD COMPETITIVENESS CENTER

**IMD World Competitiveness ranking 2019**
**One Year Change**

| 2019 | Country | 2018 | Change |
|---|---|---|---|
| 1 | Singapore | 3 | +2 ↑ |
| 2 | Hong Kong SAR | 2 | - - |
| 3 | USA | 1 | -2 ↓ |
| 4 | Switzerland | 5 | +1 ↑ |
| 5 | UAE | 7 | +2 ↑ |
| 6 | Netherlands | 4 | -2 ↓ |
| 7 | Ireland | 12 | +5 ↑ |
| 8 | Denmark | 6 | -2 ↓ |
| 9 | Sweden | 9 | - - |
| 10 | Qatar | 14 | +4 ↑ |

- இந்தத் போட்டித்திறன் தரவரிசையில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- சிங்கப்பூர் முதல் இடத்தினைப் பெறுவதன் மூலம் ஹாங்காங் (2) மற்றும் அமெரிக்கா (3) ஆகிய நாடுகளைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது.
- இந்தப் பட்டியலில் வெனிசுலா கடைசி இடத்தில் உள்ளது.

## அந்நிய நேரடி முதலீடு - இந்தியா

- தொழிற்துறை ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வணிகத் துறையின் (Department for Promotion of Industry and Internal Trade - DPIIT) சமீபத்திய அறிக்கையின்படி, கடந்த ஆறு ஆண்டு காலத்தில் இல்லாத அளவிற்கு இந்தியாவில் 2018-19 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீடு (FDI - Foreign Direct Investment) முதன்முறையாக குறைந்துள்ளது.
- தொலைத் தொடர்பு, மருந்துகள் மற்றும் மின்சாரம் போன்ற துறைகளில் வெளிநாட்டு நிதி முதலீடுகள் குறைந்துள்ளன.
- இந்த ஆண்டில் மொரீஷியஸ் நாட்டிலிருந்து இந்தியாவிற்குள் வரும் அந்நிய நேரடி முதலீட்டை விடவும் இரண்டு மடங்கு அதிக அந்நிய நேரடி முதலீடுகள் சிங்கப்பூர் நாட்டில் இருந்து பெறப்பட்டுள்ளன.
  - இதற்கு முன் மொரீஷியஸ் முதலிடத்தில் இருந்தது.
- ஜப்பான், நெதர்லாந்து, ஐக்கிய இராஜ்ஜியம், அமெரிக்கா, ஜெர்மனி, சைப்ரஸ், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் இந்தியாவின் பிற முக்கிய முதலீட்டாளர்களாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஷீபாக்ஸ் செயற்கைக் கோள்

- லின்க் ஸ்பேஸ் என்ற சீனா ஸ்டார்ட் அப் நிறுவனத்தைச் சேர்ந்த பொறியாளர்கள் 8 மீட்டர் உயரமுடைய, மீண்டும் பயன்படுத்தக் கூடிய ஒரு விண்வெளிக் கலனை கடந்த வாரம் பரிசோதித்தனர்.
- இந்த விண்வெளிக் கலனைப் பயன்படுத்தி மிகச் சிறிய, விலை குறைந்த ஷீபாக்ஸ் எனும் செயற்கைக் கோளை விண்ணுக்கு அனுப்ப அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.
- இதன் எடை 10 கிலோ கிராமிற்கு குறைவாக இருப்பதால் ஷீபாக்ஸ் (காலனிப்பெட்டி) என்று இது அழைக்கப்படுகின்றது.
- இது போன்ற ஷீபாக்ஸ் செயற்கைக் கோள்களுக்கு அதிக தேவை இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.
- இவற்றை விமானங்களுக்கான அதிவேக இணைய வசதி, நிலக்கரி ஏற்றுமதிகளை கண்காணித்தல், பள்ளிகள்/கல்லூரிகள் நடத்தும் பரிசோதனைகள் போன்ற சேவைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

## டியான்ஹூ II-01 செயற்கைக் கோள்கள்

- சீனாவானது இரண்டு டியான்ஹூ II-01 செயற்கைக் கோள்களை தனது Base 25 என்றறியப்படும் தையூயான் செயற்கைக் கோள் ஏவு தளத்திலிருந்து செலுத்தியுள்ளது.
- அறிவியல் ஆய்வுகள், நில வளங்கள், புவியியல் ஆய்வு மற்றும் வரைபடமிடல் ஆகியவை இந்த செயற்கைக் கோள்களின் முக்கிய நோக்கங்களாகும்.


- இந்தச் செயற்கைக் கோள்களானது சாங் செங் 4B என்றறியப்படும் லாங் மார்ச் 4B (Long March 4B) என்ற செலுத்து வாகனம் மூலம் செலுத்தப்பட்டது.
- இது லாங் மார்ச் 4B (Long March 4B) செலுத்து வாகனத்தின் 303வது வெற்றிகரமான செலுத்தல் ஆகும்.

## 99942 அபோபிஸ் குறுங்கோள்

- தற்பொழுது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆபத்தை ஏற்படுத்தும் திறனுள்ள 2000 குறுங்கோள்களில் 99942 அபோபிஸ் குறுங்கோளும் ஒன்றாகும்.
- இது 2004 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது பூமிக்கு அருகில் உள்ள ஒரு குறுங்கோளாகும்.
- எனவே, அதன் சுற்றுப் பாதையானது இந்தக் குறுங்கோளைப் பூமிக்கு அருகில் கொண்டு வரும்.
- 2029 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று பூமியின் பாதையில் இது வருவதற்கு 2.7 சதவிகித வாய்ப்புகள் உள்ளன.
- இந்த வாய்ப்பானது தொரினோ அளவுகோலில் அதிக மதிப்பீட்டினைப் பெற்றுள்ளது.

### *தொரினோ அளவுகோல்*


- தொரினோ அளவுகோல் என்பது குறுங்கோள்கள் மற்றும் வால் நட்சத்திரங்கள் போன்ற பூமிக்கு அருகில் உள்ள பொருட்கள் தாக்குவதற்கான ஆபத்தினை வகைப்படுத்தும் முறையாகும்.




- இந்த அளவுகோலில் 0 முதல் 10 வரையில் மதிப்புகள் உள்ளன.
- மிகவும் அபாயகரமான நிகழ்வுகள் மிக அதிக தொரினோ அளவுகோல் மதிப்பினால் குறிக்கப்படுகின்றன.

## விமானத்திற்குள் இணையச் சேவை வழங்கப்படல்

- அடுத்த மூன்று மாதங்களில் சர்வதேச விமான நிறுவனங்கள் இந்திய வான்பகுதியில் பறக்கும் போது பயணிகளுக்கு இணையச் சேவையை அளிக்கவிருக்கின்றன.
- உள்நாட்டு விமானங்கள் இதைச் செயல்படுத்துவதற்கு கூடுதல் கால அவகாசம் எடுத்துக் கொள்ளும்.




- 3000 மீட்டர் உயரத்திற்கு மேல் விமானம் சென்ற பின்பு புவிநிலைத் துணைக்கோள் மூலம் இணையச் சேவையைப் பெறும்.
- இந்தச் செயற்கைக் கோள்கள் விமானத்தின் அலை வாங்கிக்கு நேரடியாக சமிக்ஞைகளை அனுப்பும்.
- இந்தியாவின் இன்சாட் செயற்கைக் கோள் மட்டுமே இந்தப் பயன்பாட்டிற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.
- செயற்கைக் கோள்களின் மூலம் இணையத்தின் நேரடி தொடர்பானது பின்வருவனவற்றின் மூலம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.
    - Ku கற்றை – 12-18 ஜிகாஹெர்ட்ஸ் (GHz)
    - Ka கற்றை – 26-40 ஜிகாஹெர்ட்ஸ் (GHz).

## ஆதித்யா L1

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (Indian Space Research Organization - ISRO) அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் சூரியனை ஆய்வு செய்வதற்காக “ஆதித்யா L1” என்ற பெயரிடப்பட்ட ஒரு விண்வெளிக் கலனை விண்ணுக்கு அனுப்பத் திட்டமிட்டிருக்கின்றது.
- சூரியனை ஆய்வு செய்வதற்கான இந்தியாவின் முதலாவது திட்டம் இதுவாகும்.
- இது சூரிய-புவி அமைப்பின் லெக்ராஞ்சியன் (L1) என்ற புள்ளியைச் சுற்றியுள்ள சுற்று வட்டப் பாதையில் இணைக்கப்படவிருக்கின்றது.
- L1 சுற்று வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்ட செயற்கைக் கோள்களால் மட்டுமே கிரகணங்கள் இன்றி சூரியனைத் தொடர்ந்து காண முடியும்.

## இஸ்ரோவின் ரைசாட் – 3BRI

- இஸ்ரோவானது அதன் ரேடார் வரைபட செயற்கைக் கோளான ரைசாட் - 2BRI ஐ ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து செலுத்தவுள்ளது.
- இந்த ஏவுதலானது ரைசாட் - 2A க்குப் பிறகு 2020 ஆம் ஆண்டில் செலுத்துவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது முன்கூட்டியே செலுத்தப்படவுள்ளது.
- தொலையுணர் செயற்கைக் கோளான ரைசாட் ஆனது சிந்தெடிக் அபெர்ச்சர் ரேடாரைப் பயன்படுத்தி அனைத்து காலநிலைகளிலும் கண்காணிப்பை வழங்குகின்றது.
- ரைசாட் செயற்கைக் கோள்களானது இஸ்ரோவின் அனைத்து காலநிலையிலும் கண்காணிக்கும் தன்மையுடைய முதலாவது செயற்கைக் கோள்களாகும்.
- இவை பாதுகாப்புப் படைகளுக்கு எல்லைப் பகுதி ஊடுருவல்களை கண்டறிய இரவு மற்றும் பகல் நேரங்களில் பூமியின் மீது தொடர்ச்சியான கண்காணிப்பை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- இந்தச் செயற்கைக் கோளானது இஸ்ரோவுக்குச் சொந்தமான துருவ செயற்கைக் கோள் செலுத்து வாகனமான PSCLV-C46-ன் மூலம் செலுத்தப்படவுள்ளது.
- மேலும் இஸ்ரோவானது அதன் நிலப்படவியல் செயற்கைக்கோளான கார்டோசாட் – 3 யை மற்ற சிறிய பாதுகாப்பு செயற்கைக் கோள்களுடன் சேர்த்து செலுத்த திட்டமிட்டுள்ளது.


***ரைசாட் செயற்கைக் கோள்கள்***

- ரைசாட் ஆனது இஸ்ரோவால் செலுத்தப்பட உள்ள அனைத்து காலநிலைகளிலும் பூமியைக் கண்காணிக்கும் செயற்கைக் கோள் வகையின் முதல் வரிசை ஆகும்.
- இந்த ரேடார் வரைபட செயற்கைக் கோள்களானது சிந்தெடிக் அபெர்ச்சர் ரேடாரைப் பயன்படுத்தி அனைத்து காலநிலைகளிலும் பூமியைக் கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் நாள் ரைசாட் - 2 ஆனது ரைசாட் - 1க்கு முன்னதாகவே சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டது.
- ரைசாட்-1 ஆனது PSLV-C19 மூலம் 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 அன்று 5 ஆண்டு கால செயல்பாட்டிற்காக வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
- இது இஸ்ரோ மூலம் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட முதல் உள்நாட்டு மைக்ரோவேவ் தொலையுணர் செயற்கைக் கோளாகும்.

## ISSக்குப் பொருட்களை கொண்டு செல்லும் திட்டம்

- ஸ்பேஸ் X நிறுவனமானது நாசாவிற்காக சர்வதேச விண்வெளி மையத்திற்கு (International Space Station-ISS) பொருட்களை கொண்டுச் செல்வதற்காக டிராகன் விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
- இது பால்கன் 9 ராக்கெட் மூலம் ப்ளோரிடாவின் கேப் கேனாவெரலில் இருந்து செலுத்தப்பட்டது. முதன்முறையாக இந்த ராக்கெட் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இது ISS-ல் தங்கி பணிபுரியும் விண்வெளி வீரர்களுக்கான ஆய்வுப் பொருட்கள், பொருட்கள் மற்றும் வன்பொருட்கள் ஆகியவற்றை 17வது மீள்வழங்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக சுமந்து சென்றுள்ளது.

- இது 1900 கிலோவுக்கும் அதிகமான அளவில் ஆய்வுப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களுடன் திரும்பி வருவதற்கு முன்னதாக 4 வார காலம் அங்கு தங்கி இருக்கும்.




## மாறுபக்கக் கொழுப்புகள்

- தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட மாறுபக்கக் கொழுப்புகளை ஒழிப்பதற்காக உலக சுகாதார நிறுவனமானது சர்வதேச உணவு மற்றும் பானக் கூட்டிணைவுடன் (IFBA - International Food and Beverage Alliance) இணைந்துள்ளது.
- பதப்படுத்தப்பட்ட உணவின் சுவை, அமைப்பு மற்றும் கால அளவு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக செயற்கையான மாறுபக்கக் கொழுப்புகளைப் உணவுத் தயாரிப்பாளர்கள் பயன்படுத்துகின்றனர்.
- இந்த உணவு வகைகளில் மாறுபக்கக் கொழுப்பானது, "பகுதி ஹைட்ரஜனேற்றப்பட்ட எண்ணெய்கள்" என்று பட்டியலிடப்பட்டுள்ளது.
- ஹைட்ரஜனேஷன் ஆனது திரவ எண்ணெய்களை திடமாக்கும். அது அவற்றைக் கொண்டிருக்கும் உணவின் ஆயுட் காலம் மற்றும் சுவையை அதிகரிக்கும்.
- மேலும் இது குறித்த தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/awareness-of-trans-fatty-acids-tfa/ தேதி: 18.02.19.

### *தீய விளைவுகள்*

- மாறுபக்கக் கொழுப்புகளானது குறைந்த அடர்த்தி கொண்ட தீய லிப்போ புரதங்கள் (LDL - Low density lipoproteins) கொழுப்பு மற்றும் அதிக அடர்த்தி கொண்ட லிப்போ நல்ல புரதங்கள் (HDL - High density lipoproteins) ஆகியவற்றைக் குறைக்கின்றது.
- அதிகபட்ச LDL கொழுப்பானது இருதய நோயை ஏற்படுத்துகின்றது.
- இதயத் தமனி நோயினால் உலக அளவில் 5,00,000 இறப்புகளுக்கு மாறுபக்கக் கொழுப்பு காரணமாக அமைகின்றது.

## ஆர்செனிக் சுவாசித்தல்

- வாஷிங்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பசிபிக் கடலின் மேற்புறத்தில் ஆர்செனிக்கை சுவாசிக்கும் உயிரினங்களைக் கண்டறிந்துள்ளனர். இந்தப் பகுதியில் ஆக்ஸிஜன் முற்றிலும் காணப்படுவதில்லை.
- ஆர்செனிக் சுவாசித்தலானது பூமியில் உயிர்களின் பரிணாம வளர்ச்சியின் போது மேற்கொள்ளப்பட்டது.
- அந்தக் காலகட்டத்தில் கடல் மற்றும் காற்று ஆகிய இரண்டிலும் ஆக்ஸிஜன் அளவு குறைவாக இருந்தது.
- சில உயிரியலாளர்கள் இந்த வகை உயிரினங்கள் சுற்றுச்சூழலுக்குப் புதிதல்ல என்றும் இவை பரிணாம வளர்ச்சியின் தொடக்கத்திலிருந்தே இருப்பதாகவும் கருதுகின்றனர்.

## மீயொளிர் விண்மீன் வெடிப்புகள் (Supernovas)

- டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மீயொளிர் விண்மீன் வெடிப்பு உருவாக்கத்திற்கான காரணத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இவர்கள் சில விண்மீன்கள் வெடிப்பதற்கு விரைவான நியூட்ரினோ அலைவுகள் காரணமாக இருக்கலாம் என்று கூறுகின்றனர்.
- விண்மீன் வெடிப்பானது மீயோளிர் விண்மீன் வெடிப்பாக வெளிப்படுகின்றது.
- இது விண்வெளியில் ஏற்படும் மிகப்பெரிய வெடிப்பாகும்.

***விரைவான நியூட்ரினோ அலைவுகள்***

- எலக்ட்ரான் நியூட்ரினோ, மியான் நியூட்ரினோ மற்றும் தவ் நியூட்ரினோ ஆகியவை 3 வகையான நியூட்ரினோக்களாகும்.
- நியூட்ரினோக்கள் குறைவான நிறையைக் கொண்டுள்ளன. இவை ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மாறும் தன்மை கொண்டது. இது நியூட்ரினோ அலைவுகள் என்று அழைக்கப்படுகின்றது.
- பல்வேறு வகையான நியூட்ரான்கள் வெவ்வேறு திசைகளில் உமிழப்படும் போது விரைவான நியூட்ரான் அலைவுகள் ஏற்படுகின்றன.

## ஜப்பானின் முதல் தனியார் ராக்கெட்


- இன்டெர்ஸ்டெல்லார் டெக்னாலஜி நிறுவனமானது தனது மோமோ – 3 ராக்கெட்டை விண்ணில் செலுத்தியதன் மூலம் ஜப்பானின் ராக்கெட் செலுத்தும் முதல் தனியார் நிறுவனமாக மாறியுள்ளது.
- இந்நிறுவனமானது ஹோக்கைடோ விண்வெளி மையத்திலிருந்து மோமோ-3 ராக்கெட்டை வெற்றிகரமாக செலுத்தியது.
- இது 2017-ல் மோமோ 1 ராக்கெட்டை முதலாவது தனியார் நிறுவன ராக்கெட்டாக செலுத்த முயற்சித்தது. ஆனால் அது தோல்வியடைந்தது.
- 2018-இல் இதன் இரண்டாவது முயற்சியானது மோமோ 2ன் மூலம் செய்யப்பட்டது. ஆனால்

அதுவும் செலுத்தப்பட்ட 4 விநாடிகளில் வெடித்துச் சிதறியது.

- மேலும் இந்நிறுவனமானது 2020 ஆம் ஆண்டளவில் சுற்றுவட்டப் பாதையில் சிறிய செயற்கைக் கோளை செலுத்தக் கூடிய முழு அளவிலான ராக்கெட்டை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

## டெங்குவிற்கு முதல் தடுப்பூசி

- அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகமானது டெங்கு காய்ச்சலுக்கான முதல் தடுப்பூசியான 'டெங்க்வாக்ஸியா'விற்கு (Dengvaxia) ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆனால் நோய்த் தொற்றினை ஏற்கனவேப் பெற்றிருக்கும் மக்களுக்கு மட்டுமே இந்த டெங்கு தடுப்பூசியினைப் பயன்படுத்த வேண்டும் என்ற சில நிபந்தனைகளையும் முன்வைத்துள்ளது.
- உயிருள்ள வீரியம் குறைந்த டெங்கு வைரஸைக் கொண்ட இந்தத் தடுப்பூசியானது மூன்று தவணைகளில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும்.
- CYD-TDU என்றறியப்படும் இந்தத் தடுப்பூசியானது சோனாஃபி பாஸ்டீயூர் எனும் நிறுவனத்தால் தயாரிக்கப்படுகிறது.
- 2015 ஆம் ஆண்டிலேயே முதன்முதலில் இதற்கு ஒப்புதல் அளித்த முதல் நாடு மெக்ஸிகோ ஆகும்.




## மானவ் வரைபடம்

- உயிரித் தொழில்நுட்பத் துறையானது "மானவ் : மனித வரைபட முன்னெடுப்பு" என்ற ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மனித உடலின் அனைத்துப் பகுதிகளையும் வரைபடமிடும் முதலாவது திட்டம் இதுவாகும்.
- இத்திட்டமானது உயிரி அறிவியல் பாடத்தின் பின்னணியுடன் பட்டப் படிப்பில் இறுதியாண்டு அல்லது அதற்கு மேல் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களால் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.
- இந்த வரைபடமானது சாதாரண நிலை மற்றும் நோயின் நிலை ஆகிய மனித உடலியலின்

இரண்டு நிலைகள் குறித்த தகவல்களைக் கொண்டிருக்கும்.

- இந்த வரைபடமானது பின்வருவனவற்றில் உதவவிருக்கின்றது.
  - நோய்க்கான காரணங்களைக் கண்டறிதல்
  - குறிப்பிட்ட வழிகளைப் புரிந்து கொள்ளுதல்
  - செல்கள் மற்றும் திசுக்களுடன் தொடர்புடைய உடலில் உள்ள நோயின் நிலையைக் கண்டறிதல்.
- ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவவியலாளர்கள் ஆகியோர்களைத் தவிர்த்து இந்த வரைபடமானது மருந்து உற்பத்தியாளர்களுக்கும் உதவவிருக்கின்றது.

## உலகின் மிகச்சிறியப் படப்புள்ளிகள் (Pixel)

- “அறிவியல் முன்னேற்றங்கள்” என்ற பத்திரிக்கையில் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி அறிக்கையின்படி, ஆராய்ச்சியாளர்கள் உலகின் மிகச் சிறிய படப் புள்ளிகளைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் படப் புள்ளிகள் சாதாரணத் திறன்பேசி படப் புள்ளிகளை விட மில்லியன் மடங்கு மிகச் சிறியது.
- இவற்றைப் பிரகாசமான சூரிய ஒளியில் காண முடியும். எனவே இவை ஆற்றலைச் சேமிக்கும் திறன் கொண்டது.
- இந்தப் புள்ளிகள் தங்கத்தின் மிகச்சிறிய துகள்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன (அளவு-மீட்டரை விட பல மில்லியன் மடங்கு குறைவு).
- இந்தப் புள்ளிகள் பாலிஅனிலைனின் மெல்லிய ஒட்டும் பூச்சுடன் பிரதிபலிப்புப் பரப்பில் சிக்கிக் கொள்கின்றன.
- இந்தப் பூச்சானது மின்சாரம் செலுத்தப்பட்டவுடன் இரசாயனமாக மாறுகின்றது. இதனால் படப் புள்ளிகளானது நிறமாலை முழுவதும் அனைத்து வண்ணங்களையும் காண்பிக்கின்றது.

## விலை குறைவான நோயறிதல் சோதனை

- மும்பையில் உள்ள தேசிய நோய்த்தடுப்பு ஆய்வியல் நிறுவனமானது பின்வருவனவற்றைக் கண்டறிவதற்காக விலை குறைவான “பாய்ன்ட் ஆப் கேர்” என்ற விரைவான நோயறிதல் சோதனையை வடிவமைத்துள்ளது.
  - மிகக் கடுமையான ஹீமோபிலியா A
  - வோன் வில்லிபிராண்ட் நோய் (VWD - Von Willebrand Disease)
- மேலே குறிப்பிட்டுள்ள 2 நோய்களைக் கொண்ட நோயாளிகள் மூளையிலிருந்து இரத்தக் கசிவு, இரைப்பையிலிருந்து இரத்தக் கசிவு, மூக்கு அல்லது ஈறுகளிலிருந்து இரத்தக் கசிவு போன்ற உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் விளைவுகளைக் கொண்டிருப்பார்கள்.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின்படி இந்த பரிசோதனைப் பொருட்களின் மதிப்பு ரூ.50 ஆகும். ஆனால் இவற்றின் தற்போதைய மதிப்பு ரூ.4000 முதல் ரூ.10,000 வரையாக உள்ளது.

***VWD***


- இது காணப்படாத அல்லது குறைபாடு கொண்ட வோன் வில்லிபிராண்டு காரணியினால் (Von Willebrand Factor - VWF) ஏற்படக்கூடிய ஒரு மரபணுக் கோளாறாகும்.
- VWF என்பது ஒரு இரத்தக் கசிவுப் புரதமாகும்.
- இரத்தப்போக்கு ஏற்படும்போது VWF ஆனது இரத்தத் தட்டை அணுக்களை ஒன்றாக இணைப்பதற்கும் இரத்தப் போக்கைத் தடுக்க ஒரு உறைவை உருவாக்குவதற்கும் உதவுகின்றது.
- குறைபாடு உள்ள மக்கள் போதிய VWF-ஐக் கொண்டிருப்பதில்லை.
- எனவே, இது இரத்தம் உறையவும் இரத்தக் கசிவைத் தடுக்கவும் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும்.

## புதிய தலைமுறை நெகிழிப் பொருட்கள்

- லாரன்ஸ் பெர்க்லே தேசிய ஆய்வகத்தைச் சேர்ந்த அமெரிக்க ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட ஒரு குழுவானது மறுசுழற்சி செய்யப்படக்கூடிய புதிய தலைமுறை நெகிழிகளை உருவாக்கியுள்ளது.
- இது பாலி டைக்டோஎனமைன் அல்லது பிடிகே நெகிழி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இவற்றைத் தரம் மற்றும் செயல்பாட்டின் இழப்பு இல்லாமல் நிறம், வடிவம் மற்றும் உருவம் கொண்ட ஒரு புதிய பொருளாக மறுசுழற்சி செய்ய முடியும்.


***இது எவ்வாறு வேறுபடுகின்றது?***

- நடைமுறையில் உள்ள நெகிழிகளானது பாலிமர்களால் தயாரிக்கப்படுகின்றது.
- மோமெர்கள் எனப்படும் மீண்டும் நிகழும் குறைந்த அளவு கார்பன் அலகுகளைக் கொண்டுள்ள பொருட்களை பாலிமர்கள் கொண்டிருக்கும்.
- இந்த மோமெர்களுடன் சேர்க்கப்படும் கூடுதலான இரசாயனங்கள் பிரிக்க முடியாத பிணைப்புகளை ஏற்படுத்துகின்றன.
- மிக அதிகமாக மறுசுழற்சி செய்யப்படும் PET (பாலி எத்திலீன் டெரப்தலேட்) என்ற நெகிழியும் கூட 20-30 சதவிகிதம் என்ற அளவில் தான் மறுசுழற்சி செய்யப்படுகின்றது.
- ஆனால் PDK நெகிழியில் உள்ள மோனோமெர்களை அதிக அமிலத் தன்மை கொண்ட கரைசலில் வைத்து எடுப்பதன் மூலம் கூட்டுச் சேர்க்கைப் பொருட்களிலிருந்து பிரித்தெடுக்க முடியும்.




## பிரபஞ்சத்தின் குளிரில் இருந்து மின்சாரம்

- ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள் முதன்முறையாக பிரபஞ்சத்தின் குளிரின் அகச்சிவப்பு ஒளியின் இருவாயிலிருந்து அளவிடக் கூடிய அளவிற்கு மின் உற்பத்தி செய்வது சாத்தியம் என செயல்முறை விளக்கம் அளித்துள்ளனர்.
- இந்த அகச்சிவப்பு குறைக்கடத்திகளானது மின்சார உற்பத்திக்காக பூமிக்கும் விண்வெளிக்குமிடையேயான வெப்பநிலை வேறுபாட்டைப் பயன்படுத்துகின்றது.
- இந்தப் புதிய சாதனமானது ஒரு சதுர மீட்டருக்கு 64 நானோ வாட்ஸ் என்ற அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது.




## உலகின் முதல் பெற்றோர் வாரியான மரபணு

- தேசிய பால்பொருட்கள் மேம்பாட்டு வாரியமானது உலகில் முதல்முறையாக "NDDB ABRO Murrah" என்றழைக்கப்படக்கூடிய நதிநீர் எருமைகளின் ஒரு முழுமையான சந்ததியினர் வாரியான மரபணுத் தொகுப்பை உருவாக்கியுள்ளது.
- இது உள்நாட்டு கால்நடையினங்கள் மற்றும் அவற்றின் கலப்பினங்களுக்கென உருவாக்கப்பட்ட ஒரு திருத்தியமைக்கப்பட்ட மரபுவழி சில்லுவான இந்து சிப் (INDUSCHIP) என்பதின் வெற்றிகரமான துவக்கத்திற்குப் பிறகு கண்டறியப்பட்டுள்ளது.
- சிறந்த துல்லியத் தன்மையை உறுதி செய்வதற்காக, முதன்முறையாக ஒரு எருமையின் தனி முறைமையைப் பிரிப்பதற்காக தாய், தந்தை, சந்ததி ஆகிய மூன்றையும் கொண்ட

முப்பிணைப்பு முறையானது பயன்படுத்தப்பட்டது.

## மிகப்பெரிய திட்டங்கள்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (Indian Space Research Organisation - ISRO) சந்திரயான் – 2 உள்ளிட்ட ஏழு மிகப்பெரிய திட்டங்களுக்குத் திட்டமிட்டுள்ளதாக சமீபத்தில் அறிவித்துள்ளது.
- இவை அடுத்த பத்து ஆண்டு காலத்தில் விண்வெளியில் செலுத்தப்படவிருகின்றன.
- மேலும் இது அடுத்த 30 ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டத்தையும் தயாரித்துள்ளது.
- திட்டமிடப்பட்டுள்ளத் திட்டங்கள் பின்வருமாறு

| **திட்டம்** | **ஆய்வின் நோக்கம்** |
|---|---|
| சந்திரயான் – 2 | நிலவு |
| மங்கள்யான் – 2 | செவ்வாய் |
| ஆதித்யா – எல் 1 | சூரியன் |
| வெள்ளித் திட்டம் | வெள்ளி |
| சந்திர துருவ ஆய்வு | நிலவு |
| எக்ஸ்போசாட் (XPOSAT) | அண்டக் கதிரியக்கம் |
| வெளி உலகிற்கு அப்பால் (Exoworlds) | சூரியக் குடும்பத்திற்கு அப்பால் நிகழ்த்தப்படும் ஆய்வு |

- ISRO நிறுவனம் சந்திரயான் – 2, XPOSAT மற்றும் ஆதித்யா – எல்1 ஆகிய மூன்று திட்டங்களை மட்டுமே செயல்படுத்துவதாக அறிவித்துள்ளது.
- மற்ற அனைத்துத் திட்டங்களும் திட்டமிடப்படும் நிலையில் உள்ள மற்றும் இறுதி வடிவம் பெறாத திட்டங்களாகும்.

## அல்டிமா துலே

- அல்டிமா துலே என்ற விண்பொருளின் மேற்பரப்பில் பனிக்கட்டி நீர், மெத்தனால் மற்றும் கரிம மூலக்கூறுகள் ஆகிய தனித்துவம் வாய்ந்த கலவை இருப்பதற்கான ஆதாரத்தை நாசா கண்டறிந்துள்ளது.
- தற்பொழுது வரை விண்கலத்தினால் ஆய்வு செய்யப்பட்ட பனிப் பொருட்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக இந்தக் கலவை உள்ளது.
- அல்டிமா துலே என்பது தொலைதூரத்தில் உள்ள ஒரு அறியப்படாத உலகம் என்பதைக் குறிக்கும் ஒரு கிரேக்க - இலத்தீன் சொற்கூறாகும்.
- இதன் அறிவியல் பெயர் 2014MU69 என்பதாகும்.
- இது தற்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கும் நியூ ஹாரிசன்ஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக ஹபிள் விண்வெளி தொலைநோக்கியைப் பயன்படுத்தி மார்க் பூய் என்பவரால் 2014 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது நெப்டியூனுக்கு அப்பால் குயுப்பர் பட்டையில் (Kuiper belt) அமைந்துள்ள ஒரு

விண்பொருளாகும்.

- நியூ ஹாரிசன் திட்டமானது குயுப்பர் பட்டையில் உள்ள பொருட்களைக் கண்டறிவதற்காக 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

*குயுப்பர் பட்டை*

- குயுப்பர் பட்டை என்பது சூரிய மண்டலத்திற்கு வெளிப் புறத்தில் உள்ள தட்டு போன்ற ஒரு அமைப்பாகும்.
- இது பூமியிலிருந்து தோராயமாக 6.4 பில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.
- இது மனிதனால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகத் தொலைவில் உள்ள ஒரு உலகமாகும்.
- குயுப்பர் பட்டையானது அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் மூன்று குறுங்கோள்களுக்குத் தாயகமாக விளங்குகின்றது.
    - புளூட்டோ
    - ஹவ்மியா
    - மேக்மேக்
- புளூட்டோ முதலில் ஒரு கோளாகக் கருதப்பட்டது. ஆனால் குயுப்பர் பட்டையின் ஒரு பகுதியாக புளூட்டோவானது 2006 ஆம் ஆண்டில் ஒரு குறுங்கோளாக மீண்டும் வகைப்படுத்தப்பட்டது.
- குயுப்பர் பட்டையினுள் இருக்கும் பொருட்கள் நெப்டியூனிற்கு அப்பால் உள்ள பொருட்களாகக் கருதப்படுகின்றன.

## நிலவில் பெண்

- "ஆர்ட்டிமிஸ்" என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காலத்தை நாசா வெளியிட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் நோக்கம் நிலவிற்கு விண்வெளி வீரர்களை எடுத்துச் செல்வதாகும். இது குறிப்பாக நிலவில் முதல் பெண் வீராங்கனை தரையிறங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அப்போலோ நிலவுத் திட்டம் கிரேக்க கடவுளான அப்போலோ நினைவாக பெயரிடப்பட்டுள்ளது.
- ஆர்ட்டிமிஸ் என்பது கிரேக்கப் புராணத்தில் அப்போலோவின் இரட்டைச் சகோதரிகள் ஆகும்.
- திட்டமிடப்பட்டுள்ள ஆர்ட்டிமிஸ் வரிசையிலான திட்டங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| ஆர்ட்டிமிஸ் 1 | நிலவைச் சுற்றி செலுத்தப்படவிருக்கும் ஒரு ஆளில்லா விண்வெளித் திட்டம் |
| ஆர்ட்டிமிஸ் 2 | நிலவைச் சுற்றி செலுத்தப்படவிருக்கும் மனிதர்களைக் கொண்ட ஒரு திட்டம் |
| ஆர்ட்டிமிஸ் 3 | முதல் பெண் விண்வெளி வீராங்கனை உள்பட விண்வெளி வீரர்கள் நிலவில் தரையிறங்குவது |

- இந்த மூன்று திட்டங்களும் ஒரு மிகப்பெரிய செலுத்து வாகனமான போயிங் மூலமான விண்வெளி செலுத்து அமைப்பினால் செலுத்தப்படவிருக்கின்றன.
- இவற்றைத் தவிர்த்து, இந்தத் திட்டம் நிலவின் துணை நிலையமான “கேட்வே” எனும் நிலையத்திற்கான கட்டுமானத் தொகுதிகளையும் கொண்டு செல்லவிருக்கின்றது.
- இந்தத் திட்டச் செலுத்துதல்கள் தனியார் விண்வெளி நிறுவனங்களால் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

## பழமையான பனி யுகம்

- சிகாகோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், பனி யுகத்தைச் சேர்ந்த கடல் நீரின் மீதமுள்ளவற்றைக் கண்டறிந்துள்ளனர்.
- இவர்கள் மாலத்தீவை உருவாக்கும் சுண்ணாம்புக் கல் படிவுகளை ஆய்வு செய்யும் போது இவற்றைக் கண்டுபிடித்தனர்.
- இந்த ஆய்வு ஆழ்புவி மாதிரிக்கான கூட்டுக் கடலியல் நிறுவனங்களின் (Joint Oceanographic Institutions for Deep Earth Sampling - JOIDES) கப்பலிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.
- புவியின் கருப் பகுதியின் மாதிரிகளை சேகரித்து அவற்றை ஆய்வு செய்வதற்காக ஆழ்கடலின் தரைப் பரப்பிற்குள் துளையிடப்பட்டது.
- பருவ நிலை மாற்றம், புவியியல் அமைப்பு மற்றும் புவியின் வரலாறு ஆகியவைப் பற்றி அறிந்துக் கொள்வதற்காக ஆராய்ச்சியாளர்கள் இந்தத் தகவல்களைப் பயன்படுத்துகின்றனர்.

## ஆந்த்ரோபோசீன் காலம்

- ஆந்த்ரோபோசீன் பணிக் குழுவில் உள்ள 34 உறுப்பினர்கள் ஒரு புதிய புவியியல் சகாப்தமான ஆந்த்ரோபோசீன் காலகட்டத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆதரவாக 29-4 என்ற கணக்கில் வாக்களித்துள்ளனர்.
- இது 11,700 ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய ஹோலோசீன் காலகட்டத்தின் முடிவைக் குறிக்கின்றது.
- ஆந்த்ரோபோசீன் என்ற சொற்கூறானது நோபல் பரிசு பெற்றவரான பால் குரூட்சென் மற்றும் யூஜுன் ஸ்டோர்மென் ஆகியோரால் 2000 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- ஆந்த்ரோபோசீன் காலகட்டம் மனித நடவடிக்கைகள் பூமியின் மீது உள்ள பல நிலைமைகள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றை மாற்றியுள்ளதைக் குறிக்கக் கூடிய தற்போதைய புவியியல் காலகட்டமாகும்.
- ஆராய்ச்சியாளர்கள் ஆந்த்ரோபோசீன் காலகட்டத்தை உருவாக்கிய “தங்கக் குறியீட்டை” எதிர்பார்த்து ஆய்வு செய்து வருகின்றனர்.
- தங்கக் குறியீடு என்பது புதிய சகாப்தத்தை உருவாக்கத் தூண்டும் ஒரு சர்வதேச அளவிலான குறியீடாகும்.
- உதாரணமாக 1950 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இருந்து நிகழ்த்தப்பட்ட

அணுகுண்டு சோதனையினால் உலகம் முழுவதும் பரவிய செயற்கை கதிரியக்கச் சிதைவு மூலமான அணுக்கரு நிகழ்வு.

*அதிகாரப் பூர்வ அமைப்புகள்*

- இந்தப் பரிந்துரை சர்வதேச பாறை அடுக்கியல் ஆணையத்திற்கு (International Commission on Stratigraphy) அனுப்பப்படவிருக்கின்றது. இது அதிகாரப் பூர்வ புவியியல் காலகட்ட அட்டவணையை நிர்வகிக்கின்றது.
- இறுதி ஒப்புதலானது சர்வதேசப் புவியியல் அறிவியல் ஒன்றியத்தினால் வழங்கப்படும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கொண்டைக் கடலை – மரபணு பன்முகத் தன்மை

- கொண்டைக் கடலையின் (Cicer arietinum) மரபணு பன்முகத் தன்மையினை சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தத் திட்டத்தின் கூட்டு நிறுவனங்கள்
    - பகுதியளவு வறண்ட வெப்ப நிலைப் பகுதிக்கான இந்தியாவின் சர்வதேசப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (International Crops Research Institute for the Semi-Arid Tropics - ICRISAT)
    - சீனாவின் பிஜிஜ-சென்சென்.
- இந்தியாவில் விளையும் கொண்டைக் கடலையின் 176 வரிசைகள் உள்ளிட்ட 429 மரபணுக்களின் வரிசையாக்கத்தை ஆராய்ச்சியாளர்கள் நிறைவு செய்துள்ளனர்.
- இந்தத் திட்டமானது பின்வரும் பண்புகளைக் கொண்ட கொண்டைக் கடலையின் புதிய இனங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - அதிக மகசூல்
    - நோய் மற்றும் பூச்சிகளை எதிர்த்தல்
    - பருவநிலை மாற்றத்தை எதிர்த்தல்
- கொண்டைக் கடலை என்பது உலகில் மிகப் பரவலாக வளரும் அவரை வகைகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

## எவரெஸ்ட் மலையில் உள்ள கழிவுப் பொருட்கள்

- நேபாளமானது 45 நாட்கள் நடைபெறும் எவரெஸ்ட் மலையைச் சுத்தப்படுத்தும் முகாமைத் தொடங்கியுள்ளது.
- இது எவரெஸ்ட் மலையிலிருந்து 3000 கிலோகிராம் எடை கொண்ட திடக் கழிவுகளைச் சேகரித்துள்ளது.
- மே 29 அன்று இந்த முகாமானது நிறைவு பெறவிருக்கின்றது.
- 1953 ஆம் ஆண்டில் எட்மண்ட் ஹில்லரி மற்றும் டென்சிங் நார்கே ஆகியோரால் எவரெஸ்ட் மலையின் முதலாவது மாநாடு நடத்தப்பட்டது. இது ஒவ்வொரு ஆண்டும் மே 29 அன்று அனுசரிக்கப்படுகின்றது.

## ஊடகம் மற்றும் பருவ நிலை மாற்றம்


- பருவ நிலை நடவடிக்கை மற்றும் பேரிடரை எதிர்கொள்ளுதல் மீதான ஆசிய-பசிபிக் ஒளிபரப்பு கூட்டமைப்பு (ABU - Asia Pacific Broadcasting Union) ஊடக மாநாட்டின் 5-வது பதிப்பானது காத்மாண்டுவில் நடத்தப்பட்டது.
- இரண்டு நாள் மாநாட்டின் கருத்துருவானது, "நீடித்த எதிர்காலத்திற்கான ஊடகத் தீர்வுகள்: உயிர்களைப் பாதுகாத்தல், வலிமையான சமூகங்களைக் கட்டமைத்தல்" என்பதாகும்.





- இந்த மாநாடானது பின்வருவனவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
    - பருவ நிலை நடவடிக்கை மற்றும் பேரிடரை எதிர் கொள்ளுதலை ஊக்குவிப்பதற்கு ஊடகத்தின் திறனைப் பயன்படுத்துதல்.
    - ஒத்துழைப்பு மற்றும் கூட்டு செயல்முறைத் திட்டங்களுக்காக பங்குதாரர்களை ஊடக உறுப்பினர்களுடன் இணைத்தல்.
- ABU ஆனது 1964 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் தலைமையகம் கோலாலம்பூரில் அமைந்துள்ளது.

## வறண்டு கொண்டிருக்கும் வடகிழக்கு இந்தியா

- இந்தியாவின் ஈரப்பதம் மிக்க பகுதிகளில் வடகிழக்கு இந்தியாவும் ஒன்றாகும்.
- ஆனால் இது கடந்த 30 ஆண்டுகளாக மிக வேகமாக வறண்டு கொண்டிருக்கின்றது.
- புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலையியல் நிறுவனம் மற்றும் அஸ்ஸாம் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதற்கான காரணத்தை ஆய்வு செய்தனர்.
- குறைந்த பருவ மழைப் பொழிவானது துணை வெப்பமண்டலப் பசிபிக் கடலின் இயற்கை மாற்றங்களுடன் தொடர்புடையது என்று அவர்கள் கூறியுள்ளனர்.




### *பத்தாண்டு கால பசிபிக் அலைவுகள்*

- பத்தாண்டு கால பசிபிக் அலைவுகள் (PDO - Pacific decadal oscillation) என்பது குறிப்பாக வட பசிபிக் கடலில் நிகழும் அலைவுகளின் அமைப்பாகும்.
- இது வடகிழக்கு இந்தியாவின் கோடைக்கால பருவமழைப் பொழிவைப் பாதிக்கின்றது.
- PDO என்பது எல்நினோ, லா நினோவைப் போன்ற ஒரு கடல் நிகழ்வாகும்.
- ஆனால் இதன் தாக்கமானது பத்தாண்டு காலத்திற்கு நீடிக்கின்றது.

## பாஜிராவ்

- செயற்கைச் சூழலில் வைத்து வளர்க்கப்பட்ட கடைசியான ஒரு வெள்ளைப் புலியானது மும்பையில் உள்ள சஞ்சய் காந்தி தேசியப் பூங்காவில் சமீபத்தில் இறந்தது.
- வெள்ளைப் புலியானது புலிகளின் ஒரு தனித்த துணை இனங்கள் அல்ல.
- இந்தப் புலிகள் பின்வரும் காரணங்களினால் வெள்ளையாக இருக்கின்றன.
    - சிவப்பு அல்லது மஞ்சள் நிறமுடைய "பியோமெலனைன்" என்ற நிறமி குறைவாக இருத்தல்.
    - தனித்துவ ஒடுங்கு மரபணுக்கள் காணப்படுதல்.
- தற்பொழுது இயற்கை வாழிடங்களில் வெள்ளைப் புலி இனங்கள் இல்லை.
- வெள்ளைப் புலியானது மத்தியப் பிரதேசத்தின் ரேவா வனப் பகுதியில் கடைசியாக இயற்கையான முறையில் காணப்பட்டது.

### *சஞ்சய் காந்தி தேசியப் பூங்கா*

- மும்பைத் தலைநகர் பகுதிக்குள் தற்பொழுது அமைந்திருக்கும் முக்கியமான தேசியப் பூங்காக்களில் இதுவும் ஒன்றாகும்.
- இந்தப் பூங்காவானது பாறைக் குன்றுகளிலிருந்து செதுக்கப்பட்ட 2400 ஆண்டுகள் பழமை

வாய்ந்த கன்ஹேரி குகைகளைக் கொண்டுள்ளது.

- இந்த இடமானது மிக முக்கியமான புத்த மதக் கல்வி மையமாகும்.

## பல்லுயிர்ப் பெருக்க அறிக்கை

- சர்வதேச அறிவியல் அமைப்பான "பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் மீதான அரசாங்கங்களுக்கிடையேயான அறிவியல் – கொள்கை தளம்" (IBPES - Intergovernmental Science-Policy Platform on Biodiversity and Ecosystem Services) என்ற நிறுவனமானது உலகின் சூழலியல் அழிவு மீதான ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது மனித நடவடிக்கையானது தற்பொழுதுள்ள மில்லியனுக்கும் மேற்பட்ட தாவர மற்றும் விலங்கு இனங்களை அச்சுறுத்துகின்றது என்று கூறுகின்றது.
- புவியின் நிலப் பரப்பில் 75 சதவிகிதமும் கடல்சார் பரப்பில் 66 சதவிகிதமும் "குறிப்பிடத்தக்க வகையில்" மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மேலும் 85 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட ஈர நிலங்கள் தொலைக்கப்பட்டுள்ளன.
- IBPES என்பது 2012 ஆம் ஆண்டில் ஐ.நா. உறுப்பு நாடுகளினால் உருவாக்கப்பட்ட அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு தனிச் சுதந்திர அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் ஜெர்மனியில் உள்ள பான் நகரில் அமைந்துள்ளது.
- IBPES-ன் குறிக்கோள்கள் பின்வருமாறு
    - பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான அறிவியல்சார் கொள்கை இடைமுகத்தை வலுப்படுத்தல்.
    - பல்லுயிர்ப் பெருக்கத்தின் நீடித்த பயன்பாடு
    - நீண்ட கால மனித நலம்
    - நீடித்த வளர்ச்சி

## புதிய வகை குழிப் பாம்பு

- அசோக் கேப்டன் தலைமையிலான ஊர்வன அறிவியலைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சிவப்பு நிறம் கொண்ட ஒரு புதிய வகை குழிப் பாம்பு இனங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இதை அவர்கள் அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு காமெங் வனப் பகுதிகளில் கண்டறிந்துள்ளனர்.
- இது ட்ரைமெரிசுரூஸ் அருணாச்சலென்சின் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் பெயரில் குழிப் பாம்பைக் கொண்ட ஒரே மாநிலம் இந்த மாநிலம் மட்டுமே.
- அருணாச்சலப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பாம்பு இனத்திற்கு முன்பு 4 இந்தியா பழுப்பு நிறப் பாம்புகளைக் கொண்டு இருந்தது.
- ஊர்வன அறிவியல் என்பது ஊர்வன மற்றும் ஈரிட வாழ்விகளைக் குறித்துப் படிக்கும் விலங்கியலின் ஒரு பிரிவாகும்.

## ஆசிய சிங்கம்

- ஆசியச் சிங்கத்தின் ஒட்டு மொத்த மரபணுவானது ஹைதராபாத்தில் உள்ள சிஎஸ்ஐஆர் – செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தைச் (CSIR-Centre for Cellular and Molecular Biology) சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் முதன்முறையாக வரிசையாக்கப்பட்டது.
- இது ஆசியச் சிங்கங்களின் பரிணாம வளர்ச்சியை அறிந்து கொள்ளுவதற்கும் இந்த இனங்களின் சிறந்த மேலாண்மையை ஏற்படுத்துவதற்கும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும்.
- ஆசியச் சிங்கங்களில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் அதன் அடிவயிற்றின் வழியே செல்லும் தோலின் நீளமான மடிப்பு ஆகும். இது ஆப்பிரிக்க சிங்கங்களில் காணப்படுவதில்லை.
- ஆசியச் சிங்கங்களின் ஒரே வாழிடம் கிர் தேசியப் பூங்கா மற்றும் வன விலங்கு சரணாலயம் ஆகும்.

Fact Box

Common Name: Asiatic Lion, Indian Lion

Scientific Name: Panthera Leo persica

Status:
Listed in Schedule I of Wildlife (Protection) Act 1972,
Listed in Appendix I of CITES
Endangered in IUCN List

Threats:
Vulnerable to extinction from unpredictable events, such as an epidemic or large forest fire.

## பழுப்பு கரடி மீள்தோன்றல்

- ஒரு நூற்றாண்டிற்கும் மேலான காலங்களுக்குப் பிறகு போர்ச்சுக்கலில் பழுப்பு கரடியின் மீள்தோன்றலானது வனவிலங்கு நிபுணர்களால் உறுதிசெய்யப்பட்டது.
- இந்தக் கரடியானது பெரும்பாலும் வடக்கு ஸ்பெயின் நாட்டில் உள்ள மேற்கு காண்டாபிரியன் மலைப் பகுதியை வாழும் இடமாகக் கொண்டது.
- 19 ஆம் நூற்றாண்டிலேயே பழுப்பு கரடியானது போர்ச்சுகலில் அழிந்து விட்டது.
- தற்போது இந்தக் கரடியானது வடகிழக்கு போர்ச்சுகலில் உள்ள மான்டெசின்ஹோ தேசியப் பூங்கா மற்றும் ப்ரகான்கா கம்யூன் பகுதியில் காணப்பட்டுள்ளது.



## உறுப்பினர் நாடுகளின் மாநாடு

- பின்வரும் ஒப்பந்தங்களின் உறுப்பினர்கள் நாடுகளின் மாநாட்டின் (Conference of the Parties-COP) பல்வேறு அமர்வுகள் ஸ்விட்சர்லாந்தில் உள்ள ஜெனீவா சர்வதேச மாநாட்டு மையத்தில் நடைபெற்றது.
  - பேசல் ஒப்பந்தத்தின் 14வது உறுப்பினர் நாடுகளின் மாநாடு (BC COP-14)
  - ரோட்டர்டாம் ஒப்பந்தத்தின் 9வது உறுப்பினர் நாடுகளின் மாநாடு (RC COP-9 )
  - ஸ்டாக்ஹோம் ஒப்பந்தத்தின் 9வது உறுப்பினர் நாடுகளின் மாநாடு (SC COP-9)
- இந்த மாநாட்டின் கருத்துருவானது, "தூய்மையான கோள், ஆரோக்கியமான மக்கள் : வேதிப்பொருட்கள் மற்றும் கழிவுகளின் சிறந்த மேலாண்மை" என்பதாகும்.
- இந்த மாநாட்டில் நெகிழில் கழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு 187 நாடுகள் உறுதியளித்தன. ஆனால் அமெரிக்கா இந்த உறுதியளிப்பில் பங்கேற்க மறுத்துவிட்டது.
- Cop14-இல் தடைத் திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான மூலோபாய கட்டமைப்பு மற்றும் அபாயகரமான கழிவுகள் மற்றும் இதரக் கழிவுகளின் தடுப்பு, குறைப்பு மற்றும் மீட்டெடுப்பு மீதான கார்டாஜீனா பிரகடனம் ஆகியவை உள்ளிட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விவகாரங்கள் உறுப்பினர்களிடையே விவாதிக்கப்பட்டன.

### *பேசல் ஒப்பந்தம்*

- இது அபாயகரமான கழிவுகளின் எல்லை தாண்டிய நகர்வுகளை கட்டுப்படுத்துதல் மற்றும் அவற்றின் வெளியேற்றம் மீதான பேசல் ஒப்பந்தம் எனவும் அறியப்படுகிறது.
- இந்த சர்வதேச ஒப்பந்தமானது அபாயகரமான கழிவுகளானது எல்லைத் தாண்டிக் கொண்டு செல்வதைக் குறைப்பதையும் குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து குறைந்த வளர்ச்சியுடைய நாடுகளுக்கு அபாயகரமான கழிவுகள் இடமாற்றம் செய்யப்படுவதை தடுப்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

### *ரோட்டர்டாம் ஒப்பந்தம்*

- இது சர்வதேச அளவிலான வர்த்தகத்தில் சில அபாயகரமான வேதிப்பொருட்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் மீதாக முன்னரே அறிவிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட நடைமுறைகள் மீதான ரோட்டர்டாம் ஒப்பந்தம் எனவும் அறியப்படுகின்றது.

- இது மனித ஆரோக்கியத்தையும் சுற்றுச்சுழலையும் தீங்கிலிருந்துப் பாதுகாப்பதற்காகவும் வேதிப்பொருட்களை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பயன்படுத்துவதற்காகவும் சில அபாயகரமான வேதிப்பொருட்களின் சர்வதேச வர்த்தகத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புகளையும் கூட்டுறவு முயற்சிகளையும் ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

*ஸ்டாக்ஹோம் ஒப்பந்தம்*

- இது நிலையான கரிம மாசுபடுத்திகளின் மீதான ஸ்டாக்ஹோம் ஒப்பந்தம் எனவும் அறியப்படுகிறது.
- இந்த சர்வதேச ஒப்பந்தமானது நிலையான கரிம மாசுபடுத்திகளின் உற்பத்தி மற்றும் பயன்பாடுகளைக் கட்டுப்படுத்துவதை அல்லது அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உயிரிவழிச் சீராக்கம்

- சிஎஸ்ஐஆர் – தேசியத் தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR-National Botanical Research Institute – CSIR/NBRI) மற்றும் லக்னோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மண்ணில் உள்ள ஆர்செனிக் கழிவுகளை நீக்குவதற்காக 2 உள்நாட்டு பாக்டீரியாக்களைப் பயன்படுத்தினர்.
- இந்த 2 பாக்டீரியாக்கள் பேசிலஸ் பிலெக்ஸ் மற்றும் அசினோபாக்டர் ஜுனி என்று பெயரிடப்பட்டுள்ளன.
- இவை ஆர்சனிக் கழிவுகள் உள்ள மண்ணில் உள்ள தாவரங்களின் வேர்களில் ஒன்றுக்கொன்று உதவிக் கொள்ளுதல் என்ற முறையின் கீழ் வாழ்கின்றன. இவை நச்சுத் தன்மையை ஏற்படுத்தாமல் தேவையான ஊட்டச் சத்துகளை தாவரங்கள் எடுத்துக் கொள்ள உதவுகின்றன.
- மேலும் இவை தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.
- உயிரிவழிச் சீராக்கமானது மண் மற்றும் இதர சுற்றுச்சூழல்களில் கலந்துள்ள கழிவுகளை நீக்குவதற்கு நுண் உயிரிகள், தாவரங்கள், தாவர நொதிகளைப் பயன்படுத்துகின்றது.

## இறப்பிலிருந்து இரண்டு முறை மீளுதல்

- சுமார் 1,36,000 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து போன அல்டப்ரா வெள்ளைத் தொண்டையுடைய ரெயில் (Aldabra white-throated rail) பறவையானது இருமுறையாக மீண்டும் பிறப்பெடுத்துள்ளது.
- இதனை ஆராய்ச்சியாளர்கள் பன்முறைப் பரிணாமம் என்று பெயரிட்டுள்ளனர்.



- இது வெவ்வேறு காலகட்டங்களில் அதே மூதாதையரிலிருந்து அதேபோன்ற அல்லது அதற்கு இணையான உடல் அமைப்புகள் மீண்டும் பரிணாமம் பெறுவதாகும்.
- இது இந்தியப் பெருங்கடலின் அல்டப்ரா பவளத் தீவில் வாழும் கோழி அளவிலான ஒரு பறக்க முடியாத பறவையாகும்.
- இது மடகாஸ்கரில் மட்டுமே காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பறவையின் புதை புடிவங்கள் பின்வரும் காலகட்டத்தில் அல்டப்ரா பவளத் தீவில் காணப்பட்டன.
  - இரண்டு வெவ்வேறு கால கட்டங்கள்
  - பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொன்றும் தனியாக பிரிந்த கால கட்டங்கள்.
- புதைபடிவ ஆதாரத்துடன் இணைந்து அல்டப்ராவின் தனித்துவ மற்றும் பழமையான தொல்லியல் துறை பதிவுகளானது கடல் மட்டங்களின் மாற்றங்கள் இந்தப் பறவை இனம் அழிந்து போவதற்கும் மற்றும் மறுகுடியேற்ற நிகழ்வுகளுக்கும் காரணமாக இருப்பதைக் காட்டுகின்றது.

## உள்நாட்டு யாக் எருதுகள் இறப்பு

- மிகக் கடுமையான பனிப் பொழிவினைத் தொடர்ந்து சிக்கிமில் உள்ள முகுதங் பள்ளத்தாக்கில் குறைந்தது 300க்கும் மேற்பட்ட நீண்ட முடிகள் கொண்ட யாக் எருதுகள் இறந்து விட்டன.
- ஒவ்வொரு ஆண்டும் 10 முதல் 15 யாக் எருதுகள் இறக்கும். ஆனால் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கையானது உயர்ந்துள்ளது.
- இமயமலை, திபெத்திய பீடபூமி மற்றும் மங்கோலியா ஆகிய பகுதிகளில் உள்ளூர், பால், பால் சார்ந்த பொருட்கள், போக்குவரத்து மற்றும் கம்பளி ஆகியவற்றின் ஆதாரமாக யாக் எருதுகள் விளங்குகின்றன.

## மழையை விரும்பும் பாம்பு

- ஊர்வன அறிவியலைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவானது மிசோரமில் விஷம் அற்ற பாம்பின் ஒரு புதிய வகையைப் பதிவு செய்துள்ளது.
- இதற்கு ஸ்மித்தோபிஸ் அடம்போராலிஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது ஒரு முக்கிய

உயிர்வாழ் உயிரினமாகும்.

- இந்திய ஊர்வன அறிவியலுக்கு முக்கியப் பங்காற்றியப் பிரிட்டனைச் சேர்ந்த ஊர்வன அறிவியலாளரான மால்கோம் ஆர்தூர் ஸ்மித் என்பவரின் நினைவாக இதற்கு இவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது.
- இது உள்ளூரில் பொதுவாக ருகம்ரூல் அல்லது மழையை விரும்பும் பாம்பு என்று அழைக்கப்படுகின்றது.
- வடகிழக்கு இந்தியாவில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பாம்புகள்:

| | | |
|---|---|---|
| மிசோரம் | ஸ்மித்தோம்பிஸ் அடம்போராலிஸ் | நச்சுத் தன்மையற்றது |
| அருணாச்சலப் பிரதேசம் | அழும் தண்ணீர் பாம்பு | நச்சுத் தன்மையற்றது |
| அருணாச்சலப் பிரதேசம் | சிவப்பு பழுப்பு குழிப் பாம்பு | நச்சுத் தன்மை கொண்டது |

## சென்டாய் கட்டமைப்பு

- ஒரு சர்வதேச ஆய்வு அறிக்கையானது பேரிடர் அபாயக் குறைப்பிற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் (United Nations Office for Disaster Risk Reduction - UNDRR) வெளியிடப்பட்டது.
- இது மிக அதிகமான கால நிலை மாற்றங்களின் காரணமாக புதிய மற்றும் மிகப்பெரிய பிரச்சனைகளை உருவாக்கும் என்று எச்சரித்துள்ளது. இது குறிப்பாக ஆசிய பசிபிக் பொருளாதாரங்களை இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- பின்வருவனவற்றிலிருந்து மனிதர்களுக்கு அபாயங்கள் நிகழும் என்று இது கூறியுள்ளது.
    - காற்று மாசுபாடு
    - உயிரியல் அபாயங்கள்
    - வெள்ளம், நிலச்சரிவு மற்றும் நில நடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்கள்.
- நாடுகள் பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கையில் முதலீடு செய்யாவிட்டால் அதன் வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவிகித அளவிற்கு பொருளாதார இழப்புகள் ஏற்படும் என்று இது கணித்துள்ளது.
- உலகளாவிய மதீப்பீட்டு அறிக்கையானது (GAR - Global Assessment Report) சென்டாய் கட்டமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றது.

### *<u>சென்டாய் கட்டமைப்பு</u>*

- இது 2015 ஆம் ஆண்டில் ஐ.நா. உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இது பேரழிவினால் மரணங்களையும் பொருளாதார இழப்புகளையும் குறைப்பதைப் பற்றி விவரிக்கின்றது.
- இது முன் எச்சரிக்கை அமைப்பில் முதலீடு செய்வதன் மூலம் அபாய நிர்வாகத்தை பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## எல்நினோ மோடோக்கி

- இந்திய வெப்ப மண்டல வானிலையியல் நிறுவனமானது 2020 ஆம் ஆண்டிலிருந்து

இந்தியாவில் ஏற்படவிருக்கும் எல்நினோ மோடோக்கி பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்று கணித்துள்ளது.

- வெப்ப அலைகளின் நிகழ்வுகளை அதிக அளவில் ஏற்படுத்தும்
- வெப்ப அலைகளின் (அனல் காற்று) காலங்களை அதிகப்படுத்தும்.

❖ தென் இந்தியா மற்றும் கடலோரப் பகுதிகள் ஆகியவை அதிக அளவு வெப்ப அலையினால் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றன.

❖ இந்தியாவில் வெப்ப அலைகளானது பொதுவாக எல் நினோ நிகழ்வுகள் ஏற்பட்ட பின்பு நிகழ்கின்றது.


❖ எல் நினோ என்பது கிழக்கு பசிபிக் பெருங்கடல் வெப்பமடைதல் ஆகும்.

❖ ஆனால் எல் நினோ மோடோக்கி என்பது மத்திய பசிபிக் பெருங்கடல் வெப்பமடைதல் ஆகும்.

❖ எல் நினோ மோடோக்கி நிகழ்வுகளுடன் இந்தியாவில் எதிர்காலத்தில் நிகழும் வெப்ப அலைகளுடன் தொடர்புடைய ஒரு ஆராய்ச்சியை மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

❖ வெப்ப அலைகள் மிக அதிக அளவில் நிகழ்வதற்குப் பின்வரும் கூடுதல் காரணிகள் காரணங்களாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

- மண்ணின் ஈரப்பதம் குறைதல்
- பூமியிலிருந்து வளிமண்டலத்திற்கு வெப்பம் கடத்தப்படுதல்.




## சட்ட விரோதமான வனவிலங்குகள் வர்த்தகம்


❖ சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினத்துடன் தொடர்புடைய ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரம் இந்தியாவில் பின்வரும் அமைப்புகளால் தொடங்கப்பட்டது.

- ஐ.நா. சுற்றுச்சூழல் இந்தியா
- இந்தியாவின் வனவிலங்குகள் மீதான குற்றத் தடுப்பு அமைப்பு

- "அனைத்து விலங்குகளும் தன் விருப்பத்தின் பேரில் இடம் பெயருவதில்லை" என்ற முழக்கம் இந்தியாவெங்கிலும் உள்ள முக்கியமான விமான நிலையங்களில் காட்சிப்படுத்தப் படவிருக்கின்றது.
- இந்தப் பிரச்சாரத்தின் நோக்கம் சட்ட விரோதமான வன விலங்குகள் வர்த்தகம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

***சென்னை விமான நிலையம்***

- விலங்குகள் பாதுகாப்பு அமைப்பான டிராபிக் (வர்த்தகத்தில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வர்த்தகப் பதிவுகள் மீதான ஆய்வு - இந்தியா) என்ற அமைப்பின்படி தெற்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் சட்டவிரோத வனவிலங்கு வர்த்தகத்தின் மையமாக சென்னை மாறி வருகின்றது.
- இந்திய நட்சத்திர ஆமைகள், சிவப்பு செவி கொண்ட ஸ்லைடர் ஆமைகள், எறும்புத் திண்ணி, சுறா மீன் உறுப்புகள் ஆகியவை சென்னையிலிருந்து அதிகமாகக் கடத்தப்பட்ட விலங்குகளாகும்.
- சென்னையிலிருந்து கடத்தப்பட்ட மிகப் பெரும்பான்மையான விலங்குகள் தென் கிழக்கு ஆசியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் பாரம்பரிய மருந்துகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன. எ.கா. சுறா மீன் உறுப்புகள்.




- சென்னை விமான நிலையத்திலிருந்து சமீபத்தில் பறிமுதல் செய்யப்பட்டவை பின்வறுமாறு

| தேதி | பிடிபட்ட விலங்கு |
|---|---|
| மார்ச் 25, 2019 | 2 காண்டாமிருக உடும்புகளுடன் ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த குழிப் பாம்புகள், 3 பாறை உடும்புகள், எகிப்தைச் சேர்ந்த 22 ஆமைகள், நீல நாக்கு கொண்ட 4 அரணைகள் மற்றும் 3 பச்சை மரத் தவளைகள். |
| பிப்ரவரி 02, 2019 | பேங்காக்கிலிருந்து வந்த நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சிறுத்தைக் குட்டி |
| டிசம்பர் 20, 2018 | பேங்காக்கிலிருந்து வந்த இரண்டு பயணிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 4,800 சிவப்பு செவி கொண்ட ஸ்லைடர் ஆமைகள். |

| | |
|---|---|
| ஏப்ரல் 06, 2018 | பேங்காக்கிலிருந்து வந்த ஒரு நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 65 நட்சத்திர ஆமைகள். |

## சுற்றுச்சூழல் கார்பன் டை ஆக்ஸைடு

- மே 11 ஆம் தேதியன்று, முதன்முறையாக சர்வதேச அளவில் வளிமண்டலத்தில் உள்ள கார்பன் டை ஆக்ஸைடானது 415 ppm (ppm) என்ற அளவைக் கடந்துள்ளது.
- இது ஹவாயில் உள்ள மவுனா லோா ஆய்வகத்தில் உள்ள உணரிகளால் அளவிடப்பட்டது.
- 1958 ஆம் ஆண்டில் இதே இடத்தில் கார்பன் டை ஆக்ஸைடு வாயுவின் அளவானது 315 ppm ஆக இருந்தது.
- வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்ஸைடின் அளவு விரைவாக அதிகரிப்பது புவி வெப்பமயமாதலைக் காட்டும் குறியீடுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

***ஏன் இது அபாயகரமானது?***

- கார்பன் டை ஆக்ஸைடு வாயு வளிமண்டலத்தில் மிக அதிக வாழ்நாட்களைக் கொண்டுள்ளது. இது 100 முதல் 300 ஆண்டுகள் வரை வளிமண்டலத்தில் இருக்கும்.
- புவியின் வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் அளவு அதிகம் ஆகும் பொழுது கார்பன் டை ஆக்ஸைடு வாயுவின் அளவானது பொதுவாக 450 ppm இருக்கும் என்று கருதப்படுகின்றது.
- தற்போதைய கார்பன் டை ஆக்ஸைடு வாயு வளர்ச்சி விகிதம் நீடித்தால் 12 ஆண்டுகளுக்கு (2030 ஆம் ஆண்டில்) முன்னதாகவே 450 ppm என்ற நிலையினை அடைந்து விடும் என்று கருதப்படுகின்றது.

## போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் மாசுபாடு

- போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் காற்று மாசுபாடுகளுக்கு குழந்தைகள் உள்ளாகும் போது (TRAP - Traffic-Related Air Pollution - TRAP) TRAP – ஆனது குழந்தைகளின் மூளையில் உள்ள வேதியியல் பொருட்களை மாற்றியமைக்கும் என்று ஒரு ஆய்வு கண்டறிந்துள்ளது.
- இது பதற்றம் மற்றும் மன அழுத்தம் போன்ற மன நோய்களின் பாதிப்பை அதிகப்படுத்துகின்றது.
- TRAP ஆனது வெளிப்புற காற்று மாசுபாட்டில், குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் முக்கியப் பங்காற்றுகின்றது.
- அமெரிக்காவில் உள்ள சின்சினாடி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் 145 குழந்தைகளின் (சராசரியாக 12 வயது) மூளையில் காணப்படும் "மையோ-இனோசிடோல்" என்பவற்றின் நிலைகள் குறித்து ஆய்வு செய்தனர்.
- "மையோ-இனோசிடோல்" என்பது இயற்கையாகக் காணப்படும் ஒரு வளர்சிதைப் பொருளாகும். இது இணைப்பு உயிரணுக்கள் என்ற சிறப்புப் பெற்ற மூளை உயிரணுக்களில் காணப்படுகின்றது.
- இது பின்வரும் பணிகளை மேற்கொள்கின்றது.
    - மூளையில் செல் தொகுப்பு மற்றும் திரவ சமநிலையைப் பராமரித்தல்

  - உடலில் உள்ள ஹார்மோன் மற்றும் இன்சுலின் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல்.

- இந்த ஆராய்ச்சியின் சான்றானது காற்று மாசுபாட்டிற்கு மைய நரம்பு மண்டலம் குறிப்பாகப் பாதிக்கப்படும் என்று கூறுகின்றது.

## 30 ஆயிரம் அடி உயரத்தில் கூட்ட நெரிசல்

- எவரெஸ்ட் மலையின் உச்சியை அடையும் ஒரு முயற்சியின் போது கடந்த 10 நாட்களில் "கூட்ட நெரிசல்" அல்லது "அதிக நபர்கள் கூடுதல்" என்ற நிகழ்வின் காரணமாக 3 இந்தியர்கள் உள்பட 11 நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
- உயரம் அதிகரிக்கும் போது ஏற்படும் நோய்கள், குறைவான ஆக்ஸிஜன் உள்ள இடத்தில் நீண்ட நேரம் காத்திருத்தல், மிகவும் கடுமையான நிலப்பரப்பு மற்றும் பனிக்கட்டி உள்ள இடத்தில் நீண்ட வரிசையில் காத்திருத்தல் ஆகியவைகளின் காரணமாக இறப்புகள் ஏற்பட்டுள்ளன.
- நேபாள அரசினால் வழங்கப்பட்ட கட்டுப்பாடற்ற உரிமங்களினால் இந்த இறப்புகள் ஏற்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## பின்னி – இந்தியாவின் ஒராங்குட்டான்

- இந்தியாவின் ஒரே ஒராங்குட்டான் பின்னி ஆகும்.
- இது, தனது 41-வது வயதில் ஒடிசாவின் நந்தன்கனன் விலங்கியல் பூங்காவில் காலமானது.
- இந்த மனிதக் குரங்கானது 25 வயதிருக்கும் போது பூனேவில் உள்ள இராஜீவ் காந்தி விலங்கியல் பூங்காவிலிருந்து ஒடிசாவில் உள்ள நந்தன்கனன் விலங்கியல் பூங்காவிற்கு கொண்டு வரப்பட்டது.



- தற்பொழுது உயிர்வாழும் பெரும் மனிதக்குரங்கு இனங்களில் ஒராங்குட்டான்களும் ஒன்றாகும்.
- இவை இந்தோனேஷியா மற்றும் மலேசியாவைத் தனது வாழிடமாகக் கொண்டுள்ளது. ஆனால் இவை தற்பொழுது போர்னியோ மற்றும் சுமத்ராவின் மலைக் காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன.

- தற்பொழுது உயிர் வாழும் பெரும் மனிதக்குரங்கு இனங்கள்:
    - சிம்பன்சிகள்
    - கொரில்லாக்கள்
    - ஒராங்குட்டான்கள்

### நந்தன்கனன் விலங்கியல் பூங்கா

- நந்தன்கனன் விலங்கியல் பூங்காவானது ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள விலங்கியல் மற்றும் தாவரவியல் பூங்காவாகும்.
- இது 1960 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இந்தியாவில் இருந்து உலக விலங்கியல் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் மன்றத்தில் (WAZA - World Association of Zoos and Aquariums) இணைந்த முதலாவது விலங்கியல் பூங்கா இதுவாகும். (2009 ஆம் ஆண்டில் இணைந்தது)
- கஞ்சியா ஏரி நந்தன்கனன் விலங்கியல் பூங்காவின் ஒரு பகுதியாக உள்ளது.

# மாநிலச் செய்திகள்

### சாந்துச் சிற்பங்கள்

- தெலுங்கானாவின் பானிகிரியில் ஒரு அரிதான முழு அளவுடைய புத்த மத சாந்துச் சிற்பங்களை தொல்லியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இது 1.73 மீட்டர் உயரமுடையதாகவும் 35 செ.மீ. அகலத்தையும் கொண்டிருக்கின்றது.
- இந்தச் சிற்பமானது ஜாதகா சக்ராவைச் சேர்ந்த ஒரு போதிச் சத்துவாவைக் குறிக்கின்றது.
- இதுநாள் வரை இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய புத்த சாந்துச் சிற்பங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இதர கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| மகாஸ்தூபம் | இது புத்தத் துறவிகளின் தனிப்பட்ட விவரங்களைக் கொண்ட ஒரு பரிபோஜிக ஸ்தூபமாகும். |
| வோட்டிவ் ஸ்தூபம் | புத்தத் துறவிகளின் உடல்களைக் கொண்ட அரைக்கோள அமைப்பாகும் |
| அப்சிதல் சைத்ய கிரகங்கள் | வழிபாட்டுக் கூடம் |
| சன்னல் மண்டபங்கள் | கி.மு. 1 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சாதவாகனர் காலகட்டத்தைச் சேர்ந்தது |

### சார்மினார் - சேதம்

- சமீபத்தில் ஹைதராபாத்தில் உள்ள சார்மினாரின் ஒரு பகுதியானது சேதமடைந்துள்ளது.
- 4 மினார்களில் அலங்காரமான சாந்துப் பணி கொண்ட ஒரு மினாரின் ஒரு பகுதியானது இடிந்து விழுந்துள்ளது.

- சார்மினாரானது முகமது கூலி குதுப் ஷா என்பவரால் 1591 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.
- இவர் ஹைதராபாத்தின் அடித்தளமாக இதை கட்டினார்.
- இவர் குதுப் சாஹி வம்சத்தின் 4-வது அரசர் ஆவார்.
- இவர் கோல்கொண்டா கோட்டையையும் கட்டியுள்ளார்.

## புதுச்சேரி - தில்லி

- மெட்ராஸ் உயர் நீதிமன்றமானது ஆட்சியாளர் / துணை நிலை ஆளுநராகச் செயல்படுபவர் புதுச்சேரி அரசாங்கத்தின் நடவடிக்கையில் தன்னிச்சையாகவோ, மறைமுகமாகவோ தலையிட அதிகாரம் இல்லை என்று கூறியுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் சரத்து 239AA ஆனது தில்லி சட்டமன்றத்தின் மீது பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.
- எனவே சட்ட ஒழுங்கு மற்றும் நிலம் ஆகியவற்றின் மீது தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தில்லி சட்டமன்றத்திற்கு எந்த அதிகாரமும் இல்லை.
- ஆனால் சரத்து 239A ஆனது புதுச்சேரி சட்டமன்றத்தின் மீது எந்தவொரு வெளிப்படையான கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை.

**Section 44 of the Government of Union Territories Act, 1963**

There shall be a Council of Ministers in each UT to aid and advice the Administrator who shall act in his/her discretion "only" in so far as any "special responsibilities" were concerned.

- ஆனால் இந்தச் சட்டமானது ஒன்றியப் பிரதேசத்தின் ஆட்சியாளருக்கான எந்தவொரு சிறப்பு அதிகாரங்கள் குறித்தும் குறிப்பிடவில்லை.

## அதிக எடையுள்ள பள்ளி புத்தகப் பைகள்

- கர்நாடக மாநில அரசு அதிக எடையுள்ள பள்ளிப் புத்தகப் பைகளை எடுத்துச் செல்வதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளிலிருந்து பள்ளிக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக விதிமுறைகளை அறிமுகப் படுத்தியுள்ளது.
- குழந்தையின் எடையில் 10 சதவிகிதத்திற்கும் மேலே பள்ளிப் புத்தகப் பைகளின் எடை இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- ஒன்றாம் மற்றும் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளின் புத்தகப் பைகளின் எடை ஏறத்தாழ 1.5 கிலோ கிராமிலிருந்து 2 கிலோ கிராமிற்குள்ளாக மட்டுமே இருக்க வேண்டும்.
- மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளின் பள்ளி புத்தகப் பைகளின் எடையானது 2 கி.கி.லிருந்து 3 கி.கி. வரை மட்டுமே இருக்க வேண்டும்.
- பள்ளிகள் ஒவ்வொரு மாதத்தின் 3-வது சனிக்கிழமையை "புத்தகப் பைகளற்ற தினமாக" கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

## ராணி அபாக்கா படை

- ❖ மங்களூருவின் காவல் துறை கண்காணிப்பாளரான சந்தீப் பாட்டில் ராணி அபாக்கா படை எனும் பெயரிடப்பட்ட அனைத்து மகளிர் காவல் ரோந்து அலகினைத் தொடங்கி வைத்தார்.
- ❖ இது குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கையாளும் நோக்கமுடையது.
- ❖ இப்படையானது 16-ம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியரை எதிர்த்துப் போரிட்ட கர்நாடகாவின் கடலோரப் பகுதியான மங்களூருவிற்கு அருகில் உள்ள உள்ளால் என்ற பகுதியின் ராணியான அபாக்காவின் பெயரிடப்பட்டுள்ளது.

## இறைப்பு நீர்ப் பாசனம்

- ❖ பாரத் மிகுமின் நிறுவனமானது தெலுங்கானாவின் காலேஸ்வரம் இறைப்பு நீர்ப்பாசனத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது.
- ❖ இறைப்பு நீர்ப் பாசனத்தில், நீர் இயற்கையான ஓட்டத்தில் அல்லாமல் குழாய்கள் அல்லது தூக்குக் குழாய்கள் மூலம் இறைக்கப்படுகின்றது.
- ❖ இந்த நீரானது நீர்ப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப் படவிருக்கின்றது.
- ❖ ஸ்ரீபடா எல்லம்பள்ளி நீர்த்தேக்கத்தில் இருந்து 89 கியூமெக்ஸ் (ஒரு வினாடிக்கு 89 கன மீட்டர்கள்) நீரானது 106 மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டு மேடாராம் நீர்த் தேக்கத்திற்கு கொண்டு செல்லப்படவிருக்கின்றது.

## சுழிய நிலுவை நீதிமன்றங்கள்

- ❖ சுழிய நிலுவை நீதிமன்றங்கள் என்பது தில்லியில் உள்ள கீழமை நீதிமன்றங்களில் தொடங்கப்பட்டுள்ள ஒரு சோதனைத் திட்டமாகும்.
- ❖ இந்தத் திட்டமானது வழக்குகளுக்கான உகந்த கால அளவுகளைக் கொண்டு வருவதற்கு "வழக்குகளின் கால அளவுகள்" குறித்து ஆய்வு நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

*முக்கியக் குறிப்புகள்*

- ❖ இந்தியாவில் நீதித்துறை சார் நிலுவைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 சதவிகித இழப்பை ஏற்படுத்துகின்றன.
- ❖ டெல்லியில் ஒரு ஆண்டில் நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளையும் தீர்ப்பதற்கு 43 கூடுதல் நீதிபதிகள் தேவைப்படுகின்றனர். இங்கு தற்பொழுது 143 நீதிபதிகள் உள்ளனர்.

## சார்தாம் பயணம்

- ❖ உலகின் புகழ்பெற்ற சார்தாம் பயணம் உத்தரகாண்டில் தொடங்கியது.
- ❖ இந்துப் புனிதப் பயணிகள் இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

- உத்தரகாண்டின் மிகப்பெரும் இமய மலையில் உள்ள 4 புனித இடங்கள் சேர்ந்து சார்தாம் என்று அழைக்கப்படுகின்றன.
- அவையாவன

| இடம் | கடவுள் |
|---|---|
| யமுனோத்ரி | யமுனைக் கடவுள் |
| கங்கோத்ரி | கங்கைக் கடவுள் |
| கேதார்நாத் | சிவா |
| பத்ரிநாத் | விஷ்ணு |

## சமூக நீதி

- இந்திய உச்ச நீதிமன்றம் பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினத்தைச் (SC/ST) சேர்ந்த பணியாளர்களுக்கு மூப்பு மற்றும் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யும் கர்நாடக அரசின் 2018 ஆம் ஆண்டுச் சட்டத்தை உறுதி செய்தது.
- அரசியலமைப்பு அமர்வானது இடஒதுக்கீடு அளிக்கும்போது பின்வரும் விதிகளைக் கடைபிடிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.
    - நிர்வாகத் திறன் பாதிக்கப்படக் கூடாது.
    - தகுதி அடிப்படையில் அல்லாமல் மற்றவற்றின் அடிப்படையில் நியமிக்காதிருத்தல்.
- குறிப்பிட்ட அளவிடத்தக்க தகவல்களுடன் SC/ST பணியாளர்களின் பின்தங்கிய நிலை மற்றும் பிரதிநிதித்துவப் பற்றாக்குறை என்ற ஒன்றை உருவாக்கிய இந்தியாவின் முதலாவது மாநிலமாக கர்நாடகா உருவெடுத்துள்ளது.
- இது 2017 ஆம் ஆண்டில் தலைமைச் செயலாளரின் கீழ் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு பணியில் உள்ள SC/ST பணியாளர்களின் தரவுகளைச் சேகரித்து அதனைப் பகுப்பாய்வு செய்தது.
- கடந்த 32 ஆண்டுகளில் கர்நாடக மாநில குடிமைப் பணிகளில் 10.65 சதவிகிதம் SC பிரிவினரும் 2.92 சதவிகிதம் ST பிரிவினரும் பணியில் சேர்ந்துள்ளனர்.

## தனித்துவ மகளிர் குழுக்கள்

- "சுயம்சித்தா" என்ற ஒரு சிறப்புத் திட்டத்தை ஒடிசா மாநிலம் தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின்கீழ், ஒடிசாவின் கஞ்ஜம் மாவட்ட நிர்வாகமானது பேரிடர் மேலாண்மையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சியளிக்கவிருக்கின்றது.
- இந்தப் பெண்கள் இயற்கைப் பேரிடரின் போது, குறிப்பாகப் புயலின் போது மக்களை வெளியேற்றுதல், மீட்பு, மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவை குறித்து பயிற்சியளிக்கப்பட விருக்கின்றனர்.
- "சுயம்சித்தா"வின் கட்டுப்பாட்டு அறையானது மாவட்டத் தலைநகரான சத்ராபூரில் செயல்படவிருக்கின்றது.
- இதற்குமுன் கேரள அரசு 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது மறுசீரமைப்பு

மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக மகளிர் சுய உதவிக் குழுக்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தியது.

## சிலிக்கா ஏரி

- ❖ மிகக் கடுமையான ஃபானி புயலானது சிலிக்கா ஏரியில் புதிய 4 முகத்துவாரங்களை உருவக்கியுள்ளது.
- ❖ இதற்குமுன் இந்த ஏரியில் வங்காள விரிகுடாவோடு இணையும் வகையில் செயல்பாட்டிலிருக்கும் 2 முகத்துவாரங்கள் மட்டுமே இருந்தன.
- ❖ நதி முகத்துவாரம் என்பது நதியானது கடலில் கலக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.
- ❖ ஆசியாவின் மிகப்பெரிய உவர் நீர் ஏரி சிலிக்காவாகும்.
- ❖ சிலிக்கா உப்பங்கழியானது இந்தியாவில் உள்ள மிகப்பெரிய கடலோர உப்பங்கழியாகும்.
- ❖ ஆஸ்திரேலியாவில் உள்ள தி நியூ காலிடோனியன் பவளப் பாறையடுக்கானது உலகில் உள்ள மிகப்பெரிய உப்பங்கழியாகும்.

## தாவர உண்ணிகள் - கணக்கெடுப்பு

- ❖ குஜராத் மாநில வனத் துறையானது கிர் வனப் பகுதி மற்றும் இதர பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் தாவர உண்ணிகள் மீதான கணக்கெடுப்பை நடத்துகின்றது.
- ❖ இந்த கணக்கெடுப்பு குளம்பு வகை மிருகங்களான புள்ளி மான், நீல மான், கடமான், இந்திய குரங்குகள், மயில், இந்திய மான், நாற்கொம்பு மான் மற்றும் காட்டுப் பன்றி ஆகிய உயிரினங்களை கணக்கெடுக்கின்றது.
- ❖ ஆசியச் சிங்கங்களின் முக்கிய உணவாக வனப் பாலூட்டிகள் மற்றும் குரங்குகள் விளங்குகின்றன.
- ❖ இந்த குளம்பு வகை மிருகங்களின் கணக்கெடுப்பானது சிறுத்தை, கழுதைப் புலி, சிங்கம் போன்ற விலங்குண்ணிகளுக்கான உணவு குறித்த தகவல்களை தருகின்றது.

## தேர்தல் - வன்முறை

- ❖ இதற்கு முன் நடைபெறாத ஒரு நிகழ்வாக, மேற்கு வங்கத்தின் 9 தொகுதிகளுக்கான 7வது மற்றும் கடைசிக் கட்டத் தேர்தலுக்கானப் பிரச்சாரத்தை இந்தியத் தேர்தல் ஆணையம் இரத்து செய்துள்ளது. இது 16-05-2019 அன்று இரவு 10 மணியிலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கின்றது.
- ❖ தேர்தலுக்கு முன்பான 48 மணி நேர அமைதிக் காலமானது 17-05-2019 அன்று தான் தொடங்கவிருக்கிறது.
- ❖ இந்தியத் தேர்தல் ஆணையம் அரசியலமைப்பின் சரத்து 324-ன் கீழ் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.
- ❖ இந்த சரத்தானது "தேர்தலை மேற்பார்வையிடுதல், வழிகாட்டுதல் மற்றும் தேர்தலை நடத்துதல்" ஆகியவற்றிற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரத்தினை வழங்குகின்றது.

- இந்தியத் தேர்தல் ஆணையமானது இதுபோன்ற நடவடிக்கைகளால் அரசியல் கட்சிகளிடையே ஏற்படும் தேர்தல் குறித்த வன்முறைகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது குறித்த செய்திகளுக்கு இங்கே சொடுக்கவும் : https://www.tnpscthervupettagam.com/article-324/.

## வெங்காயம், பூண்டு, முட்டை ஆகியவை இல்லாத உணவு

- கர்நாடக அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க மதிய உணவினை அளிப்பதற்காக அட்சய பாத்திரம் என்ற அறக்கட்டளையுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- இந்த அறக்கட்டளையானது இந்து மதத்தின் அடிப்படையில் உணவில் முட்டை, வெங்காயம் மற்றும் பூண்டு ஆகியவற்றைத் தவிர்த்துள்ளது.
- தேசிய ஊட்டச்சத்து நிறுவனமானது (NIN - National Institute of Nutrition) இந்த அறக்கட்டளைக்கு ஆதரவாக அரசாங்கத்திடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.
- இந்த அறிக்கையை எதிர்த்தும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவின் குறைவான தரம் குறித்தும் ஆர்வலர்கள் குரலெழுப்புகின்றனர்.

***NIN***

- NIN ஆனது சர் ராபர்ட் மெக்கரிசன் என்பவரால் 1918 ஆம் ஆண்டு குன்னூரில் உள்ள பாஸ்டர் நிறுவனத்தில் தொடங்கப்பட்டது.
- NIN ஆனது ஊட்டச்சத்து ஆராய்ச்சியின் பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப் படுகின்றது. இது குறிப்பாக புரத சக்தி ஊட்டச்சத்து குறைபாட்டின் மீது தனிக் கவனத்தைச் செலுத்துகின்றது.
- இது 1958 ஆம் ஆண்டில் ஹைதராபாத்திற்கு இடம் மாற்றப்பட்டது.

## அருணாச்சலப் பிரதேசம் - பக்கே

- மைசூரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அருணாச்சலப் பிதேசத்தின் பக்கே புலிகள் காப்பகத்தில் உள்ள இருவாச்சிப் பறவைகள் (Hombill) குறித்து ஒரு ஆய்வை மேற்கொண்டனர்.
- இவர்கள் இருவாச்சிப் பறவைகள் குறித்து பின்வருவனவற்றைக் கண்டுபிடித்தனர்.
    - அதிக அளவில் விதைகளைப் பரப்புதல்
    - பழங்களை உண்ணும் மிகப் பெரிய உருவம் கொண்ட பறவைகள் (Frugivores).
- விதைகளைப் பரப்புவதற்காகவும் தனது பகுதியினை விரிவுபடுத்துவதற்காகவும் தாவரங்கள் இந்தப் பழங்களை உண்ணும் பறவைகளைச் சார்ந்துள்ளன.
- பழங்களை உண்ணும் பறவைகளின் வீழ்ச்சியானது (குறைகின்ற நிலை) சுற்றுச் சூழலை மிகக் கடுமையாக பாதிக்கும்.

**Hornbill Fact Box**

Scientific Name: Buceros bicornis

Location: Himalayan foothills, hill forests in northeast India and wet evergreen forests of west India.
IUCN Status: Near Threatened

Listed in Appendix I of CITES
Threats: Killed widely to make Traditional Hats called Bopia Hat

State Bird of Kerala and Arunachal Pradesh (ONLY)

Every year Great Hornbill festival celebrated in Nagaland.





## அஸ்ஸாம் பிரச்சினை

- அயல்நாட்டவர் தீர்ப்பாயத்தின் ஒரு தீர்ப்பான “ஒரு நபரை சட்டவிரோத வெளிநாட்டவர்” என்று அறிவிப்பது அனைவரையும் கட்டுப்படுத்தும் (binding) என்று இந்திய உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.
- அஸ்ஸாமின் தேசியக் குடிமக்கள் பதிவேட்டிலிருந்து (National Register of Citizens - NRC) ஒரு நபரின் பெயரை நீக்கும் அல்லது சேர்க்கும் அஸ்ஸாம் அரசின் முடிவை விட இது அதிக அதிகார மிக்கவையாக விளங்குகின்றது.
- அஸ்ஸாம் அரசின் இணையதளத்தின் படி ஏறத்தாழ 100 வெளிநாட்டவர் தீர்ப்பாயங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- பின்வரும் 2 சட்டப் பிரிவுகளின் கீழ் இந்தத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களாக நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுகின்றனர்.
    - வெளிநாட்டவர்கள் தீர்ப்பாயச் சட்டம், 1941
    - வெளிநாட்டவர்கள் தீர்ப்பாய ஆணை, 1964
- மேலும் இந்திய உச்ச நீதிமன்றம், பகுதி நீதிசார் நிறுவனமாக விளங்கும் NRC-ஐ விட வெளிநாட்டவர்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்புகள் அதிக அதிகாரம் மிக்கவையாக விளங்கும் என்றும் கூறியுள்ளது.
- தேசிய குடிமக்கள் பதிவேடுகள் என்பது அஸ்ஸாமில் உள்ள இந்தியக் குடிமக்களின் பட்டியலாகும்.
- வங்க தேசம் மற்றும் அண்டை நாடுகளிலிருந்து இந்தியாவிற்குள் புலம்பெயரும் சட்டவிரோதக் குடியேற்றங்களைக் களைவதற்காக இது புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

## ஆந்திரக் காளைகள்

- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற ஒரு தனியார் நிகழ்ச்சியின் போது ஓங்கோல் காளைகளின் ஒரு சுருக்கத் தொகுப்பை வெளியிட்டார்.
- இவர் உலகளவில் புகழ்பெற்ற ஓங்கோல் காளைகளைப் பாதுகாப்பதன் தேவை குறித்து அறிவுறுத்தினார்.
- இவை ஆந்திரப் பிரதேசத்தின் பிரகாசம் மாவட்டத்தில் வளர்க்கப்படும் உள்ளூர் வகை காளை இனமாகும்.
- உள்ளூர் வகை காளை இனங்கள் பின்வரும் இரண்டு நோய்களுக்கு எதிர்ப்புச் சக்தியைக் கொண்டிருக்கும்.
    - கோமாரி நோய்
    - மாட்டுப் பித்த நோய்
- ஓங்கோல் இனத்தைப் பற்றிய தகவல்கள்

Global Prominence of Ongole Breed

Zebu - Brazil imported barely hundred Ongole breed from India and produced multiple superior breeds like the world-famous Zebu bulls.

Brahmana bull - Famous in America, it is an off-breed of the Ongole.

Santa Gertrudis - Famous breed developed in Texas, USA have Ongole blood

Bull Fights - Used in Mexico and some parts of East Africa due to their strength and aggressiveness.

## ஜெலியங்ரோங் பழங்குடியினர்

- மணிப்பூரில் உள்ள ஜெலியங்ரோங் பழங்குடியினரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தாவரங்களின் உள்ளூர் மருத்துவப் பயன்பாட்டை ஆவணப்படுத்த ஆராய்ச்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.
- இந்தத் தாவரங்களின் மருத்துவப் பண்புகள் இதற்கு முன்பு அறியப்படவில்லை.
- கினியூரா குசிம்பா, ஹிடியோடிஸ் ஸ்கேடென்ஸ், முசயென்டா களபரா மற்றும் சிமா வாலிச்சி ஆகியவை இவற்றுள் சிலவாகும்.
- “பைபர் அருணாச்சல்லென்சிஸ்” போன்ற சில அரிதான மற்றும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய இனங்கள் பாரம்பரிய மருந்துகளை உருவாக்குவதற்காக அவர்களால் பயன்படுத்தப் படுகின்றன.
- தமேங்லோங் மாவட்டத்தில் வாழும் ஜெலியங்ரோங் பழங்குடியினர் மணிப்பூரில் உள்ள 32 பழங்குடியினக் குழுக்களில் ஒன்றாவர்.
- ஜெலியங்ரோங் என்று பொதுவாக அறியப்படும் மூன்று பிரிவுகள் பின்வருமாறு
    - ஜீமீ
    - லியாங்மாய்
    - ரோங்மேய்

## சந்திராணி முர்மு

- பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த சந்திராணி முர்மு என்ற பெண்மணி மக்களவைத் தேர்தலில் ஒடிசாவின் கியோன்ஜ்ஹார் தொகுதியில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.
- இவர் 25 ஆண்டுகள் 11 மாதங்கள் மட்டுமே நிரம்பிய நாடாளுமன்றத்தின் மிக இளைய வயது உறுப்பினராக உருவெடுத்துள்ளார்.
- இவர் கியோன்ஜ்ஹார் தொகுதியில் இரண்டு முறை மக்களவை உறுப்பினராக இருந்த பிஜேபியைச் சேர்ந்த அனந்தநாயக் என்பவரை 67,822 என்ற வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.
- இதற்கு முன்பு ஹரியானாவின் ஹிசார் தொகுதியிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட துஷ்யந்த் சவுதலா என்பவர் மிக இளைய வயது நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கினார். இவர் தனது 26-வது வயதில் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

## டபுக் டாகு

- தேசிய மக்கள் கட்சியின் டபுக் டாகு அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள கிழக்கு செப்பா சட்டமன்றத் தொகுதியில் தனது போட்டியாளரான பிஜேபியைச் சேர்ந்த வேட்பாளரை மிகவும் குறுகிய வித்தியாசமான 29 வாக்குகளில் தோற்கடித்துள்ளார்.
- அவர் பிஜேபியின் ஈலிஸ் டல்லாங் என்பவருக்கு எதிராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.
- தபால் வாக்குகளிடமிருந்துப் பெற்ற இறுதி எண்ணிக்கையானது அவரது வெற்றிக்குச் சாதகமாக எண்ணிக்கையைத் திசை திருப்பியது.

### *தபால் வாக்குமுறை*

- தேர்தல்களில் தபால் வாக்கு முறை என்பது வாக்காளர்களுக்கு மின்னணு ரீதியில் வாக்குச் சீட்டானது கொடுத்து அனுப்பப்பட்டு தபால் மூலம் திருப்பி அனுப்பப்படும் தபால் வாக்குச் சீட்டுகளைக் கொண்ட ஒரு வகையான வாக்கு முறையாகும்.
- தபால் வாக்குமுறை என்பது வாக்குச் சீட்டுகள் எவ்வாறு சமர்ப்பிக்கப் படுகின்றன என்பதை மட்டுமே குறிப்பதன்றி எவ்வாறு வாக்குகள் எண்ணப்படுகின்றன என்ற முறையைக் குறிப்பதல்ல.
- இந்தியத் தேர்தல் ஆணையத்தின்படி தபால் வாக்கு வசதி அரசு சேவைத் துறையில் உள்ள வாக்காளருக்கு கிடைக்கும் வசதியாகும். அதாவது ஒரு வாக்காளர் சேவைத் துறைத் தகுதியைக் கொண்டிருப்பதாகும்.

## ஆந்திரப் பிரதேச முதலமைச்சர்

- 2019 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று விஜயவாடாவில் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் முதல்வராக ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி பதவியேற்க விருக்கின்றார்.
- ஆந்திரப் பிரதேச சட்ட சபையில் மொத்தமுள்ள 175 இடங்களில் ஜெகன் மோகன் ரெட்டியின் கட்சி 151 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. ஆந்திரப் பிரதேசத்தின்

மொத்தமுள்ள 25 மக்களவை இடங்களில் 22 இடங்களில் இக்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

- இவர் தற்பொழுது முதலமைச்சராக இருக்கும் தெலுங்கு தேசக் கட்சியைச் சேர்ந்த சந்திரபாபு நாயுடுவை வீழ்த்தினார்.
- இவர் பிரதமர் மோடியை சந்தித்து ஆந்திரப் பிரதேசத்தின் சிறப்பு மாநில அந்தஸ்திற்கான கோரிக்கையைப் பிரதமரிடம் முன்வைத்தார்.

***சிறப்பு மாநில அந்தஸ்து (SCS – Special Category Status)***

- SCS என்ற கருத்துருவானது 5-வது நிதி ஆணையத்தினால் முதன்முதலாக 1969 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது சில பின்தங்கிய மாநிலங்களுக்கு மத்திய நிதியுதவி மற்றும் வரிச் சலுகைகள் என்ற முறையில் முன்னுரிமை அளித்திட வழி வகுக்கின்றது.
- முதன்முதலில் அஸ்ஸாம், நாகாலாந்து மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களுக்கு SCS அந்தஸ்து வழங்கப்பட்டன.
- இதன் பின்னர் அருணாச்சலப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், சிக்கிம், திரிபுரா மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களுக்கும் SCS அந்தஸ்து வழங்கப்பட்டன.
- ஆனால் 14-வது நிதி ஆணையம் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் மூன்று மலை மாநிலங்கள் (ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட்) ஆகியவற்றைத் தவிர்த்து மற்ற மாநிலங்களுக்கான “சிறப்பு மாநில அந்தஸ்தை” நீக்கியுள்ளது.
- அதற்குப் பதிலாக இந்த ஆணையம் மத்திய அரசிலிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் வரிப் பகிர்வை 32 சதவிகிதத்திலிருந்து 42 சதவிகிதமாக அதிகரிக்குமாறுப் பரிந்துரைத்துள்ளது.

## சிக்கிம் முதலமைச்சர்

- சிக்கிம் கரந்திகாரி மோர்ச்சா கட்சியின் தலைவரான பிரேம் சிங் கோலே சிக்கிம் மாநிலத்தின் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.
- இவர் 5 முறை முதலமைச்சராக இருந்த பவன் குமார் சாம்லிங் என்பவரைத் தோற்கடித்தார்.
- சிக்கிம் சோஹ்யால் வம்சத்தின் கீழ் 1642 ஆம் ஆண்டில் ஒரு அரசாக உருவானது.
- இது 1890 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் வந்தது. இது ஆங்கிலேயர்களால் பாதுகாக்கப்படும் மாநிலமாக உருவெடுத்தது.

## ஒடிசா முதலமைச்சர்

- 2019 ஆம் ஆண்டு மே 29 அன்று பிஜூ ஜனதா தள கட்சியின் தலைவரான நவீன் பட்நாயக் ஒடிசா மாநிலத்தின் முதலமைச்சராக ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்கவிருக்கின்றார்.
- இவர் பதவியேற்கவிருக்கும் நாளில், அம்மாநிலத்தின் காலியா என்ற திட்டத்தின் கீழ் உள்ள 6 முதல் 7 இலட்சம் விவசாயிகள் நேரடிப் பயன் மாற்றத்தின் மூலம் ரூ.5000 நிதியுதவியைப் பெறவிருக்கின்றனர்.
- இவர் 2019 ஆம் ஆண்டில் அம்மாநிலத்தில் நடைபெற்ற 23 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கானத் தேர்தலில் 12-ல் வெற்றியும் 146 சட்டமன்ற இடங்களுக்கான

தேர்தலில் 112-ல் வெற்றியும் பெற்றுள்ளார்.

### அரோமா திட்டம் - மேகாலயா

- மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் விளைச்சலை ஊக்குவிப்பதற்காக "அரோமா திட்டம்" என்ற ஒரு புதிய திட்டத்தை மேகாலயா முதல்வர் கான்ராட் K. சங்மா துவங்கி வைத்தார்.
- மருத்துவம் மற்றும் நறுமணத் தாவரங்களின் விளைச்சலுக்கு கூட்டாக இணைந்துப் பணியாற்றுவதற்காக - மத்திய மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்கள் நிறுவனம் (Central Institute of Medicinal and Aromatic Plants - CIPAM) மற்றும் மேகாலயா வடிநில வளர்ச்சி ஆணையம் (Meghalaya Basin Development Authority) ஆகியவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.
- CIPAM நிறுவனமானது அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றத்தின் (CSIR) முன்னிலை தாவர ஆராய்ச்சி ஆய்வகமாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### கோல்டுமேன் சுற்றுச்சூழல் பரிசு

- 6 சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் புகழ்பெற்ற கோல்டுமேன் சுற்றுச்சூழல் விருதினைப் பெற்றுள்ளனர்.
- கோல்டுமேன் விருதானது "பசுமை நோபல் விருது" என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த விருது 6 கண்டங்களைச் சேர்ந்த 6 சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது அமெரிக்காவைச் சேர்ந்த நன்கொடையாளர்களான ரோடா மற்றும் ரிச்சர்டு கோல்டுமேன் ஆகியோரால் 1989 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- புகழ்பெற்ற சமூக ஆர்வலரான மேத்தா பட்கர் இந்த விருதை 1992 ஆம் ஆண்டில் பெற்றார்.
- குஜராத்தில் உள்ள நர்மதைப் பள்ளத்தாக்கு வளர்ச்சித் திட்டத்திற்கு எதிராக போராடியதற்காக இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் வெற்றியாளர்கள் :

| வெற்றியாளர் | நாடு |
|---|---|
| பாயர்ஜர்கால் அக்வாண்ட் செரீன் | மங்கோலியா |
| அல்பெர்ட் ப்ரௌன்வெல் | லைபீரியா |
| அல்பெர்டோ குராமில் | சிலி |
| ஜாக்குலின் எவான்ஸ் | குக் தீவுகள் |
| லிண்டா கார்சியா | அமெரிக்கா |
| அனா கோலோவிக் லெசோஸ்கா | வட மாசிடோனியா |

## விசாரணைப் பத்திரிக்கையாளர் விருது

- கேரவன் பத்திரிக்கையைச் சேர்ந்த நிலீனா.எம்.எஸ். என்பவருக்கு 2018 ஆம் ஆண்டின் விசாரணைப் பத்திரிக்கையாளருக்கான புகழ்பெற்ற ஏசிஜெ விருது வழங்கப்பட்டது.
- ஏசிஜெ விருதானது ஒரு கோப்பை, சான்றிதழ் மற்றும் ரூ.2 இலட்சம் நிதி ஆகியவற்றைக் கொண்டதாகும்.
- ஆசியப் பத்திரிக்கைத் துறை கல்லூரியானது சென்னையில் உள்ள பத்திரிக்கைத் துறைப் பள்ளியாகும்.
- இது இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தினால் 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## செவாலியர் விருது

- இஸ்ரோவின் முன்னாள் தலைவரான A.S. கிரண் குமாருக்கு பிரான்சின் உயரிய விருதான "செவாலியர் டி 1 ஆர்டிரி நேஷனல் டி லா லீஜியன் லா ஹானியர்" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இந்தியா – பிரான்சு விண்வெளி ஒத்துழைப்பிற்கு தான் ஆற்றிய பங்களிப்பிற்காக இவர் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- இந்த விருதானது 1802 ஆம் ஆண்டு நெப்போலியன் போனபர்ட்டால் உருவாக்கப்பட்டது.
- இது பிரான்சு நாட்டிற்கு தலைசிறந்த சேவையை அளித்தவர்களுக்காக பிரான்சு அரசினால் வழங்கப்படும் ஒரு உயரிய குடிமக்கள் விருதாகும்.
- விருதைப் பெறுபவர் எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருப்பினும் அவருக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது.

## PC சந்திர புரஸ்கார் 2019

- இந்தியாவின் மிகப் பிரபலமான இதய அறுவைச் சிகிச்சையாளரான டாக்டர் தேவி பிரசாத் ஷெட்டிக்கு 27வது PC சந்திர புரஸ்கார் விருது வழங்கப்பட்டது.
- இது பிஸ்வா வங்காள மாநாட்டு மையத்தின் PC சந்திரா குழுமத்தால் வருடந்தோறும் வழங்கப்படும் தேசிய அளவிலான விருதாகும்.
- இவர் "தெய்வீகக் கைகளைக் கொண்ட மனிதர்" என்றும் அழைக்கப்படுகிறார்.
- இவர் மருத்துவத் துறைக்காக 2003 ஆம் ஆண்டில் பத்ம ஸ்ரீ விருதினையும் 2013 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருதினையும் பெற்றுள்ளார்.

## ராபர்ட் கோவென்டர்

- தென் ஆப்பிரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பத்திரிக்கையாளரான G.D. ராபர்ட் கோவென்டர், ஐக்கிய இராஜ்ஜியத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான V.K. கிருஷ்ண மேனன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

- காலனிய எதிர்ப்பு பத்திரிக்கைத் துறையின் முன்னோடியாக இவர் ஆற்றிய பங்களிப்பிற்காக இவர் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- ராபர்ட் கோவென்டர் 1930 ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் பிறந்தார்.
- தென் ஆப்பிரிக்காவில் "வெள்ளையர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் விளையாட்டு அணிகளின்" புறக்கணிப்பிற்கு அழைப்பு விடுத்த முதல் பத்திரிக்கையாளர் இவராவார்.

***V.K. கிருஷ்ண மேனன்***

- பிரிட்டனுக்கான இந்தியாவின் முதலாவது உயர் ஆணையர் V.K. கிருஷ்ண மேனன் ஆவார்.
- இவர் 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1962 ஆம் ஆண்டு அக்டோபர் வரை இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றினார்.
- இவர் ஐ.நா. பாதுகாப்பு ஆணையத்தில் (UNSC - UN Security Council) மிக நீண்ட நேரம் (8 மணி நேரங்கள்) உரையாற்றிச் சாதனை படைத்தார்.
- இவர் 1957 ஆம் ஆண்டில் தனது UNSC உரையில் காஷ்மீர் மீதான இந்தியாவின் இறையாண்மை குறித்து விவாதித்தார்.

## சுதந்திரத்திற்கான விருது

- அமெரிக்க அதிபரின் சுதந்திரத்திற்கான விருதை, அந்நாட்டு அதிபர் டொனால்டு ட்ரம்ப் குழிப் பந்தாட்ட வீரரான டைகர் வுட்ஸ்க்கு வழங்கினார்.
- அமெரிக்காவின் புகழ்பெற்ற உயரிய குடிமக்கள் விருதைப் பெறும் நான்காவது மற்றும் இளைய குழிப் பந்தாட்ட வீரராக 43 வயது நிரம்பிய டைகர் வுட்ஸ் உருவெடுத்துள்ளார்.
- சுதந்திரத்திற்கான விருதானது அமெரிக்க அதிபர் ட்ரூமேனால் இரண்டாம் உலகப் போர் தொடர்பான தலைசிறந்த குடிமக்களின் சாதனைகளை கௌரவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.
- இந்த விருதானது 1963 ஆம் ஆண்டில் அதிபர் கென்னடியினால் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது.
- இந்த விருதானது ஒருமுறை ஒரு நபருக்கு வழங்கப்பட்டால், மீண்டும் அவ்விருதைத் திரும்பப் பெற முடியாது.

## ராமானுஜர் ஜெயந்தி

- ராமானுஜரின் பிறந்த தினமானது ஸ்ரீ ராமானுஜர் ஜெயந்தி என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது தமிழ் சூரிய நாட்காட்டியின் அடிப்படையில் அனுசரிக்கப்படுகின்றது.
- இது சித்திரை மாதத்தின் திருவாதிரை நட்சத்திரத் தினத்தன்று நிகழ்கின்றது. இது 2019-ஆம் ஆண்டு மே 9 அன்று நிகழ்கின்றது.
- இவரது சமயம் சார்ந்த செயல்பாடுகள் மற்றும் கொள்கைகள் ஆகியவை பின்வரும் முக்கியமான 2 வைணவ மையங்களில் பரப்பப் படுகின்றன.
    - திருச்சியின் ஸ்ரீரங்கத்தில் உள்ள திருவரங்கநாதர் ஆலயம்
    - ஆந்திரப் பிரதேசத்தின் திருப்பதியில் உள்ள வெங்கடேஷ்வரர் ஆலயம்

- வைணவத் தத்துவ ஞானியான இராமானுஜர் ஒரு புரட்சிகர சமூக சீர்திருத்தவாதி ஆவார்.
- இவர் பாலினம், தேசியவாதம், சாதி, மதம், இனம், சமூகம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப் படாமல் ஒவ்வொரு மனிதரும் சமம் என்ற தனது கொள்கையை ஊக்குவித்தார்.
- விஷிஷ்ட அத்வைதா தத்துவத்தின் சிறந்த ஆதரவாளராக ஸ்ரீ ராமானுஜர் விளங்குகின்றார்.

## மெக்காயின் நிறுவன விருது 2019

- நிர்பயா கூட்டு வண்புணர்வு மற்றும் கொலை வழக்கு விசாரணைக் குழுவின் தலைவரான இந்திய காவல் பணி அதிகாரி சாயா ஷர்மாவிற்கு 2019 ஆம் ஆண்டிற்கான துணிவு மற்றும் தலைமைத்துவத்திற்கான மெக்காயின் நிறுவன விருது வழங்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஆட்கடத்தல்களுக்கு எதிரான முறைப்படுத்தப்பட்ட செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை தயாரிப்பதில் இவர் முக்கிய பங்காற்றினார்.
- இந்த விருதானது மனித உரிமைகள், மனிதாபிமான இரக்கம், நீதி, சுதந்திரம் மற்றும் மனித கண்ணியம் ஆகியவற்றிற்காக துணிச்சலாக செயல்படுபவர்களுக்கு வழங்கப்படுகின்றது.
- மலாலா யூசப்சாய் (2015) மற்றும் டிகம்பே முட்டோம்போ (2016) ஆகியோர் இவ்விருது பெற்ற மற்ற பிரபலங்களாவர்.



## சசகாவா விருது

- பேரிடர் அபாயக் குறைப்பிற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகமானது (United Nations Office for Disaster Risk Reduction - UNDRR) பேரிடர் அபாயக் குறைப்பிற்காக 2019 ஆம் ஆண்டின் “சசகாவா விருதினை” பிரமோத் குமார் மிஸ்ரா என்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரிக்கு வழங்கி கௌரவித்தது.
- இவர் பிரதம மந்திரியின் கூடுதல் முதன்மைச் செயலாளராக உள்ளார்.

- இது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் பேரிடர் அபாயக் குறைப்பிற்கான சர்வதேசத் தளச் சந்திப்பின் 6-வது பதிப்பின் போது அறிவிக்கப்பட்டது.
- பேரிடர் அபாய மேலாண்மையில் ஐக்கிய நாடுகளின் மிகவும் புகழ்பெற்ற விருது இதுவாகும்.
- 1989 ஆம் ஆண்டில் UNDRR மற்றும் நிப்பான் அறக்கட்டளை ஆகியவை இணைந்து இந்த விருதினை ஏற்படுத்தின.
- 2019 ஆம் ஆண்டின் "சசகாவா விருதின்" கருத்துருவானது, "அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வலிமையான சமுதாயங்களைக் கட்டமைத்தல்" என்பதாகும்.
- இதன் இதர வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| சிட்னேய் புர்டாடோ | சிவில் பாதுகாப்புத் துறையின் இயக்குநர், காம்பினாஸ், பிரேசில் |
| பிஜல் பிரகம்பட் | இந்திய மகிளா வீட்டுவசதி சேவா அறக்கட்டளையின் இயக்குநர் |

## தி இந்து

- தி இந்து குழுமமானது புகழ்பெற்ற சர்வதேச செய்திகள் ஊடக மன்றத்தின் (INMA - International News Media Association) உலக ஊடக விருதுகளில் இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது.
- "வாடிக்கையாளருக்கான சிறந்த சந்தையிடல் தீர்வுகள்" என்ற பிரிவில் தி இந்துவிற்கு இரண்டாம் இடம் அளிக்கப்பட்டுள்ளது.
- மேலும் இது "அச்சு வாசகர்கள் அல்லது பங்கு கொள்வதை ஊக்குவிப்பதற்கான ஒரு சிறந்த யோசனை" என்ற பிரிவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- INMA என்பது செய்தி ஊடக நிறுவனங்கள் எவ்வாறு பார்வையாளர்களுடன் தொடர்பு கொள்கின்றன என்றும் பல் ஊடகச் சூழலில் அவை எவ்வாறு வருவாய் அதிகரிப்பை உருவாக்குகின்றன என்றும் கண்டறிகின்ற சந்தையில் முன்னணியில் உள்ள செய்தி ஊடக நிறுவனங்களின் ஒரு உலகளாவிய சமூகமாகும்.

## டேக் ஹமார்ஸ்க்ஜோல்டு விருது

- இராணுவம், காவல் துறை மற்றும் குடிமக்களைச் சேர்ந்த 119 நபர்களில் இந்திய அமைதிப் படை வீரரான இந்திய காவற்துறை அதிகாரி ஜித்தேந்தர் குமார் என்பவர் இந்த ஆண்டின் டேக் ஹமார்ஸ்க்ஜோல்டு விருது வழங்கி கௌரவிக்கப் படவிருக்கின்றார்.
- இது பணியின் போது துணிவுடனும் தியாகத்துடனும் பணியாற்றிச் சேவை செய்பவர்களுக்கு வழங்கப்படும் ஐ.நா.வின் ஒரு உயரிய விருதாகும்.
- இவர் மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோவில் நடைபெற்ற போரில் ஐ.நா.வின் அமைதி நிலைப்படுத்துதல் திட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது உயிரிழந்தார்.
- 1997 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த விருதானது ஐக்கிய நாடுகளின் இரண்டாவது பொதுச் செயலாளரான டேக் ஹமார்க்ஸ்ஜோல்டு என்பவரின் நினைவாக வழங்கப்படுகின்றது.

- இவர் 1961 ஆம் ஆண்டில் காங்கோ போரின் சமயத்தில் போர் நிறுத்தப் பேச்சு வார்த்தைக்காகச் செல்லும் போது ஏற்பட்ட விமான விபத்தில் உயிரிழந்தார்.

### *இந்திய அமைதிப் படைத் திட்டங்கள்*

**Fact Box**

India is the fourth largest contributor of uniformed personnel to the UN peacekeeping.

India mission first assisted in Korea War, 1950-54.

39 personnel of the Indian contingent laid down their lives in Congo War 1960 -64

It currently contributes more than 6,400 military and police personnel to the UN peace operations.

They serve in countries like Abeyi, Cyprus, Congo, Haiti, Lebanon, West Asia, South Sudan and Western Sahara.

So far India has taken part in 43 Peacekeeping missions with a total contribution exceeding 180,000 troops


## உதயமாகும் சூரியன்

- ஜப்பானின் இரண்டாவது உயரிய தேசிய விருதான "உதயமாகும் சூரியன், தங்கம் மற்றும் வெள்ளி நட்சத்திரம் ஆகியவற்றின் ஆணை" என்ற விருதுக்கு முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளரான ஷியாம் சரண் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த விருது ஜப்பானைச் சேர்ந்த அரசரான மெய்ஜி என்பவரால் 1875 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது இராணுவப் பணி மற்றும் பொதுப் பணியில் சிறப்பாக விளங்கியதற்காக வழங்கப்படுகின்றது.
- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே பரஸ்பர உறவுகளை மேம்படுத்தியதற்காகவும் யுக்திசார் உறவுகளை வலுப்படுத்தியதில் இவரின் பங்களிப்பிற்காகவும் இவர் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட விருக்கின்றார்.
- இவர் 2004 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் வெளியுறவுச் செயலாளராகப் பணியாற்றினார்.
- இந்தக் காலகட்டத்தில் இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையேயான உறவை "யுக்திசார் பங்காளர்" என்ற நிலைக்கு உயர்த்துவதற்கு இவர் மிக முக்கியப் பங்காற்றினார்.
- 1988 ஆம் ஆண்டில் ஜப்பானில் நடத்தப்பட்ட "இந்தியத் திருவிழா" என்பது இவரது பங்களிப்புகளில் உள்ளடங்கும்.

## மேன்புக்கர் சர்வதேச விருது

- "விண்வெளிப் பொருட்கள்" என்ற புத்தகத்திற்காக மேன்புக்கர் சர்வதேச விருதை ஓமனைச் சேர்ந்த எழுத்தாளரான ஜோகா அல்ஹார்தி என்பவர் வென்றுள்ளார்.
- இந்த நாவலானது "நிலவின் பெண்மணிகள்" என்ற புத்தகமாக 2010 ஆம் ஆண்டில்

முதன்முதலில் வெளியிடப்பட்டது.




- இந்த விருதைப் பெறும் முதல் அராபிய மொழி எழுத்தாளர் இவராவார்.
- மேன்புக்கர் சர்வதேசப் பரிசு என்பது தி மேன் குழுமத்தினால் வழங்கப்படும் ஒரு சர்வதேச இலக்கிய விருதாகும்.
- இந்த விருதானது 50,000 பவுண்டுகள் அல்லது 64,000 அமெரிக்க டாலர்கள் என்ற நிதித் தொகையைக் கொண்டிருக்கும். இது வெற்றி பெற்ற படைப்பிற்கு வழங்கப்படும். இந்த விருதானது எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஆகியோர்களுக்கிடையே சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும்.
- ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளரான மாரிலின் பூத் என்பவருடன் ஜோக் அல்ஹார்தி இந்த விருதைப் பகிர்ந்து கொள்ளவிருக்கின்றார்.
- புனைவுக் கதைக்கான மேன்புக்கர் பரிசானது இதே குழுமத்தினால் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது.

## ஐக்கிய நாடுகளின் உயரிய விருது

- ஐ.நா.வின் உயரிய அமைதிக் காப்பு விருதான "தனித்துவமான துணிவிற்கான கேப்டன் பேய் டயக்னி விருது" மறைந்த மலாவிய வீரரான ஜான்சி சிட்டிடி என்பவருக்கு வழங்கப்பட்டது.
- காங்கோவில் எபோலா வைரஸ் பரவுதலைத் தடுப்பதற்கான ஐ.நா.வின் நடவடிக்கையின் போது ஒரு கும்பலிடமிருந்து தனது சக வீரரைக் காப்பாற்றி, அந்த கும்பலுக்கு எதிராகப் போரிட்ட போது இவர் உயிரிழந்தார்.

### *விருது பற்றி*

- தனித்துவமான துணிவிற்கான கேப்டன் பேய் டயக்னி விருதானது ஐ.நா.வினால் 2014 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- ருவாண்டாவிற்கான ஐ.நா. திட்டம் என்ற முன்னாள் திட்டத்தில் (UN Mission in Rwanda - UNAMIR) கேப்டன் பேய் பணியாற்றினார். 1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற இனப் படுகொலையின் போது ஆயிரக்கணக்கான ருவாண்டா மக்களை அவர் காப்பாற்றினார்.



## அபேல் பரிசு

- டெக்சாஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கரேன் உஹ்லென்பெக் எனும் பேராசிரியர் அபேல் பிரிசு வழங்கப்பட்டு இருக்கின்றார்.
- இது கணிதத் துறையில் வழங்கப்படும் பெருமைமிகு விருதுகளில் ஒன்றாகும். இது கணிதத்திற்கான நோபல் பரிசு என கருதப்படுகின்றது.




- இவ்விருதை வென்ற முதலாவது பெண்மணியாகவும் ஒரே பெண்மணியாகவும் இவர் உருவெடுத்திருக்கின்றார்.
- இது நார்வே நாட்டுப் பணமான குரோனரில் 6 மில்லியன் அளவிற்கான ஒரு பரிசைக் கொண்டிருக்கின்றது (~£530,000).

### *துவக்கம்*

- அபேல் பரிசு முதலில் 1899 ஆம் ஆண்டில் சோபஸ் லை என்பவரால் முன்மொழியப்பட்டது.
- கணிதத்திற்காக நோபல் பரிசு கிடையாது என்று தெரிந்த பிறகு இவர் இவ்விருதை முன்மொழிந்தார்.
- 2002 ஆம் ஆண்டில் அபேல் பரிசு ஆரம்பிக்கப்பட்டது.

- நார்வே நாட்டுக் கணிதவியலாளரான நீல்ஸ் ஹென்ரிக் அபேல் என்பவரது 100வது பிறந்த தின ஆண்டு விழாவை அனுசரிப்பதற்காக இது வழங்க ஆரம்பிக்கப்பட்டது.
- அவரின் பெயரால் இப்பரிசு நார்வே அறிவியல் மற்றும் இலக்கியக் கழகத்தால் பெயரளிக்கப்பட்டிருக்கின்றது. (1760 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது)

## சைலேஷ் தினாய்கர்

- படைத் தளபதி சைலேஷ் தினாய்கர் என்பவர் ஐ.நாவின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸால் தெற்கு சூடானுக்கான ஐ.நா திட்டத்தின் (UN Mission in South Sudan - UNMISS) படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த மாதத்தில் UNMISS படைத் தலைவர் என்ற பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ள ருவாண்டாவைச் சேர்ந்த படைத் தலைவரான பிரான்க் காமன்சி என்பவருக்கு அடுத்து இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- இது இரண்டாவது மிகப் பெரிய அமைதிக் காப்பு நடவடிக்கையாகும்.
- இது சூடானிலிருந்துத் தெற்கு சூடான் விடுதலை பெற்ற பின்பு 2011 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இவர் UNMISS-ல் 2400 இந்திய வீர்கள் உள்பட 16,000 அமைதிப் படை வீரர்களை வழி நடத்த விருக்கின்றார்.
- 1983 ஆம் ஆண்டில் இந்திய இராணுவ மையத்தில் பட்டப் படிப்பு முடித்த இவர், தனது தன்னிகரில்லாத சேவைக்காக சேனா விருது மற்றும் விஷிஷ்த சேவா விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

### *தற்போதைய நிலை*

- இவர் தற்பொழுது மஹோவில் அல்லது டாக்டர் அம்பேத்கர் நகரில் உள்ள இந்திய இராணுவ காலாட் படைப் பள்ளியின் தலைவராகப் பணியாற்றுகின்றார்.
- மத்தியப் பிரதேசத்தின் மஹோவில் உள்ள இராணுவப் பள்ளியானது இந்திய இராணுவத்தின் மிகப்பெரிய மற்றும் பழமையான இராணுவப் பயிற்சி மையமாகும்.
- இராணுவப் பள்ளியின் ஒரு பகுதியான இராணுவ துப்பாக்கிச் சுடுதல் பிரிவின் கீழ் இயங்கும் தேசிய துப்பாக்கி சுடுதல் அணிக்கும் இந்த நிறுவனம் பயிற்சியளிக்கின்றது.

## லீ ஜோங் – ஊக் விருது

- 2019 ஆம் ஆண்டின் பொதுச் சுகாதாரத்திற்கான டாக்டர் லீ ஜோங்-ஊக் நினைவு விருதை இந்திய மருத்துவ ஆராய்ச்சி ஆணையப் பொது இயக்குநரகப் பேராசிரியரான பால்ராம் பார்கவா என்பவர் பெற்றுள்ளார்.
- ஜெனீவாவில் நடைபெற்ற 72-வது உலக சுகாதார சபைக் கூட்டத்தின் போது இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- தில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் இருதய நோய் நிபுணரான டாக்டர் பார்கவா என்பவருக்கு மருத்துவர், புத்தாக்கவியலாளர், ஆராய்ச்சியாளர் மற்றும் பயிற்சியாளர் ஆகியவற்றில் சாதனைகள் புரிந்ததற்காக இவ்விருது வழங்கப்பட்டது.

*இந்த விருதைப் பற்றி*

- பொதுச் சுகாதாரத்திற்கான டாக்டர் லீ ஜோங்-ஊக் நினைவு விருதானது 2008 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- பொதுச் சுகாதாரத்திற்கு தலைசிறந்த பங்களிப்பை ஆற்றிய தனிநபர்கள், நிறுவனங்கள், அரசு சாரா மற்றும் அரசு சார் அமைப்புகளுக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது.
- இவ்விருதானது "நிறுவனரிடமிருந்து" ஒரு கேடயம் மற்றும் 1,00,000 டாலருக்கு அதிகமில்லாத நிதி ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- WHO-ன் கீழ் வழங்கப்படும் இதர நிரந்தர விருதுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| The Sasakawa Health Prize | Ihsan Dogramaci Family Health Foundation Prize |
| United Arab Emirates Health Foundation Prize | The State of Kuwait Prize for Research in Health Promotion |

## 9 டாட்ஸ் விருது

- இந்திய எழுத்தாளரான அன்னி சைதி என்பவர் 2019 ஆம் ஆண்டிற்கான 9 டாட்ஸ் விருதின் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- 9 டாட்ஸ் விருது என்பது சமகால சமூகப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான படைப்பாக்கக் கருத்திற்காக வழங்கப்படும் ஒரு விருதாகும்.



- இந்த விருதின் பெயரானது கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைத் தவிர்த்து அதிக அளவில் சிந்தித்து எழுதும் திறன் கொண்ட ஒரு பக்கவாட்டில் சிந்தித்து விடையளிக்கும் புதிரான 9 டாட்ஸ் புதிரைக் குறிக்கின்றது.
- இந்த விருதானது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஊடகம் ஆகியவற்றின் ஆதரவுடன் கடாஸ் விருது அறக்கட்டளையினால் வழங்கப்படுகின்றது.

## 2018 – 19 ஆம் ஆண்டின் உலக ஆசியர்

- பெங்களூருவைச் சேர்ந்த மருத்துவரான ஹேமா திவாகர் என்பவருக்கு “2018-19 ஆம் ஆண்டின் உலக ஆசியர்” என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இவர் 2019 ஆம் ஆண்டின் ஆசிய மற்றும் சமூக மன்றக் கூட்டத்தின்போது “சமூகம் மற்றும் நாட்டிற்கு ஆற்றிய பணி” என்ற பிரிவில் இவ்விருதைப் பெற்றார்.
- “ஆண்டின் உலக ஆசியர்” என்ற விருதானது ஆண்டுதோறும் ஆசியா ஒன் என்ற பத்திரிக்கை வழங்கும் தலைமை விருதாகும்.

## ஜெர்மன் வேதியியல் விருது – அன்குர் பட்டவர்தன்

- ‘எல்சேவியர் அறக்கட்டளையின் ISC3 பசுமை மற்றும் நீடித்த வேதியியல் போட்டி’ என்ற ஒரு சர்வதேசப் போட்டி ஜெர்மனியில் சமீபத்தில் நடைபெற்றது.
- இந்தப் போட்டியில் பூனேவைச் சேர்ந்த அன்குர் பட்டவர்தன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.




- “மகரந்தச் சேர்க்கை மற்றும் வளமான சுற்றுச் சூழலுக்கான பட்டாம் பூச்சியைக் கவருதல்” என்ற தலைப்பு கொண்ட இவரது திட்டம் வேதியியல் மற்றும் சுற்றுச் சூழலைப் பற்றிக் கூறுகின்றது.

## அனிதா பாட்டியா - ஐ.நா. துணை நிர்வாக இயக்குநர்

- ஐ.நா. பொதுச் செயலாளர் அண்ட்டோனியோ குட்டேரஸ் என்பவர் வள மேலாண்மை, நீடித்த தன்மை மற்றும் பங்குரிமை ஆகியவற்றிற்கான பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான ஐ.நா. நிறுவனத்தின் (United Nations Entity for Gender Equality and the Empowerment of Women (UN-Women) for Resource Management, Sustainability and Partnerships) துணை நிர்வாக இயக்குனராக அனிதா பாட்டியாவை நியமித்துள்ளார்.
- இதற்கு முன்பு ஐக்கிய நாடுகளின் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் ஐ.நா. பெண்கள் அமைப்பின் துணை நிர்வாக இயக்குனராக இந்தியத் தூதர் மற்றும் பாலின சமத்துவ ஆர்வலரான லட்சுமி பூரி என்பவர் பணியாற்றினார்.

# விளையாட்டுச் செய்திகள்

## மெரிலிபோன் கிரிக்கெட் சங்கம் (MCC)

- 2019 ஆம் ஆண்டு மே 01 அன்று இங்கிலாந்தின் மெரிலிபோன் கிரிக்கெட் சங்கத்தின் (Marylebone Cricket Club - MCC) தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்ககாரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- இச்சங்கத்திற்குத் தலைமையேற்கும் முதலாவது பிரிட்டீஷ் அல்லாத நபராக சங்ககாரா உருவெடுத்துள்ளார்.

*வரலாறு*

- 1787 ஆம் ஆண்டில் மெரிலிபோன் கிரிக்கெட் சங்கம் தொடங்கப்பட்டது.
- MCC என்பது உலகின் மிகவும் புகழ்பெற்ற கிரிக்கெட் மைதானமான தி லார்ட்ஸின் உரிமையாளர் ஆகும்.
- MCC என்பது கிரிக்கெட் சட்டங்களின் காப்பாளர் மற்றும் காப்புரிமை உரிமையாளர் ஆகும்.
- இது 1993 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் உலகக் கிரிக்கெட்டை நிர்வகித்தது.
- 1993 ஆம் ஆண்டில் ஐசிசி (ICC – International Cricket Council – சர்வதேச கிரிக்கெட் குழுமம்) ஆனது MCCயிடமிருந்து உலக கிரிக்கெட் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டது.

## ஆசிய சாலை பாரா - மிதிவண்டி ஓட்டுதல் சாம்பியன் 2019

- ஆசிய சாலை பாரா - மிதிவண்டி ஓட்டுதல் சாம்பியன் ஆனது உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் 28 நாடுகளின் பங்கேற்புடன் நடத்தப் பட்டது.
- இந்தியாவைச் சேர்ந்த பாரா-மிதிவண்டி ஓட்டுநர்கள் ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- திவ்ஜி ஷா C5 பிரிவில் தொடர்ச்சியாக தனது மூன்றாவது வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- ஆசிய பாரா விளையாட்டு போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்றவரான குர்லால் சிங் ஆசிய அளவிலான விளையாட்டுகளில் C4 பிரிவில் வெண்கலத்தை வென்ற முதல் மிதிவண்டி ஓட்டுநராகியுள்ளார்.
- மகாராஷ்டிராவைச் சேர்ந்த கை மிதிவண்டி ஓட்டுநரான சுதாகர் மராத்தே H5 பிரிவில் இந்தியாவிற்காக வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.




### வெர்ஜின் மணி லண்டன் மாரத்தான் - 2019

- இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டிற்கான புகழ்பெற்ற வெர்ஜின் மணி லண்டன் மாரத்தான் போட்டியில் இந்திய மாரத்தான் வீரரான நிதேந்திரா சிங் ராவத் 2 மணி நேரம் 15 நிமிடம் 59 வினாடிகளில் தூரத்தைக் கடந்து 27வது நபராக போட்டியை முடித்தார்.
- இது இவரின் வாழ்நாள் பந்தயங்களில் 4வது வேகமான மற்றும் இந்த பருவத்தின் இரண்டாவது வேகமான பந்தயமாகும்.
- 32 வயதான ராவத் செப்டம்பர் - அக்டோபரில் தோகாவில் நடைபெறவுள்ள உலக சாம்பியன்ஷிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.
- இந்த மாராத்தான் போட்டியில் தொடர்ந்து 4வது முறையாக கென்யாவைச் சேர்ந்த எலியுட் இப் சோஜ் வெற்றி பெற்றார்.

### ஆசிய இளையோர் மகளிர் கைப்பந்து சாம்பியன்ஷிப் - 2019

- 2019 ஆம் ஆண்டின் ஆசிய இளையோர் மகளிர் கைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியின் 8வது பதிப்பானது ஆகஸ்ட் 21 முதல் 30 வரை ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ளது.
- இப்புகழ்மிக்க போட்டியை ஜெய்ப்பூர் நடத்துவது இதுவே முதன்முறையாகும்.
- 2015 ஆம் ஆண்டு இப்போட்டியை இந்தியா நடத்தி அதில் 7-வது இடத்தைப் பெற்றது.
- இது ஆசிய கைப்பந்து கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.
- இதுவரை நடைபெற்ற 7 போட்டிகளிலும் சாம்பியன் பட்டம் வென்றுள்ள தென்கொரியாவானது இப்போட்டித் தொடரில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

### ஆசியன் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்

- கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசிய தனிநபர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் ஜோஸ்னா சின்னப்பா மற்றும் சவ்ரவ் கோசல் ஆகியோர் சாம்பியன்களாக உருவெடுத்துள்ளனர்.
- இது தொடர்பான தகவல்களுக்கு இங்கே சொடுக்கவும். (தேதி 05-04-2019)

https://www.tnpscthervupettagam.com/ta/%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B7%E0%AF%8D/

## குத்துச் சண்டை

- போலந்தின் வார்ஷாவில் நடைபெற்ற 36-வது பெலிக்ஸ் ஸ்டாம் சர்வதேசக் குத்துச் சண்டைப் போட்டித் தொடரில் இந்தியக் குத்துச் சண்டை வீரர்கள் 6 பதக்கங்களை வென்றுள்ளனர்.
- 52 கிலோ கிராம் எடைப் பிரிவில் கவுரவ் சோலங்கி இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம் கவ்லே என்பவரை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார்.
- 60 கிலோ கிராம் எடைப் பிரிவில் கௌசிக் என்பவர் மொராக்கோவைச் சேர்ந்த முகமது கம்மோத் என்பவரை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றார்.
- இதர இந்தியக் குத்துச் சண்டை வீரர்கள் ஒரு வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

## பிரீமியர் லீக்

- மான்செஸ்டர் நகரமானது தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆங்கில பிரீமியர் லீக் (EPL - English Premier League) கால்பந்துப் பட்டத்தை வென்றுள்ளது. இந்த லீக் தொடரில் லீவர்பூல் அணியானது இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- "தி பிரீமியர் லீக்" என்று அழைக்கப்படும் ஆங்கில பிரீமியர் லீக்கானது 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று தொடங்கப்பட்டது.



- இது இங்கிலாந்தில் கால்பந்து தொடரின் முன்னணி நிலையைக் குறிக்கின்றது.
- EPL ஆனது 20 சங்கங்களினால் பங்கு கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு அணியும் ஒட்டுமொத்தமாக 38 போட்டிகளில் விளையாடும் (ஒரு அணியானது உள்ளூர் மற்றும் வெளியூர் போட்டிகளில் 19 அணியினரை எதிர்த்து விளையாடும்).
- ஒவ்வொரு தொடரும் ஆகஸ்ட் முதல் மே மாதம் வரை நடைபெறுகின்றது.

## வீரர்களைக் கண்காணித்தல்

- பிசிசிஐ ஆனது விளையாட்டு வீரர்களைக் கண்காணிப்பதற்காக தடகள மேலாண்மை அமைப்பு (AMS - Athlete Management System) என்ற ஒரு மென்பொருளையும் புவியிடங்காட்டி பொருத்தப்பட்ட அணியத் தகுந்த சாதனங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- AMS ஆனது விளையாட்டு வீரர்களின் சோர்வு மற்றும் காயங்கள் குறித்து கண்காணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆசியக் கோப்பைத் தொடரிலிருந்துப் பயன்படுத்தப் படுகின்றது.
- நீண்ட நாட்கள் நடைபெறும் ஐபிஎல் தொடரின் போது வீரர்களின் மேலாண்மை மிக முக்கியமான ஒன்றாக மாறியது.
- AMS ஆனது செயற்கை நுண்ணறிவைச் சார்ந்துள்ளது. இது வீரர்களுக்குத் தேவைப்படும் உறக்கம் குறித்தும் கண்காணிக்கும்.
- பிசிசிஐ ஆனது 2019 ஆம் ஆண்டின் உலகக் கோப்பைக்கான தயார் நிலை மற்றும் ஒவ்வொரு வீரரின் தற்போதைய தகுதிநிலைத் தகவல்களைப் பராமரிக்கின்றது.

## சூதாட்டம் மற்றும் ஊழல்

- உலகக் கோப்பை வரலாற்றில் முதன்முறையாக, நடைபெறவிருக்கும் 2019 ஆம் ஆண்டின் ஐசிசி உலகக் கோப்பைப் போட்டியில் பங்கேற்கவிருக்கும் ஒவ்வொரு நாடும், தன் அணியுடன் ஒரு பிரத்தியேக ஊழல் எதிர்ப்பு அதிகாரியைக் கொண்டிருக்கும்.
- அவர்கள் பயிற்சி ஆட்டங்களில் தொடங்கிப் போட்டியின் இறுதி ஆட்டம் வரை அந்த அணியில் இருப்பர்.
- அவர்கள் விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதியிலேயே தங்கவிருக்கின்றனர். மேலும் வீரர்கள் பயிற்சிக்காகவும் போட்டிகளுக்காகவும் பயணம் மேற்கொள்ளும் போது இவர்களும் உடன் செல்லவிருக்கின்றனர்.

## பெண் நடுவர்கள்

- வரலாற்றில் முதல்முறையாக ஆண்கள் விளையாடும் போட்டியில் நடுவர்கள் அனைவரும் பெண்களாக இருப்பர் என்று ஆசியக் கால்பந்து கூட்டமைப்பு (Asian Football Confederation - AFC) சமீபத்தில் அறிவித்துள்ளது.
- இவர்கள் ஆண்கள் காண்டினென்டல் சங்கக் கோப்பைப் போட்டியில் நடுவர்களாகப் பங்கு பெறவிருக்கின்றனர்.
- இந்தத் தனித்துவ சிறப்பைப் பெறும் பெண் நடுவர்கள் பின்வருமாறு : ஜப்பானைச் சேர்ந்த நோமி தெசிரோஹி, மோஹோடோ போசோனோ மற்றும் யோஷிமி யாமாசிட்டா ஆகியோராவர்.
- ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பெண்மணிகளான அலைசன் ப்ளைன் மற்றும் சாராக் கோ ஆகியோர் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற AFC கோப்பைப் போட்டியில் துணை நடுவர்களாக பங்கு பெற்ற முதலாவது பெண்மணிகளாக உருவெடுத்துள்ளனர்.

## IAAF உலகத் தொடர் ஓட்டம் 2019

- சர்வதேச தடகள கூட்டமைப்புச் சங்கத்தின் (International Association of Athletics Federation -IAAF)

2019 ஆம் ஆண்டிற்கான உலகத் தொடர் ஓட்டமானது ஜப்பானின் யோகோஹாமாவில் உள்ள நிசான் மைதானத்தில் நடைபெற்றது.

- இரண்டு நாட்கள் நடைபெற்ற இப்போட்டியில் 43 நாடுகள் பங்கேற்றன.
- இந்தப் போட்டியானது சர்வதேச தடகள கூட்டமைப்புச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டியானது கடைசியாக 2017 ஆம் ஆண்டில் பஹாமாஸ் தீவில் உள்ள நசாயுவில் நடைபெற்றது.




## புதிய பாட்மிண்டன் வடிவம்

- உலக பாட்மிண்டன் கூட்டமைப்பானது (Badminton World Federation - BWF) பாட்மிண்டன் விளையாட்டின் இரண்டு புதிய முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அவையாவன
    - ஏர் பாட்மிண்டன்
    - டிரிபில்ஸ்
- பாரம்பரியமாக விளையாடப்பட்டு வரும் பேட்மிண்டன் போட்டியானது (பூப்பந்து) ஒரு உள்ளரங்க விளையாட்டாகும். ஆனால் ஏர் பேட்மிண்டன் விளையாட்டானது பரந்த வெளி அரங்கில் விளையாடப்படுவதாகும்.
- ஏர் பேட்மிண்டன் விளையாட்டு மற்றும் ஒரு புதிய இறகுப் பந்து விளையாட்டு ஆகியவை சீனாவின் குவான்சோவில் தொடங்கப்பட்டன.
- வெளிப்புற முறையிலான விளையாட்டானது மண் மற்றும் சிறிய பரிமாணமுள்ள திடல்கள் போன்ற அனுமதிக்கப்பட்ட மைதானங்களில் வெறுங்காலுடன் விளையாடப்படுவதாகும்.
- "டிரிபில்ஸ்" முறையில் ஒவ்வொரு அணியும் 3 வீரர்களைக் கொண்டிருக்கும். அவற்றில் ஒருவர் கட்டாயம் மகளிராக இருக்க வேண்டும்.

## அரவிந்த் சிதம்பரம் – சதுரங்கப் பட்டம்

- தேசிய சதுரங்கப் போட்டிகளின் அனைத்துப் பிரிவுகளிலும் ஒரே சமயத்தில் வெற்றியாளராக இருப்பவர் என்ற தனிப்பெரும் சாதனையினை அரவிந்த் சிதம்பரம்

பெற்றுள்ளார்.

- ❖ இவர் மதுரையைச் சேர்ந்தவராவார்.
- ❖ இவர் சமீபத்தில் ஜலந்தரில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளில் ரேபிட் (Rapid) மற்றும் பிலிட்ஸ் (Blitz) பிரிவுகளில் பட்டங்களை வென்றுள்ளார்.
- ❖ இவர் 2018 ஆம் ஆண்டு டிசம்பரில் ஜம்முவில் நடைபெற்ற தேசிய ஓபன் ஆடவர் சாம்பியன் பட்டத்தையும் வென்றுள்ளார்.



## கிரையோ பிரச்சாரம்

- ❖ ஆண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் துவங்கியதையடுத்து கிரையோ (CRIIO) என்ற ஒரு பிரச்சாரத்தை சர்வதேச கிரிக்கெட் ஆணையம் துவங்கியுள்ளது.
- ❖ கிரையோ என்பது ஒவ்வொருவரும் அவரவர் இருக்கும் இடத்தில் அவரவர் வழியில் கிரிக்கெட் விளையாடுவதைக் கொண்டாடுகிறது. உலகக் கிரிக்கெட் அவர்களை கிரையோ என்ற பிரச்சாரத்தின் கீழ் ஓரினமாகக் கருதுகிறது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச ஜாஸ் (ஒரு வகை இசை) தினம்

- ❖ ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 30 அன்று சர்வதேச ஜாஸ் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இத்தினமானது ஜாஸ் குறித்தும் உலகெங்கிலும் உள்ள மக்களை ஒன்றிணைப்பதில் அதன் முக்கியப் பங்கு குறித்தும் எடுத்துரைப்பதற்கு முயற்சிக்கின்றது.
- ❖ 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது தனது அதிகாரப்பூர்வ நாட்காட்டியில் சர்வதேச ஜாஸ் தினத்தை அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்தது.
- ❖ யுனெஸ்கோ அமைப்பானது ஜாஸ் தினக் கொண்டாட்டத்தை 2005 ஆம் ஆண்டின் "கலாச்சார வெளிப்பாட்டு பன்முகத் தன்மையின் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு" மீதான ஒப்பந்தத்துடன் (Convention on the Protection and Promotion of the Diversity of Cultural Expressions) தொடர்புபடுத்துகின்றது.

## மே தினம் – மே 01

- ❖ மே 01 ஆம் தேதியானது சர்வதேசத் தொழிலாளர் தினமாக அனுசரிக்கப்படுகின்றது. இது மே தினம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- ❖ இத்தினமானது தொழிலாளர்கள் மற்றும் பணிக்குச் செல்வோர்களை கொண்டாடுகிறது.
- ❖ இந்தியாவில் முதலாவது தொழிலாளர் தினமானது எம். சிங்காரவேலர் என்பவரால் சென்னையில் 1923 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- ❖ இந்தியாவின் முதலாவது தொழிற் சங்கத்தை சிங்காரவேலர் தொடங்கினார்.
- ❖ இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடங்கியவர்களில் சிங்காரவேலரும் ஒருவராவார்.

*வரலாறு*

- ❖ தொழிலாளர் தினமானது அமெரிக்காவில் தொழிலாளர் சங்க இயக்கத்தின் போது தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ 1886 ஆம் ஆண்டு மே 01 அன்று சிகாகோ நகரில் நடைபெற்ற ஹேமார்க்கெட் விவகாரத்தை நினைவு கூறுவதற்காக மே 01 ஆம் தேதி சர்வதேசத் தொழிலாளர்கள் தினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த நாளில் ஒரு நாளில் 15 மணி நேரத்திற்குப் பதிலாக 8 மணி நேரத்தைப் பணி நேரமாக வேண்டி பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது.
- ❖ சிகாகோ காவல் துறையானது அங்கு துப்பாக்கிச் சூடு நடத்தி பலரைக் கொன்றது.

## உலக கடவுச் சொல் தினம் – மே 02

- ❖ ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் முதலாவது வியாழன் அன்று உலக கடவுச் சொல் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இத்தினமானது சிறந்த கடவுச்சொல் பாதுகாப்பின் தேவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதைக் குறிக்கின்றது.
- ❖ இன்டெல் பாதுகாப்பு நிறுவனம் 2013 ஆம் ஆண்டு மே மாதத்தில் முதலாவது உலகக் கடவுச்சொல் தினத்தை அனுசரிப்பதற்கு ஒரு முன் முயற்சியை எடுத்தது.
- ❖ அவாஸ்ட் பாதுகாப்பு நிறுவனத்தின்படி, ஒன்றிணைக்கப்பட்ட உலகளாவிய மக்கள் தொகையில் 50 சதவிகிதத்தினர் பல்வேறு கணக்குகளுக்கு ஒரே கடவுச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

## சர்வதேசத் தீயணைப்பாளர்கள் தினம் – மே 04

- ❖ ஒவ்வொரு ஆண்டும் மே 04 அன்று சர்வதேசத் தீயணைப்பாளர்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இது 1999 ஆம் ஆண்டு ஜனவரி 04 அன்று ஆஸ்திரேலியாவினால் உலகம் முழுவதும் மின்னஞ்சலில் அனுப்பப்பட்ட பரிந்துரைக்குப் பின்பு ஏற்படுத்தப்பட்டது.
- ❖ இந்த முக்கியமான நாளில் ஆஸ்திரேலியாவின் புதர் தீயில் 5 தீயணைப்பு வீரர்கள் உயிரிழந்தனர்.
- ❖ இந்த நாளானது தீயணைப்பாளர்களின் உயிர்த் தியாகங்களை நினைவு கூர்கின்றது.

- இத்தினமானது ஒவ்வொரு நாளும் உயிர்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக தங்கள் உயிரைப் பொருட்படுத்தாமல் செயல்படும் தீயணைப்பு வீரர்களுக்காக அர்ப்பணிக்கப்படுகின்றது.
- சர்வதேச தீயணைப்பாளர்கள் தினத்தின் குறியீட்டில் உள்ள சிவப்பு மற்றும் நீல நிறங்களானது முறையே நெருப்பு மற்றும் நீரைக் குறிக்கின்றது.

## உலக பத்திரிக்கை சுதந்திர தினம் – மே 05

- ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 05 ஆம் தேதியன்று உலக பத்திரிக்கை சுதந்திர தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டின் கருத்துருவானது, “மக்களுக்கான ஊடகம் : தேர்தல் நேரத்தில் போலித் தகவல் பரப்பப்படும் போது பத்திரிக்கைத் துறை” என்பதாகும்.
- இந்தக் கருத்துருவானது பின்வருவனவற்றை விவாதிக்கின்றது.
    - தேர்தல் காலத்தில் ஊடகங்களினால் எதிர்கொள்ளப்படும் தற்போதைய சவால்கள்
    - அமைதி மற்றும் சமரச செயல்முறைகளைஅதிகரிப்பதில் ஊடகத்தின் திறன்.
- யுனெஸ்கோவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உலக பத்திரிக்கை சுதந்திர தினமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் பறை சாற்றப்பட்டது.
- மே மாதம் 03 ஆம் தேதியானது விண்ட்ஹூக் பிரகடனத்தின் நினைவு தினமாகும்.
- உலகெங்கிலும் இந்தத் தினமானது உலக பத்திரிக்கை சுதந்திர தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- விண்ட்ஹூக் பிரகடனம் என்பது 1991 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்க தினசரி பத்திரிக்கைகளால் அறிவிக்கப்பட்ட பத்திரிக்கை சுதந்திரக் கொள்கைகளின் அறிக்கையாகும்.

***தகவல்***

- சர்வதேசப் பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, பத்திரிக்கை சுதந்திரத்தைக் காப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் 95 பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை 18 பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
- “ரிப்போர்ட்டர்ஸ் சன்ஸ் பிராண்டியர்ஸ்” (எல்லைகளைக் கடந்த பத்திரிக்கை நிருபர்கள்) என்ற அமைப்பினால் வெளியிடப்பட்ட பத்திரிக்கை சுதந்திரக் குறியீட்டில் மொத்தமுள்ள 180 நாடுகளில் 140-வது இடத்தில் இந்தியா தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

## உலக ஆஸ்துமா தினம் – மே 04

- ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் முதலாவது செவ்வாய்க் கிழமை அன்று உலக ஆஸ்துமா தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த வருடாந்திர தினமானது ஆஸ்துமாவிற்கான சர்வதேச முன்னெடுப்பு அமைப்பினால்

ஒருங்கிணைக்கப்படுகின்றது.

- இது உலகம் முழுவதும் ஆஸ்துமாவிற்கான சிகிச்சை மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- உலக ஆஸ்துமா தினத்தின் முதலாவது கொண்டாட்டமானது 1948 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டில் உலக ஆஸ்துமா தினத்தின் கருத்துருவானது, "ஆஸ்துமாவை நிறுத்துதல்" என்பதாகும்.
- இந்தக் கருத்துருவில் உள்ள நிறுத்தமானது "அறிகுறி மதிப்பீடு, சோதனை பதிலெதிர்ப்பு, கவனித்து மதிப்பிடுவது மற்றும் சிகிச்சை முறைக்கு உட்படுதல்" என்பதைக் குறிக்கும்.

## உலக சிரிப்பு (நகைப்பொலி) தினம் - மே 05

- உலக சிரிப்பு தினமானது ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக் கிழமை அன்று நிகழ்கின்றது.
- 1998 ஆம் ஆண்டு மே 10 அன்று இத்தினத்தின் முதலாவது கொண்டாட்டம் மும்பையில் நடத்தப் பட்டது.
- இந்த நிகழ்ச்சியானது டாக்டர் மதன் கட்டாரியா என்பவரால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- இவர் உலகளாவிய நகைப்பொலி யோகா இயக்கத்தின் நிறுவனர் ஆவார்.
- இந்தத் தினத்தின் நோக்கம் சிரிப்பின் மூலம் ஒரு உலகளாவிய சகோதரத்துவம் மற்றும் நட்பு என்ற உணர்வு நிலையைக் கட்டமைப்பதாகும்.
- இந்தியாவிற்கு வெளியே முதலாவது உலக சிரிப்பு தினமானது 2000 ஆம் ஆண்டில் டென்மார்க்கில் உள்ள கோப்பன்ஹேகனில் நடத்தப்பட்டது.

## உலக தடகள விளையாட்டு தினம் – மே 07

- ஒவ்வொரு ஆண்டும் மே 07 அன்று உலக தடகள விளையாட்டு தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.
  - இளைஞர்களிடையே விளையாட்டுகளைப் பிரபலமாக்குதல்
  - பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தடகள விளையாட்டை முதன்மை விளையாட்டாக ஊக்குவித்தல்.
  - தடகள விளையாட்டில் புதிய திறமையுள்ளவர்கள் மற்றும் இளைஞர்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்.
- உலகளாவிய தடகளக் கூட்டமைப்பான "சர்வதேச தடகள மன்றக் கூட்டமைப்புகளின்" (International Association of Athletics Federations - IAAF) முன்னாள் தலைவரான பிரைமோ நெபிலோ என்பவர் 1996 ஆம் ஆண்டில் இத்தினத்தைத் தொடங்கி வைத்தார்.

## உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் – மே 08

- ஒவ்வொரு ஆண்டும் மே 08 ஆம் தேதி உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் அனுசரிக்கப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "#அன்பு" என்பதாகும்.
- இத்தினமானது உதவி தேவைப்படுகின்ற மக்களுக்கு ஈடு இணையற்ற உதவிகளைச் செய்யும் தன்னார்வலர்களை கௌரவிக்கின்றது.
- இந்தத் தினமானது ஹென்றி துனன்ட் என்பவரின் பிறந்த தினமாகும்.
- இவர் 1863 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவின் (ICRC - International Committee of the Red Cross) நிறுவனர் ஆவார்.
- 1901 ஆம் ஆண்டில் முதலாவது நோபல் அமைதிப் பரிசைப் பெற்றவர் இவராவார்.
- 1948 ஆம் ஆண்டு மே 08 அன்று முதலாவது செஞ்சிலுவை தினம் அனுசரிக்கப்பட்டது.
- இது 1984 ஆம் ஆண்டில் "உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம்" என்ற பெயரைப் பெற்றது.

## உலக தாலசீமியா நோய் தினம் - மே 08

- ஒவ்வொரு ஆண்டும் மே 08 ஆம் தேதி உலகம் முழுவதும் உலக தாலசீமியா நோய் (இரத்த அழிவுச் சோகை) தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துருவானது, "உலகளவில் தரமான தாலசீமியா சுகாதாரச் சேவைகளை அணுகல் : நோயாளிகளுக்கான மற்றும் நோயாளிகளுடனான உறவுகளைக் கட்டமைத்தல்" என்பதாகும்.
- தாலசீமியா நோய், அதனை வரும் முன் காத்தல் மற்றும் அதனைப் பரவாமல் தடுத்தல் ஆகியவை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- தாலசீமியா என்பது குறைவான ஹீமோகுளோபினைக் கொண்ட மரபு ரீதியான இரத்தக் கோளாறாகும்.
- இது மத்தியத் தரைக்கடல், தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் வாழும் மக்கள் மற்றும் ஆப்பிரிக்க அமெரிக்கர்களிடையே பொதுவாகக் காணப்படுகின்றது.

## இரண்டாம் உலகப் போரின்போது உயிரிழந்தவர்களின் நினைவு மற்றும் சமரசத்திற்கான நேரம் - மே 08

- 2004 ஆம் ஆண்டில் ஐ.நா. ஆனது மே 08 மற்றும் மே 09 ஆம் தேதிகளை இரண்டாம் உலகப் போரின் போது உயிரிழந்தவர்களின் நினைவு மற்றும் சமரசத்திற்கான தினமாக அறிவித்துள்ளது.
- இத்தினத்தில் ஐ.நா ஆனது இரண்டாம் உலகப் போரின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது அனைத்து உறுப்பினர் நாடுகளும் மரியாதை செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது.
- இந்தத் தினத்தின் கடைபிடிப்பானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

- எதிர்காலத் தலைமுறையினர்களைப் போரிலிருந்துப் பாதுகாத்தல்
- ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு இணங்க அமைதியான வழிகளில் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளுதல்
- அனைத்து நேரங்களிலும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்துதல்.

## உலக சாலைப் பாதுகாப்பு வாரம் - மே 12

- 2019 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் தேதியிலிருந்து 12 ஆம் தேதி வரை 5வது உலக சாலைப் பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டின் கருத்துருவானது, “சாலைப் பாதுகாப்பிற்கான தலைமைப் பண்பு” என்பதாகும்.
- நமது வாழ்வு பாதுகாப்பாக இருந்தால் மட்டுமே சர்வதேச இலக்குகளை அடைய முடியும் என்று ஐ.நா. நம்புகின்றது.
- இது நடைபெற்று வரும் “உயிர்களைப் பாதுகாத்தல் #அதுகுறித்து பேசு” என்ற பிரச்சாரத்தின் மூலம் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
- உலக சுகாதார நிறுவனமானது சாலைப் பாதுகாப்பு வாரத்தின் போது ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது 5 வயது முதல் 29 வயது வரை உள்ள மக்களின் இறப்புக்கு மிக முக்கியக் காரணம் சாலை விபத்துகள் என்று கூறுகின்றது.

Fact Box

- Road accidents claim apprx 1.35 million lives across the world every year.
- Over 50 per cent of these deaths are among vulnerable road users: *Pedestrians, Motorcyclists and Cyclists.*
- Road traffic injury is the eighth leading cause of death among all ages.
- It is also the second leading cause of death among adolescents and young adults aged 15–29

## உலக இடப்பெயர்வு பறவை தினம் - மே 11

- ஒவ்வொரு ஆண்டும் மே 11 அன்று உலக இடப்பெயர்வு பறவை தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது இடப்பெயர்வு பறவைகள் மற்றும் அதன் வாழிடங்களின் பாதுகாப்பின் தேவையை எடுத்துக் காட்டும் ஒரு வருடாந்திர விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சாரமாகும்.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துருவானது, “பறவைகளைப் பாதுகாத்தல்: நெகிழி மாசுபாட்டிற்கான ஒரு தீர்வு” என்பதாகும்.
- பறவைகளினால் உட்கொள்ளப்படும் நெகிழ்வுகளானது பட்டினி குறித்த நீண்டகால

உணர்வைத் தருகின்றது. மேலும் இது எந்தவித ஊட்டச்சத்தும் இல்லாமல் பறவைகளுக்கு வயிறு நிரம்பிய ஒரு உணர்வைத் தருகின்றது.

- ஒவ்வொரு ஆண்டும் நெகிழிப் பொருட்களின் தாக்கத்தினால் இறக்கும் கடற்பறவைகளின் எண்ணிக்கையானது தற்பொழுது 1 மில்லியனாக உள்ளது.




## தேசியத் தொழில்நுட்ப தினம் - மே 11

- மே 11 அன்று இந்தியா முழுவதும் தேசியத் தொழில்நுட்ப தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1998 ஆம் ஆண்டு மே 11 அன்று சக்தி நடவடிக்கை – 98 (பொக்ரான் அணுக்கரு சோதனை) நடத்தப்பட்டது.
- இத்தினத்தில் இந்தியா 3 அணுக்கரு சோதனைகளை நடத்தியது.
- இதைத் தொடர்ந்து அப்போதைய இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் இந்தியாவை ஒரு முழு அணு ஆயுத நாடாக அறிவித்தார்.
- 1998 ஆம் ஆண்டு மே 11 அன்று நிகழ்த்தப்பட்ட மற்ற சாதனைகள்
    - திரிசூல் ஏவுகணையின் வெற்றிகரமான சோதனை
    - பெங்களூருவில் நடத்தப்பட்ட இந்தியாவின் முதலாவது உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட ஹன்சா-3 விமானத்தின் சோதனை.
- இத்தினமானது இந்தியாவின் தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் சாதனைகளை அனுசரிக்கின்றது.
- இந்தியத் தொழில்நுட்ப வளர்ச்சி வாரியமானது இத்தினத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் சிறந்த பங்களிப்பை ஏற்படுத்திய தனிநபர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கி இத்தினத்தை அனுசரிக்கின்றது.

## சர்வதேச செவிலியர் தினம் – மே 12

- சர்வதேச செவிலியர் தினமானது ஒவ்வொரு ஆண்டும் மே 12 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.
- “விளக்குடன் கூடிய பெண்மணி” என்றறியப்படும் ப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் என்பவரின் பிறந்தநாளின் நினைவாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- இவ்வருட சர்வதேச செவிலியர் தினத்தின் கருத்துருவானது, "செவிலியர்கள் – வழிநடத்துவதற்கான குரல் – அனைவருக்கும் நலன்" என்பதாகும்.
- 1935 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சுகாதாரம் மற்றும் கல்வி மற்றும் நல்வாழ்வு துறை அதிகாரியால் முன்மொழியப்பட்ட இத்தினமானது சர்வதேச செவிலியர் குழுவால் 1965 ஆம் ஆண்டில் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது..
- 1974 ஆம் ஆண்டு ஜனவரியில் மே 02 ஆம் தேதி சர்வதேச செவிலியர் தினமாக அனுசரிப்பதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.




## உலகத் தாய்மார்கள் தினம் – மே 12

- ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறன்று உலகத் தாய்மார்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டு இத்தினமானது மே 12 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இது உலகம் முழுவதுமுள்ள அனைத்து தாய்மார்களுக்கும் மரியாதை செலுத்துவதற்காகவும் தாய்மையைக் கௌரவிப்பதற்காகவும் அனுசரிக்கப்படுகின்றது.
- 1872 ஆம் ஆண்டில் எழுத்தாளர் ஜுலியா வார்டு ஹாவ் என்பவர் தாய்மார்கள் தினம் குறித்த ஒரு கருத்தை முதன்முதலில் தெரிவித்ததற்காக அறியப்படுகின்றார்.
- 1908 ஆம் ஆண்டில் அண்ணா ஜார்விஸ் என்பவர், சமூக மற்றும் சுகாதார ஆர்வலரான தனது தாயைக் கௌரவிப்பதற்காக அமெரிக்காவின் தேசிய விடுமுறைக்காக ஒரு பிரச்சாரத்தை மேற்கொண்டார்.
- பிறகு 1914-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் முன்னாள் அதிபரான உட்ரோ வில்சன் தாய்மார்கள் தினம் குறித்த அதிகாரப்பூர்வ ஆவணத்தில் கையெழுத்திட்டு, மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றைத் தாய்மார்கள் தினமாகத் தேர்ந்தெடுத்தார். இவர் தாய்மார்களைக் கௌரவிப்பதற்காக இத்தினத்தை தேசிய விடுமுறையாக அறிவித்தார்.
- பின்னாளில் தாய்மார்கள் தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுவது நடைமுறைக்கு வந்தது.


## சர்வதேச குடும்பங்கள் தினம் - மே 15

- ஒவ்வொரு ஆண்டும் மே 15 ஆம் தேதி சர்வதேச குடும்பங்கள் தினம் (IDF - International Day of Families) அனுசரிக்கப்படுகின்றது.

- 1993 ஆம் ஆண்டில் ஐ.நா பொதுச் சபையானது இத்தினத்தின் முதலாவது அனுசரிப்பை பறைசாற்றியது.
- இத்தினம் 1996 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது குடும்பங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் சர்வதேச சமூகத்தை சமுதாயத்தின் அடிப்படை அலகுகளாக மாற்றுவது மற்றும் குடும்பப் பிணைப்புகளின் மதிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டில் IDF-ன் கருத்துருவானது, “குடும்பங்கள் மற்றும் பருவநிலை நடவடிக்கை: SDG 13 மீதான கவனம்” என்பதாகும்.

## தேசிய டெங்கு தினம் - மே 16

- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தினால் தொடங்கப்பட்ட தேசிய டெங்கு தினமானது வருடந்தோறும் மே 16 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- வைரஸ் நோயான டெங்கு மற்றும் அதன் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இந்தியாவில் தொற்றுயிரிகளால் பரவும் நோய்த் தடுப்புத் திட்டத்திற்கான தேசிய இயக்குநரகமானது டெங்குவின் கண்காணிப்பு மற்றும் தடுப்பிற்கான முதன்மை மையமாகும்.
- 2016 ஆம் ஆண்டில் இந்திய அரசானது “India Fights Dengue” எனும் கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியது.
- 2017 ஆம் ஆண்டில் அதிகபட்சமான டெங்கு காய்ச்சல் தொற்றானது தமிழ்நாட்டிலிருந்துப் பதிவு செய்யப்பட்டது.
- டெங்கு காய்ச்சலானது ஏடிஸ் எஜிப்தி (லின்னேயஸ்) எனும் பெண் கொசுவால் ஏற்படும் கொசுக் கடியால் பரப்பப் படுகின்ற 1 – 4 இரத்த நுண்ணுயிரிவகை DENV எனும் டெங்கு வைரஸால் ஏற்படுகின்றது.




## சர்வதேச ஒளி தினம் – மே 16

- உலகளாவிய அளவில் மே 16 ஆனது சர்வதேச ஒளி தினமாக அனுசரிக்கப்படுகிறது.

- இது சர்வதேச ஒளி தினத்தின் இரண்டாவது வருட பதிப்பாகும்.
- அறிவியல், கலாச்சாரம், கலை, கல்வி, நீடித்த வளர்ச்சி, மருத்துவம், தகவல் தொடர்பு மற்றும் ஆற்றல் ஆகியவற்றில் ஒளியின் பங்கினைப் போற்றிட வேண்டி யுனெஸ்கோவானது இந்தத் தினத்தை அதிகாரப் பூர்வமாக கடைபிடித்து வருகின்றது.




## சமாதானத்துடன் இணைந்து வாழ்வதற்கான சர்வதேச தினம் – மே 16

- சமாதானத்துடன் இணைந்து வாழ்வதற்கான சர்வதேச தினமானது மே 16 அன்று கொண்டாடப்படுகின்றது.
- இந்தத் தினமானது ஐ.நா பொதுச் சபையால் அதன் தீர்மானம் எண் 72/130 ஆல் பிரகடனம் செய்யப்பட்டது.
- இந்த தினமானது சமாதானம், சகிப்புத் தன்மை, உள்ளடக்கம், ஒற்றுமை மற்றும் உலக அளவிலான புரிதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக வருடந்தோறும் அனுசரிக்கப்படுகின்றது.
- சமாதானத்துடன் இணைந்து வாழ்வதற்கான சர்வதேச தினமானது முதன்முறையாக 2018 ஆம் ஆண்டு மே 16 அன்று அனுசரிக்கப்பட்டது.




## வெசாக் - முழு நிலவு தினம் – மே 17


- மே மாதத்தின் முழு நிலவு தினமான வெசாக் ஆனது, உலகம் முழுவதும் மில்லியன்

கணக்கில் வாழும் புத்தத் துறவிகளுக்கான ஒரு புனிதமான நாளாகும்.

- இந்த ஆண்டு இத்தினமானது மே 17 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 1999 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையானது மானுடத்தின் ஆன்மீகத்திற்கு புத்த மதத்தின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக சர்வதேச அளவில் வெசாக் தினத்தை அங்கீகரித்தது.
- வெசாக் தினத்தின் போது
  - புத்தர் பிறப்பெடுத்தார்
  - புத்தர் ஞானத்தைப் பெற்றார்
  - அவருடைய 80வது வயதில் மரணமடைந்தார்.

## உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் - மே 17

- 1969 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதி முதல் ஒவ்வொரு ஆண்டும் உலக தொலைத் தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினம் சர்வதேசத் தொலைத் தொடர்பு ஒன்றியம் (ITU - International Telecom Union) உருவாக்கப்பட்டதைக் குறிக்கின்றது.




- மேலும் இத்தினம் 1865 ஆம் ஆண்டில் முதலாவது சர்வதேச தந்திப் பொறிப் பிரகடனத்தில் கையெழுத்திடப்பட்டதைக் குறிக்கின்றது.
- இத்தினம் ITU-ன் தலைமைக் கருத்தரங்கினால் 1973 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தகவல் சமூகம் மீதான உலக மாநாடு மே 17 ஆம் தேதியை உலக தகவல் சமூக தினமாக அறிவிக்குமாறு ஐ.நா. பொதுச் சபையைக் கேட்டுக் கொண்டது.
- 2006 ஆம் ஆண்டு முதல் மே 17 ஆம் தேதியானது தொலைத் தொடர்பு மற்றும் தகவல் சமுதாயம் ஆகிய இரண்டிற்கான தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினத்தின் கடைபிடிப்பானது இணையப் பயன்பாடு, தகவல் தொடர்புத் தொழில் நுட்பங்கள் ஆகியவை குறித்து சர்வதேச அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த எண்ணுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துருவானது, "தரநிலை இடைவெளியை

இணைத்தல்" என்பதாகும்.

- இந்தக் கருத்துருவானது பின்வருவனவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகின்றது.
    - வளர்ச்சிக்காகத் தகவலின் வலிமை
    - சிக்கலானத் தரவுகளை செயல்படக்கூடிய தகவல்களாக மாற்றுவது.
- தலைமைக் கருத்தரங்கு என்பது ITU அமைப்பின் 4 ஆண்டு கால செயல்திட்டம் குறித்து முடிவெடுக்கும் ITU-ன் கொள்கை வகுக்கும் உச்ச அமைப்பாகும்.

## உலக உயர் இரத்த அழுத்த தினம் – மே 17

- ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 17 ஆம் தேதியன்று உலக உயர் இரத்த அழுத்த தினம் (WHD - World Hypertension Day) அனுசரிக்கப்படுகின்றது.
- இது சர்வதேச உயர் இரத்த அழுத்த சமூகத்துடன் இணைக்கப்பட்ட உலக உயர் இரத்த அழுத்த அமைப்பின் ஒரு முன்னெடுப்பாகும்.
- 2005 ஆம் ஆண்டு மே மாதம் WHD முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- இத்தினமானது உயர் இரத்த அழுத்தம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அமைதியாக அழிக்கக் கூடிய இந்த நவீன கால பரவும் நோயினை கட்டுப்படுத்த மற்றும் தடுக்க அனைத்து நாடுகளின் குடிமக்களை ஊக்குவிப்பதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "உன்னுடைய எண்களை அறிந்து கொள்" என்பதாகும்.
- இந்தக் கருத்துருவானது உலகம் முழுவதும் உள்ள மக்களிடம் உயர் இரத்த அழுத்தம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதைக் குறிக்கின்றது.

## உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் – மே 18

- எச்ஐவி தடுப்பு மருந்து விழிப்புணர்வு தினம் என்றும் அழைக்கப்படும் உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் தேதி அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது எச்ஐவியைத் தடுப்பதற்கான மருந்தை மேம்படுத்தும் பல தன்னார்வலர்கள், சமூக உறுப்பினர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை அங்கீகரிக்கின்றது.
- உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் என்ற கருத்துருவானது 1997 ஆம் ஆண்டு மே 18 அன்று அதிபர் பில் கிளிண்டன் நிகழ்த்திய உரையிலிருந்து உருவானது.
- கிளிண்டன் நிகழ்த்திய உரையின் நினைவினை அனுசரிப்பதற்காக 1998 ஆம் ஆண்டு மே 18 அன்று முதலாவது எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் அனுசரிக்கப்பட்டது. எச்ஐவி தொற்று மற்றும் எய்ட்ஸ் ஆகியவற்றைத் தடுப்பதற்கான மருந்தின் தேவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

## சர்வதேச அருங்காட்சியக தினம் - மே 18

- ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் தேதி சர்வதேச அருங்காட்சியகத் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினத்தின் நோக்கம் கலாச்சாரப் பரிமாற்றங்களை ஏற்படுத்தும் அருங்காட்சியகத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- 1977 ஆம் ஆண்டில் சர்வதேச அருங்காட்சியகங்கள் ஆணையமானது முதலாவது சர்வதேச அருங்காட்சியகத் தினத்தை ஒருங்கிணைத்தது.




- 2019 ஆம் ஆண்டில் இத்தினத்தின் கருத்துருவானது, "அருங்காட்சியகங்கள் கலாச்சார மையங்களாகும் : மரபின் எதிர்காலம்" என்பதாகும்.
- 1753 ஆம் ஆண்டில் உலகின் முதலாவது பொது அருங்காட்சியகம் பிரிட்டனில் தொடங்கப்பட்டது.
- 1851 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சென்னையில் உள்ள அரசாங்க அருங்காட்சியகம் அல்லது மதராஸ் அருங்காட்சியகம் கொல்கத்தாவில் உள்ள இந்திய அருங்காட்சியகத்திற்கு அடுத்து இந்தியாவின் இரண்டாவது பழமையான அருங்காட்சியகமாகும்.

## உலக அளவியல் தினம் – மே 20

- ஒவ்வொரு ஆண்டும் மே 20 அன்று உலக அளவியல் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1875 ஆம் ஆண்டு மே 20 ஆம் தேதியில் மேற்கொள்ளப்பட்ட அளவியல் ஒப்பந்தமானது சர்வதேச எடை மற்றும் அளவுகள் அமைப்பை ஏற்படுத்தியது.
- இது உலகளாவிய ஒரு ஒத்திசைவு அளவீட்டு முறைக்கான அடிப்படையை வழங்கியது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துருவானது, "சர்வதேச அலகுகளின் அமைப்புகள் – அடிப்படையில் சிறந்தது" என்பதாகும்.




- 2018 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற எடைகள் மற்றும் அளவுகள் மீதான பொதுக் கருத்தரங்கின் போது 1875 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சர்வதேச அளவு அமைப்புகளை “திருத்தியமைக்க” ஒப்புக் கொள்ளப்பட்டதன் காரணமாக இந்தக் கருத்துரு தேர்ந்தெடுக்கப்பட்டது.
- SI அமைப்பில் உள்ள 7 அடிப்படை அலகுகள் பின்வருமாறு:

**THE SEVEN FUNDAMENTAL UNITS**

| UNIT | QUANTITY | HOW IT IS/WILL BE DEFINED |
|---|---|---|
| Meter* | Distance | Based on speed of light |
| Kilogram** | Mass | To be based on Planck constant |
| Second* | Time | Based on radiation of caesium-133 atom |
| Ampere** | Current | To be based on an electron's charge |
| Kelvin** | Temperature | To be based on Boltzmann constant |
| Mole** | Amount of substance | To be based on Avogadro constant |
| Candela* | Luminous intensity | From efficacy of light of specific frequency |

**Current definition stands **Being redefined*

- தற்பொழுது நாம் அளவிடும் 4 அடிப்படை அலகுகளின் அளவிடும் முறை பின்வருமாறு மறுவரையறை செய்யப் பட்டிருக்கின்றது. அவையாவன கிலோகிராம், கெல்வின், மோல் மற்றும் ஆம்பியர்.
- இதற்குப் பிறகு முதல் SI அலகுகள் பின்வரும் மாறிலிகளினால் குறிப்பிடப்படும்.

The seven defining constants of the SI are:

- the caesium hyperfine frequency $\Delta\nu_{Cs}$;
- the speed of light in vacuum $c$;
- the Planck constant $h$;
- the elementary charge $e$;
- the Boltzmann constant $k$;
- the Avogadro constant $N_A$; and
- the luminous efficacy of a defined visible radiation $K_{cd}$.

## உலக தேனீ தினம் – மே 20

- மே 20 அன்று உலக தேனீ தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது மகரந்த பரப்பிகள், அவை எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு அவைகளின் பங்கு ஆகியவற்றின் முக்கியத்தும் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த எண்ணுகின்றது.
- தேனீ தினமானது அண்ட்டோன் ஜன்சா என்பவரின் பிறந்த தினத்துடன் ஒன்றிப் பொருந்துகின்றது.


- 18 ஆம் நூற்றாண்டில் அவர் தனது தாயகமான ஸ்லோவேனியா நாட்டில் நவீனத் தேனீ வளர்ப்பு நுட்பங்களை முதன்முறையாக அறிமுகப்படுத்தினார்.
- 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மே 20 ஆம் தேதியை உலக தேனீ தினமாக அறிவிக்கும் ஸ்லோவேனியா நாட்டின் பரிந்துரைக்கு ஐ.நா. உறுப்பு நாடுகள் ஒப்புதல் அளித்தன.

## உரையாடல் மற்றும் வளர்ச்சிக்கான உலக கலாச்சாரப் பன்முகத் தன்மை தினம் – மே 21

- ஒவ்வொரு ஆண்டும் மே 21 அன்று உலக கலாச்சாரப் பன்முகத் தன்மை தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 2001 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பு கலாச்சாரப் பன்முகத் தன்மை மீதான உலகளாவியப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- 2002 ஆம் ஆண்டில் ஐ.நா. அமைப்பு மே 21 ஆம் தேதியை உலக கலாச்சார பன்முகத் தன்மை தினமாக அறிவித்தது.
- இத்தினமானது கலாச்சாரப் பன்முகத் தன்மையின் மதிப்புகள் குறித்த நமது புரிதல்களை அதிகப்படுத்த ஒரு வாய்ப்பை நமக்கு வழங்குகின்றது.

## சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் – மே 22

- ஒவ்வொரு ஆண்டும் மே 22 ஆம் தேதி சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினமாக (IDB - International Day for Biological Diversity) அனுசரிக்கப்படுகின்றது.




- 2019 ஆம் ஆண்டில் இத்தினத்தின் கருத்துருவானது, "நமது பல்லுயிர்ப் பெருக்கம், நமது உணவு, நமது ஆரோக்கியம்" என்பதாகும்.
- இந்தத் தினமானது மனிதன் புவியில் நலமுடன் வாழ்வதற்காக நமது இயற்கை அமைப்புகளால் அளிக்கப்பட்ட பன்முகத் தன்மையை அனுசரிக்கின்றது.
- 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மே 22 ஆம் தேதியை IDB தினமாக ஐக்கிய நாடுகள் ஏற்றுக் கொண்டது.

## உலகக் கடல் ஆமை தினம் – மே 23


- மே 23 அன்று உலகக் கடல் ஆமை தினம் அனுசரிக்கப்பட்டது.
- இது அமெரிக்க ஆமை மீட்பு (ATR - American Tortoise Rescue) நிறுவனத்தினால் 2000 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ATR அமைப்பானது அனைத்து விதமான ஆமைகள் மற்றும் கடல் ஆமை இனங்களின் மீட்பு, மறுவாழ்வு, தத்தெடுப்பு மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றது.
- இத்தினமானது உலகெங்கிலும் அழிந்து வரும் கடல் ஆமைகள் மற்றும் அவைகளின் வாழ்விடங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கவும் அவற்றைக் கொண்டாட மக்களுக்கு உதவவும் ஒரு வருடாந்திர அனுசரிப்பாக ஏற்படுத்தப்பட்டது.

## காணாமல் போய்க் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் – மே 25

- ஒவ்வொரு ஆண்டும் மே 25 அன்று காணாமல் போய்க் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினத்தின் சிறப்புக் குறியீடு “என்னை மறந்து விடு – பூக்களை அல்ல” என்பதாகும்.
- 1983-ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் மே 25-ஆம் தேதியை காணாமல் போய்க் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கான தேசிய தினமாக அறிவித்தார்.
- 2001-ஆம் ஆண்டில், முதல் முறையாக மே 25-ஆம் தேதி காணாமல் போய்க் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கான சர்வதேச தினமாக அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
- இந்தத் தினமானது குழந்தைக் கடத்தல் தொடர்பான பிரச்சனையை எடுத்துக் காட்டுகின்றது. இது கண்டுபிடிக்கப்படாத காணாமல் போன குழந்தைகளைக் கௌரவிக்கின்றது. இது, தங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக பெற்றோர்களுக்கு கல்வியறிவு ஏற்படுத்திட முயற்சிக்கின்றது.
- 23 நாடுகளைச் சேர்ந்த ஒரு அமைப்பான “சர்வதேச காணாமல் போய்க் கொண்டிருக்கும் குழந்தைகளின்” அமைப்பானது சர்வதேசக் குழந்தை மீட்பில் முன்னிலை வகிக்கின்றது.

## உலக தைராய்டு (கேடய) தினம் – மே 25

- ஒவ்வொரு ஆண்டும் மே 25 அன்று உலக தைராய்டு (கேடய) தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு, உலக தைராய்டு விழிப்புணர்வின் 11-வது ஆண்டின் கொண்டாட்டத்தைக் குறிக்கின்றது.




- உலக தைராய்டு தினம் அமெரிக்கத் தைராய்டு மன்றம் மற்றும் ஐரோப்பியத் தைராய்டு மன்றம் ஆகியவற்றின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக 2008 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இத்தினமானது சர்வதேச அளவில் தைராய்டு நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் தற்பொழுதுள்ள புதிய சிகிச்சை முறைகள் பற்றி கவனம் செலுத்துவதையும் அவசரமாகத் தேவைப்படும் தடுப்புத் திட்டங்களின் மீது கவனம் செலுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- தைராய்டு என்பது கழுத்தின் மையத்தில் அமைந்துள்ள பட்டாம் பூச்சி வடிவிலான ஒரு சுரப்பியாகும். இது வளர்சிதைக்கான ஒரு சிறந்த சுரப்பியாகும்.
- சிகிச்சை அளிக்கப்படாத ஹைப்போதைரோடிசம் கருவுறாமை மற்றும் இதய நோய் போன்ற கடுமையான நோய்களுக்கு வழி வகுக்கும்.

## மாதவிடாய் சுகாதார தினம் – மே 28

- மாதவிடாய் சுகாதார தினம் என்ற ஒரு வருடாந்திர விழிப்புணர்வுத் தினமானது மே மாதம் 28 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது.
- இது சிறந்த மாதவிடாய் சுகாதார மேலாண்மையின் (menstrual hygiene management - MHM) முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- இது ஜெர்மனியில் உள்ள அரசு சாரா அமைப்பான வாஷ் யுனைடெட் (WASH United) என்ற அமைப்பால் 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இத்தினமானது MHMவிற்காக சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் அளவிலான கொள்கைகள் மற்றும் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு குரல் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.
- 1947 ஆம் ஆண்டு முதல் ஜப்பானின் தொழிலாளர் சட்டங்கள் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் விடுப்புகளை அளிக்கின்றது.
- இத்தினக் கொண்டாட்டத்தின் போது, தமிழ்நாடு அரசு சென்னையில் உள்ள அரசு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் ரூ.5 மதிப்புடைய சுகாதாரத் துணிகள் விற்பனை இயந்திரத்தை நிறுவியுள்ளது.




## வீர் சவார்கர் ஜெயந்தி – மே 28

- விநாயக் தாமோதர் சவார்க்கரின் 136வது பிறந்த தினம் மே 28 அன்று கொண்டாடப்பட்டது.
- இவர் ஒரு விடுதலைப் போராட்ட வீரர், அரசியல் தலைவர், வழக்குரைஞர், எழுத்தாளர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் இந்துத்துவக் கொள்கைகளை உருவாக்கியவர் ஆவார்.



- இவர் 1883 ஆம் ஆண்டு மே 28 அன்று மகாராஷ்டிராவின் நாசிக் நகருக்கு அருகில் உள்ள பஹபூர் கிராமத்தில் பிறந்தார்.
- இவர், தனது "இந்துத்துவா" என்ற புத்தகத்தில் இரு நாட்டுக் கொள்கையை விவரித்துள்ளார். இப்புத்தகம் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள் என்பவர்கள் இரு தனி நாடுகள் என்று குறிப்பிடுகின்றது.
    - 1937 ஆம் ஆண்டில் இதை இந்து மகாசபை ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது.
- 2002 ஆம் ஆண்டில் இவரது நினைவாக அந்தமான் நிக்கோபாரின் தலைநகரான போர்ட் பிளேயரில் உள்ள விமான நிலையத்திற்கு வீர் சவார்கர் சர்வதேச விமான நிலையம் என்று பெயரிடப்பட்டது.

## சர்வதேச ஐ.நா. அமைதிப் படை வீரர்கள் தினம் – மே 29

- ஒவ்வொரு ஆண்டும் மே 29 அன்று சர்வதேச ஐ.நா. அமைதிப் படை வீரர்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.




More than a million people have served as UN peacekeepers since 1948.

- இத்தினமானது ஐ,நா.வின் அமைதிக் காப்புப் பணிகளுக்கு மதிப்பிட இயலாத பங்களிப்புகளை அளித்த சீருடை மற்றும் குடிமக்கள் பணியாளர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.
- இது 1948 ஆம் ஆண்டு முதல் ஐ.நா.வின் கீழ் பணியாற்றி உயிரிழந்த 3800க்கும் மேற்பட்ட அமைதிக் காப்பு வீரர்களைக் கௌரவிக்கின்றது
- 1948 ஆம் ஆண்டு மே 29 அன்று முதலாவது ஐ,நா. அமைதிக் காப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.
- இது இஸ்ரேல் மற்றும் அதன் அண்மையில் உள்ள அரபு நாடுகளுக்கிடையேயான தற்காலிகப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை கண்காணிக்கும் பணியை மேற்கொண்டது.
- 2003 ஆம் ஆண்டு முதல் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

### *தொடரும் பொருந்துமை*

- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு "குடிமக்களைப் பாதுகாத்தல், அமைதியைப் பாதுகாத்தல்" என்பதாகும்.
- குடிமக்களின் பாதுகாப்பானது ஐ,நா.வின் அமைதிக் காப்பின் மையமாக விளங்குகின்றது.
- குடிமக்களைப் பாதுகாப்பதற்காக 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட ஐ,நா. அமைதிக் காப்பு வீரர்கள் ஏறக்குறைய 8 நாடுகளில் மட்டுமே பங்கெடுத்துள்ளனர். அந்த நாடுகளாவன

| | |
|---|---|
| அபேய் | மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு |
| டார்பர் | தெற்கு சூடான் |

| | |
|---|---|
| லெபனான் | காங்கோ மக்களாட்சிக் குடியரசு |
| மாலி | ஹைத்தி |

## சர்வதேச எவரெஸ்ட் தினம் – மே 29

- ஒவ்வொரு ஆண்டும் மே 29 அன்று சர்வதேச எவரெஸ்ட் மலை தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது 1953 ஆம் ஆண்டு மே 29 அன்று நியூசிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரி மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த டென்சிங் நோர்கே ஷெர்பா ஆகியோர் எவரெஸ்ட் மலையின் உச்சியை முதன்முறையாக அடைந்ததின் நினைவாக இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.



- புகழ்பெற்ற மலை ஏறும் வீரரான ஹிலாரி காலமான பின்பு 2008 ஆம் ஆண்டு முதல் இத்தினத்தை சர்வதேச எவரெஸ்ட் தினமாக அனுசரிக்க நேபாளம் முடிவு செய்தது.
- 1852 ஆம் ஆண்டில் வங்காளத்தைச் சேர்ந்த கணிதவியலாளரான ராதாநாத் சிக்தார் என்பவர் XV என்ற சிகரத்தின் உயரத்தைக் கணக்கிட்டார்.
- இது இமயமலையில் உள்ள ஒரு பனிச் சிகரமாகும். உலகில் உள்ள மலைகளில் மிகப்பெரிய மலை இதுவாகும்.
- இது 1830 முதல் 1843 ஆம் ஆண்டு வரை இந்திய நில அளவை இயக்குனராகப் பணியாற்றிய சர் ஜார்ஜ் எவரெஸ்ட் என்பவரின் நினைவாக எவரெஸ்ட் என்று பின்னாளில் பெயரிடப்பட்டது.

## உலக புகையிலையற்ற தினம் – மே 31

- ஒவ்வொரு ஆண்டும் மே 31 அன்று உலக சுகாதார நிறுவனம் மற்றும் அதன் சர்வதேச பங்காளர்கள் இணைந்து உலக புகையிலையற்ற தினத்தை (WNTO - World No Tobacco Day) அனுசரிக்கின்றனர்.




- இந்த வருடாந்திரப் பிரச்சாரம் தீங்கு விளைவிக்கக்கூடிய மற்றும் உயிரிழப்பை உண்டாக்கும் புகையிலை குறித்தும், புகைப்பிடிப்பால் இரண்டாம் நிலை பாதிப்புக்கு உள்ளாகும் புகைப்பிடிக்காதவர்கள் (second-hand smoke exposure) குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு வாய்ப்பாக அமைகின்றது.
- எந்தவொரு வகையிலும் புகையிலையைப் பயன்படுத்துவது தீங்கு என்பதை இத்தினம் வலியுறுத்துகிறது.
- 2019 ஆம் ஆண்டின் கருத்துரு : "புகையிலை மற்றும் நுரையீரல் ஆரோக்கியம்"

# இதரச் செய்திகள்

## #Oneday4Children

- சர்வதேச கிரிக்கெட் வாரியமானது யுனிசெப் உடன் கூட்டிணைந்து #Oneday4Children ஐ என்ற நிகழ்வை அறிவித்துள்ளது.
- இது உலக கோப்பைத் தொடரில் ஒவ்வொரு குழந்தைக்குமான சிறந்த உலகத்தை உருவாக்க உதவுவதற்கு கிரிக்கெட் உலகத்தை ஒரே குழுவாக கொண்டு வருவதற்கான ஒரு போட்டித் தொடர் அளவிலான பிரச்சாரமாகும்.
- இந்த நிகழ்வின் அனைத்து 48 போட்டிகளிலும் #Oneday4Children இன் செயல்பாடுகள் இருக்கும்.
- இதன் மூலம் பெறப்படும் பணமானது கிரிக்கெட் விளையாடும் நாட்டில் உள்ள குழந்தைகள் அவ்விளையாட்டைக் கற்பதற்கும் ஆரோக்கியமாக இருப்பதற்கும் உதவும் யுனிசெப்பின் பணிக்கு உறுதுணையாக இருக்கும்.





## தாய்லாந்து அரசரின் முடிசூட்டு விழா

- “மிகப்பெரும் வெற்றிக்கான மகுடம்” என்ற பட்டத்துடன் தாய்லாந்து நாட்டின் புதிய அரசராக மகா வஜ்ஜிரலாங்கோர்ன் என்பவருக்கு தாய்லாந்து அதிகாரப் பூர்வமாக முடிசூட்டியது.
- இவர் 1972 ஆம் ஆண்டில் இளவரசராகவும் அரசரின் அதிகாரப்பூர்வ வாரிசாகவும் ஆனார்.
- தற்பொழுது இவர் “தாய்லாந்தின் பத்தாவது ராம அரசர்” என்று அறிவிக்கப்பட்டுள்ளார்.
- 1782 ஆம் ஆண்டு முதல் தாய்லாந்தில் சக்ரி வம்சம் ஆட்சி செய்து வருகின்றது.
- சக்ரி வம்சத்தின் 10-வது அரசர் இவராவார்.
- தாய்லாந்து அரசியலமைப்பு சார்ந்த முடியரசைக் கொண்டிருக்கின்றது.
- இதற்கு முன்பு 1950 ஆம் ஆண்டு இந்த அரசரின் தந்தையான பூமிபோல் அதுல்யாதேஜ் என்பவருக்கு முடிசூட்டு விழா கடைசியாக நடத்தப்பட்டது.

## மகாராஷ்டிரா மற்றும் குஜராத் தினம் – மே 01

- மே முதல் நாளானது மகாராஷ்டிரா மற்றும் குஜராத் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.
- 1960 ஆம் ஆண்டு பாம்பாய் மறுசீரமைப்புச் சட்டமானது இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுப் பன்மொழி மாநிலமான பம்பாய் ஆனது குஜராத் மற்றும் மகாராஷ்டிராவாக பிரிக்கப்பட்டது.
- இந்தச் சட்டமானது மே 01, 1960ல் நடைமுறைக்கு வந்தது.




- பம்பாய் மாநிலமானது முன்னதாக மராத்தி, குஜராத்தி, கொங்கணி, மற்றும் கட்ச்சி ஆகிய மொழி பேசும் மக்களைக் கொண்டிருந்தது.
- 1950களின் இடைப்பட்ட பகுதியில் சம்யுக்தா மகாராஷ்டிரா அந்தோலன் என்றழைக்கப்பட்ட இயக்கமானது மராத்தி பேசும் தனி மாநிலத்தைக் கோரியது.
- அதே சமயம் மகாகுஜராத்தி இயக்கமானது குஜராத்தி பேசும் மக்களுக்கு தனி மாநிலத்தினை உருவாக்கும் நோக்கத்தினைக் கொண்டிருந்தது.
- இந்த இயக்கங்களானது பம்பாய் மறுசீரமைப்புச் சட்ட உருவாக்கத்தில் முடிவடைந்தது.

## சட்டப்பூர்வக் கல்வி

- “நவீனச் சட்டப்பூர்வக் கல்வியின் தந்தை” என்று அழைக்கப்படும் பத்மஸ்ரீ விருது பெற்ற டாக்டர் N.R. மாதவ மேனன் திருவனந்தபுரத்தில் காலமானார். இவருடைய வயது 84 ஆகும்.
- இவர் சட்டக் கல்வியின் முன்னோடியாகத் திகழ்ந்தார். மேலும் இவர் பின்வருவனவற்றை உருவாக்கினார்.
  - இந்தியாவில் உள்ள தேசிய சட்டப் பள்ளிகள்
  - 5 ஆண்டு படிப்பான ஒருங்கிணைந்த LLB (இளநிலை சட்ட ப் படிப்பு)
- இவர் 1987-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது சட்டப் பள்ளியான பெங்களூருவில் உள்ள தேசிய இந்திய பல்கலைக்கழக சட்டப் பள்ளியின் நிறுவனர் மற்றும் இயக்குநர் ஆவார்.

## SDG - தூதுவர்கள்

- இந்திய நடிகை தியா மிர்சா மற்றும் அலிபாபா நிறுவனத்தின் இணை நிறுவனரான ஜாக் மா ஆகியோர் ஐ.நா.வின் பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டேரசினால் ஐ.நா.வின் சிறப்புமிகு நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான (SDG - Sustainable Development Goals) புதிய தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- SDG தூதுவர்கள் விழிப்புணர்வை அதிகரித்தல், உயர்ந்த இலட்சியத்தை ஊக்குவித்தல், உலகளாவிய அரசியல் விருப்பத்தை உறுதிப்படுத்துதல், SDG-ஐ அடைவதற்காக விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை


மேற்கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

- பல்வேறு நாடுகளிலிருந்து மொத்தம் 17 தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.




## அதிக ஊதியம் பெறும் கலைஞர்கள்

- ஹருண் ஆராய்ச்சி நிறுவனமானது ஹருண் இந்தியக் கலைப் பட்டியலின் முதலாவது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை கலைஞர்கள், தங்களதுப் படைப்புகளை பொது ஏலத்தில் விற்பனை செய்ததன் அடிப்படையில் சமகாலத்தில் வாழும் இந்தியக் கலைஞர்களை தர வரிசைப்படுத்தியுள்ளது.
- ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த சிற்பியான அனிஷ் கபூர் என்பவர் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். இவரது படைப்புகள் ரூ. 168.25 கோடிக்கு விற்பனையாகின.



- இவருக்கு அடுத்து இந்தப் பட்டியலில் அக்பர் பத்மஸி (ரூ.45.84 கோடி) மற்றும் கிரிஷேன் கண்ணா (ரூ.9.48 கோடி) ஆகிய கலைஞர்கள் உள்ளனர்.
- கிரிஷேன் கண்ணா என்பவர் உலகம் முழுவதும் உள்ள 100 கலைஞர்களினால்

மேற்கொள்ளப்பட்ட "தாஷ் கீ பட்டி" என்ற பணியில் இவரது பங்களிப்பிற்காக சிறப்பாக அறியப்படுகின்றார்.

## வோய்னிச் கையெழுத்துப் பிரதி

- பிரிஸ்டோல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜெரார்டு செசையர் என்பவர் வோய்னிச் கையெழுத்துப் பிரதியைப் படிக்கும் முறையைக் கண்டறிந்துள்ளதாக அறிவித்துள்ளார்.
- இது வரலாற்றின் இடைக்காலத்தின் போது மத்தியத் தரைக் கடற்பகுதியில் பயன்படுத்தப்பட்ட முந்தைய ரோமானிய மொழி என்று இவர் கூறியுள்ளார்.
- இது ஸ்பெயினின் அரகோன் இராணியின் மேற்கோளுக்கு ஒரு ஆதாரமாக டொமினிகன் கன்னியாஸ்திரிகளால் தொகுக்கப்பட்டது.



***<u>ஏன் இது தனித்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது?</u>***

- வோய்னிச் என்பது 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அழிந்து போன மொழியில் எழுதப்பட்ட ஒரு கையெழுத்துப் பிரதியாகும்.
- இது உரைகள் மற்றும் விளக்கப் படங்களுடன் கெண்டைக் காலின் தோலின் (வெல்லும்) மீது எழுதப்பட்டதாகும்.
- இரகசியக் குறியீட்டைக் கண்டுபிடிப்பவர்கள், மொழியியலாளர்கள் மற்றும் கணினி நிரல் எழுதுபவர்களால் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் கால அளவிற்கு இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

## விகல்ப் திட்டம்

- இந்திய இரயில்வே உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகமானது (Indian Railway Catering and Tourism Corporation - IRCTC), "காத்திருப்புப் பட்டியலில்" உள்ள பயணிகளுக்காக "விகல்ப்" என்ற ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒதுக்கீடு முறையில் பதிவு செய்தல் மற்றும் சலுகை முறையில் பதிவு செய்தல் என்ற பாகுபாடு இல்லாமல் காத்திருப்புப் பட்டியலில் உள்ள அனைத்துப் பயணிகளுக்கும் இது பொருந்தும்.
- "விகல்ப்" திட்டத்தின் கீழ் காத்திருப்புப் பட்டியலில் உள்ள பயணிகள் அதிகபட்சமாக 7 மாற்று இரயில்களைத் தேர்ந்தெடுக்க முடியும்.

- பதிவு செய்யப்பட்ட இரயில் புறப்பட்ட 30 நிமிடங்கள் முதல் 72 மணி நேரங்கள் வரையில் மாற்று இரயில்களைத் தேர்ந்தெடுக்க முடியும்.
- இரயில் மற்றும் காலியாகவுள்ள படுக்கை வசதி ஆகியவற்றைப் பொறுத்து காத்திருப்புப் பட்டியலில் உள்ள பயணிகள் உறுதி செய்யப்பட்ட பயணச் சீட்டைப் பெற முடியும்.

## உலக சாதனை பெற்ற விற்பனை

- பிரெஞ்சுக் கலைஞரான கிளாட் மோனெட்டின் 1890 ஆம் ஆண்டைச் சேர்ந்த "மியூலெஸ்" என்ற கலைப் பணியானது 110.7 மில்லியன் டாலர்க்கு என்ற சாதனை விலைக்கு விற்பனை செய்யப் பட்டுள்ளது.
- இது மோனேட்டின் "ஹேஸ்டாக்ஸ்" வகை ஓவிய வரிசைகளின் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.
- "மியூலெஸ்" என்ற கலைப் பொருள் ஏலத்தின் போது 100 மில்லியன் டாலருக்கு மேல் விற்பனையான "தனித்தன்மை வாய்ந்த கலையின்" ஒரு முதல் படைப்பாக உருவெடுத்துள்ளது.

### *தனித்தன்மை வாய்ந்த கலை*

- "தனித்தன்மை வாய்ந்த கலை" (Impressionism) என்பது 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பிரெஞ்சுக் கலைஞர்களுடன் தொடர்புடைய ஓவியப் பாணியாகும்.
- காட்சி தொடர்புடைய தனித்தன்மை வாய்ந்த ஓவியமானது கலைஞர்களின் அல்லது பார்வையாளர்களின் பொதுத் தோற்றத்தை மீண்டும் உருவாக்க எண்ணுகின்றது.




***An Impressionist Painting***



***Mueles Painting***

## சிக்கிமின் 44வது மாநில தினம் – மே 16

- சிக்கிம் மாநிலமானது மே 16 அன்று அதன் 44-வது மாநில தினத்தை கொண்டாடியது.
- 1950 ஆம் ஆண்டின் உடன்படிக்கையின் படி தகவல் தொடர்பு, பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் சிக்கிமின் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை இந்தியா கவனித்து வந்தது.




- 1975 ஆம் ஆண்டில் ஏப்ரல் 14 அன்று நடைபெற்ற வாக்கெடுப்பில் இந்தியாவுடன் இணைவதற்கு ஆதரவாக சிக்கிம் மக்கள் வாக்களித்தனர்.
- 1975 ஆம் ஆண்டு மே 16 அன்று அதிகாரப் பூர்வமாக இந்தியாவின் 22வது மாநிலமாக சிக்கிம் மாநிலம் இந்தியாவுடன் இணைந்தது.
- தொடக்கத்தில் வேறு எந்த மாநிலத்திற்கும் வழங்கப்படாத ஒரு சிறப்பு நிலையான “கூட்டு மாநிலமாக” அதனை அமைப்பதற்கான விதிமுறைகளை 35வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் வழங்கியது.
- ஒரு மாதத்திற்குப் பின்னர் கொண்டு வரப்பட்ட 36வது அரசியலமைப்பு சட்டத் திருத்தமானது 35வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தை மாற்றி சிக்கிமை ஒரு முழுமையான மாநிலமாக மாற்றியது.
- 2019 ஏப்ரல் 29, அன்று, சிக்கிமின் முதல்வரான பவன் குமார் சாம்லிங், நீண்ட காலம் (23 ஆண்டுகள் 4 மாதங்கள் மற்றும் 17 நாட்கள்) பதவி வகித்த முதலமைச்சர் எனும் புதிய சாதனையைப் படைத்தார்.
- கடந்த வருடம், உலகின் முதல் 100 சதவிகித கரிம மாநிலமாக மாறியதற்காக "சிறந்த கொள்கைகளுக்கான ஆஸ்கார்" என அறியப்படும் ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பின் 2018 ஆம் ஆண்டிற்கான “எதிர்கால கொள்கை விருது” சிக்கிமிற்கு வழங்கப்பட்டது.

## மனக் கட்டுப்பாடு

- அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் தனது எண்ணங்களைப் பயன்படுத்தி தனது கையினை நகர்த்தக் கூடிய ஒரு தொழில்நுட்பத்தை மேம்படுத்தியுள்ளார்.
- அமெரிக்கப் பாதுகாப்பின் மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சித் திட்ட நிறுவனத்திடமிருந்து (US Defence Advanced Research Projects Agency - DARPA) 20 மில்லியன் டாலர்கள் மதிப்பிலான ஒப்பந்தம் இவருக்கு வழங்கப்பட்டது.
- இந்த அமைப்பிறகு “ப்ரெய்ன்ஸ்டோர்ம்ஸ்” (காந்த மின்னியல் சமிக்ஞைகளை அனுப்பும் அல்லது பெறும் மூளை அமைப்பு) என்று பெயரிடப்பட்டுள்ளது.

- ஒரு வீரர் ஒரு தலைக் கவசம் அணிந்து கொண்டு பல ஆளில்லா வான்வழி வாகனங்களைக் கட்டுப்படுத்த அல்லது வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்ய தனது மனதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- ஒரு நுண் ஆற்றல் மாற்றி தற்காலிகமாக ஊசி மூலமாக உடலினுள் செலுத்தப்படும். இதன் மூலம் தலைக் கவசத்தை அடிப்படையாகக் கொண்ட உள்வாங்கியுடன் (transceiver) மூளை தொடர்பு கொள்ளும்.

## நீலகிரி மலை இரயில்

- நீலகிரி மலை இரயில் 1000 மில்லிமீட்டர் (3 அடி 3 X 3⁄8 அங்குலம்) அகலம் கொண்ட இரயில் பாதையாகும் (Metre gauge railway).



- இது 1908 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கட்டமைக்கப்பட்டது.
- இது தென்னக இரயில்வேயினால் இயக்கப்படுகின்றது. இந்தியாவில் உள்ள ஒரே பற்று இருப்புப் பாதை இதுவாகும்.
- 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், யுனெஸ்கோ அமைப்பு உலக பாரம்பரியத் தளமாக டார்ஜலிங் இமாலய இரயில்வேயுடன் நீலகிரி மலை இரயிலையும் இணைத்தது.
- இந்திய மலைப்பாதை தொடருந்துகள் (யுனெஸ்கோவினால் உலகப் பாரம்பரியத் தளம்)
    - டார்லிஜிங் இமாலயன் தொடருந்து
    - நீலகிரி மலைத் தொடருந்து
    - கல்கா- சிம்லா மலைத் தொடருந்து.

## முர்ரே கெல் மேன்

- 1969 ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற இயற்பியல் வல்லுநரான முர்ரே கெல் மேன் என்பவர் அமெரிக்காவில் உள்ள நியூ மெக்சிகோவில் காலமானார். அவருடைய வயது 89 ஆகும்.
- இவர் அணுவகத் துகள்களின் சுழலும் தன்மை, மின் தன்மை மற்றும் இதர பண்புகளை அடிப்படையாகக் கொண்டு அணுவகத் துகள்களை 8 எளிமையான குழுக்களாக வகைப்படுத்துவதற்கான ஒரு முறையைக் கண்டறிந்தார்.

- அறிவொளியைப் பெறுவதற்கான புத்தரின் எண்வழிப் பாதைகளின் நினைவாக, இவர் இந்த முறைக்கு "எண் வழிகள்" என்று பெயரிட்டார்.
- இயற்பியல் முறையில் பிரபஞ்சம் குறித்த நமது புரிதலுக்கு ஒரு அடிப்படையை உருவாக்கும் 'குவார்க்ஸ்' என்ற கோட்பாட்டை உருவாக்கிய முதலாவது அறிவியலாளர் இவராவார்.

## ஸ்பைஸ்ஜெட் – 100 விமானங்கள்

- ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் போயிங் 737 ரக விமானங்களை தனது நிறுவனத்தில் சேர்த்துள்ளது. அவ்வாறு இணைத்தபின் அந்த நிறுவனத்தில் உள்ள விமானங்களின் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளது.
- ஏர் இந்தியா, ஜெட் ஏர்வேஸ், இண்டிகோ ஆகிய நிறுவனங்களுக்கு அடுத்து இந்த எண்ணிக்கையை எட்டும் நான்காவது உள்நாட்டு விமான நிறுவனம் ஸ்பைஸ்ஜெட் ஆகும்.
- ஏர் இந்தியா, இண்டிகோ, ஸ்பைஸ்ஜெட், கோ ஏர், ஏர் இந்திய எக்ஸ்பிரஸ், விஸ்தாரா, ஏர் ஆசியா மற்றும் அலையன்ஸ் ஆகியவை இந்தியாவின் எட்டு உள்நாட்டு விமான நிறுவனங்களாகும்.

- - - - - - - - - - - - - - -